# தமிழ் ஆய்வுக்கட்டுரைகள்

## தொகுதி - 1

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

**[illegible] ஆய்வு மையம்**

**[illegible]ஞ்சாவூர்**

T. 22782

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 541

# தமிழ் ஆய்வுக்கட்டுரைகள்

தொகுதி - 1

ஆசிரியர்

**மணி. மாறன்,** எம்.ஏ.,(த), எம்.ஏ.,(வ).,பி.எல்.ஐ.எஸ்.,

**தமிழ்ப் பண்டிதர்,**

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

மற்றும்

**ஆய்வு மையம்,**

தஞ்சாவூர்.

2016] [விலை: ரூ. 110-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | தமிழ் ஆய்வுக்கட்டுரைகள்<br>தொகுதி – 1 |
| ஆசிரியர் | : | மணி. மாறன்,<br>தமிழ்ப்பண்டிதர், |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம்,<br>தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 541 |
| ISBN | : | 978-81-921829-6-4 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2016 |
| தாள் | : | TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : | 21 X 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 188 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சுக்கோப்பு<br>மற்றும் ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | லேமினேசன் அட்டை |
| பொருள் | : | கட்டுரைகள் |
| விலை | : | ரூ. 110–00 |

# வெளியீட்டாளர் முகவுரை

குமரிக்கண்டத்தில் தொடங்கி (லெமூரியா கண்டம்), இன்றைய ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் பயன்படுத்தும் பூமராங் என்ற ஆயுதம், பழந்தமிழகத்தில் நம் முன்னோர்கள் பயன்படுத்திய வளரி எனும் ஆயுதமே ஆகும் என்பர். இந்த வளரி ஆயுதமானது சென்ற நூற்றாண்டுவரை தமிழகத்தில் குறிப்பாக மருது சகோதரர்கள் பயன்படுத்தி வந்ததையும், அவர்களிடம் ஆங்கிலேயத் தளபதி கர்னல் வெல்ஷ் வளரி வீசுவதற்குப் பயிற்சி பெற்றதையும், பழந்தமிழர் ஆயுதம் வளரி என்ற தலைப்பில் அமைந்த கட்டுரையில் வரலாற்று ஆதாரங்களுடன் மிக அழகாக எடுத்துக்காட்டியுள்ளார். இதேபோல் பழந்தமிழரின் ஆயுதங்கள் எனும் கட்டுரையில் பல்வேறு வகையான ஆயுதங்கள் பற்றியும், அதனைக் குறிப்பிடும் படங்களுடன் சங்க நூல்களின் துணைகொண்டு அழகாக நிறுவியுள்ளார்.

தெளிவிற்குத் தேற்றா எனும் கட்டுரையில், கலங்கல் நீரினைத் தூய நீராக மாற்ற நம்மக்கள் தேற்றாங் கொட்டையினை பயன்படுத்தியதை கலித்தொகை, அஷ்டபிரபந்தம் போன்ற நூல்களின் பாடல் அடிகளிலிருந்தும், அக்கொட்டையின் பயன் அறிந்து பயன்படுத்திய ஆங்கிலேய கர்னல் ட்ரூயரி பற்றியும், அக்கொட்டையின் மருத்துவப் பயன்கள் குறித்தும் விளக்கியுள்ளது சிறப்பாக அமைந்துள்ளது.

பழந்தமிழர்களின் நீர் மேலாண்மை பற்றிய இவரது கட்டுரையில், மழை நீரினைப் பாதுகாத்து, ஆறுகள், கால்வாய்கள், ஏரிகள், குளங்கள் அமைத்து முறையான நீர் சேமிப்புத் திறனை செய்து வந்த மரபுகளையும் தொழில்நுட்ப உத்திகளையும் எண்ணும் பொழுது பெருவியப்பு அளிக்கின்றது. நீரினை வெளியேற்றும் குமிழி அமைப்பில் எத்தகைய தொழில் நுட்பம் அமைந்துள்ளது. இலக்கியத்தில் நீர் மேலாண்மைக் கட்டுரையும் மாமன்னன் இராஜராஜ சோழன் உய்யக்கொண்டான் கால்வாய் அமைத்திட்ட பாங்கு அம்மன்னனும், அக்கால மக்களும் சிறந்த நிலவியல் அறிவு பெற்றுத் திகழ்ந்தனர் என்பதற்குச் சான்று பகர்கின்றது.

நாலடியார் வலியுறுத்தும் நீதியைச் சொல்வ தோடு அல்லாமல், நமக்கும் கீழ்த்திசை நாடுகளுக்கும் இடையே நிலவி வந்த கலாச்சார, பண்பாட்டுத் தொடர்புகளைக் கூறி, நாலடியாரின் பாடல் அடிகளுக்கு ஏற்ப உருவான ஜப்பானின் பொம்மை ஓவியம் வரலாற்றினைக் கூறி இருதேச மக்களிடையேயான பண்பாட்டு உறவுகளின் வெளிப்பாடே தமிழ் பேசும் ஜப்பான் பொம்மைகள் என்று ஒப்புமைப் படுத்திக் கூறியிருப்பது பாராட்டும்படியாக அமைந்துள்ளது.

செடி, கொடிகள், விலங்குகள் உள்ளிட்ட அனைத்துயிரும் தம் உயிர் போல் போற்றியவர்கள் தமிழர்கள். அஃறிணை உயிரான மாடுகளுக்கும், அதன் தினவினைப் போக்குவதற்காக ஆதீண்டு குற்றி எனும் பெயரில் கல்தூண் நட்டிருந்த மரபு பற்றிய கட்டுரை எந்த

அளவிற்கு மற்ற உயிர்களிடத்து நம்மக்கள் கொண்டிருந்த அன்பினையும், அதன் உணர்வுகளை மதித்த பண்பினையும் வெளிக்காட்டுவதாக உள்ளது.

மாமழை போற்றுதும் என்னும் கட்டுரையில், மழை உருவாகும் விதம் குறித்த அறிவியல் உண்மைகளை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அறிந்து அதனை சங்கப் பாடல்களில் கொண்டு வந்துள்ளதையும், கோள்நிலைகளை வைத்து, மழைப் பொழிவு, வற்கடம் ஏற்படும் காலங்களை உணர்த்திய வானியல் அறிவு பற்றியும், இலக்கியங்களின் வழி நின்று ஆய்வு செய்துள்ளமை வரவேற்கத் தக்கதாய் உள்ளது.

இறையுடைமையில் பொதுவுடமை கண்ட இராசராசன் எனும் கட்டுரையில் தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டுகளை ஆதாரமாகக் கொண்டு கோயில்களில் திருவிளக்கு எரிப்பதற்காக ஆடுகளையும், மாடுகளையும் மாமன்னன் இராசராசன் மக்களுக்கு இலவசமாக அளித்து மிகச் சிறப்பான வேளாண் பொருளாதாரத்தை உருவாக்கி யிருக்கும் பாங்கு அழகாக எடுத்துக் காட்டப்பெற்றுள்ளது.

மேலும், புனலாடுதல், கண்ணதாசனின் சிவப்புக்கல் மூக்குத்தி கதையினை சங்க இலக்கியங் களோடு ஒப்புமைப்படுத்தியுள்ளது போன்ற பல்வேறு செய்திகளை உள்ளடக்கிய கட்டுரைகளினை ஆய்வு நோக்கில் எழுதியுள்ள நம் நூலகத் தமிழ்ப் பண்டிதர் மணி. மாறன், M.A.,(T) M. A.,(H) B.L.I.S,Dip.in Sanskrit,. அவர்களைப் பாராட்டுகின்றேன்.

2012ஆம் ஆண்டு முதல் பதிப்பாக வெளிவந்த இந்நூல் தற்பொழுது இரண்டாம் பதிப்பாக வெளிவருகின்றது அதற்குத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திருமதி அ. பூங்கோதை, M. A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன், M. A., B.Lit. M.L.I.S. Ph.D அவர்களுக்கும், சரசுவதி மகால் நூலக ஒளி அச்சுப்பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர்,
19-09-2016

**ஆ. அண்ணாதுரை,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்.

# நூலாசிரியன் உரை

தமிழ் இலக்கியங்கள் அதிலும் குறிப்பாக சங்க நூல்கள் நம் முன்னோர்களின் வாழ்வியல் அனுபவங்களின் வெளிப்பாடே எனலாம், பல தரப்பட்ட செய்திகள் அவற்றினுள்ளே புதைந்து கிடக்கின்றன. அள்ள அள்ளக் குறையாத கருத்துக் கருவூலமாய்த் திகழ்வது நம் இலக்கியங்கள்.

இத்தகு இலக்கியங்களில் இருந்து முன்னவர்கள் கூறிய கருத்துக்களைக் கண்டு, அதிலிருந்து ஒருபடி மேல்நோக்கிய சிந்தனையாக என் முயற்சியில் எழுதப்பட்டுள்ள கட்டுரைகளை இந்நூலின் உள்ளே தொகுத்து வழங்கியிருக்கிறேன். இலக்கியம் மட்டுமல்லாது கல்வெட்டு, செப்பேடு, ஓவியம், சிற்பம் போன்ற கலை வடிவங்கள் மற்றும் சமகால ஆய்வுகளை ஒப்புநோக்கி இயன்ற அளவு திறம்பட கட்டுரைகளைப் படைத்துள்ளேன் கற்றறிந்த பெரியோர்கள் இதன்கண் உள்ள குற்றங்குறைகளைப் பொறுத்தருள வேண்டுகிறேன்.

இந்நூலினை இரண்டாம் பதிப்பாக வெளிக்கொண்டுவர அன்புடன் அனுமதி வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் திரு. **ஆ. அண்ணாதுரை,** இ. ஆ. ப., அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் வெளிவர ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் நிருவாக அலுவலர் திருமதி **அ. பூங்கோதை, M. A.,**அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்** அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள் ! சரசுவதி மகால் நூலக ஒளி அச்சுப்பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நூல் வெளியீட்டிற்கு நிதி உதவி நல்கும் அரசிற்கும் நன்றி !

இந்நூலினுள் கட்டுரைகள் மட்டுமின்றி திருச்சி வானொலியில் ஆற்றிய சிற்றுரைகளும் வெளிவந்துள்ளன. இத்தகு சிற்றுரைகள் வழங்க வாய்ப்பு நல்கிய திருச்சி வானொலியின் தமிழ்ப்பிரிவு பொறுப்பாளர் திரு. கீழப்பாவூர் சண்முகையா அவர்களுக்கும், வானொலி நிலையத்தாருக்கும் என் நன்றியினைக் கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

*மணி. மாறன்*

தமிழ்ப் பண்டிதர்

# பொருளடக்கம்


| வ.எண். | | பக்க எண். |
|---|---|---|
| 1. | மாமழை போற்றுதும் | 1 |
| 2. | தமிழ் இலக்கியங்களில் நீர் மேலாண்மை | 10 |
| 3. | இராசராசனும் உய்யக்கொண்டான் கால்வாயும் | 20 |
| 4. | பழந்தமிழரின் ஆயுதம் - வளரி (பூமராங்) | 30 |
| 5. | தமிழரின் போர்க்கருவிகள் | 48 |
| 6. | தெளிவிற்குத் தேற்றா | 58 |
| 7. | கூவல் குறைவின்றித் தொட்டானும் | 65 |
| 8. | ஆதீண்டு குற்றி | 74 |
| 9. | தமிழ் மருத்துவத்தில் தஞ்சை | 81 |
| 10. | ஜப்பான் பொம்மை கூறும் தமிழ் நீதி | 93 |
| 11. | தமிழர்களின் நீரியல் திறன் | 100 |
| 12. | சோழ மண்டலத்தில் நீர்ப்பாசனம் | 109 |
| 13. | சங்க இலக்கியம்-நிமித்தமும், சிவப்புக்கல் மூக்குத்தி - சகுனமும் | 116 |
| 14. | புனலாடுதல் | 122 |
| 15. | இறையுடைமையில் பொதுவுடைமை கண்ட இராசராசன் | 130 |
| 16. | கலை வடிவில் நீரைப்போற்றிய மாண்பு | 137 |
| 17. | வானொலி உரைகள் | 157 |

# மாமழை போற்றுதும்

தமிழ் இலக்கியங்களில் எழிலி, கார், குயின், கொண்டல், கொண்மூ, செல், புயல், மங்குல், மஞ்சு, மாரி, மழை, மால், முகில், மேகம், மை, விசும்பு, வான், விண் எனப் பல பெயர்களால் வழங்கப்படும் மழையானது ஆவியாகிப் பொழியும் அறிவியல் உண்மையை இன்றைய நவீன கருவிகள் எதனையும் கண்டிராத பழந்தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உணர்ந்து பாடல்களாகப் பாடியுள்ளமை நம்மை வியக்க வைக்கிறது.

ஒரு மொழியின் திசைப்பெயர்கள் தலைமுறை தலை முறையாகச் சொல்லப்பெற்ற எளிதில் மாறாச் சிறப்பிற்குரிய வையாகும். தமிழ்நாட்டில் கிழக்குத் திசையிலிருந்து வீசும் காற்றிற்குக் கொண்டல் என்று பெயர். தமிழகத்திற்கு மிகுதியாக மழையைத் தருவது கிழக்குத் திசையிலிருந்து வீசும் காற்றே (வடகிழக்குப் பருவக்காற்று) ஆகும்.

மழை வளம் தரும் திசையைக் குணதிசை என்று தமிழர்கள் அழைத்தனர். தமிழகத்தில் பெய்யும் ஆண்டு மழையில் பெரும்பகுதி வடகிழக்கு பருவமழைக் காலத்தில் (அக்டோபர்- டிசம்பர்) பெய்வதாகும். இங்கு மழை நாட்கள் மிகவும் குறைவு. இக்குறைவான மழைப் பொழிவு நீரைச் சேமித்து, ஆண்டு முழுவதும் பயன்படுத்த வேண்டிய சூழலில் தமிழகம் இருக்கிறது. இதனால் மழைப் பொழிவு பற்றியும், மழைப்பொழிவு ஏற்படும் கோள்நிலைகள் குறித்தும் பழந்தமிழ் இலக்கியங்களில் பரவலாகச் செய்திகள் காணப்படுகின்றன.

தமிழன் மழை பற்றிச் சிந்தித்த சமகாலத்தில் வாழ்ந்த கிரேக்க உரோமானிய அறிஞர்களின் கருத்துகளை அறிந்தால்தான், தமிழர்களின் அறிவியல் சிந்தனை எவ்வளவு

உயர்ந்தது என்பதை அறியமுடியும். கணித மேதை பிதாகோரசுக்கு ஆசிரியராக இருந்தவர் தேல்ஸ் ஆவார். இவர் கி. மு. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் மழையில்லாத காலங்களில் ஆற்றுக்கு நீர் தரும் ஊற்றுக்கு நீர் கடலிலிருந்து, நிலத்துக்கு அடியிலுள்ள பாறை களில் உள்ள குகை வழிகள் மூலமாக மலைப்பகுதிவரை சென்று, மலையின் அழுத்தத்தால் மேலெழுந்து ஊற்று நீராக வருகிறது என்று விளக்கினார்.

கிட்டத்தட்ட அவருக்குப் பின் இரண்டரை நூற்றாண்டுகள் கடந்து வாழ்ந்த சாக்ரடீசின் மாணவரான பிளேட்டோ இந்தப் புதிர் பற்றிச் சிந்தித்தார். பேடன் என்ற தலைப்பில் வரும் உரையாடலில் இவருடைய கருத்துகள் இடம்பெற்றுள்ளன. நிலத்துக்கடியில் டார்ட்டரஸ் எனப்படும் பெரிய குகை வாயில்கள் இருக்கின்றன என்றும், இவற்றின் வழியாகக் கடல், குளம், ஆறு, ஊற்று ஆகிய அனைத்திற்கும் நீர் வருகிறது என்றும் அவர் குறிப்பிடுகிறார். இவருடைய மாணவர் அரிஸ்டாட்டிலும் இது பற்றிச் சிந்தித்துத் தன் கருத்தை வெளியிட்டுள்ளார். கடல்நீர் ஆவியாக மாறுகிறது. அது ஆகாயத்தில் மேகமாகச் செல்வது போலவே, நிலத்தின் அடியிலும் மேகமாகச் செல்கிறது. மலையின் அடிப்பகுதிக்கு வந்ததும் இம்மேகம் நீராக மாறி ஊற்றுகள் வழியாகச் சுரக்கிறது என்பது அவரின் கருத்தாகும்.

கி. மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த லுக்ரெடஸ் முதல் கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பிளினி, செனகா போன்ற உரோமானிய தத்துவ அறிஞர்களும் கிட்டத்தட்ட கிரேக்க அறிஞர்களைப் போலவே கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். உலகம் பயன்படுத்தும் நீர் முழுவதற்கும் தோற்றுவாய் மழை ஒன்றுதான் என்று உறுதியான தெளிவு பிறக்க நீண்ட நாட்கள் ஆயின. ஆனால் இவ்வுண்மையைப் பழந்தமிழர்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பின்வருமாறு கூறுகிறார்:

வான் முகந்த நீர் மலைப் பொழியவும்
மலைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்
மாரி பெய்யும் பருவம் போல
நீரினின்றும் நிலத்து ஏற்றவும்
நிலத்தினின்று நீர்ப் பரப்பவும் (126-131)

பூம்புகார் துறைமுகத்தில் ஒருபுறம் கரையிலிருந்து கப்பல்களுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களை வரிசை வரிசையாக ஏற்றுவார்கள். மற்றொருபுறம் பிற நாடுகளிலிருந்து கப்பலில் வந்த பொருள்களைக் கரை இறக்குவார்கள். இரண்டையும் ஒருசேரக் கண்ட புலவருக்கு இக்காட்சி கடலிலிருந்து வானிற்குத் தண்ணீர் செல்வதும், பின்பு நிலத்தில் மழையாகப் பெய்வதும், இது மீண்டும் ஆறுகளில் ஓடிக் கடலை அடைவதுமான நீரியல் சுழற்சியை நினைவுப்படுத்தியதாம்.

நல்லந்துவனார் எனும் புலவர் பரிபாடலில்,

நிறை கடல் முகந்து உராய் நிறைந்து நீர் துளும்பும் தம்
பொறை தவிர்பு அசைவிடப் பொழிந்தன்று வானம் (6:1-2)

என்று கூறுகிறார். மேகங்கள் நீர் நிறைந்த கடலில் இருக்கும் நீரை முகந்து கொண்டு வானில் எங்கும் பரவி, நீர் நிறைதலால் தளும்பும் தம் பாரம் தீர்ந்து இளைப்பாறும் பொருட்டுப் பெய்பவை போல் மழை பொழிந்தது என்கிறார்.

இதே, பரிபாடலில் மையோடக் கோவனார் என்னும் மற்றொரு புலவர்,

திரைஇரும் பனிப் பெளவம் செவ்விதா அற முகந்து
உர உரும் உடன்று ஆர்ப்ப ஊர் பொறை கொள்ளாது
கரை உடை குளமெனக் கழன்று வான் வயிறு அழிபு
வரை வரை தொடித்த வயங்கு வெள் அருவி (7:1-4)

என்கிறார்.

இப்பாடலில் இவர் குளத்தின் கரை உடைந்தால் எவ்வாறு பெருவெள்ளம் ஏற்படுமோ அதுபோலக் கடலில் நீரை மொண்டு ஆவியாகிய மேகம் குளக்கரை உடைவது போல் தன் வயிறு கிழிந்து மழையைக் கொட்டுகின்றது என்று நயம்படப் பாடியுள்ளார். தமிழ்ப் பாடல்களில் மேகத்திற்கு நீர் தரும் மூலப்பொருள் கடல் என்பது தெளிவாகக் கூறப்பட்டமையால் பண்டைத் தமிழர்கள் நீர்வள இயலைத் தெளிவாக அறிந்திருந்தனர் என்பதை உணரமுடிகிறது. முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய புறப்பாட்டு கடல் நீரை முகந்தே மேகம் மழையினைப் பொழிகிறது என்பதை உணர்த்தி நிற்கிறது. திருமுருகாற்றுப்படையில் நக்கீரர்,

கார்கோள் முகந்த கமஞ்சூழ் மாமழை
வாள்போழ் விசும்பில் வள் உறை சிதறி
தலைப்பெயல் தலைஇய தண் நறுங்கானத்து (7-9)

என்று கூறுகிறார். கடலில் உள்ள நீரை முகந்ததால் நிறைவையுடைய கருப்பம் பொருந்திய மேகம் கதிரவனும் திங்களும் இருளைப் போக்கும் வானில் பெருமையுடைய நீர்த்துளியை முதலில் சிதறிக் கார்காலத் தொடக்கத்துக்குப் பெய்யும் முதல் மழை பெய்ததால் குளிர்ந்த காடு என்னும் பொருள்பட அவர் பாடியுள்ளார். நல்லந்துவனார் என்னும் புலவர் அகநானூற்றில்,

கடல்முகந்து கொண்ட கமஞ்சூழ் மாமழை
சுடர் நிமிர் மின்னொடு வலனேர்பு இரங்கி (43:1-2)

என்று கூறுகிறார். இப்பாடலில் அவர், கார்மேகங்கள் கடல் நீரை முகந்து வானில் படர்ந்து, இடி முழக்கஞ் செய்து, மண்ணும், விண்ணும் ஒன்றென மயங்கும்படி பெருமழைப் பொழிகிறது என்கிறார். குறிஞ்சிப்பாட்டில் கபிலர்,

நிறையிரும் பௌவம் குறைபட முகந்து கொண்டு
அகலிரு வானத்து வீசுவளி கலாவலின்
முரசதிர்ந்தன்ன வின்குர லேற்றொடு (47-49)

என்கிறார். இதன்பொருள் பறவைகள் எல்லாம் தம் கூடுகளில் போய் அடங்கும்படிக் கடல் குறைய நீரை மொண்டு கொண்டு வானில் கூடிய மேகங்கள் காற்று வீசுவதால் கலங்கி முரசு போன்று இனிதே இடியுடன், முருகனின் வேல் போல் மின்னும் மின்னலுடன் மழையைப் பொழிந்தது என்பதாகும். பரிபாடலில் நல்வழுதியார் என்னும் புலவர்,

வளிபொரு மின்னொடு வான்இருள் பரப்பி
விளிவு இன்று கிளையடு மெல் மலை முற்றி (12:1-2)

என்று பாடுகிறார். காற்றினால் மோதப்பட்ட மேகம் மின்னலையும், இருளையும் மாறி மாறிப் பரப்பித் தன் இனத்துடன் போய்ச் சைய மலையை அடைந்து அதனைச் சூழ்ந்து, இடைவிடாமல் மழை பெய்தது என்பதே இதன் பொருளாகும். இதே கருத்துகளை மதுரை கண்ணங் கூத்தனாரின் கார் நாற்பதிலும் காணமுடிகிறது.

கடனீர் முகந்த கமஞ்சூ லெழிலி
குடமலை யாகத்துக் கொள்ளப் பிறைக்கும்
(33)

கருங்கடல் மேய்ந்த கமஞ்சூ லெழிலி
இருங்க லிறுவரை யேறி யுயிர்க்கும் (37)

இக்கருத்துக்களையே வள்ளுவரும் தம் குறளில்,

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான் நல்காதாகி விடின். (17)

என்கிறார். மேகமானது கடலிலிருந்து நீரை மொண்டு வந்து அக்கடலிலேயே மழையாகப் பெய்யாவிடில், பெரிய கடலும் தன் வளம் குறைந்து போகும் என்பதே இதன்பொருளாகும். வான் சிறப்பு அதிகாரத்தில்,

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று. (11)

என்கிறார் வள்ளுவர். தன்னை அருந்தும் உயிரை அழியாமல் காப்பது அமிழ்தமேயாகும். அதுபோல் மழையானது பருவம் தவறாமல் பெய்து உலகத்து உயிர்கள் வாழ்ந்து வருவதால் அம்மழை அமிழ்தம் என்று எண்ணத்தக்கதாகும் என்கிறார். அப்படிப்பட்ட மழையும், மழை நீரும் இல்லாவிடில் உலகம் எப்படி இருக்கும் என்பதை மற்றொரு குறளில்,

நீர் இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு. (20)

என்கிறார். இதற்குப் பரிமேலழகர், எவ்வகை மேம்பட்டார்க்கும் நீரின்றி உலகம் அமையாதாயின் அந்நீர் இடையறாதொழுகும். அதாவது எவ்விடத்தும், எக்காலத்தும் உளதாதல் வானின்று அமையாதது என்கிறார்.

இத்தகு சிறப்பு வாய்ந்த மழை இளங்கோவடிகளையும் வெகுவாக ஈர்த்துள்ளது. அதனால்தான் ஞாயிற்றையும், திங்களையும் போற்றிய பின் அவர் மாமழையைப் போற்றுகின்றார்.

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி யுலகிற்கு அவனளிபோல்
மேனின்று தான் சுரத்தலான். (1: 7-9)

இப்பாடல் அடிகளில் இரு கருத்துகள் காணப்படுகின்றன. ஒன்று உலகின் வளம் பற்றியது. இயற்கையின் எல்லா வளங்களும் மழையின் கொடை என்பது இரண்டாவது அறிவியல் கருத்து, தூறல், சாரல், பெருமழை என்று பெய்திறம் பலவகைப்படும். சிறு தூறல்களில் பசும்புல் மட்டுமே நனையும் விரைவில் உலர்ந்துவிடும். சாரல் ஓரளவு தரையில் நீர் செல்ல உதவும், ஓடையிலும் நீர்ப் பெருக்கு

இருக்கும். பெருமழையால் மிகுந்த வெள்ளம் ஏற்படும். அதனால் அனைத்து ஏரி, குளம், குட்டைகளும் நிரம்பும், பயிர் விளைவதற்கு அது காலம் முழுவதும் பயன்படும். இளங்கோ வடிகளின்"மாமழை"யின் பொருள் இதுவாகத்தானிருக்கும்.

மழையின் தோற்றம் கண்ட தமிழர்கள், எவ்வக் காலங்களில் மழைப்பொழிவு இராது என்பதனையும், வானில் உள்ள கோள் நிலை கண்டு தெளிவாக அறிந்து வைத்திருந்தனர். வெள்ளிக் கோள் தென் திசையில் வந்தால் மழைப்பொழிவு அந்த ஆண்டில் இல்லை என்பதனைச் சங்கப் பாடல்களில் காணமுடிகிறது. சூரிய மண்டலத்தில் ஒளிமிக்க கோள் வெள்ளி (சுக்கிரன்) ஆகும். இக்கோள் தென்திசையில் எழுதல் தீய நிகழ்ச்சியின் அறிகுறி என்றும், வட திசையில் நில்லாமல் திசை திரிந்து தெற்கில் வந்தால் நாட்டில் மழை பெய்யாது பஞ்சம் உண்டாகும் என்றும் பழந்தமிழர்கள் நம்பினர். இதனைப் பின்வரும் சங்கப்பாடல்கள் சுட்டுகின்றன. புற நானூற்றில் வெள்ளக்குடி நாகனார்.

**இலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினும்** (35:7)

கபிலர்

**தென்திசை மருங்கின் வெள்ளி யோடினும்** (117:2)

மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மன்னனார்,

**வெள்ளி தென்புலத் துறைய விளைவயற்**
**பள்ளம் வாடிய பயனில் காலை** (388:1-2)

பட்டினப் பாலையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார்,

**வசையில் புகழ் வயங்கு வெண்மீன்**
**திசைதிரிந்து தெற்கேகினும்** (1-2)

சிலம்பில் இளங்கோ அடிகள்,

**விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்** (10:103)

இவ்வாறு இக்கோள் பற்றிப் பாடியுள்ளனர். இக் கருத்துக்களை இந்த நூற்றாண்டிலும் கருவூர்ப் பகுதியில் உள்ள கிராம மக்களின் நாட்டுப்புறப் பாடல்களிலும் காணமுடிகிறது. "கிண்ணியிலே மாக்கரைச்சி" எனத் தொடங்கும் பாடலில்,

வெள்ளி தென்திசையில்
வெண்மேகம் வடதெசையில்
வெள்ளாமை நம்பி நிற்கும்
வெள்ளாளன் எத்திசையில்

என்று கோளின் நிலை பற்றிப் பாடப்பட்டுள்ளது. மேலும் தெற்கே சென்ற வெள்ளி மீண்டும் வடக்கே வந்து பஞ்சம் நீங்கி, வயலெல் லாம் நீர் பெருகி வற்றாத வளம் பெருக வேண்டும் என்று வருணனை வேண்டிக்கொண்டு பாடும் பாடல் வருமாறு:

வடக்கே வெள்ளிவர
வயலெல்லாம் நீர் சொரிய
அந்தவரம் கேட்டு
வந்திறங்கு வருண தேவா !

இவ்வேண்டுகோளுக்கிணங்க மழை பொழிந்தால் மக்கள் பெரும் மகிழ்வுற்றுப் பாடும் பாடலில் கூட கோள்நிலை குறிப்பிடப் பெறுகிறது. மேலும் பாமர மக்களிடமும் மழை பற்றிய அறிவு அதிகமாக இருந்தது என்பதனைப் பின்வரும் பழமொழிகள் மூலம் அறியமுடிகிறது.

"ஈசானிய மூலையில் கோபுர மாசி கட்டிடுச்சி மழைவரும்"..... (ஈசானிய மூலை-வடகிழக்கு, கோபுர மாசி-கோபுரம் போல் தோன்றும் மேகம் என்பது பொருள்)

அது போல் வேடந்தாங்கலில் உள்ள பறவைகள் சரணா லயத்திற்குப் பல ஆயிரம் பறவைகள், பல நாடுகளிலிருந்தும் வருகின்றன. அங்கு ஏரியினுள் உள்ள மரங்களில் இப்பறவைகள் கூடுகள் கட்டி வாழத் தலைப்படுகின்றன.

அவை மழை அதிகம் இருக்குமானால் மரங்களில் கூடுகளை உயரத்தில் கட்டிக் கொள்ளும் மழை குறைவு என்றால் கூடுகளைத் தாழ்வாகக் கட்டிக்கொள்கின்றன. மழை அதிகம் பெய்தால் ஏரியின் நீர் மட்டம் உயரும். கூடுகள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்படும். இதனை முன்கூட்டியே உணர்ந்து இப்பறவைகள் கூடுகளை அமைக் கின்றன. வரும்முன் அறியும் ஆற்றல் இப்பறவைகளுக்கு இயற்கையாகவே அமைந்துள்ளது.

கோள்நிலை குறித்துக் கூறப்பட்டுள்ள கருத்துக் களையும், மக்களிடம் தொன்றுதொட்டு வழங்கிவரும் வழக்காறுகளையும், பறவைகள், விலங்குகளால் அறியப்படும் செய்திகளையும் பொறுமையுடன் ஆராய்ந்து குறிப்பிட்ட காலத்திற்குக் கணினியில் தொகுத்துச் சரிபார்த்தால் உண்மை அறிந்து பயன்பெறலாம். இதற்கான வித்தினை நம் முன்னோர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே விதைத்துள்ளதை அறியும்போது நமக்கு வியப்பே மேலிடுகிறது.

# தமிழ் இலக்கியங்களில் நீர் மேலாண்மை

உலகம் செழிக்க அடிப்படையாய் விளங்குவது நீராகும். மனிதர்கள் உணவு உண்ணாமல் கூட சிலநாட்கள் இருந்திட இயலும். நீரினைப் பருகாமல் இருப்பது என்பது எளிதான செயல் அல்ல. உலகம் உய்யவும், உயிர்கள் வாழவும் மிகமிக அவசியம் நல்ல தண்ணீர் தேவையாகும். 15, 20 ஆண்டுகளுக்கு முன் பெல்லாம் ஆறு, ஏரி, வாய்க்கால் போன்ற நீர் நிலைகளில் கைகளாலேயே நீரினை அள்ளிக்குடிக்கக் கூடிய நிலை அப்பகுதி மக்களிடையே இருந்து வந்தது. இன்று நிலை அப்படியல்ல. பாட்டில்களில் அடைக்கப்பெற்ற தூய்மைப் படுத்தப்பட்ட நீரினை பாலின் விலையைவிடக் கூடுதலாக விலைகொடுத்து வாங்கி அருந்த வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

நம் முன்னோர்களால் மிகவும் போற்றிப் பாதுகாக்கப் பெற்று பயன்படுத்தப்பட்டு வந்த நீரை நாம் மதிக்கத் தவறியதால் ஏற்பட்ட விளைவுதான் இன்றைய நிலை.

**விசும்பின் துளிவீழின் அல்லால் மற்று ஆங்கே**
**பசும்புல் தலைகாண்ப தரிது (16)**

என்கிறார் திருவள்ளுவர். வான்பொழியும் நீரே உயிர்ப்பு என்பதற்கு அடிப்படையாய் அமைகின்றது. அத்தகைய நீராதாரத்தை தமிழ் மக்கள் தொன்றுதொட்டு உயிரினும் மேலானதாகப் போற்றி யுள்ளனர்.

மழைநீரைச் சேமித்து, சேமித்த நீரை திறம்படப் பயன்படுத்துவதன் மூலமே தமிழகத்தின் வேளாண்மை பெரிதும் நடைபெற்றது. இந்த மழை நீரினை ஏரிகள், குளங்களில் சேமித்து வைப்பது பற்றி இளங்கோவடிகள் தம் படைப்பான சிலம்பில் மிக அழகாகக் குறிப்பிடுகின்றார்.

> இடியுடைப் பெருமழை எய்தா ஏகப்
> பிழையா விளையுள் பெருவளம் சுரப்ப
> மழைபிணித்(து) ஆண்ட மன்னவன்.....
> (காடுகாண் காதை. 27-29)

இப்பாடலடியில் மழை பிணித்து ஆண்ட மன்னவன் என்பதன் பொருள் முறையாகப் பெய்யும் மழை நீரினை ஏரி, குளங்களில் சேமித்து அவற்றை தக்க முறையில் பயன்படுத்தி நாட்டை வளம்பெறச் செய்யும் மன்னன் இவன் என்பதாகும்.

இதே போல மழை நீரைச் சேமித்து வைப்பதற்கு ஏற்ற நீர் நிலைகளை அமைப்பது ஒரு மன்னனின் தலையாயக் கடமை என்று புறநானூற்றுப் பாடலில் புலவர் குடபுலவியனார், பாண்டியன் நெடுஞ்செழியனைப் பார்த்துப் பாடுகின்றார்.

> நிலன் நெளிமருங்கின் நீர்நிலை பெருகத்
> தட்டோரம்ம இவண்தட் டோரே
> தள்ளாதோர் இவண் தள்ளாதோரே. (18:28-30)

இதன் பொருள் நிலம் எங்கெங்கு பள்ளமாக இருக்கின்றதோ அங்கெல்லாம் நீர்நிலைகள் அமையும்படி கரை அமைத்த மன்னர்களே இவ்வுலகில் என்றென்றும் அழியாத புகழ்பெற்று விளங்குவர் என்பதாகும். மேலும் இனியவை நாற்பது, திரிகடுகம், பெரியபுராணம் போன்ற தமிழ் இலக்கியங்களில் குளம் வெட்டுவித்தல் என்பது மிகப்பெரும் அறச்செயல் என்று போற்றப்பெறுகின்றது. "காவோடு அறக்குளம் தொட்டல் மிக இனிதே" என்ற வரி இனியவை நாற்பது சுட்டுவதாகும்.

மழைப் பொழிவினைத் தேக்கி வைத்துப் பயன்படுத்த ஏரிகள், குளங்கள் வெட்டுவிக்க வேண்டும் என்று கூறும் தமிழ் நூல்கள் அவற்றோடு நில்லாமல் அவைகள் எந்த வடிவில் அமைந்தால் நல்லது என்ற அறிவியல் உண்மையையும் எடுத்துச் சொல்லுகின்றன.

புறநானூற்றுப் பாடலில் கபிலர்,

> அறையும் பொறையும் மணந்த தலைய
> எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்
> தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ (118:1-3)

எனக் குறிப்பிடுவதன் மூலம் ஏரி எந்த வடிவில் இருக்க வேண்டும் என்று பாடுகின்றார். ஏரிக்கரை நீளம் குறைவாகவும் ஆனால் அதிகநீர் கொள்ளளவு கொண்டது மான அமைப்பு எட்டாம் பிறை வடிவில் ஏரி இருக்கும்போது ஏற்படும். இது ஏரி வடிவமைப்பில் மிகவும் சிக்கனமான வடிவமைப்பாகும். இன்றும் இத்தகு வடிவமைப்புடன் திகழும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கவிநாட்டுப் பேரேரியின் விண்கோள் படத்தினைக் கண்டு ஆய்வு மேற்கொண்டோம். அவ்வேரியின் அமைப்பு எட்டாம் நாள் திங்கள் போன்றே இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.




**கவிநாட்டு ஏரியின் விண்கோள் படம்**

இதேபோல் சிறுபஞ்ச மூலத்தில் குளம் அமைக்கும் முறை பற்றிக் காரியாசான் கூறுகின்றார். அதில் பொதுக்கிணறு அமைத்தல், வரத்துக்கால், மதகுகள், மிகைநீர் வெளியேறும் கலிங்கு, தூம்பு போன்றவைகளை அமைப்பவர் சொர்க்கத் திற்குப் போவார் என்று குறிப்பிடுகின்றது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திரி கடுகத்தில், நீர் வரும் வரத்துக்கால் நன்கு அமையாத குளம் இருப்பின் அதனால் பயன் குறையும் என்ற செய்தியினை,

வாய்நன் கமையாக் குளனும் வயிறாரத்
தாய்முலை யுண்ணாக் குழவியும் சேய்மரபில்
கல்விமாண் பில்லாத மாந்தரும் இம்மூவர்
நல்குரவு சேரப்பட் டார். (84)

என்று தாய்ப்பால் அருந்தாத குழந்தையும், கல்வி அற்ற நிலையில் உள்ளவர்களும் எப்படி சிறக்க முடியாதோ அதுபோல் வாய் நன்கு அமையாத குளமும் இருக்கும் என்று குறிப்பிடுகின்றார்.

மிகுதியாக வரும் ஆற்று வெள்ளநீரை தம்முள் அடக்கிக் கொள்ளக்கூடிய பெரும் ஏரிகள் இருப்பது ஒரு நாட்டிற்குச் சிறப்பு தரும் என்பதை "யாறுள் அடங்குங் குளமுள வீறுசால்" என்று நான்மணிக்கடிகை குறிப்பிடுகின்றது. இப்பாடலில் குறிப்பிடப் பெறும் ஆறு உள் அடங்கும் குளம் என்ற சொற்றொடர் நீர் மேலாண்மைத் திறத்தின் ஒரு முக்கிய வெளிப்பாடாகும். பெரு வெள்ளம் ஏற்படும் காலங்களில் அந்நீரினை உரிய முறையில் சேமித்து நீர் இல்லாத காலங்களில் பயன்படுத்தக் கூடிய நிகழ்வை இச்சொற்றொடர் எடுத்துக்காட்டுகின்றது. ஆற்றின் மிகுதி நீரை உள்வாங்கிக் கொள்ளக் கூடிய பேரேரிகள் உரிய ஆழ அகலத்துடன் இருக்குமாயின் வெள்ளக்காலங்களில் வரும் அதிகப்படியான நீர் வீணாகக் கடலில் கலக்காமல் முழுவதையும் சேமித்துப் பயன் கொள்ள முடியும்.

காவிரியின் மிகுநீர் வடிகாலாக விளங்கும் கொள்ளிடப் பேராறு நீர்ப்பெருக்கு எடுக்கும்பொழுது அதனை சேமித்துப் பயன்படுத்தவே வீர நாராயணன் என்ற பட்டம் சூடிய பராந்தக சோழன், வீராணம் எனப்படும் வீர நாராயணப் பேரேரியை வெட்டுவித்து ஆறு உள் அடங்கும் பெருங் குளமாக அமைத்தான். அப்பேரேரி ஏறத்தாழ 18 கி. மீ. நீளமுடையது. இது காலப்போக்கில் பராமரிப்பு இன்றி தூர்ந்துவிட்டதால் மிகு நீரை சேமிக்க முடியாமல் போயிற்று. வீராணம் ஏரி, கவிநாட்டுப் பேரேரி போன்ற பெரும் ஏரிகளை ஆழப்படுத்தி அவைகளுக்கிடையே இணைப்புக் கால்வாய்கள் வெட்டி பெருகும் வெள்ளநீரை சேமித்தால் நம் நாட்டிற்குப் பெரும் பயன் ஏற்படும்.

இத்தகு கண்மாய்களையும், குளங்களையும் காத்து நின்ற அதாவது முறையாகப் பராமரித்த செய்தியினை, நக்கண்ணையார் பாடிய அகநானூற்றுப் பாடல்,

> பெருங்குளக் காவலன் போல
> அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே. (252:13-14)

என்கின்றது. அதாவது பனியிலும், மழையிலும், அடர்ந்த இருள் சூழ்ந்த நள்ளிரவிலும் ஏரியைக் காக்கும் காவலன் போல, குழந்தையைப் பாதுகாக்க அன்னை தன் தூக்கத்தை மறந்தாள் என்பது இப்பாடலின் பொருளாகும். சிறு குழந்தையைத் தாயானவள் கண்ணினை இமை காப்பது போல் காத்த செயலும், நீர் நிலைகளைக் காக்கும் செயலும் ஒன்றாகவே எண்ணப்பட்டு வந்துள்ளது.

பழந்தமிழ் நூல்களில் இத்தகு நீர்நிலைகளிலிருந்து மிகு நீரை வெளியேற்ற கலிங்கு என்ற அமைப்பை ஏற்படுத்தி யிருந்தனர். இக்கலிங்கு குறித்த தகவல்கள் மிகுதியாக இலக்கியங் களில் சுட்டிக் காட்டப்பெற்றுள்ளன. ஏரியின் முழுக்கொள்ளளவு நீர்மட்டத்தைக் கணக்கிட்டு, இயற்கை யாகவே பள்ளமாக உள்ள கரையின் ஒரு பகுதியில் அந்த உயர அளவில் சிறு வடிகால் அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம்

மிகும் நீரை வெளியேற்றி வந்தனர். இந்நீர் வெளியேற ஒரு கால்வாய் ஏற்படுத்தி அடுத்த ஏரியிலோ அல்லது ஆற்றிலோ கலந்துவிடும்படி செய்திருந்தனர். இதனால் நீர் வீணாவது தடுக்கப்படுவதோடு, எவ்வளவு வெள்ளம் வந்தாலும் ஏரியின் கொள்ளளவைத் தாண்டிய நீர் இக்கலிங்கு வழியே வெளியேற்றப்படுவதால் ஏரியின் கரை உடைப்பெடுப்பதும் தடுக்கப்பெற்றது. இத்தகு தொழில் நுட்பம் நம் தமிழகத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது.

மேலும் ஏரிக்கரையின் உயரம், அகலம் ஆகியவை எவ்வளவு இருக்கவேண்டும். கரைக்கு வெளியே குறிப்பிட்ட தூரம் வரை உள்ள நிலத்தை யாரும் ஆக்கிரமிப்பு செய்தல் கூடாது. கரையில் மரங்களை நட்டுப் பராமரித்தல், அம்மரங்களை யாரும் வெட்டுதல் கூடாது போன்ற பல மேலாண்மைத் தொடர்பான செயல்களையும், ஏரிகளைப் பராமரிக்க ஒரு தனி நிருவாக அமைப்பாக ஏரி வாரியம் அமைக்கப்பட்டிருந்த செய்திகளையும் கல்வெட்டுக்களால் அறியமுடிகின்றது. தமிழகத்தில் பல ஆயிரக்கணக்கான எண்ணற்றப் பேரேரிகள் இருந்தன. அவற்றைப் பராமரிக்க குளப்பட்டி என்ற பெயரால் நிலமளித்து அதன் வருவாயி லிருந்து ஏரிகளைக் காக்க வகை செய்தனர்.

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான மணி மேகலையின் பன்னிரண்டாம் காதையான அறவணர் தொழுத காதை என்னும் பகுதியில் புத்ததேவன் தோற்றம் பற்றிக் கூற வரும் கூலவாணிகன் சாத்தனார்,

பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி
இரும்பெரு நீத்தம் புகுவது போல
அளவாச் சிறுசெவி அளப்பரு நல்லறம்
உளமலி உவகையோடு உயிர்கொளப் புகூஉம். (79-82)

என்கிறார். சுருங்கை என்பது பூமிக்கடியில் செல்லும் சிறிய குழாய் அதாவது பெருங்குளங்களாகிய பேரேரிகளின்

ஒருபுறம் உள்ள சிறிய சுருங்கை வழியாக அங்கு தேக்கப்பட்ட நீர் வெளியேறி மக்களுக்கு அளவிட இயலாத வகையில் பயன்தரும். அதுபோல, செவித்துளை வழியே நல்ல அறக்கருத்துக்கள் உள்ளத்தைச் சென்றடையும் என்பதே இதன் பொருளாகும்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் ஏரிகளிலும், குளங்களிலும் இருந்து நீர் வெளியேற்றும் மதகு அமைப்பு சுருங்கைகளாக இருந்தன. இந்த மதகு அமைப்பே குமிழித்தூம்பு என்பதாகும். பழந்தமிழர்களின் நீர் மேலாண்மைச் செயல்பாட்டில் இந்த குமிழித்தூம்பு அறிவியல் சார்ந்த மிக நுட்பமான, நேர்த்தியான பயன் பாடுடைய படைப்பாகும்.




இத்தகைய குமிழிகள் ஏரிக்கரையிலிருந்து சுமார் இருநூறு அடி தொலைவில் ஏரியின் உள்ளே தரைமட்டத்தில் அமைந்திருக்கும்

**பண்டைய குமிழி அமைப்பு**

மேலை நாட்டினரின் மதகு அமைப்புகளின் மேல் நம்மவர்கள் கொண்ட நாட்டத்தால் நம்முடைய பண்டைய தொழில் நுட்பத் திறத்தைப் புறக்கணித்துவிட்டு குமிழிகள் அழியக் காரணமாக இருந்துவிட்டோம். இதனால் ஏரிகள் தூர்ந்து போயின. நீர்வளம் குறையத் தொடங்கியது.

கலிங்குகள் வடிகாலாக விளங்கியதைப் போன்றே குமிழிகள் பாசனக் கால்வாய்களுக்கு மதகுகளாக விளங்கின. ஏரிக் கரையிலிருந்து எந்தெந்த இடங்களில் பாசனக் கால்வாய்கள் பிரிந்து செல்கின்றனவோ அந்த இடத்திலிருந்து 200 அல்லது 300 அடி தொலைவில் ஏரிக்குள் குமிழிகள் அமைக்கப்பட்டன. ஏரியின் தரை மட்டத்தில் மிக வலிமையான கருங்கற்கள் கொண்டு ஒருதளம் அமைத்து அதன் நடுவே கருங்கல் பெட்டி ஒன்றினை அமைப்பர். அப்பெட்டியின் அடிமட்டத்திலிருந்து ஒரு சுரங்கக் கால்வாயினைக் கருங்கல் அல்லது செங்கல் கொண்டு பூமிக்குக் கீழாக உருவாக்கி, அதனை ஏரிக்கரைக்கு கீழாகக்கொண்டு சென்று, கரைக்கு வெளியே பாசனக் கால்வாய் தலைப்பில் வெளித்தோன்றுமாறு அமைப்பர். கருங்கல் பெட்டியின் மேல் பக்கம் நீர் வெளியேறுவதற்கான துளையையும், பக்க வாட்டில் வண்டல் படிந்த சேறு வெளியேறுவதற்கான சேறோடித்துளை என்ற மூன்று சிறிய துளைகளையும் அமைப்பர். கல்பெட்டியின் இருமருங்கும் ஏரியில் தேக்கப்படும் அதிகப்படியான நீரின் கொள்ளளவு உயரத்தைவிட சற்று உயரமான அளவில் இரு கருங்கல் தூண்களை நிறுத்துவர். இரு குறுக்கு விட்ட கற்களை அத்தூண்களுடன் இணைப்பர். கல்பெட்டியின் நீரோடு துளைக்கு நேராக இரு குறுக்குவிட்ட கற்களிலும் துளையிடுவர். நீண்ட கம்பி அல்லது மரக்கழியினை அத்துளை வழியே செலுத்தி அதன் அடிமுனையில் கல்பெட்டியின் மதகு வாயில் (துளையில்) சரியாகப் பொருந்தும் அளவுக்குரிய அடைப்புக்கல் ஒன்றினை இணைப்பர். கம்பி அல்லது மரக் கழியினை மேலிருந்து இயக்குவதன் மூலம் நீர் செல்லும் தூம்புத் துளையினை மூடுவதும், திறப்பதும் இயலும், கல்பெட்டி மற்றும் தூண் அமைப்புகளை குமிழி என்றும், இவைகளுக்குக் கீழாகச் செல்லும் நீர் வெளியேறும் சுருங்கை வழியினை தூம்பு என்றும் குறிப்பிடுவர்.

இந்த மதகு அமைப்பில் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாக விளங்குவது சேறோடித்துளைகளே ஆகும்.

பெருவெள்ளப் பெருக்குகளால் ஏரியை வந்தடையும் நீரில் வண்டல் இருப்பதால் ஆண்டுதோறும் ஏரியின் தரைமட்டப் பகுதியில் வண்டல் அதிகமாகிக் கொண்டே இருக்கும். அவற்றை வெளியேற்றாமல் விட்டுவிட்டால் சில ஆண்டு களில் ஏரி தூர் படிந்து மேடிட்டுவிடும். ஆண்டுதோறும் நீர் முழுவதையும் வெளியேற்றிவிட்டுத் தூர்வாருதல் என்பது இயலாத ஒன்று. மேலும் தூர்வாருவதற்கு செலவும் அதிகமாகும். இவ்வாறு இல்லாமல் அவ்வப்போது ஏரியின் தரை மட்டத்தில் சேகரமாகும் வண்டலை நீரோடு கலக்கி வெளியேற்றி விட்டால் வண்டல் படிந்து மேடாகாது. இதற்கென தனிக்கருவிகள் ஏதும் தேவை இல்லை. இதனைச் செய்வதுதான் குமிழித்தூம்பின் வேலையாகும்.

நீர்ப்பாசனத்துக்காக குமிழியின் அடைப்புக்கல் திறக்கப் படும்போது நீர் மிக வேகமாக சுழித்துக்கொண்டு கல்பெட்டி வழியே நீர்த்தூம்புக்குள் செல்லும். அதே நேரத்தில் நீர்ச்சுழல் மூலம் கலக்கப்படும் நீரில் வண்டல் கரைந்து சேறாகி வெளியேற்றப்படும். நீரின் வேகத்தால் சேறோடித்துளை மூலம் தரை மட்டத்தில் கெட்டிப்பட்டு படிந்திருக்கும் சகதி உள்ளே இழுக்கப்பெற்று பாசன நீரோடு கலந்து சென்றுவிடும். இதனால் 90 விழுக்காடு நல்ல நீரோடு 10விழுக்காடு சேறும் கலந்து வெளியேறுவதால் ஏரியின் தரைமட்டத்தில் வண்டலும் படியாது. அதே நேரத்தில் பாசன நீரில் வண்டல் கலப்பதால் வயல்களுக்கு நல்ல உரமாகி பயிர்களுக்குப் பயன்படும். இத்தகைய தொழில் நுட்ப உத்தி மேலை நாட்டவர் அமைத்த திருகு மதகுகளில் இல்லை. அதனால்தான், பெரும்பாலான ஏரிகள் காலப்போக்கில் மேடிட்டு அழிந்தன. மேலும் அத்தகைய மதகுகளின் உதவியால் ஏரியின் முழுக் கொள்ளளவு நீரையும் சேமிக்க இயலாது.

தமிழ் இலக்கியங்கள் சுட்டும் நீர் மேலாண்மைச் செய்திகள் ஏதோ கற்பனையான ஒன்று என்று யாரும் எண்ணிட முடியாது. அதில் கூறப்படும் செய்திகள் அறிவியல்

சார்ந்தவையாக இருப்பதை கல்வெட்டுச் சான்றுகள் கொண்டு உறுதி செய்ய முடிகின்றது. இந்த அடிப்படையில் கள ஆய்வு மேற்கொள்ளும் பொழுது இன்றளவும் ஈராயிரம் ஆண்டுகள் கடந்தும் பழைய எச்சங்களுடன் சில அணைகள், ஆறுகள், ஏரிகள், குளங்கள், கிணறுகள் ஆகியவற்றை காணமுடிவது வியப்பிற்குரிய ஒன்றாகும்.

யாரோ ஒரு கவிஞர் பாடியுள்ளார்,

என்தாத்தா ஆறு குளங்களில்
தண்ணீரைப் பார்த்தார்.....

என் தந்தை கிணறுகளில்
தண்ணீரைப் பார்த்தார்....

நான் பிளாஸ்டிக் பாட்டில்களில்
தண்ணீரைப் பார்க்கிறேன்......

என் குழந்தைகள்.......?

என்று கேள்விக் குறியுடன் கவிதையினை முடித்துள்ளார். இத்தகு நிலை நம் எதிர்கால தலைமுறையினருக்கு ஏற்படாத வகையில் பழைய தொழில் நுட்பங்களுடன், புதியவை களையும் இணைத்து நீரைச் சேமிப்போம், எதிர்காலத்தைக் காப்போம்.

# இராசராசனும் உய்யக்கொண்டான் கால்வாயும்

தமிழர்தம் வீரத்தையும், பெருமையினையும், அப்பெரு மக்களின் வரலாற்றையும் உலகிற்குப் பறைசாற்றியவன் மாமன்னன் இராசராசன் என்றால் அது மிகையன்று. அம்மன்னன் பெற்ற வெற்றிகள், வென்ற நாடுகள், அவனது கொடை உள்ளம், பொறியியல் நுட்பம் மிக்க கோயில்கள், இசை, ஓவியம், நாட்டியம் எனப் பல்வேறு கலைகளுக்கு அவன் அளித்த ஆக்கம் எண்ணி லடங்கா. அதனால் வளர்ந்த அக்கலைச் சின்னங்கள் இன்றும் நம் முன்னே சோழ மண்டலத்தின் பல இடங்களிலும் நின்று நிலைத்திருப்பதைக் காணமுடிகின்றது. அருங்கலைகளை வளர்த்ததோடு நில்லாமல், நிருவாகத்திலும் மிகச் சிறந்த ஆற்றல் பெற்று விளங்கினான் மாமன்னன் இராசராசன்.

அதனாலேயே இம்மன்னன் கொண்ட பட்டப் பெயர்கள் அதிகம். அவை அபய குலசேகரன், அழகிய சோழன், இரவிகுல மாணிக்கம், இரவிவம்ச சிகாமணி, இராஜசர்வஞ்ஞன், இராஜ மார்த்தாண்டன், இராஜ விநோதன், உத்துங்க துங்கன், உலகளந் தான், உய்யக் கொண்டான், கேரளாந்தகன், சிங்களாந்தகன், சிவபாத சேகரன், சோழகுல சுந்தரன், திருமுறைகண்ட சோழன், தெலிங்க குலகாலன், நிகரிலிச் சோழன், நித்த விநோதன், பண்டித சோழன், பாண்டிய குலாசனி, மும்முடிச்சோழன், ஜனநாதன் என்று சிறப்புடன் அழைக்கப்பெற்றான்.

ஒருநாட்டின் வளர்ச்சிக்கும், வளமைக்கும் அடிப்படை யாய்த் திகழ்வது நீர் ஆதாரமேயாகும். இதனை நன்கு உணர்ந்த இராசராசன் தன் ஆட்சிக்காலத்தில் நீர் ஆதாரங்களான எண்ணற்ற ஏரிகள், குளங்கள், கால்வாய்களை வெட்டுவித்து, அதனை முறையாகப் பராமரிக்க நிதி ஆதாரங்களையும் ஏற்படுத்தி நிருவாகம் செய்ய பல்வேறு நிருவாகக் குழுக்களை நியமனம் செய்து வேளாண் பொருளாதாரமும், கால்நடைச் செல்வங்களும், பெருக

வழிவகை செய்தான் என்பதை அவனுடைய மெய்க் கீர்த்திகள் (கல்வெட்டுகள்) எடுத்தியம்புகின்றன.

நீர் அறுவடை, நீர் சேமிப்பு, நீர்ப்பங்கீடு என்ற வகையில் அதிகமான பணிகளைச் செய்தவன் இராசராசன், இருந்தபோதும், நீர் நிலைகளைக் காப்பவனே தன் குடிப்பெருமையைக் காப்பான் என்ற புறநானூற்று வரிகளுக்கு ஏற்ப, தன்னுடைய பட்டப் பெயரான உய்யக் கொண்டான் என்ற பெயரில் ஒரு கால்வாயினை வெட்டு வித்து, அதன் மூலம் நிறைவேற்றிய நீர் மேலாண்மைத் திட்டத்தினை இக்கட்டுரையின்கண் காண்போம்.

பரந்துபட்ட சோழ மண்டலத்தை மாமன்னன் இராஜராஜ சோழன் (கி. பி. *985*-கி. பி. *1014)* தான் சூடிய பட்டப் பெயர்களால் பல வளநாடுகளாகப் பிரித்தான். அவற்றில் ஒரு வளநாடு பாண்டிய குலாசனி வளநாடு என்பதாகும். இவ்வளநாட்டில் பல நாடுகளும், கூற்றங்களும் அடங்கியிருந்தன. அவ்வாறு திகழ்ந்த பாண்டிய குலாசனி வளநாட்டு நாடுகளில் ஒன்றே ஏரியூர்நாடு என்பதாகும். தஞ்சை இராஜராஜேச்சரத்துக் கல்வெட்டு, வல்லம் ஏகௌரியம்மன் கோயில் கல்வெட்டு போன்ற இராசராசன் காலத்துச் சாசனங்களில் இவ்வேரியூர் நாடும், அதில் அடங்கியிருந்த சில ஊர்களும் குறிக்கப்பெறுகின்றன. கருவுகுல வல்லம் (வல்லம்) , விண்ணணேரி எனும் மும்முடிச் சோழ நல்லூர் (விண்ணணூர்ப்பட்டி), விக்கிரம சோழ சதுர்வேதி மங்கலம், புலிக்களம், இடைக்குடி போன்ற ஊர்கள் குறிக்கப்பெறுகின்றன. ஏரியூர் நாடு என்பது காரணப் பெயராகும். ஏரிகள் அதிகம் இப்பகுதியில் இருந்ததால் இப்பெயர் ஏற்பட்டிருக்கும்.

ஏன் ? இங்குள்ள ஏரியூர் நாட்டிற்கு மாயனூரிலிருந்து கால்வாய் வெட்டி நீரினைக் கொண்டுவர வேண்டும். வெண்ணாற் றிலிருந்து கால்வாய் வெட்டக்கூடாதா? ஏன் காவிரியிலிருந்து கால்வாய் வெட்ட வேண்டும்? என்ற கேள்வி எழலாம். இங்குதான் மாமன்னனின் நிலவியல் (புவி) அறிவு அவன் பல்துறை வித்தகன் என்பதைப் பறைசாற்றுகின்றது. வெண்ணாற்றின் தென்கரையில் உள்ள இந்நாட்டுப் பகுதிக்கு காவிரியாற்றின் நேரடிப் பாசனம் இல்லாமலிருந்தது. இதற்கு காரணம், காவிரி மற்றும் வெண்ணாறு ஆகிய ஆறுகள் ஓடும்

பகுதியிலிருந்து இந்நாடு நிலமட்டத்தில் உயரமான இடத்தில் உள்ளதால் பாசனத்திற்கு வசதியே இல்லாமல் இருந்தது. அதனால் இந்நாடு முழுவதும் பல ஏரிகள் வெட்டப் பெற்று அவ்வேரிகளில் தேங்கும் நீரால் இப்பகுதியில் வேளாண்மை நடைபெற்றது. தமிழ்நாட்டில் இந்தளவுக்கு மிக அதிகமான ஏரிகள் கொண்ட ஒரு பகுதி கிடையாது என்றே கூறலாம்.

மாமன்னன் இராசராசனின் மகத்தான சாதனைகளுள் ஒன்று காவிரியின் தென்கரையில் குளித்தலைக்கு மேற்கே பத்துகல் தொலைவிலுள்ள மாயனூர் எனுமிடத்திலிருந்து ஒரு கால்வாயினை வெட்டி அதன் மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள காவிரியின் தென்கரை ஊர்களான பழையூர், அணலை, புலிவலம், சோமரசம்பேட்டை போன்ற ஊர்களுக்குப் பாசன வசதி செய்ததோடு அந்த கால்வாயை ஏரியூர் நாட்டுப் பகுதிக்கு கொண்டுவந்து அங்கு திகழ்ந்த பேரேரிகளுக்கு இணைப்புத் தந்து அவ்வேரிகளுக்குப் பாசன வசதி செய்துள்ளான். அவன் வெட்டுவித்த அக்கால்வாய்க்கு அவனது பட்டப்பெயரான உய்யக்கொண்டான் என்ற பெயரைச் சூட்டினான். இன்றளவும் அப்பெயர் நிலைபெற்று அழைக்கப் பெற்று வருகின்றது. உய்யக்கொண்டான் என்பதற்குப் பொருள், பிழைக்குமாறு அருள் செய்தான் எனத் தமிழ்-தமிழ் அகர முதலி சுட்டுகின்றது.

அம்மன்னன் வகுத்த அந்த ஏரியூர் நாடு, பின்னர் ஏரி மங்கல நாடு என்ற பெயரால் அழைக்கப்பெறுகின்றது. இந்நாட்டில் தற்போது இராயமுண்டான்பட்டி, வெண்டையம்பட்டி, வையாபுரிப் பட்டி, சுரக்குடிக்குப் பட்டி, காங்கேயம்பட்டி, சோழகம்பட்டி, விண்ணனூர்ப் பட்டி, வேலிப்பட்டி, புதுப்பட்டி போன்ற ஊர்கள் திகழ்கின்றன. இவை அனைத்தும் உய்யக்கொண்டான் வாய்க் காலின் பாசனத்தால் வளம்பெறுகின்றன. உய்யக் கொண்டான் வாய்க்கால் இராயமுண்டான்பட்டி பேரேரிக்கு நீர் தந்து அதன் தென்கரை வழியாக ஓடி வெண்டையம்பட்டி ஏரியையும் நிரப்பி, பின்பு கோட்ராப்பட்டி, ஆவாரம்பட்டி வரை சென்று அங்குள்ள சிறுசிறு ஏரிகளுடன் கலந்து மீதமுள்ள நீர் வெண்ணாற்றில் சென்று சேர்ந்துவிடும்படி அமைக்கப்பட்டுள்ளது. ஏரிகளை அடுக்குத் தொடராக அமைத்த அம்மன்னனின் சாதனை வியக்கத்தக்க செயலாகும்.

உய்யக்கொண்டான் கால்வாயினை வெட்டுவித்ததோடு நில்லாமல், அதன்வழி வரும் நீரினைத் திறம்பட நிருவகித்த மாமன்னனின் செயல்பாட்டையும், தொழிநுட்பத்தையும் வெண்டையம்பட்டி ஏரியின் வழி காண்போம்.

இப்பேரேரி தற்பொழுது 360 ஏக்கர் பரப்பளவுடன் விளங்கு கின்றது. காவிரி நீர் உய்யக்கொண்டான் வாய்க்கால் வழியே வந்து இராயமுண்டான்பட்டி ஏரியினை முதலில் நிரப்புகிறது. அவ்வேரி நிரம்பியவுடன் அடுத்து வெண்டையம் பட்டி பேரேரி அந்நீரால் நிரம்புகின்றது. இந்த ஏரி நீர் வெண்டையம் பட்டியின் கழனிகள் முழுவதற்கும் பாசனவசதி தருகின்றது. ஏரி நீரைப் பாசன வாய்க்கால் களுக்குக் கொண்டு செல்ல பண்டைக்காலத்து நீர் மதகு அமைப்பான குமிழி ஒன்றுள்ளது. ஏரிக்கரையிலிருந்து சுமார் 200அடி தூரத்தில் பழைய குமிழியின் இரண்டு கற்றூண்கள் நிற்கின்றன. அதன் குறுக்குவிட்ட கற்களும், கீழே குமிழிக் குரிய நீர்த்துளை, சேறோடித்துளை ஆகியவை உள்ள பகுதிகள் தற்போது காணப்பெறவில்லை. அவைகள் திகழும் கல்பெட்டிப் பகுதி முற்றிலுமாக அகற்றப்பெற்றுள்ளன. அக்கல்பெட்டிப் பகுதி தற்போது காணப்படாவிட்டாலும், ஏரிக்கு வெளியே பழைய சுரங்கக் கால்வாய் தொடங்கும் இடத்தில் இடிபாடுற்ற செங்கற்பகுதி தெரிகின்றது. ஏரியில் நீர் இருக்கும் காலங்களில் அச்செங்கல் கட்டுமானப் பகுதி யிலிருந்து கால்வாய்க்கு நீர்க்கசிவு ஏற்பட்டு நீர் ஓடுவதைக் காண இயன்றது. இதனால் குமிழித்தூண் இருக்குமிடத் திலிருந்து ஏரியின் தரை மட்டத்திற்கு கீழாகவும், ஏரிக்குக் கீழாகவும் சுருங்கை அமைப்பு (தூம்பு) இருக்கவேண்டும் எனக் கருதி ஏரி நீர் வற்றிய கோடைக் காலத்தில் ஏரிக்கரைக்கும், குமிழித் தூண்களுக்கும் இடைப்பட்ட பகுதியில் தோண்டி ஆய்வு மேற்கொள்ளப் பெற்றது. தரை மட்டத்திலிருந்து மூன்று அடி ஆழத்தில் கீழே தூம்பு செல்லும் சுருங்கையின் மேற்பகுதியான வளைவு, குமிழியின் தலைப்புப் பகுதி அழிந்த போதும் நீர் வெளியேறும் தூம்பாகிய சுருங்கை வழி மிக நல்ல நிலையில் இன்றும் இருப்பதை கள ஆய்வில் காணமுடிந்தது.

வெண்டையம்பட்டி பேரேரி (குமிழிக் கற்களுடன்)



பழைய குமிழியில் நீர் வெளியேறும் பகுதியில் இருந்த கல்பெட்டி அமைப்பின் தடயங்கள் கிடைக்குமா என அப்பகுதி முழுவதும் தேடப்பெற்ற பொழுது குமிழித் தூண்கள் இருக்கும் பகுதிக்கு அருகிலேயே ஏரிக்கரையின் மீது பிற்காலத்தில் அமைக்கப்பெற்ற மதகு வாயில் இருக்குமிடத்தில் அவை பண்டைய அமைப்பு முறையி லேயே அமைக்கப்பெற்றிருப்பதைக் காண முடிந்தது. இங்கு பிற்காலத்திய மதகு அமைப்புகளான திருகு மதகு அல்லது பலகை அமைப்பு முறை பின்பற்றப்படாமல் நம் பண்டைய தொழில் நுட்ப முறையினையே இன்றும் பயன்படுத்தி வருகின்றனர். இம்மதகில் ஏரியின் தரைமட்டத்தில் கருங்கற்கள் கொண்டு அமைக்கப்பெற்ற சேறோடி வாய் உள்ளது. அதனை மூடவும், திறக்கவும் கல்பெட்டி அமைப்பை உருவாக்கி அதில் சொருகு கல் இட தனி அமைப்பினை உருவாக்கியுள்ளனர். அக் கல்பெட்டியின் மேற்தளத்தில் இரண்டு துளைகள் உள்ளது. இது இரண்டு கண்மடை ஆகும். இவ்விரு மதகுக் கண்களையும் மரம் அல்லது கருங்கல் கொண்டு அடைப்பதற்கும், திறப்பதற்கும் ஏற்ற வகையில் மேலே ஒரு குறுக்கு உத்தரம் அமைத்து இரண்டு துளை செய்துள்ளனர். அத்துளையின் வழியாக நீண்ட இரும்புக் கம்பி அல்லது மரக்கம்பின் தலைப்பில் மூடுகல்லை இணைத்து அத்துளை வழி அவற்றை மேலே இழுத்தும், கீழே இறக்கியும் அம்மதகு வாய்களை மூடித்திறந்து நீர் வெளியேற வகை செய்யப் பட்டுள்ளது. சேறோடி வழியைத் திறப்பதால் சேறுடன் (வண்டல்) கலந்த அடிப்பகுதி நீர் அம்மதகு வழி வெளியேறி வயல்களுக்கு உரமாகச் சென்றடையும். இச்சேறோடித் துளையினை ஏரியின் நீர் மட்டம் மிகவும் குறைந்துள்ள நிலையில்தான் பயன்படுத்துவர்.

பழைய குமிழித்தூம்புகள் ஒருசில ஏரிகளில் காணப் பெற்றாலும், அவை பிற்காலத்தில் ஏற்படுத்தப் பெற்ற புதிய மதகு அமைப்பினால் பயனற்றவையாகவே காணப் பெறுகின்றன. சோழநாட்டில் உள்ள ஏரிகள் பலவற்றில்

பண்டைக்கால குமிழிகளின் அமைப்புமுறை மாறாமல் அப்படியே உள்ளன. இவ்வகை குமிழித்தூம்புகள் ஏரிக்கரையில் அமையாமல், ஏரிக்கரையிலிருந்து சற்று உள்நோக்கியே அமைந்திருக்கும். அந்த இடத்திலிருந்து பூமிக்கடியிலும் (ஏரியின்தரைமட்டத்திற்குக் கீழாகவும்) அதனைத் தொடர்ந்து ஏரிக்கரைக்கு கீழாகவும் கருங்கல் அல்லது செங்கற்கள் கொண்டு சுரங்கம் போன்று தேவையான அளவிற்கு ஏற்ப தூம்பு வழி செய்யப்பெறும்.

அதன் புறவாய் ஏரிக்கு வெளியே உள்ள பாசனக் கால்வாயின் தலைப்பில் வெளிப்படும். ஏரியின் உட்புறம் மதகு வாய் அமைக்கப்பெறும் இடத்தில் கருங்கல்லாலான செவ்வக வடிவ பெட்டி ஒன்றினை அமைப்பர். அதன் பக்கவாட்டில் மூன்று அல்லது நான்கு துளைகள் இருக்கும். இவை சேறோடி, சேத்தடி என்று கூறுவர். பெட்டியின் மேற்பலகையில் மேல் நோக்கியவாறு ஒன்று அல்லது இரண்டு துளைகள் இருக்கும். இவற்றை நாழிகை வாயில் அல்லது நாவாய் என்பர். இதுவே ஏரிநீர் வெளிச்செல்லக்கூடிய் மதகு வாய் ஆகும். இந்த நாழிகை வாயில் அமைந்த கல்பெட்டியின் பக்கவாட்டில் இரண்டு உயரமான கற்தூண்கள் நடப்பெற்றிருக்கும். இவற்றை குமிழிக்கல் அல்லது மதகுத்தூண் என்பர். இவ்விரு தூண்களையும், இரண்டு குறுக்கு உத்திரங்கள் இணைத்து நிற்கும். மதகு வாய் ஆகிய நாழிகைத் துளைகளுக்கு மேலாக ஒரு நேர்க்கோட்டில் அமைந்துள்ளவாறு. குறுக்கு உத்திரங்களில் துளைகள் அமைக்கப்பெற்றிருக்கும். நாழிகை வாயிலை மூட (மதகு வாயினை) பம்பரம் போன்ற அமைப்பில் கல்லினால் மூடி செய்து அதன் தலையில் நீண்ட இரும்பாலான கம்பியினை இணைத்து அக்கம்பியினை குறுக்கு உத்திரத் துளைகளில் செருகி மேலும், கீழும் இறங்குகின்ற வகையில் அமைப்பர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பல குமிழித் தூண்களில் அதனை அமைத்தவர்களின் பெயர்கள் கல்வெட்டாகப் பொறிக்கப் பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. ஏரியில் நீர்

பெருகும் காலத்தில் சேறோடித் துளையினை கற்கள் கொண்டு அடைத்துவிட்டு, நாழிகை வாய்மூடிக் கல்லை மட்டுமே இயக்கி ஏரி நீரைத் தூம்பு வழியாகப் பாசனக் கால்வாய்களுக்கு அனுப்புவர். இப்பணியினை நீராணிக்கம் என்ற நன்கு நீச்சல் பயிற்சி பெற்ற நபர்களே செய்துவந்தனர். நீர் மிகுந்திருக்கும்பொழுது குமிழிக் கற்களுக்கு நீந்திச்சென்று அதன் குறுக்கு உத்திரங்கள் மீது ஏறி நின்று மதகு வாய் மூடு கல்லின் இரும்புக் கம்பியை இயக்கி நீர் வெளியேறும்படிச் செய்வர். இவ்வகை தொழில்நுட்பச் சிறப்புகளுடன் விளங்கும் மதகு அமைப்பே நம் நாட்டு ஏரிகளுக்கு ஏற்புடைத்தாகும். மேலை நாடுகளின் மதகு அமைப்பினை பின்பற்றி, ஏரிக்கரை மீது அமைக்கப்பெற்றுள்ள மதகு அமைப்புகளால் ஏரி விரைவில் மண்மேடிட்டு தூர்ந்து போகின்றது.

வெண்டையம்பட்டி ஏரியின் கரை அமைப்பினை ஆராய்ந்த பொழுது அதன் அடித்தளம் சுமார் 100 அடி அகலமும், 25 அடி உயரமும், 20 அடி அகலம் உடையதாக விளங்குகின்றது. பெருந் தொகை எனும் தமிழ் நூலில் உள்ள ஒரு பழம்பாடல்,

**உச்சம்கோல் எண்கோல் உயரம் பதினாறு கோல்**
**எச்சம் பிரிவாயிருபது கோல்-தச்சளவு**
**மண்கொள்ளக் கொண்டகோல் எண்கோல் வளவர்கோன்**
**கண் கொள்ளக் கண்ட கரை. (2154)**

என்று கரிகாற்பெருவளத்தான் காவிரிக்கரை அமைத்த திறத்தை அளவீடுகளுடன் எடுத்துக் கூறுகின்றது. இது போன்றே இவ்வேரியின் கரை அமைப்பும் அனுபவப் பூர்வமான கணக்கீட்டின் அடிப்படையிலேயே அமைந்துள்ளதைக் காண இயலுகின்றது.

வெண்டையம்பட்டியின் பேரேரியின் கலிங்கு, அவ்வேரியின் கிழக்குத் திசையில் முன்னோக்கி அமைந்துள்ள ஒரு தனி கட்டமைப்பின் வடக்கு நோக்கியவாறு

அமைந்துள்ளது. ஏரியின் முழுக்கொள்ளளவு உயரத்திற்குச் செம்புறாங்கற்கள் கொண்டு கலிங்கு அமைக்கப் பெற்றுள்ளது. இது ஒரு வலிமையுடைய சுவர் அரணாக விளங்குகின்றது. ஏரியின் கொள்ளளவு நிரம்பியதும், இக்கலிங்குச் சுவர் வழியாக மிகுநீர் வழிந்து ஏரிக்கு வெளியிலுள்ள வாரி என்ற கால்வாய் வழியே வெளியேறி விடும். ஏரி உடைப்பு எடுக்காமல் மிகும் நீரை வழியச் செய்து இக்கால்வாய் மூலம் வாரிச்செல்லுமாறு செய்யப் பெற்றுள்ளதால், வாரி என்ற காரணப்பெயர் ஏற்பட்டது. வெண்டையம்பட்டியின் வடிநீர் வாரி வடக்கு நோக்கிச் சென்று, பிற்காலத்தில் வெட்டப்பெற்று மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிப் பாயும் கல்லணைக் கால்வாய்க்குக் கீழாகச் (பிரத்தியேகமாக அமைக்கப்பெற்ற பால அமைப்பு) சென்று வெண்ணாற்றில் கலந்துவிடுகிறது. திருத்தக்கதேவர் சீவக சிந்தாமணி என்னும் காப்பியத்தில்,

> **விரிகதிர் ஆரம் மின்னத் தாரெனும் திருவில் வீசிக்**
> **கரிசின்மா மேகம் பெய்த கொழும்புயற் காமமாரி**
> **அரிவை தன் நெஞ்சமெனும் அகன் குளம் நிறைந்துவான்கண்**
> **கரியமை சேறு சித்திக் கலிங்கு திறந்தவன்றே. (பா.2476)**

என்று கூறும் கலிங்கு அமைப்பின் சிறப்பினை இவ்வூர் ஏரியில் காணலாம்.

உய்யக்கொண்டான் கால்வாய் நீரால் நிரம்பும் வெண்டையம் பட்டி ஏரியின் வடபுறக் கரையில் பாசனக் கால்வாய் மதகினை ஒட்டி ஒரு நினைவுச்சின்னம் அமைந்துள்ளது. இது முன்னொரு காலத்தில் பெருவெள்ளம் ஏற்பட்டபொழுது கரை உடைந்து ஊருக்கு அழிவு நேராவண்ணம் மதகு திறந்து நீரினை வெளியேற்றும் பொழுது உயிர்துறந்த நீராணி ஒருவரின் உடலைப் புதைத்த இடத்தில் இந்நினைவுச் சின்னத்தை அமைத்து ஊர் மக்கள் பண்டு தொட்டு வழிபட்டு வருகின்றனர். கரை மீது அமைந்துள்ள இந்நினைவிடத்தில் பட்டவன் தெய்வமாக இருந்து கரையைக் காப்பதாக மக்கள் ஒப்புகின்றனர். இங்கு நீராணியாக இருந்த பட்டவனை, உடப்பன் என்ற பெயரால்

குறிப்பிடுகின்றனர். அந்நினைவு மேடையில் உள்ள சிறுமாடத்தில் திருவிளக்கு ஏற்றுவதோடு, அவருக்குப் படையலும் இடுகின்றனர். படையலில் சுருட்டு, கள் போன்றவையும் படைக்கப்பெறும்.

சோழநாட்டில் திகழும் பல ஏரிக்கரைகளையும், ஆற்றின் கரைகளையும், வெள்ளக்காலங்களில் உடைப்பு ஏற்படும் பொழுது காக்கும் பணியில் ஈடுபட்டு உயிர்துறந்த பலரை அவர்கள் பட்ட இடங்களிலோ அல்லது ஐயன், பிடாரி போன்ற கோயில்களிலோ கல்நட்டு பட்டவன் வழிபாடு செய்வது மரபாகத் திகழ்ந்தது. அவ்வழிபாடு இன்றளவும் தொடர்வது குறிப்பிடத்தக்கதாகும். சோழர், பாண்டியர் கல்வெட்டுக்களில் இவ்வாறு நீர் நிலைகளைக் காக்கும் பணியில் ஈடுபட்டு உயிர் நீத்தவர்களுக்கு உதிரப்பட்டி எனும் பெயரில் நிலம் கொடையாக வழங்கியுள்ளமை இங்கு நோக்குதற் குரியதாகும். மற்றவர்களைக் காப்பதற்காகத் தன் இன்னுயிரை ஈந்தவர்களை காலங்காலமாய் போற்றும் தமிழ்ப் பண்பாட்டு மரபினை இத்தகு சின்னங்கள் வாயிலாக நாம் அறியமுடிகின்றது.

உய்யக்கொண்டான் கால்வாய் மூலம் வரும் காவிரிநீரினை பல்வேறு ஏரிகளுக்குப் பகிர்ந்து அளித்தும், அதில் ஒரு ஏரியான வெண்டையம்பட்டி ஏரி பற்றியும், அதன் செயல்பாடுகளும் இதன் மூலம் விளக்கப்பட்டது. நீர் மேலாண்மையில் மாமன்னன் இராசராசனின் அளப்பரிய ஆற்றல் இதனால் தெளிவாகின்றது.

உய்யக்கொண்டான் என்ற தன் பட்டப்பெயரில் ஒரு கால்வாயினை வெட்டுவித்து, அக்கால்வாய் வரும் வழியில் உள்ள பல ஊர்களிலும் மிகப்பெரும் ஏரிகளை வெட்டுவித்து, அதன் மூலம் அவ்வப்பகுதிகளின் நிலத்தடி நீர்மட்டத்தையும் காத்து, பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறவும், கால்நடை வளம் பெருகவும் வழிவகை செய்த அம்மன்னனை எவ்வளவு போற்றினாலும் தகும்.

# பழந்தமிழரின் ஆயுதம் – வளரி
# (பூமராங்)

பூமராங் என்னும் ஓர் ஆயுதத்தை இன்றளவும் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களான அபோர்ஜினியர்கள் பயன்படுத்தி வருவதாகச் செய்திகள் கூறுகின்றன. இந்த பூமராங் என்ற ஆயுதமானது கையால் வீசியெறியக்கூடிய வகையில் வளைந்த வடிவத்துடன் உருவாக்கப் பெற்றதாகும். இவ்வாயுதமே பழந்தமிழரின் வளரி ஆகும். இவ்வளரி ஏறக்குறைய பிறை வடிவமாக இருக்கும். ஒருமுனை மிகவும் கனமாக இருக்கும். இதன் ஓர் ஓரம் கூர்மையாக இருக்கும். இதனை மரம், இரும்பு, யானைத் தந்தம் போன்றவற்றால் செய்து பயன்படுத்தினர். மரத்தால் செய்த வளரி, வேட்டையாடுதலுக்கும், இரும்பு வளரி போர் செய்யவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நன்கு பயிற்சிபெற்றவர்கள் இதன் கனமற்ற நுனியைக் கையில் பிடித்துக்கொண்டு தோளுக்கு மேலே பலமுறை வேகமாகச் சுழற்றி விரைவாக இலக்கினை நோக்கி எறிந்திட அது இலக்கினைத் தாக்கிவிட்டு, எறிந்தவரிடமே திரும்பவும் வந்து சேரும்.



**வளரி**

கையால் வீசியெறியக்கூடிய வகையில் வளைந்த வடிவத்துடன் உருவாக்கப்பெற்ற இவ்வாயுதம் காட்டு விலங்கு களையோ, எதிரிகளிடமிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காகவோ உருவாக்கப்பெற்றதாகும். இதனை வீசி எறிபவர் மிகுந்த கவனத்துடனும், நுட்பத்துடனும் எறிந்து எதிரியைத் தாக்க வேண்டும். எதிரியைத் தாக்கிவிட்டு வீசி எறிந்தவரிடமே வந்து சேரக்கூடிய அற்புதமான ஆயுதம் இதுவாகும். திரும்ப வரும்பொழுது கவனமாகக் கையால் பிடித்துக்கொள்ள வேண்டும். இல்லையெனில் வீசியெறிந் தவரையேத் தாக்கும் வாய்ப்பு உள்ளது.

விமானவியல் இயக்கத்தின் அடிப்படையிலான அறிவியல் திறன்கொண்டு வடிவமைக்கப்பெற்று. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பயன்பட்டு வந்த, வருகின்ற இந்த பூமராங்கின் தாயகம் எது ? தாயகத்தில் இதன் பெயர் என்ன ? இதனை இன்றும் பயன்பாட்டில் வைத்துள்ள அபோர்ஜினியர்கள் யார்? இந்த வினாக்களுக்கான விடைகளை இக்கட்டுரையில் காண்போம்.

இதன் வரலாற்றில் பரசுராமர், அகத்தியர் என்ற முனிவர் களின் பெயர்கள் புராணத்தோடு தொடர்புடையவனாக இருப்பினும் தொல்பொருள் அகழாய்வுகளும், ஆராய்ச்சி யாளர்களின் முடிவும், வழங்கும் சான்றுகளிலிருந்து இந்தியாவிற்குள் நுழைந்த ஆரியர்கள், இந்தியா முழுவதும் பரவியிருந்த திராவிடர்களிட மிருந்தே பல ஆயுதங்களின் பயிற்சி முறைகளைக் கற்றறிந்தனர். மகாபாரதப் போரில் கிருஷ்ணன் பயன்படுத்திய சுதர்சனச் சக்கரம் தமிழர்க ளிடையே வழங்கிவந்த வளரி என்னும் ஆயுதமாகும். கிருஷ்ணன் திராவிடராகக் கருதப்படுகிறான். இவன் ஆரியர்களை வெறுப்பவனாகக் கருதப்படுகிறான் என்று அ. அருணாச்சலம் Sudras in Ancient India என்ற ஆங்கில நூலினை மேற்கோள் காட்டி, தமிழர் வீர விளையாட்டுகள் எனும் நூலில் எழுதியுள்ளார்.

மேலும் அதே நூலில், பாண்டியர்கள் மதி குலத்தைச் சார்ந்தவர்கள், திருமாலின் அம்சமான கிருஷ்ணனும் மதி குலத்தவனே. திருமாலே மீன் வடிவில் வந்து மனுவைக் காப்பாற்றியவர். இந்திய நாட்டிலே ஆரியர் வருகைக்கு முன் வாழ்ந்த மக்கள் பரதர் எனப்பட்டனர். ஆகவே இந்தியநாடு பரதக் கண்டம் எனப்பெயர் பெற்றது. பரதர்கள் ஆண்மையும் வீரமும் செறிந்த பெருமக்கள். அம்மக்கள் வெளியேறிய காலம் மனுவின் பெரிய வெள்ளப்பெருக்கை அடுத்தது.

யாழ்ப்பாணம் ந. சி. கந்தையாபிள்ளை எழுதிய சரித்திர காலத்திற்கு முற்பட்ட தமிழர் எனும் நூலில் கூறப்படும் செய்தியானது, பண்டு என்று முற்காலத்தில் அறியப்பட்ட இந் நாவலந்தீவு இன்று காணப்படுவது போலல்லாது தெற்கே பெருந்தொலைவு நீண்டு விரிந்து கிடந்தது. அதன் பெரும்பகுதி இஞ்ஞான்று கடல்வாய்ப்பட்டது. இந் நிகழ்ச்சியைப் பழந்தமிழ் இலக்கியங்கள் எடுத்து இயம்புகின்றன. நில நூலார் ஆராய்ச்சியும் இதனை வலியுறுத்துகின்றது. தமிழகத்தின் தொடர்பாக இந்து மாக்கடலுள் அகன்று கிடந்த நிலப்பரப்பைக் கடல் விழுங்கிய வரலாறு மக்களால் மறந்து விடப்படவில்லை. மறைந்துபோன நிலம் பஃறுளி ஆறு குமரிமலை என்பவைகளை எல்லையாக உடையதாயும் எழுநூறு காதம் பரப்புடையதாயும், மக்கள் நெருங்கி வாழப்பெற்றதாயும், வெள்ளப்பெருக்குக்கு முற்பட்ட நாகரிக வளமுடையதாயும் திகழ்ந்தது. நிலநூல், தொல்லியல் நூல் ஆராய்ச்சிகள் தலையெடுப்பதற்கு நெடுநாள் முன்னரே இவ்வரலாறுகள் தமிழ் நூல்களில் எழுதிவைக்கப்பட்டுள்ளன. சிலப்பதி காரத்தில் இவ்வரலாறு குறிக்கப்பட்டுள்ளது. இவ் வரலாற்றினை நக்கீரனாரும் இறையனார் அகப்பொரு ளுரையில் கூறியுள்ளார். இளம்பூரணர் நச்சினார்க்கினியர் என்னும் இருபெரும் உரையாசிரியர்களும் அதனை தொல்காப்பிய உரையகத்தே நவின்றனர்.

“நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்” என்னும் சிலப்பதிகார அடியுரையுள் அடியார்க்கு நல்லாரும் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வெள்ளப்பெருக்குக்கு முன் மேற்குத் தொடர்ச்சி மலை வடமலை எனப்பட்டது. இப்பெயர் தெற்கிலிருந்து மூழ்கிப்போன தென்கண்டம் தொடர்பானது. "சதபதப் பிரமாணம்" என்னும் வடமொழி நூல் மனுவின் பேழை வடமலையில் தங்கியது என்று சொல்லுகின்றது. மனு பொதியமலையில் தங்கி தவம் புரிந்த தமிழ் மன்னன் என புராணங்கள் கூறுகின்றன. பாகவத புராணம் மனு திராவிட மன்னன் எனச்சொல்லுகின்றது.

மகாபாரதமும், புராணங்களும் இப்புதிய தேசத்தில் சென்று குடியேறிய ஏழு முனிவர்களைப் பற்றிக் கூறுகின்றன. இம் முனிவர்களில் ஒருவர் புலத்தியர். இவர் வழியில் அகத்தியரும், தென்னிலங்கை மன்னனான இராவணனும் தோன்றினர். மனுவின் வரலாற்றினை முதன்முதல் கூறும் சதபதப்பிரமாணம் வடமலையின் பெயரைக் குறிப்பிட வில்லை. வடமலை என்பது மேற்குத் தொடர்ச்சிமலை என்பதற்கும், பேழை தங்கிய இடம் மலையம் என்பதற்கும் போதிய ஆதாரங்கள் புராணங்களில் காணப்படுகின்றன. சூரிய குமாரன் மலையத்திலே தவம் செய்து கொண்டிருக்கும் போது கிருதமாலை (வையை) ஆற்றில் தெய்வீக மீன் தோன்றிற்று என்று மச்சபுராணம் கூறுகிறது. திராவிட மன்னான மனு கிருதமாலை ஆற்றில் பலி செலுத்தினான் என்று பாகவத புராணம் கூறுகிறது. கிருதமாலை ஆற்றின் ஓரத்தில் இருந்து மனு தவம் செய்தார் என்பதை அக்கினி புராணம் சுட்டுகின்றது. மகாபாரதத்தின் வனப்பருவம் இவ்வரலாற்றை சிறிது வேறுபடுத்தி மனு சீரினி அல்லது பாலாற்றங்கரையில் தவம் செய்தார் என்று கூறுகிறது. பாலாறு ஒரு காலத்தில் பாண்டிய நாட்டின் எல்லையாக இருந்தது.

மனு பல ஆண்டுகளுக்குப்பின் ஏழு முனிவர்களுடன் இமயமலையின் உச்சியிலிருந்து தென்பால் வந்தார் என்று இந்நூலுள் கூறப்பட்டுள்ளது. எல்லா பழைய ஆதாரங்களும் மனு தமிழ் உலகில் தவம் செய்துகொண்டிருந்தார் என்பதை வலியுறுத்துகின்றன. மனு தெற்கிலிருந்து வடக்கே சென்றார் என மகாபாரதம் கூறுவது வலியுடையதன்று. பழைய புராணங்கள் எதுவும் இதனை வலியுறுத்தவில்லை.

மகாபாரதத்திலே இவ் வரலாற்றினை எழுதியவர் சதபதப்பிரமாணத்தில் வடமலை எனக் கூறப்பட்டதை இமயமலை என பிழைபட மயங்கி அதனை இமயம் என்று கூறலாயினர். மனுவுக்கும் இமயத்துக்கும் ஏதும் தொடர்பில்லை. ஆரியர் அல்லாத மக்களின் இவ்வரலாற்றை வேறு வழிகளால் அறிந்து எழுதிய சதபதப்பிரமாணக்காரர் இக் கூற்றினையே மாகபாரதகாரர் திருப்பிக் கூறியிருக்கின்றார் என்னும் காரணம் மாத்திரம் கூறுதல் அமையும். வேதகால இந்தியா என்னும் நூலுடையார் இது ஆரியர் கதைகளில் இல்லை. அவர்கள் கதைகளில் இது தனியே நிற்கின்றது. இது அசீரியர் இதிகாசத் திலிருந்து எடுக்கப்பட்டதாக இருக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

மனு தமிழ் உலகத்தில் தோன்றியிருந்தவர் ஆதலாலும், சூரியகுமாரனான அம்மனு மலையமலையில் தவம் செய்தமை யாலும், சத்தியவிரதன் என்னும் அவர் கிருதமாலை என்னும் வையை ஆற்றில் பலி இட்டமையாலும், பாண்டிய மன்னரின் இலச்சினையாக்கப்பட்ட தெய்வீக மீன், பாண்டியரின் தலைநகராக வந்த மதுரையிலே தமிழ்ச் சாதியினரின் முன்னோன் ஆகிய மனுவின் முன் தோன்றினமை யாலும், மனுவும் அவர் வழி வந்தோறும் தமிழரே ஆவர்.

இந்திய சூரிய குலத்தையும் காஸ்பியனுக்குத் தெற்கே உள்ள தேசமக்களையும் இணைப்பதில் சலப்பிரளய வரலாறும் ஒன்றாகும். இவ்வரலாறு அசுரரால் பாதாளத்திலிருந்து கொண்டுவரப்பட்டது. சலப்பிரளயம் நிகழவிருக்கும் சம்பவம் மனுவுக்கு அறிவிக்கப்பட்டது. மனுவுக்கு சலப்பிரளயத்தைக் குறித்து எச்சரிக்கை செய்தலில் மீன் சம்பந்தப்பட்டிருத்தல், மீன், பேழையைக் கட்டும்படி அறிவித்தல் போன்றவை சாலடியர் ஈஆ என்னும் தெய்வத்தை சம்மந்தப் படுத்திக் கூறும் சலப்பிரளய வரலாற்றை ஒத்துள்ளது. ஈஆ என்னும் தெய்வம் மீன் வடிவிலும் பாம்பு வடிவிலும் வணங்கப்பட்டது.

சதபதப்பிரமாணத்தில் சலப்பிரளயத்தைப் பற்றிக் கூறப்படும் போது இடம் குறிக்கப்படவில்லை. மனு தனது

காலை வழிபாட்டை செய்துகொண்டிருக்கும்போது ஒரு மீன் அவரது கையில் வந்தது. அம்மீன் என்னைக் காப்பாற்று நான் உன்னைக் காப்பேன் ஒரு வெள்ளப்பெருக்கு எல்லா உயிர்களையும் அழித்துவிடும் என்றது. மனு மீனை ஒரு முட்டியுள் விட்டார். அது பெரிதாய் வளர்ந்தபோது அவர் அதை ஒரு குளத்தில் விட்டார். இன்னும் பெரிதானபோது கடலிலே அதை விட்டார். பின்பு மீன் அவரை ஒரு தோணி செய்யும்படி சொல்லிற்று. மனு அப்படியே செய்தார். சலப்பிரளயம் வந்தது. மீன் தலையில் ஒற்றைக்கொம்புடன் வந்தது. மனு கொம்பில் ஒரு கயிற்றைக் கட்டினார். மீன் அவரை வடமலைக்கு கொண்டுபோய்விட்டது. மீன் யான் உன்னைக் காப்பாற்றி விட்டேன். தோணியை மரத்தில் கட்டு என்று மனுவிடம் கூறியது. மகாபாரதத்தில் இவ்வரலாறு வேறு வகையில் கூறப்படுகின்றது.

பாகவத புராணத்தில் இவ்விடம் தென்னிந்தியா என்று கூறப்பட்டுள்ளது. அதில் மனு அல்லது சத்தியவிரதன் திராவிட மன்னன் எனக் கூறப்படுகின்றான். அங்கு மனு மலையமலையில் இருந்து ஊற்றெடுத்து வருகின்ற கிருதமாலையில் பலி செலுத்தும் போது மீன் அவருடைய கையில் வருகின்றது. சாலடிய, இந்திய சலப்பிரளய வரலாறுகள் ஒரே சம்பவத்தையே குறிக்கின்றன. சில இந்திய வரலாறுகள் மனுவைக் காத்த மீன் விஷ்ணுவின் அவதாரம் என்கின்றன.

பாண்டியர்களின் கொடியிலும் மீன் இடம்பெற்று உள்ளது. திருமாலுக்குரிய ஆயுதம் சுதர்சனம் என்னும் சக்கராயுதமாகும். இச்சக்கரத்தைக் கையாளத் தெரிந்தவன் பாண்டவர் படைகளுள் கிருஷ்ணன் மட்டுமே. கிரு என்ற மூலம் கருமையைக் குறிப்பிடுவதாகும். (கிருஷ்ண பட்சம்-தேய்பிறை-கருப்பு இரவுகள்) மகாபாரத கிருஷ்ண னுடைய முன்னோர்களான திராவிடர்கள் சிந்து சமவெளியில் நாகரீகம் அமைத்து, ஆரியர்களை எதிர்த்து நெடுங்காலம் போரிட்டவர்கள் ஆவார்கள். கிருஷ்ணனால் கையாளப்படும் சுதர்சனம் என்ற ஆயுதம் வளரி என்று தமிழர்களால்

அழைக்கப்படுகிறது. மருது சகோதரர்கள் காலம் வரையில் வளரி என்ற ஆயுதம் பாண்டியநாட்டில் முக்குலத்தோர் எனப்படும் மக்களிடையே பழக்கத்தில் இருந்து வந்துள்ளது என்பதை Stone Age in India மற்றும் எனது இராணுவ நினைவுகள் என்ற இரண்டு நூல்களை மேற்கோளாகக் கொண்டு அ. அருணாச்சலம் எழுதியுள்ளார்.

சுதர்சனம் என்னும் சக்கராயுதம் குறித்து சங்க நூலான கலித்தொகைச் சுட்டுகின்றது. இது திருமாலின் ஆயுதமாகக் கூறப்பட்டுள்ளது.

மல்லரைமறம் சாய்த்த மலர்த்தண்தார் அகலத்தோன்
ஒல்லாதார் உடன்றுஓட உருத்து உடன் எறிதலின்
கொல்யானை அணிநுதல் அழுந்திய ஆழிபோல்
கல்சேர்பு ஞாயிறு கதிர்வாங்கி மறைதலின். (134,1-4)

கம்சன் ஏவிய மல்லர்களின் வீரத்தைப் பயனின்றி நீங்கச் செய்த குளிர்ந்த தாரணிந்த மார்பனாகிய திருமால் தன்னுடன் பகைத்துப் பொருத பகைவர்கள் தோற்றோடுமாறு சினத்துடன் எறிந்த சக்கரப்படை, யானையின் நெற்றியில் தாக்கி அதில் அழுந்தியது போல, சூரியன் தன் கதிர் மடக்கி அத்தமனகிரியில் மறைந்தான் என்கிறது. அதேபோல் பரிபாடலிலும், யாவரும் உணரமுடியா சக்கரப் படையுடையவன் திருமால் என்றே சுட்டப்பெற்றுள்ளது.

இதனையே கலிங்கத்துப் பரணி,

களித்த வீரர் விரட்ட நேமி
கண்டு வீசு தண்டிடைக்
குளித்த போழ்து கைப்பிடித்த
கூர் மழுக்கள் ஒக்குமே. (418)

என்கின்றது. போரில் மகிழ்ச்சி கொண்ட வீரர்கள் சக்கரப்படையை விடுத்தனர். எதிர்த்துப் போர் புரியும் மற்ற வீரர்கள் அவற்றின்மேல் தண்டாயுதத்தை மோதி அடித்தனர். தண்டாயுதத்தில் பதிந்த சக்கரப்படை கூர்மையான மழுவாயுதம் போன்று இருந்ததாகக் கலிங்கத்துப் பரணி வளரி பற்றிக் குறிப்பிடுகின்றது.

தமிழ் மக்களின் முக்கிய வேட்டைக் கருவிகளாக வில், வேல் மற்றும் எறிகோல் எனப்படும் குறுந்தடியும் வழக்கில் இருந்தன.

எறிகோல் அஞ்சா அரவின் அன்ன (89-5)

என்ற புறநானூற்றுப் பாடலடியால் எறிகோல்-வளரி-வேட்டைக் கருவியாகவும், தாக்கும் கருவியாகவும் சங்க கால மக்களால் பயன்படுத்தப்பட்டது. குமரித் தமிழரின் இத்தகு வளரியே, பூமராங்காக ஆஸ்திரேலியப் பழங்குடியினர் பயன்படுத்து கின்றனர். ஆஸ்திரேலியப் பழங்குடியினரும் குமரித் தமிழரின் ஒரு பிரிவினர்தாம். இக்கூற்றின் விரிவான விளக்கங்களைப் பின்னர் பார்க்கலாம்.

வளரி என்னும் வளைதடி பற்றி ஐங்குறு நூற்றின் 421ஆம் பாடல்,

மாலை வெண்காழ் காவலர் வீச
நறும்பூம் புறவின் ஒடுங்குமுயல் இரியும். (1-2)

என்கின்றது. வளைந்த வெண்காழையுடைய தடியை முயல் நீங்கினதாகக் கூறியுள்ளது. மாலை என்ற சொல் மாலை போல் வளைந்த என்ற பொருளையும், காழ் என்பது உறுதி என்ற பொருளையும் தருகின்றது. வளைதடியை வைரம் பாய்ந்த மரத்தினால் செய்வர். காழ் என்பது உறுதி வாய்ந்த மரத்தைக் குறிப்பதாகும்.வளைதடியை யானைத் தந்தத்தாலும் செய்வதுண்டு. எனவே வெண்காழ் என்று சொல்லி யிருப்பதால் இந்த வளைதடி யானைத் தந்தத்தால் செய்யப்பட்டதாகவே இருக்கலாம் என்றும் சென்னைப் பொருட்காட்சி சாலையில் யானைத் தந்தத்தால் செய்யப்பெற்ற இரண்டு வளைதடிகள் உள்ளதாகவும் இலக்கியத்தில் அறிவியல் என்ற நூலில் பி. எல். சாமி குறிப்பிட்டுள்ளார்.

மாலை வெண்காழை வீசியவர் காவலர் என்று ஐங்குறு நூறு கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். காவலர் என்பார் ஊர்க் காவலை மேற்கொண்டவராவர். இம்மக்கள் ஊர்க்காவலராக இருந்த வழக்கம் ஆங்கிலேயர் இங்கு ஆட்சி செய்ய வருவதற்கு முன்னர்வரை, தென் தமிழகத்தில்

தொன்று தொட்டு இருந்து வந்ததை தர்ஸ்டன் என்ற ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பெரும்பாணாற்றுப் படையில்,

ஈன் பிணவு ஒழியப் போகி நோன்காழ்
இரும்புதலை யாத்த திருந்து கணை விழுக்கோல் (90-91)

என்ற பாடலடி ஆச்சா, கருங்காலி போன்ற வலிமையும், வயிரமும் உடைய மரங்களைக் கொண்டு செய்து இரும்பினைப் பூணாகக் கட்டிய திரண்ட சீரியகோல் என்று சொல்லியிருப்பதிலிருந்து காழ் என்பது உறுதியைக் குறிக்கின்றது.

ஐங்குறு நூறு மாலை வெண்காழ் என்றழைத்த வளை தடியை குணில் என்று வேறொரு ஐங்குறு நூறு பாடலடியும், சிலம்பின் ஆய்ச்சியர் குரவையும் குறிப்பிடுகின்றன.

பகன்றைக் கண்ணிப் பல்லான் கோவலர்
கரும்பு குணிலா மாங்கனி உதிர்க்கும் (87:1-2)

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன் (சிலம்பு)

குணில் என்ற சொல்லிற்கு குறுந்தடி என்று கூறப்பட்டுள்ளது. குணில் என்ற சொல்லே வளைவு எனும் பொருளைத்தரும். குணிலே குறுந்தடி என்று சேந்தன் திவாகரம் கூறுகின்றது.

குறுந்தடியை குறுங்கோல் என்று புறநானூறு கூறுகின்றது.

குறுங்கோ லெறிந்த நெடுஞ்செவிக் குறுமுயல் (339:4)

நெடுஞ்செவிக் குறுமுயலைக் கொல்ல குறுங்கோலை எறிந்ததாகப் புறநானூறு கூறுவதை நோக்கும்பொழுது குறுங் கோல் வளைதடியாகவே இருத்தல் வேண்டும். வெறும் கோலை எறிந்து முயலைக் கொல்வது முடியாத காரியம். எனவே இங்கு சுட்டப்பெறும் குறுங்கோல் வளை தடியினையே குறிக்கும். இத்தகு வளைதடி கொண்டு முயல் வேட்டையாடிய செய்தி ஐங்குறு நூற்றிலும் சொல்லப் பட்டுள்ளது.

இதே போன்று நைடதம் 729ஆம் பாடல் வளரி பற்றிக் குறிப்பிடுகின்றது. அப்பாடல் வருமாறு

கொடுங் குணில் பொருத வெற்றிப்
போர்ப்பறை குளிற வெம்போர்க்
கடுந்திறல் வயவர் வில்நாண்
புடைப்பொலி கடலின் ஆர்ப்பச்
சுடுங்கனல் குளிர வெய்தாச்
சுடர்விழி பொறிகள் சிந்த
மடங்கல்ஏ றனைய வேந்தர்
வாளமர் அழுவத் துற்றார்.

இங்கு வளரி குணில் எனும் பதத்தில் வழங்கப்பட்டுள்ளது. இதன் பொருள் வளைந்த குறுந்தடியால் அடிக்கப்பெற்ற வெற்றியைக் கொடுக்கின்ற போர் முரசு ஒலிக்க என்பதாகும். போர்க்களத்தில் நிறைய பேர் இறக்கும்படி செய்யும் போர்ப்பறையை அப் பதனால் குணில் என்னாது கொடுங்குணில் என்றார்.

புகழேந்திப் புலவர் இயற்றிய ஏணியேற்றம் எனும் நூலில், சுபத்திரையின் மேல் கொண்ட ஆசையினால் துரியோதனன் மதுரை நோக்கி வருகின்ற நிகழ்ச்சியினைக் கூறும் பாடலில்.

பல்லய வீரருடன் பாங்கு முனைவீரர்
பரிசை வைத்த வீரரெல்லாம் வரிசையாய்ச் சூழ்ந்துவர
ஈட்டி முனைவீரர் எழு பாலா வீரருடன்
கத்தி கட்டாரி கொண்டு காவலர்கள் சூழ்ந்துவர
வளைதடிச் சக்கரங்கள் மன்னர் பிடித்து வர. (348-352)

வளைதடி என்று வளரி குறிக்கப்பெற்றுள்ளது. மேலும் பல்லம்- அம்புவீரர், பாங்கு-பிச்சுவா வீரர், பரிசை-கேடயம் வைத்த வீரர், பாலா-ஒராயுதம் போன்ற போர் ஆயுதங்கள் பற்றியும் இப்பாடல் அடிகள் சுட்டுகின்றன.

வாளெழுபது என்னும் நூல் “வடமேரிற் கயல் காக்கும் மறவர் கையில் வளைதடியே” என்கின்றது. மீன்கொடி காக்க வளரி இருக்கிறது என்பது இதன் பொருள். பாண்டி நாட்டினர் ஆங்கிலேயருக்கு எதிரானப் போரில் வளரியைப் பயன் படுத்தியதாக எட்கர் தர்ஸ்டன் குறிப்பிட்டுள்ளார். மருது பாண்டியர்கள் கி. பி. 1780ஆம் ஆண்டில் நவாப் படைகளையும், கி. பி. 1801இல் ஆங்கிலேயப் படைகளையும் எதிர்த்துப் போரிட்டபோது வளரியைப்

பயன்படுத்திய குறிப்பு காணப்பெறுகின்றது. இந்த வளரியைக் கண்டு ஆங்கிலேயர்கள் மிகவும் அஞ்சியுள்ளனர். இதனாலேயே போர் முடிந்ததும் கர்னல் அக்னியு சிவகங்கைப் பகுதியில் பத்தாயிரம் வளரிகளைக் கைப்பற்றியதாக சென்னைப்படை வரலாறு தெரிவிக்கின்றது.

கி. பி. 1795இல் சிவகங்கையை ஆண்ட சின்னமருதுவிடம், தான் வளரி வீசக் கற்றுக்கொண்டதாக ஆங்கிலேயேத் தளபதி கர்னல் வெல்ஷ் குறிப்பிட்டுள்ளார். சிவகெங்கைச் சரித்திரக் கும்மி எனும் கும்மிப்பாடல் முத்துசாமி என்பவரால் இயற்றப்பட்டது. இக்கும்மியில் இடம்பெறும் தலைமைப் பாத்திரங்களுள் முதன் மையாக கருதத்தக்கது பெரியமருது பாத்திரம் எனலாம். வரலாற்று கதைப்பாடல்களின் இயல்பிற்கு ஏற்ப இப்பாத்திரம் இந்நூலில் முக்கிய இடம்பெறுகிறது. பெரியமருது சின்னமருது ஆகிய இருவருடைய வரலாறும் சேர்ந்ததே இக்கும்மிப் பாடலின் கதையாக இருப்பினும் அவர்களுள் பெரிய மருதின் பாத்திரமே பெரும்பாலும் மிகுதியான நிகழ்ச்சிகளாலும், உரைகளாலும், பிறர் கூற்றாலும் வர்ணிக்கப்படுகிறது.

ஆங்கிலேயரை எதிர்த்துநின்ற பெரிய மருது வளரி என்ற ஆயுதத்தை பயன்படுத்தி வெல்வதில் நிகரற்ற திறமைப் பெற்றவராகவும் திகழ்ந்துள்ளார். இத்தகு வீர உணர்வும், பகை வென்று நாட்டைக் காத்தமையும், இறுதிவரை உறுதி குன்றாது வாழ்ந்த வீரமும் மக்கள் மனதில் அவருக்கு நிலைத்த இடத்தை பெற்றுத்தந்துள்ளது.

போரின் இறுதிக்காலத்தில் காட்டில் மறைந்து வாழும் மருதுவை ஆங்கிலேயத் தளபதியும், படைகளும் சுற்றி வளைத்து கொள்கின்றனர். பகைவர்கள் சூழ்ந்துவிட்டதை உணர்ந்ததும் தன்னுடைய வளரியை ஏந்தி போரிடத் தயார் ஆகின்றார். ஆனால் அவருக்கு இருந்த பக்கவாத நோயின் காரணமாக ஆயுதத்தினை பயன்படுத்த முடியாதவாறு கை செயல் இழந்துபோகின்றது. இந்நிலையில் ஆங்கிலேயத் தளபதியை நோக்கி,

மன்னவனே யிற்றென்முன் வந்ததுபோல்
ஒருமாதத் துக்குமுன் வந்தாயானால்
என்னைப் பிடிக்க உன்னால் ஆகாது
மேலும் வளரியால் தலைதுணித் திடுவேன்

என்று கூறியதாக ஆசிரியர் பாடியுள்ளார்.

கி. பி. 1915இல் மதுரை மாவட்டத்தில் கொண்டுவரப் பெற்ற குற்றச்சட்டத்தை எதிர்த்து பிறமலைக் கள்ளர் சமுதாயம் கி. பி. 1921இல் கிளர்ந்தெழ, உசிலம்பட்டி வட்டம் பெருங்காம நல்லூரில் பெருங்கிளர்ச்சி வெடித்தது. அப்போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பலர் இறந்தனர். இக்கிளர்ச்சியின்போது இம்மக்கள் பயன்படுத்திய ஆயுதங்களில் வளரியும் ஒன்றாகும். இதன் காரணமாக இவ்வாயுதத்தைப் பயன்படுத்த ஆங்கில அரசு தடை விதித்தது. வீடுகளில் வளரி வைத்திருந்தால் அவர்களைக் குற்றவியல் தண்டனைக்கு உட்படுத்தினர். எனவே இதனை வழிபாட்டிற்குரிய பொருள்களுள் ஒன்றாக கோயில்களில் வைத்துப் பாதுகாத்தனர். இன்றும்கூட மதுரையில் சித்திரைத் திருவிழாவின்பொழுது அழகர் கோயிலில் இருந்து புறப்படும் கள்ளழகர் அலங்காரங்களுள் ஒன்றாக இடுப்பில் வளரியைச் செருகிப் புறப்படுவது வழக்கமாக இருந்து வருகின்றது. வளரி அணிந்த கோலத்துடனே அழகர் வைகையில் இறங்கும் விழா நடைபெறுகின்றது.

தமிழகத்தில் முக்குலத்தோர் என்றழைக்கப்படும் கள்ளர், மறவர், அகமுடையர் இன மக்கள் போர் செய்வதையே தொழிலாகக் கொண்டிருந்தனர். இவர்களைக் கிறித்தவப் பாதிரிமார்கள் பழங்குடிகள் என்றே குறிப்பிட்டு வந்துள்ளனர். பொதுவாகப் பழங்குடிகள் என்றால் மலையில் வசிப்பவர்கள் என்ற கருத்து நிலவுவதால் மானிடவியல் அறிஞர் டாக்டர் ஏ. அய்யப்பன் இவர்களைச் சமவெளிப் பழங்குடிகள் என்கிறார்.

வளரி, வளைதடி என்ற பெயரால் தமிழகத்தில் வழங்கப்பட்ட ஆயுதமே பூமராங் என்பதாகும். இந்த வளரி வீசத் தெரிந்த இச்சமூகத்தினரைப் பழங்குடிகள் என்றே நாடும்

மக்களும் என்ற தொகுப்பு நூல் குறிப்பிடுகின்றது. போர் மரபினரான இம் முக்குலத்தோர் தவிர வளரியை அறிந்தோர் வலையர்களுமாவர். இவர்களின் தொழில் வேட்டை யாடுதலாகும். எனவே போர்க் கருவியாகவும், வேட்டை யாடவும் வளரி பயன்பட்டு வந்துள்ளது. காலப்போக்கில் இக்கருவியினைப் பயன்படுத்தும் மக்கள் அருகிப்போய் விட்டனர். மேலும் இக்கருவி பயன்படுத்தப்பட்டதை மானிடவியல் அறிஞர் இராபர்ட் புரூஸ் கி. பி. 1883இல் சிவகங்கை அருகில் நேரில் கண்டதாகக் குறிப்பிடுகின்றார். அங்கு இவருக்கு இரண்டு வளரிகள் கிடைத்ததாகக் கல்வெட்டு இதழில் மீ. மனோகரன் குறிப்பிட்டுள்ளார்.

பழங்காலத்தில் படைவீரர்கள் தம் கொண்டையில் வளரியைச் செருகி வைத்திருப்பர். எதிரியைக் கண்டதும் கொண்டையிலிருந்து வளரியை உருவி எதிரியை வீழ்த்துவர். இத்தகு வளரியினை இன்றும் சில முக்குலத்து இன மக்களின் பழைய குடும்பங்களில் காணலாம். சில சடங்குகளின் பொழுது பூசைக்குரிய பொருளாகவும் இம்மக்கள் இதனைப் பயன்படுத்துகின்றனர். வளைதடியை அனுப்பி பெண்ணைக் கொண்டு வரும் வழக்கமும் இவர்களிடையே இருந்தது. திருமணத்திற்கு முன் வளைதடியை இருவீட்டாரும் மாற்றிக்கொள்வதும் உண்டு. இதனாலேயே மறவர் கொடுப்பது வளரிப் பிரசாதம் என்ற பழமொழி ஏற்பட்டது.

இராமன் எய்யக்கூடிய அம்பு (பிறை வடிவில் இருக்கும்) மட்டும் திரும்பவும் அவனிடம் வந்து சேரும் என்ற செய்தி வால்மீகி இராமாயணத்தில் சொல்லப்பட்டுள்ளது. இதனாலேயே வளரி சேதுபதிகளின் ஆயுதமாகச் சின்ன இராமபாணம் எனச் சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. இவர்கள் வடித்த கற்சிற்பங்களில், இடையில் சுற்றிய வீரக்கச்சையில் இவ்வளரியே செருகப் பட்டுள்ளதை இன்றும் காணலாம். இதுவே இவர்களின் பேரடையாளமாகும். வழிவழியாக சேது நாட்டில் வளரிக்குரிய பெருமையைச் சுட்டிக்காட்டுகிறார் வித்வான் ராகவையங்கார்.

வித்துவான் ரா. இராமனுசன் சேதுபதிகளின் விருதாவளியில்,

குன்றிலுயர் மேருவிற் குன்ற வளை குணில் பொறித்தவன்
செம்பொன்வரை வளரி நட்டோர்

எனவும், வளரி இடம்பெற்றுள்ள செய்தியைத் தந்துள்ளார். திருவுடையாத்தேவர் ஆகிய விசய சேதுபதி (கி.பி.1710-1725) தன் மகள் அகிலாண்டேஸ்வரியை சிவகங்கைக்கு மணமுடித்து அனுப்பி வைத்தபோது சீர்களில் ஒன்றாகத் தம் குலமரபு ஆயுதமான வளரியையும் அனுப்பி வைத்ததாக கல்வெட்டு இதழில் குறிப்பிடப் பட்டுள்ளது. இதேபோல் புதுக்கோட்டைச் சீமையில் சில சமூகத்தினரிடையே மோதல் நிகழ்ந்தபோது பயன்படுத்திய ஆயுதங்களில் வளரியே மிகுதியான உயிரிழப்பை ஏற்படுத்தியது. இதனைக் கண்ட புதுக்கோட்டை அரசு வளரியைப் பயன் படுத்தினால் மரணதண்டனை விதிக்கப்படும் என்று அறிவித்த செய்தி விரையாச்சிலைக் கல்வெட்டு மூலம் வெளிப்படுகின்றது.

பிரிட்டிஷ் மானிடவியல் அறிஞர் குரோபர் புரூஸ்ட், சோவியத் அறிஞர் கோந்த்ரதோவ், இந்திய ஆய்வாளர் ஏ. கல்யாணராமன் ஆகியோர் ஆஸ்திரேலிய பூமாரங்கிற்குத் தென்னாட்டுடனான தொடர்பை விளக்கியுள்ளனர். சோவியத் அறிஞர் யா. பெரல்மான் தான் எழுதிய பொழுது போக்கு பௌதிகம் எனும் நூலில் பூமராங் ஆஸ்திரேலியா விற்கே உரியதான ஆயுதமன்று, இந்தியாவிலும் அது பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். இச்செய்திகளிலிருந்து பூமராங்கின் பெயர் வளரி என்பதும், இதன் தாயகம் பழந்தமிழகம் என்பதும் தெரிய வருகின்றது. மேலும் ஆஸ்திரேலியப் பழங்குடியினரான அபோர்ஜினி யர்களின் நிறம், மொழி, கலாச்சாரம் ஆகியவை திராவிடர் களுடன் மிக நெருக்கமான தொடர்பு உடையதாகக் கண்டுள்ளனர் மானிடவியல் அறிஞர்கள்.

சிலம்பு கூறும்,

வடிவே லெறிந்த வான் பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள. (11:18-20)

என்பதற்கேற்ப கடலினுள் மூழ்கிய குமரிக்கண்டத்திலிருந்து ஒதுங்கிய பகுதிகளே ஆஸ்திரேலியா, பப்புவாநியூகினி தீவுகள் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடற்கோளுக்கு முன்பே குமரித்தமிழர், குமரி நாட்டிலிருந்து வலசை கிளம்பி வளங்கண்ட இடங்களில் குடியேறி வாழத் தலைப்பட்டனர். இவ்வாறு சென்ற ஒரு குழுவினர் வட இந்தியாவில் சிந்து நதிக்கரையில் தங்கி நகரங்களை அமைத்து நாகரிகத்துடன் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வாழ்ந்த நகரங்கள் காலப்போக்கில் சிந்து நதியின் கட்டுக்கடங்கா வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டு, முற்றாக மண் மூடி அழிந்துவிட்டன. சென்ற நூற்றாண்டில் தொல்லியல் ஆய்வாளர்களால் ஹரப்பா, மொகஞ்சாதாரோ எனப்படும் சிந்து நதிப்படுகைகள் மற்றும் லோத்தல் துறைமுகப் பகுதிகள் அகழ்ந்து பார்க்கப்பட்டு, புதையுண்டு போன சிந்துவெளி குமரித்தமிழரின் நாகரிகம் பற்றிய பல ஆய்வுக் கட்டுரைகளும், நூல்களும் வெளிவந்தன.

குமரி நாட்டில் ஏற்பட்ட முதற் பெருங்கடற் கோளுக்கு தப்பியவர்களின் வழிவந்தவர்கள். ஆஸ்திரேலியக் கண்டத்தின் பழங்குடிகளாக வாழ்ந்து கொண்டிருக் கின்றனர். நமது நாட்டில் உள்ள பழங்குடி மக்களும், ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களும் உருவ அமைப்பில் ஒத்தவர்களாகவே இருக்கின்றனர். பொதுவாக தமிழ மக்களுக்கும், அவர்களுக்கும் உருவ அமைப்பால் பெரிய வேற்றுமைகள் இல்லையென ஆஸ்திரேலிய நாட்டுக்குப் பயணம் சென்று வந்த நம்நாட்டு மானிடவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆஸ்திரேலியப் பழங்குடியினரின் மொழிகள், தமிழ் மொழியின் மிகத் திரிந்த வடிவமாக இருக்கின்றன. இதற்கு ஆதாரமாக ஒரு நிகழ்வைத் தான் தொலைக்காட்சியில் கண்டதாக சொற்பிறப்பியல்-வியத்தகு உண்மைகள் உலகத் தாய்மொழி தமிழ் எனும் நூலில் எம். ஆர். எம். முகமது ஹனீபா எழுதியுள்ளார்.

ஆஸ்திரேலியப் பழங்குடியினரில் பக்லோவியா என்ற ஒரு பிரிவினர் உள்ளனர். இவர்களின் மொழியிலும் மிகுதியான தமிழ்ச்சொற்கள் உண்டு. இவர்கள் முழங்காலை முட்டி என்றும், பாம்பை பாம்பு என்றும், உயரத்தில் ஏறுவதை ஏறு என்றும் குறிப்பிடுகின்றனர்.

ஆஸ்திரேலியக் கண்டத்தில் தற்பொழுது வாழ்ந்துவரும் பழங்குடியினர், திராவிடர்களின் வழிவந்தவர்கள் எனவும், மேலும் இவர்களின் முன்னோர் சுமார் பதினைந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்திய, இலங்கைப் பகுதிகளிலிருந்து இங்கு வந்து குடியேறியவர்கள் எனவும், டக்ளஸ் லாக்வுட் என்பவர், ஆஸ்திரேலியப் பழங்குடியினர் பற்றிய தம் நூலில் குறிப்பிடு கின்றார். ஆஸ்திரேலியப் பழங்குடியினர் மொழிகள், தமிழோடு தொடர்புடையன என ஆய்வாளர் ஜே.சி.பிரிச்சர்டு கண்டறிந்து கூறியுள்ளார்.

திராவிடப் பழங்குடியினரின் வேர்கள் அபோர்ஜினி யர்களிடம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. திராவிடர், அபோரிஜின் மொழி ஒற்றுமை குறித்து ரஷ்ய ஆராய்ச்சியானர் அலெக்ஸாந்தர் கோந்த்ரதோவ் குறிப்பிட்டுள்ளார். மேற்கண்ட இவ்விரு இன மக்களின் மொழித் தொடர்பை டாக்டர் இராபர்ட் கால்டுவெல் தன்னுடைய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலில் சுட்டியுள்ளார்.

ஆகவே, ஆஸ்திரேலியப் பழங்குடியினர் குமரித் தமிழரின் வழிவந்தவர்கள். தமிழ்மொழியின் திரிந்த கொடுந்தமிழையே இன்றும் பேசுகின்றனர். மேலும் தொன்ம காலத்திலேயே குமரித் தமிழரின் வழிவந்த இவர்கள் குமரி நாட்டின் தென்பகுதியைத் தொடர்ந்திருந்த இன்றைய ஆஸ்திரேலியக்கண்டப் பகுதிகளிலும் பரவி வாழ்ந்து வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பின்னர் ஏற்பட்ட கடற் கோளினால் இவர்களின் தாய்வழித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு அங்கேயே தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

ஆஸ்திரேலிய-நீக்ரோவகைத் தன்மை கொண்ட குழு ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் தெற்காசியாவில் வாழ்ந்து வந்தனர். பின்னர் இது மேற்கு, கிழக்கு கிளையாகப் பிரிந்து பிரதேசத் தொடர்பை இழந்தாக மனித இனங்கள் என்று நூலில் மிகையீல் நெஸ்தூர்க் என்ற ரஷ்ய அறிஞர் குறிப்பிட்டுள்ளார். ஒரு காலத்தில் ஒன்றாய் இருந்த இந்தியா, ஆஸ்திரேலிய-கண்டங்கள் உடைபட்டு ஒன்றைவிட்டு ஒன்று விலக ஆரம்பித்தன. பூமத்திய ரேகைக்குச் சற்று தெற்கில்தான் இந்த உடைப்பு ஏற்பட்டிருக்கக் கூடும் என்று கொலம்பியா பல்கலைக் கழக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதன் காரணமாகவே இமயமலையில் கடல்வாழ் உயிரினங்களின் எச்சங்களும், திமிங்கலத்தின் எச்சமும் காணப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இணைந்திருந்த இப்பகுதிகள் கடலினுள் மூழ்கியபோது, கடலினுள் இருந்த இமயமலை வெளியே வந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தமிழகத்தின் தொன்மங்கள், தமிழர்களின் தாயகம் அலைகளால் விழுங்கப்பட்ட இந்தியப் பெருங்கடலில் இருந்தது என ரஷ்யா நாட்டு மானிடவியல் ஆய்வாளர் அலெக்ஸாந்தர் கோந்தரதோவ் The Riddles of three Oceans என்னும் தமது ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம் ஆதித்தநல்லூரில் (ஆதிச்ச நல்லூர்) அகழ்வாய்வின் போது கண்டெடுக்கப்பட்ட இரண்டு மண்டை ஓடுகளை ஆராய்ந்த அறிஞர்கள் திராவிடரும், அபோர்ஜினியரும் சேர்ந்து வாழ்ந்துள்ளனர் எனக் கூறியுள் ளார்கள். இங்கு கண்டெடுக்கப்பட்ட மண்டையோடுகளில் ஒன்று திராவிடருடையது. மற்றொன்று ஆஸ்திரேலியப் பழங்குடிகளின் முன்னோர்களுடையது என்று அறிஞர் ஜி. எலியட் ஸ்மித் கூறியுள்ளார். அறிஞர் தர்ஸ்டனும் இக்கருத்தை வலியுறுத்தி

யுள்ளார். மேலும், ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களும், திராவிடர் களும் மிகப் பழமை வாய்ந்த புனிதமான மக்களின் சந்ததிகள் என்று அறிஞர் அகஸ்லி கூறியுள்ளார் என்றும் அ. அருணாசலம் குறிப்பிட்டுள்ளார். புதுக்கோட்டை மாவட்டம், மொட்டை மலையில் பெருங்கற்படைப் புதைகுழிகளில் இரும்பு வளரி காணப்பட்டதை புதுக்கோட்டை அருங்காட்சியக ஆவணம் எடுத்துரைக்கின்றது.

அறிஞர்களும், புதைபொருள் ஆய்வும் எடுத்துக் காட்டியுள்ள தகவல்களிலிருந்து வளரி எனும் ஆயுதம் குமரிக்கண்டத்தில் (லெமூரியா) இணைந்து வாழ்ந்து வந்த திராவிட, ஆஸ்திரேலிய பழங்குடியினரின் முன்னோர்களால் கண்டுபிடிக்கப் பட்ட அற்புதமான ஆயுதமாகும். இவைகளிலிருந்து ஒரே நிலப் பகுதியாக விளங்கிய குமரிக்கண்டத்தில் ஒன்றாக இணைந்து வாழ்ந்து வந்த அம்மக்கள் பயன்படுத்திய வளரி எனும் ஆயுதம் நம்மவர்களிடம் வழக்கற்றுப்போய் ஆஸ்திரேலியப் பழங்குடிகளிடம் மட்டும் பூமராங் என்ற பெயரில் நிலைபெற்றுவிட்டது.

# தமிழரின் போர்க்கருவிகள்

இசை, நடனம், நாடகம், சிற்பம், கட்டிடக்கலை, நீதி, நிருவாகம், நீர் மேலாண்மை போன்ற பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய பழந்தமிழர்கள் போர்க்கலையிலும், போருக்குத் தேவைப்படும் ஆயுதங்களை வடிவமைப்பதிலும் மிகுந்த நுட்பம் கொண்டு சிறந்து விளங்கினர் என்பதற்கு இலக்கியம், சிற்பம், ஓவியம் போன்றவை இன்றும் நமக்கு நின்று நிலைத்துச் சான்றாதாரங்களாய்த் திகழ்கின்றன.

"மனித இன வாழ்வில் போர் என்பது ஓர் உயிரியல் தேவை. அது ஒழுக்கங்களை நெறி நிறுத்தி வகைப்படுத்தும் இன்றி யமையாத ஒரு கருவி" என்பார் அறிஞர் பெர்ன்கர்த்தி. "மனித இன வரலாறே போர் பற்றியது. அதில் சிற்சில குறுகிய கால இடைவெளிகள் தவிர அமைதி நிலவியதில்லை" என்று வின்சென்ட் சர்ச்சில் குறிப்பிட்டுள்ளார். போர்தான் அறிவியல் வளர்ச்சிக்கும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கும் மூல காரணம், எனவே போர் நாகரிகத்தின் தந்தை, பண்பாட்டின் தாய் என்பர்.

இதனையே புறநானூறு,

> ஒருவனை யொருவ னடுதலுந் தொலைதலும்
> புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை

என்கின்றது. இத்தகு போர்க்கலைக்குப் பழந்தமிழர்கள் வடிவமைத்த ஆயுதங்கள் பற்றிப் பார்ப்போம்.

அவர்கள் பயன்படுத்திய ஆயுதங்களிலே மிகுந்த சிறப்பிற் குரியது வளரி எனும் பூமராங் ஆகும். இவ்வளரியினைக் கண்டு பிற்காலத்தில் நாடு பிடிக்க வந்த வெள்ளையர்கள் மிரண்டு போன செய்தியினை வரலாறு தெரிவிக்கின்றது. இவ்வாயுதம் இன்று நம்மிடையே வழக்கற்றுப் போய் வழிபாடுகளில் பூசனைக்குரிய ஒரு பொருளாக விளங்கு கின்றது.


கைவேல்
மழு
கதை

மேலும், பழந்தமிழர்கள் பயன்படுத்திய ஆயுதங்களை கருவிவிடு கலம், கைவிடு கலம், கைவிடாக்கலம் என மூன்று பெரும் பிரிவாகப் பிரித்து, அதன் உட்பிரிவாக தொலை இலக்கு, இடை இலக்கு, அண்மை இலக்கு, அணுக்கப்போர் கலம் என்று நால்வகைப்படுத்தி, இதில் தொலை இலக்குக் கருவிகளுள், எய்கலம் என்பதில் வில், சிலை, சாபம், கொடுமரம், வல்வில், பகழி, கணை, அம்பு, வாளி, கோல் எனவும், இதிலேயே எறிகலம் என்பதில் எறிகோல், எறிகல், கவண், சக்கரம் என்றும், இடை மற்றும் அண்மை இலக்குக் கருவிகளுள் வேல், எஃகம், அயில், உடம்பிடி, வச்சிரம், சூலம், ஈட்டி என்றும், அணுக்கப்போர் கலங்களுள், வெட்டுக் கலங்களாக வாள், ஈர்வாள், கொடுவாள், உடைவாள், மழு, நவியம் என்பதாயும், அடிகலமாக தண்டாயுதம், குறுந்தடி போன்றவையும், தடுகலமாகத் தோல், கிடுகு ஆகியனவும், தற்காப்புக் கருவிகளாக அரணம், சாலிகை, ஆசு, பரணம், கவசம், கண்டம், மெய்யுறை, தம்பம், கசை, சுரிகை, மெய்புகுகருவி, பாரம் என்று பல்வேறு வகைப்படுத்தி பிரித்துப் பயன்படுத்தி உள்ளனர்.

படைக்கருவிகள் அதனதன் செயல் கருதி கைவிடுபடை, கைவிடாப்படை என இருவகைப்படும். கைவிடு படை அஸ்திரம் என்றும், கைவிடாப்படை சத்திரம் என்றும் வழங்கப்பெறும். போர்க் கருவிகள் எய்படை, எறிபடை, குத்துப்படை, வெட்டுப்படை, அடுபடை, தடுபடை என்றும் வகைப்படுத்தப்பட்டன. அம்பு எய் படை, எறிகோல் எறிபடை, வேல், ஈட்டி, குந்தம் முதலியன குத்துப்படை, வாள், மழு வெட்டுப்படை, தண்டு அடுபடை, கவசம், கேடயம் தடுபடை என்றும் அழைக்கப்பெறும். இவற்றுள் தொலை இலக்குக் கருவியான வில்லின் வகைகளாக,

> **சிலை, தனு, வேணு, கார்முகம், சாபம்**
> **முனியே, சார்ங்கம், சராசனம், பினாகம்,**
> **கோதண்டம், தவர், கொடுமரம், துரோணம்,**
> **வார்வில் லென்ப மதிநூற் புலவர்**

என்று நிகண்டுகள் குறிப்பிடுகின்றது. இவற்றுள் சிலை, சாபம், கொடு மரம், வில் என்ற சொற்கள் மட்டுமே வில்லைக் குறித்தன. மற்றவை இலக்கிய வழக்கு பெறவில்லை.



அகம், புறம், நற்றிணை, பதிற்றுப்பத்து போன்ற நூல்களின் வரிகள் சிலை என்பதற்கு வில் என்ற பொருளைக் குறிப்பிடுகின்றது. நற்றிணையில்“வாங்கு சிலை மறவர்வீங்கு நிலை அஞ்சாது” வளைந்த வில்லைக்கொண்டு வழிப்பறி செய்வார்கள் என்கிறது.“புறம், விளர் ஊன் தின்ற வீங்கு சிலை மறவர் ஊனைத்தின்ற விசை கொண்ட வில்லையுடைய மறவர்கள் என்றும், “நோன்சிலை மழவர் ஊன் புழுக்கு அயரும் ”வலிய வில்லை உடைய மழவர் ஊனை: புழுக்கி உண்ணும் என்றும், பதிற்றுப்பத்தில் “வணங்கும் சிலை பொருத நின் மணங்கமழ் அகலம்” வளைவான இந்திர வில்லை போலும் என்றும் இதே நூலுள் கடுஞ்சிலை என்றும், குறிஞ்சிப்பாட்டில்“அரவு உறழ் அம்சிலை” பாம்பு போன்ற வில் என்றும் பல பெயர்களில் குறிப்பிடப்பெறுகின்றது.

வடமொழியில் சாபா என்பது ஒருவகை மூங்கிலைக் குறிப்பதாகும். தேரிலிருந்துப் போரிட சிறப்பாக பயன்படுத்தப்பட்ட வில் சாபம் எனப்பட்டது. அரண் பாசறைக்காப்பு, வேழம் வீழ்த்துதல் போன்ற போர்ச் செயல்களுக்கும், வேட்டையாடுத லுக்கும் பயன்பட்டது. புறநானூறு“கண் ஒளிர் வரூஉம் கவின் சாபத்து” கண்ணுக்கு விளங்கும் அழகையுடைய வில்லையும் என்கிறது. பரி பாடலில்“பொறி வரிச் சாபமும் மரனும் வாளும்” என்றும், ஈட்டி, குடாரி, கணிச்சி போன்ற வேறு கருவிகளின் பெயரினையும் சுட்டுகின்றது. நற்றிணை “வெறிகொள் சாபத்து எறிகணை வெரீஇ” அச்சப்படத் தகுந்த வில் என்கின்றது. புறநானூறு“ ஆவம் சேர்ந்த புறத்தை தேர்மிசைச் சாபநோன் ஞாண் வடுக்கொள வழங்கவும்” அம்புக்கூடு பொருந்திய முதுகையுடையவனாய்த் தேர் மீது நின்று வில் நாணால் அடையாளம் உண்டாக அம்புகளைச் செலுத்து பவை என்று கூறுகிறது. இதே நூலுள் “குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி ” கையில் வில்லைப் பிடித்து என்கிறது.

தமிழ் இலக்கியங்களில் கொடுமரம் எனும் சொல் வில்லினைக் குறிக்கின்றது. வளைந்த மரத்தால் ஆன கொடுமை மிகு வில் கொடுமரம் எனப்பட்டது. குறுந்தொகையில் “கொடுவில் எயினர் பகழி மாய்க்கும்” வளைந்த வில்லினை உடைய எயினர் எனவும், புறநானூறு

“தேர்வண் கிள்ளி தம்பி வார்கோல் கொடுமர மறவர் பெரும கடுமாண்” கிள்ளியின் தம்பியே நீண்ட அம்பையும், வளைவான வில்லையும் உடைய மறவர்க்கு தலைவ என்கின்றது. அகம் கொடுமரம் பிடித்த கோடாவன்கண் வில் ஏந்திய மறவர் எனக் குறிப்பிடுகின்றது. மலைபடு கடாத்தில் “கொடுவிற் கூளியர் கூவை காணின்” கொடிய வில்லினைக் கொண்ட நாட்டைக்காக்கும் வேடர் எனக் குறிக்கின்றது.

வல்வில் என்பதானது இந்தியாவின் வடகிழக்கு மாநிலத்தில் வாழும் நாகர்கள் பயன்படுத்தக் கூடிய எந்திர வில்லினை ஒத்தது. நாகர்களும் திராவிடர்களே என்ற கருத்து அறிஞர்கள் சிலரிடையே உண்டு. முல்லைப்பாட்டு “ஓடா வல்வில் தூணி நாற்றி” போரில் புறங்காட்டி ஓடாமைக்குக் காரணமான வலிய வில் என்கிறது. பதிற்றுப்பத்து ஐந்தாம் பதிப்பில் “மாறா வல்வில் இடும்வில் புறத்திறுத்து” பல இலக்குகளை ஒரே காலத்தில் வீழ்த்தும் வலிய வில்லை உடையவருடன் இடும்பாவனத்தில் தங்கினான் எனக் கூறுகின்றது. இதே நூலின் 58ஆம் பாடலில் “எயில் எறி வல்வில் ஏவிளங்கு தடக்கை” பகைவரின் மதிலை எறியும் வளிய வில்லை உடையவன் சேரலாதன் என்கின்றது. கலித்தொகையில் “புரிவு மேல் சென்ற நூற்றுவர் மடங்க வரிபுனை வல்வில் ஐவர் அட்ட” போரை விரும்பி மேலே சென்ற துரியோதனன் முதலியோர் இறக்கும்படி வலிய வில்லையுடைய தருமன் என்கிறது. மேலும் இலக்கியங்களில் பல இடங்களில் வல்வில் சுட்டப்படுகின்றது.

எலும்பு அல்லது கொம்புகளால் ஆன சிறு வில் தனு எனப்படுகிறது. வேணு மூங்கிலால் ஆனது. மூங்கில் அல்லது பனை மரத்தால் ஆனவை கார்முகம் எனப்படும். அகத்திக் கொம்பால் ஆன முனிவர்கள் கொண்ட வில் முனி எனப்பட்டது. கருநொச்சி, நொச்சிக் கிளையால் ஆன வில் சிந்துவாரம் என வழங்கப் பெற்றது. சார் என்னும் மரத்தால் ஆன வில் சார்ங்கம் எனவும், அரச மரக்கிளைகளால் ஆன வில் சராசளம் எனவும், சிவனின் வில் பினாகம் எனவும், உள்துளை உள்ள மரத்தால் ஆன வில் தவர் என்றும், வில்வித்தையைக் கற்றுத் தரும் ஆசிரியர் பயன்படுத்திய இரும்பாலான வில் துரோணம் என்றும் வழங்கப்பெற்றது.


சங்கம்
வேல்
கொக்கலைவாள்
உடைப்பிடி
கழல்

பழந்தமிழர்கள் பயன்படுத்திய ஆற்றல் மிக்க ஆயுதம் வாள் ஆகும். இதன் பெயர்களாக சேந்தன் திவாகரம்,

**நாந்தகம், கட்கம், நவிர், ஏதி, கண்டகம்,**
**ஏய்த்த வேணு, வஞ்சம், நாட்டம்**
**கடுத்தலை உவணி, கரவாளம், கோணமோடு**
**அடுத்தன வசியே, வாளென வரைவர்**

என்கின்றது. வட்டக்கைப்பிடி வாள், நுனியில் வட்டத்தகடு வலிவு கொண்ட நேர்வாள், மிகக் கூரிய நீண்ட வாள் பழங்காலத்தில் இருந்தனவென்றும், வாளின் பிடி காண்டாமிருகம், எருமைக் கொம்புகள், யானைத் தந்தம், மரம், மூங்கில் வேர் ஆகியவற்றால் செய்யப்பெற்றிருந்தன.

குறுந்தொகை "வேதின வெரிநின் ஓதிமுது போந்து" முதிய ஆண் ஓந்தியின் முதுகுபோல் ஈர்வாள் இருக்கும் என்கின்றது. மதுரை நகரத்துக் கடைவீதிகளில் ஈர்வாள் விற்கப் பட்டதாகச் சிலம்பு குறிப்பிடுகின்றது. சுடர் வீசும் கொடு வாளினைக் கொற்றவை வலக்கையில் பிடித்துள்ளதையும் சிலம்பு சுட்டுகின்றது. "சுரிகை நுழைந்த சுற்று வீங்கு செறிவு உடை" என்ற பெரும் பாணாற்று செய்யுளடி உடைவாள் அணிவதைக் குறிக்கின்றது. இத்தகு உடைவாளுக்கு உறை செய்து பயன்படுத்தியதை சிலப்பதிகாரம் கூறுகிறது.

பரிபாடல் "செறி இலை ஈட்டியும் குடாரியும் கணிச்சியும்" முருகன் தன் பன்னிரு கைகளுள் ஒன்றில் ஈட்டி வைத்திருந்ததாகக் கூறுகின்றது. சேந்தன் திவாகரம் மழுவின் பெயர்களாக பரசு, கணிச்சி, நிவியம்,தண்ணம், பாலம் எனக் குறிப்பிடுகின்றது. "பொலம் செய் மழுவொடு வாள் அணி கொண்ட" உலோகத்தினால் செய்த மழு எனக் கலித்தொகைக் காட்டுகிறது. புறநானூற்றின் "கருங்கைக் கொல்லன் அரஞ்செய் அவ்வாய் நெடுங்கை நவியம்" வடிவில் நவியம் பாய்தலின் ஊர்தோறும் என்ற அடிகளால் உலைக்களத்தில் வடித்துக் கூர்மை செய்யப்பட்டதும், நீண்ட காம்புகளைக்

கொண்டிருந்ததும் தெரியவருகின்றது. தண்டாயுதத்தை பிங்கல நிகண்டு தடி, கதை, சீர், வயிரம், மூளை, எறுழ் என்கின்றது.

அம்பின் வகைகளை பிங்கலம்,

பகழி, வாளி, தோணி, வாணம்,
கதிரம், பல்லம், கணை, கோல்,சரமொடு,
வண்டு, பத்திரம், சீலிமுகம், விசிகம்,
அம்பின் பெயர் உருவாகலும் உரித்தே.

என்கிறது சேந்தன் திவாகரம்,

பகழி, வாளி, வண்டு, பாணம்,
நிகழ்சரம், பத்திரி, சீலிமுகம், பல்லம்,
புங்கம், கணை, கதை, கங்கபத்திரம்,
அத்திரம், தோணி, கோல், விசிகம், அம்பே.

என்கிறது. பிளந்து அழிக்கும் ஆயுதம் பகழி எனப்பெற்றது. முல்லைப்பாட்டு "வைந்துளைப் பகழி மூழ்கலின்" கூரிய முனையிடையுடைய அம்பு எனக் குறிப்பிடுகின்றது. "வடிஉறு பகழிக் கொடுவில் ஆடவர்" என அகநானூறு உலைக் களத்தில் வடித்த செய்தியினைத் தெரிவிக்கின்றது. போரில் பகழி பாய்ந்ததால் புல் உண்ணாமல் வருந்தும் குதிரையை நினைத்து மன்னர் வருந்துவதாக முல்லைப்பாட்டு அடியால் அறிய முடிகின்றது.

வளியால் இயக்கப்படும் அம்பு வாளி எனப்பட்டது. நற்றிணை "செங்கோல் வாளிக் கொடுவில் ஆடவர்" குறுந்தொகை "குருதியொடு பறித்த செங்கோல் வாளி" "வைவார் வாளி விறர்பகை பேணார்" என்று குறிக்கும் தொடர்களால், செம்மையான கோல் கொண்டு கூர்மையும், நீட்சியும் மிக்கதாய் வடிவமைத்ததை அறியமுடிகின்றது, அரம் கொண்டு அராவப்பட்ட கூரிய அம்பே வாளி ஆகும்.

புறநானூறு, கலித்தொகை, நற்றிணை, பெரும் பாணாற்றுப் படை பாடலடிகளின் வழியாக கணையின் பெயர்களாக பொருகணை, எறிகணை, கடுங்கணை, தெரிகணை, இரும்புதலை யாத்த திருந்து கணை போன்ற பெயர்கள் வழங்கியதை அறிய முடிகின்றது. கணைகளின் தலை இரும்பால் செய்யப்பட்டு, அவை இலக்கு நோக்கி விரைந்து செல்ல ஏதுவாக அதன் வால் பகுதியில் இறகுகள் பொருத்தியுள்ளனர். நிரை கவரவும், போரில் யானை களைத் தாக்கவும், வீரர்களை வீழ்த்தவும் கணைகள் பயன்பட்டன.

அழகிய பூ வடிவில் உள்ளதால் அம்பு எனப்பட்டதாக அகநானூறு கூறுகின்றது. வடி நவில் அம்பு, செங்கோல் அம்பு, வள்வாய் அம்பு, அரம் போல் நுதிய வாளி அம்பு, கூர்நல் அம்பு, புற்று அடங்கு அரவின் ஒடுங்கிய அம்பு என்றெல்லாம் அகம், புறம், நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்தின் இலக்கிய வரிகள் சுட்டுகின்றன.

பழந்தமிழரின் ஆயுதங்களை விரித்துரைக்கின் நீண்டு கொண்டே செல்லும், அவர்தம் நுட்பங்கள் நம்மை வியப்பில் ஆழ்த்தும் என்பதில் ஐயமில்லை.

# தெளிவிற்குத் தேற்றா.....

நம்மிடையே பலர் இன்று மேலைநாட்டினர் கூறுவதே அறிவியல் சார்ந்தவை. அனைத்துத் துறைகளிலும் அவர்களே முன்னோடிகள் என்ற எண்ணங்களுடனே பேசுவதைப் பார்க்க முடிகிறது. அவர்களும் சிறந்தவர்களே அதை மறுப்பதற்கில்லை. அதே நேரத்தில் நம் முன்னோர்கள் பழந்தமிழகத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களையும், கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என அறுவகைப் பருவங்களையும் பிரித்து வாழ்ந்த நிலை, அவர்கள் கையாண்ட முறைகள் போன்றவற்றை இலக்கியங்கள் வழி நின்று ஆராய்ந்து பார்ப்போமானால் அவர்களின் சிந்தனை, அனுபவ அறிவு, அறிவியல் நுட்பம் எல்லாம் நம்மை வியக்கவைப்பதோடு நம்மவர்களுக்கு முன்னால் என்ன பெரிய மேலை நாட்டினர் ? என்ற எண்ணமே நமக்கு ஏற்படும்.

நீரின்றி அமையாது உலகு என்றார் வள்ளுவப் பெருந்தகை. ஆனால் நல்ல தண்ணீருக்காக நம் மக்கள் படும் அல்லல் என்பது பல இடங்களில் அன்றாட நிகழ்வாகி விட்டது. தூய்மையற்ற நீர், இருக்கும் நீர் நிலைகள் அழிவை நோக்கிச் செல்வது, நிலத்தடி நீரினைப் பன்னாட்டு நிறுவனங்கள் உறிஞ்சுவது போன்ற நிலைகளால் இனி ஒரு உலகப்போர் ஏற்பட்டால் அது நீருக்காகவே இருக்கும் என்ற எண்ணம் அரசியல் பார்வையாளர்களிடையே நிலவி வருகின்றது. இருக்கின்ற நீரும் மாசுடன் திகழ்வதால் அந்நீரினைத் தூய்மைப்படுத்துவதற்குப் பல ஆயிரங்கள் செலவிட்டுக் கருவிகளை வாங்கி வைத்துக்கொள்கிறோம். மேலும் பாட்டிலில் அடைக்கப்பட்ட நீரினை விலை கொடுத்து வாங்கி அருந்தவேண்டிய நிலைக்கும் தள்ளப் பட்டுள்ளோம். இன்று பரவும் பல நோய்கள் நீரின் மூலமே பரவுவதால் இத்தகு நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால் அன்றைய மக்கள் ஆறுகள், குளங்கள், பொதுக் கிணறுகள் இவற்றிலிருந்தே குடிப்பதற்கு நீரை எடுத்துப் பயன் படுத்தி வந்தனர். அப்பொழுது நீர் அனைத்து இடத்திலுமே தூய்மையாகத்தான் இருந்தது. நீரில் மாசுகளே இல்லையா? என்றால் அப்படி எல்லாம் இல்லை. அன்றும் சில நீர் நிலைகளில் மாசுகள் இருக்கத்தான் செய்தன. அவற்றைப் போக்கியே மக்கள் குடிநீராகப் பயன்படுத்தினர். அந்த வகையில் கலங்கல் நீரினைத் தூய்மைப்படுத்திய பழந் தமிழர்களின் நுட்பத்தை இங்கு காண்போம்.

ஆற்று நீர் இயல்பாக தூய்மையாகவேதான் இருக்கும். ஓடுகின்ற நீர் மணல்களுக்கு இடையே உருண்டு, திரண்டு ஓடும்பொழுது நீரிலுள்ள கசடுகள் மணலால் உறிஞ்சப்பட்டு ஆறுகளில் கலக்கின்ற மாசுகள் நீக்கப்பட்டு நீரானது தூய்மை யடைகின்றது. அண்மையில் ஒரு கல்லூரி மாணவர்கள் காவிரி ஆற்றில் நீர் மாசுபாடு குறித்து சோதனை மேற்கொண்ட பொழுது தொழிற்சாலைக் கழிவுகள் கலந்த இடத்தில் நீர் அசுத்தமாக இருந்ததையும், பிறகு குறிப்பிட்ட தூரம் மணலில் கலந்து சென்ற நீரினை ஆய்வுக்கு உட்படுத்திய பொழுது அதே ஆற்றின் நீர் தூய்மை அடைந்ததையும் அறிவியல் ரீதியில் கண்டுணர்ந்த செய்தி அறிவிக்கப்பெற்றது.

இதே போன்றதொரு நிகழ்வு சில ஆண்டுகளுக்கு முன் புது தில்லியில் நடைபெற்றது. உலக அளவில் நீர்வளங்களைக் காப்பது, நீர் மாசுபடுகளைக் களைவது, குறித்து உலக நீரியல் வல்லுநர்கள் கலந்துகொண்ட மாநாடு இது. இம்மாநாட்டில் தமிழகத்தின் தொன்மைத்திறன் அறிவியல் பூர்வமாக நிருபிக்கப் பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. அது என்ன வெனில் கலங்கல் நீரினைத் தூய்மைப்படுத்தும் திறன் **தேற்றா** எனப்படும் **தேற்றாங்கொட்டைக்கு** உண்டு என்பதே ஆகும். இதன் தாவரவியல் பெயர் Strychnos Potatorum என்பதாகும். இதனையே Chambers Twentyeight Century Dictionary. Clearing Nut-used in the East Indies for clearing muddy water என்பதாகக் குறிப்பிடுகின்றது. தமிழ்-தமிழ் அகரமுதலி தேற்றாங்கொட்டை:- கலங்கல் நீரைத் தெளியச்

செய்யும் தேற்றா மரவிதை என்று பொருள் கூறுகின்றது. இதே அகரமுதலியில் இல்லம் என்பதற்கு வீடு, மனைவி, இல்வாழ்க்கை என்பதோடு தேற்றாமரம் என்ற பொருளும் கொள்ளப்பெறுகின்றது. இக் கட்டுரை எழுதப்படும் இன்றைக்கு 50 ஆண்டுகள் முன்புவரை கூட இத்தேற்றாங் கொட்டை செம்புலத்து நீரினை உடைய மக்கள் வாழ்ந்த பகுதிகளிலும், தஞ்சை மாவட்டத்தில் சில ஊர்களிலும் பயன்பாட்டில் இருந்துள்ள செய்தி வியப்பிற்குரிய ஒன்றாகும்.

தேற்றாங்கொட்டையிட்டுத் தேற்று மைந்தரை எனத் தமிழ் மருத்துவர்கள் இதன் அருமையான மருத்துவப் பயன்களுக்குச் சான்றளித்துள்ளனர். வீட்டிலுள்ள கலங்கிய நீரானாலும் சரி, நிலக்கரிச் சுரங்கத்தில் கரிப்பொடி கலந்த நீரானாலும் சரி, நீரினைத் தெளியவைக்கும் பண்புடைய கொட்டை இதுவாகும். கொட்டையைச் சிறிது தேய்த்துக் கலந்தால், நீரிலுள்ள "கொல்லாய்டல் பொருட்கள்" என்ற மிதக்கும் பொருட்கள் படிந்துவிடும். நீர் நன்கு தெளிந்து விடும். கண்மாய்களில் தேக்கிய நீரைக் குடிநீராகப் பயன்படுத்தும் இடங்களில், தொன்றுதொட்டு நீரைத் தெளியவைக்க, சட்டியிலேயே தேற்றான்கொட்டையைத் தேய்ப்பது வழக்கம். சில நிமிடங்களில் நீர் தெளிந்துவிடும். நீரில் மிதக்கும் கரித்துகள்கள் படிந்துவிடும்.

இதனைக் கண்ணுற்ற ஆங்கிலேயப் படையின் அதிகாரி கர்னல் ட்ருயரி கி. பி. 1873இல் மழைக்காலத்தில் ஆங்கிலேயப் படைகள் முகாமிடும் இடங்களிலெல்லாம் குடிநீரைச் சுத்தப்படுத்த தேற்றாங்கொட்டையினைப் பயன்படுத்த படையினருக்கு பரிந்துரை செய்துள்ள செய்தியினை வரலாறு நமக்கு காட்டுகின்றது. நிலக்கரிச் சுரங்கங்களில் நீரில் கலந்த நிலக்கரித் துகள்களைத் தனித்துப் பிரித்திட படிகாரத்துடன் சிறிது தேற்றாங் கொட்டைப் பொடியினையும் சேர்த்திடுவர். உடனடியாக துகள்களெல்லாம் படிந்திடும். நீரைத் தெளிய வைக்கும் பண்பு இக்கொட்டையில் நச்சில்லா ஆல்கலாய்டுகள் இருப்பதால் ஏற்படுகிறது.

இன்று அறிவியலாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இதன் சிறப்பு சங்க நூலான கலித்தொகையின் 142ஆம் பாடலில் உவமையாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அப்பாடல்,

இனைந்து நொந்து அழுதனள்: நினைந்து நீடு உயிர்த்தனள்
எல்லையும் இரவும் கழிந்தன என்று எண்ணி: எல் இரா
நல்கிய கேள்வன் இவன் மன்ற! மெல்ல
மணியுள் பரந்தநீர் போலத் துணிவாம்
கலம்சிதை இல்லத்துக் காழ்கொண்டு தேற்றக்
கலங்கிய நீர்போல் தெளிந்து நலம்பெற்றாள்
நல்லெழில் மார்பனைச் சார்ந்து. (60-66)

என்பதாகும். இதன்பொருள் "என்னைத் துன்புறுத்தும் காமமும் ஊராரின் பழிச்சொல்லும் என் உயிரைக் காவடியாகக் கொண்டு இருபுறமும் பாரமாகத் தொங்கி என்னை நலிவுறச் செய்கின்றன. என் உயிரும் உடலும் மெலிகின்றன. யான் இறப்பதற்கு முன் என் துன்பத்தை நீக்குவீராக" என்று கூறினாள். வருந்தி அழுதாள் பகலும் இரவும் பயனின்றிக் கழிகின்றன என்று நெடிது நினைத்து, நொந்து பெருமூச்சுவிட்டாள். அந்நிலையில் ஓர் இரவில் அவள் அருகில் அன்போடு அமர்ந்திருக்கும் ஒருவனைக் கண்டோம். அவன்தான் அவளுக்கு அன்பு செய்யும் தலைவன் போலும்! அவள் இவனது மிக்க அழகிய மார்பைத் தழுவி, தேற்றாங்கொட்டையினால் தெளிவிக்கப்பட்ட தண்ணீரைப் போலத் துன்பம் நீங்கி, நலம் பெற்றாள். யாமும் இரத்தினமும், அதன் ஒளியும் போல இவர்கள் ஒருவரின் ஒருவர் வேறல்லர் என்று மெல்லத் தெளிந்து கொண்டோம் என்று கண்டோர்கள் கூறினர்.

மேலும் அகநானூற்று நான்காம் பாடலின் வழியாக இக்கொட்டை மரத்திலிருந்து விளைவது எனத் தெரிய வருகின்றது. தேற்றா மரம் இருந்ததை இப்பாடல் உணர்த்தி நிற்கின்றது.

முல்லை வைந்நுனை தோன்ற, இல்லமொடு
பைங்கால் கொன்றை மென்பிணி அவிழ. (1-2)

என்கிறது. அப்பாடலின் பொருளானது, தலைவியே! நீர் இல்லாமையால் பொலிவற்றுப் போன காட்டில் மேகம் மின்னல் மின்னி மழைத்துளிகளைச் சிந்தியதால் முல்லை அரும்புகளும், தேற்றா மர, கொன்றை மர அரும்புகளும் கட்டு விட்டு நெகிழ்ந்து மலர்ந்தன என்கின்றது.

இதே அகநானூற்றின் 364ஆம் பாடல்,

ஆய்பொன் அவிர் இழை தூக்கியன்ன
நீடுஇணர்க் கொன்றை கவின் பெறகாடு உடன்
சுடர்புரை தோன்றிப் புதல் தலைக் கொளாஅ
முல்லை இல்லமொடு மலர கல்ல. (4-7)

என்கிறது. இதன்பொருள் சிறந்த பொன்னாலான அணிகளைத் தொங்கவிட்டாற்போல் நீண்ட பூங்கொத்துக் களைக் கொண்ட கொன்றை அழகுபெற காடு முழுவதும் மலர்ந்து விளங்கும், தோன்றிச் செடி விளக்கைப் போன்ற பூக்களைத் தன்னிடம் கொண்டு மலரும் முல்லை மலர்களும், தேற்றாவின் மலர்களும் மலரும் என்பதாகும். இதன் மூலம் முதல் பாடலில் அரும்பாகி இப்பாடலின் வழி மலர்கள் தேற்றா மரத்தில் மலர்ந்ததை அறியமுடிகிறது. கார் காலத்திலேயே மொட்டு விட்டு, பூக்கள் மலரும் என்ற செய்தியும் பெறப்படுகின்றது.

மலர்ந்த இத்தேற்றாவின் பூக்களை மாலையாகக் கட்டி தமிழர்கள் அணிந்து மகிழ்ந்ததை சங்க நூலான நற்றிணையின் 376ஆம் பாடல் சுட்டுகின்றது.

குல்லை குளவி கூதளம் குவளை
இல்லமொடு மிடைந்த ஈர்ந் தண் கண்ணியன்
சுற்று அமை வில்லன் செயலைத் தோன்றும்
நல்தார் மார்பன் காண்குறின் சிறிய ( 5-8)

இதன் பொருளாவது, கஞ்சங்குல்லை, மலைமல்லி, கூதாளி, குவளை, தேற்றா மலரொடு கட்டிய மிகக் குளிர்ந்த மாலையை அணிந்தவன் என்பதாகும்.

இதேபோல் பின்னர் எழுந்த அஷ்டப் பிரபந்தங்களுள் ஒன்றான அழகரந்தாதியில் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் கூறும் எண்பத்தைந்தாம் பாடல்,

தேற்றுவித்தாற் புனறேற்றுநர் போற்றிரு வெட்டெழுத்தான்
மாற்றுவித்தா னென்மயக்கமெல்லா மண்ணும் விண்ணுமுய்யப்
போற்றுவித்தாரப் புயலலங்காரன் பொன்மேருவைப் போற்
றோற்றுவித் தாரணியுஞ்சுந்தரத் திருதோளண்ணலே.

இதன்பொருள், தேற்றுவித்தால் புனல் தேற்றுநர் போல்-தேற்றாங்கொட்டையைக் கொண்டு நீரை(க்கலக்கம் மாற்றி)த் தெளியச் செய்பவர் போல, திரு எட்டு எழுத்தால் என் மயக்கம் எல்லாம் மாற்றுவித்தான்-அஷ்டாக்ஷர மகாமந்திரத்தைக் கொண்டு என் மதிமயக்கத்தை எல்லாம் மாற்றி மனந்தெளியச் செய்தருளி னான் என்பதாகும். விளக்கம் என்னவெனில் மண்கலந்த நீரைத் தேற்றாங் கொட்டையைக் கொண்டு தெளிவித்தல் போல மயங்கிய மனத்தைப் பெரிய திருமந்திரத்தைக் கொண்டு தெளிவித்தவ னென்றார். சாலுறையும், மண்மயக்கத் தேற்றுவித்தான் மாற்றுதல் போலாரியனா, லுண்மயக்கந் தேற்றுவித்தான் என்றார் திருவேங்கடமாலையிலும், உயிர்கட்கு ஆவன செய்தல், இறைவன் செயலென்க. தேற்றாமரத்தின் விதையைத் தேய்த்து அத் தேய்வையைக் குழம்பிய நீரிற் கரைத்தால் அந்நீர் கலக்கந் தெளிதல் இயல்பு. குழம்பிய நீர் மனக்கலக்கத்துக்கும், தேற்றாம் வித்து- திருமந்திரத்துக்கும் உவமை என்பதாகக் கூறுகின்றது.

புராணங்களில் காணப்பெறும் வரலாற்றுச் சான்றுகள் என்ற கட்டுரையினை முனைவர் ஆ. வீரராகவன் எழுதியுள்ளார். இக் கட்டுரை சரசுவதி மகால் நூலகத்தின் கருத்தரங்குக் கட்டுரைகள் தொகுப்பில் உள்ளது. இதில் கதகம் என்ற சொல் தேற்றாவைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. இதன்மூலம் கதகம் என்ற சமஸ்கிருத சொல்லிற்குத் தேற்றாங்கொட்டை என்பது பொருளாகும் என அறிய முடிகிறது. சமஸ்கிருதத்தில் இராமாயண கதக வியாக்கியானம் எனும் நூல் தமிழ்ப் பொழிப்புரையுடன் வெளி வந்துள்ளது.

வியாக்கியானம் என்றால் உரை என்று பொருள். அதாவது தெளிவான உரை என்பதனை உணர்த்தவே கதக வியாக்கி யானம் என்று நூல் தலைப்பு சுட்டப்பட்டுள்ளது.

இத்தேற்றான் கொட்டையின் மருத்துவ குணமாக சரசுவதி மகால் நூலகம் வெளியிட்டுள்ள பதார்த்த குணபாடம் எனும் சித்த மருத்துவ நூலில் உள்ள பாடல்,

பிரமிவெள்ளை வெப்புரி பேரராகடுப்போ
டெரிகிரிச் சரம்புண்ணு மின்றாம் வருமந்தத்
தேற்றாங் கொட்டைகஃதோ தீட்ட மருந்தாகுங்
கூற்றங்கண் மாதேநீ கொள்.

இப்பாடலின் பொருள், இக்கொட்டையானது பிரமேகம், வெட்டை, உட்சூடு, வயிற்றுக்கடுப்பு, மூத்திர எரிச்சல் போன்ற நோய்களைக் குணமாக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இதே நூலுள் தேற்றான் பழத்தின் மருத்துவ குணமாக,

தேற்றான் கனி தனக்குச் சேயிழை வன்காசந்
தேற்றா தொழியுஞ் சுவாசமும் போஞ்-சாற்றின்மிகு
வாந்தி பெருகு மலம்போ முத்தோஷத்தைச்
சேர்ந்த பிணிகளும் போஞ் செப்பு.

என்ற செய்யுளின் பொருளாக தேற்றான் பழத்தால் வாத இருமல், இரைப்பு, மலக்கட்டு, திரிதோஷ நோய்கள் குணமாகும் என்றும், இப்பழம் வாந்தியை உண்டாக்கும் என்றும் கூறப்பெற்றுள்ளது. மேலும் புலவர் முத்து, ஆபத்சகாயம் தான் எழுதியுள்ள கைகண்ட தமிழ் மருந்துகள் என்ற நூலினுள், தேற்றாங்கொட்டையைக் கல்லில் தேய்த்துத் தேன் கலந்து இமைகளின் மேல் தடவ கண்களிலிருந்து நீர் பெருகுதல் நிற்கும், வயிற்றில் பற்றாகப் பூசினால் வயிற்று வலி நீங்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# கூவல் குறைவின்றித் தொட்டானும்......

பெருங்கதை எனும் தமிழ் நூல் “குளமும், பொய்கையும், கூவலும், வாவியும்” என்று தனித்தனி அமைப்பை உடைய நீர்நிலைகளைக் குறிப்பிடுகின்றது. மக்களுக்கு குடிநீர் தரவல்ல கிணறுகளை குறைவில்லாமல் செய்வது மிக முக்கிய அறச் செயலாக, மன்னனின் கடமையாக, கூவல் குறைவின்றித் தொட்டானும் என்று திரிகடுகம் கூறுகின்றது.

நம் இல்லம் நாடி வரும் நண்பர்களையும், விருந்தினர் களையும் வரவேற்று அமரச்செய்து, வந்தவரின் பயணக் களைப்பு நீங்கவும், தாகம் தீர்க்கவும் முதலில் அவர்களுக்கு ஒரு சொம்பில் நீரைக்கொடுத்து உபசரிக்கும் பண்பு நம் தமிழ் மக்களிடையே தொன்று தொட்டு நிலவிவரும் நல்ல பழக்கமாகும். இன்று நகரங்களில் வாழ்ந்து வரும் மக்களிடையே இந்த நல்ல பழக்கம் அழிந்துகொண்டே இருப்பதைக் காணமுடிகின்றது. காரணம் குடிக்கத் தண்ணீர் கிடைப்பது அவர்களுக்கே பெரும்பாடாகவும், விலை கொடுத்தும் வாங்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

மனிதர்களுக்கே இன்று இத்தகு நிலை, சங்க கால மக்கள் இல்லம் தேடி வருபவர்களுக்கு மட்டுமின்றி, வேற்றூருக்குச் செல்லும் வழிப்போக்கர்களுக்கும் அவர்கள் செல்லும் வழியிடையே கிணறுகள், தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்ததோடு நில்லாமல், ஆடு, மாடு போன்ற வளர்ப்புப் பிராணிகளுக்கும் நீர்நிலைகளை ஏற்படுத்தியதோடு யானை, மான் போன்ற காட்டு விலங்குகள் தங்கள் தாகம் தீர்க்க காடுகளுக்கிடையில் அவைகளுக்காகவும் கூவல் தோண்டிய செய்திகளை நம் சங்கத் தமிழ் நூல்களில் நிரம்பவே காணமுடிகிறது. கிணற்றினை உணர்த்தும் சொற்களோடு, திவாகர நிகண்டு, கூவல், அசும்பு, கூபம், குழி, பூவல், கேணி, துரவு போன்ற சொற்களைக் கூறுகின்றது. கூவல் என்ற

சொல்லே பின்னர் கூபம், கூவம் என மருவியதாக எண்ணுவதற்கு இடமுள்ளது. இலக்கியங்களில் கூவல் பற்றிய செய்திகள் வரும் இடங்களை நோக்குகையில் அது இன்று நாம் காணும் கிணறுகள் போன்று ஆழமின்றி இருந்த நிலை புலப்படுகிறது.

அன்னாய் வாழிவேன் டன்னைநம் படப்பை
தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
உவலைக் கூவற் கீழ்
மானுண்டு எஞ்சிய கலிழி நீரே.

எனும் ஐங்குறு நூற்றின் பாடலடியால் ஆழமற்ற குழிகளையே எண்ணச் செய்கின்றது. மேலும் "அரிது உண்கூவல் அங்குடிச் சீறூர்" என்ற புறநானூற்றின் அடியாலும், "கூவல் துழந்த தடந்தாள் நாரை" எனும் பதிற்றுப்பத்தின் அடியாலும், சங்ககால மக்கள் நீர் தரும் கிணற்றினைப் பள்ளம்-நீர்நிலை எனும் பொருள் நோக்கில் காரணப்பெயராக அமைத்தனர் எனக்கொள்ளலாம்.

கூவல் என்ற சொல்லை கூ+அம் என்று விரித்து கூ என்பது பூமியையும் அம் என்பது நீரையும் உணர்த்த, பூமியில் உள்ள நீரான ஊற்றுநீர் என்று பொருள் கொள்ள முடிகின்றது. வடமொழியில் கிணற்றைக் குறிக்கும் கூபம் என்ற சொல்லே தமிழில் கூவம் என்று அழைக்கப்படுவதாகவும் கருத்து உண்டு.

மணற்பாங்கான இடங்களில் உள்ள கிணறுகளில் ஊற்றுநீர் மிகும் அறிவியல் செய்தியினை சீவக சிந்தாமணி "கூவல் வாய் வெண்மணல்" என்றும், "ஊற்றுநீர்க் கூவலுள்" என்றும் குறிப்பிடு கின்றது. ஆழமான கிணற்றுநீர் தூய குடிநீராக இருக்கும் என்பதையும், கோடைக் காலங்களில் குளிர்ச்சியாகவும், குளிர்காலத்தில் வெது வெதுப்பாகவும், திகழும் தன்மை கிணற்று நீருக்கு மட்டுமே உண்டு என்பதனை கல்லாடம் எனும் அருந்தமிழ் நூல் "நீள்நிலைக் கூவல் தெளிபுனல் உண்டும்" என்ற அடியாலும், "குமரியர் காமமும் கூவலும் வெதுப்புற" என்ற அடியாலும் சுட்டிக் காட்டுகின்றது.

செம்மண் நிலத்தில் உள்ள கிணற்று நீரை முகந்து பெரிய வாயினையுடைய சாடிகளில் நிரப்பி வைத்துத் தெளியச் செய்து குற்றமற்ற தூயநீரைப் பெற்றனர் நம் தமிழ் மக்கள். இச்செய்தியினை ஆலங்குடி வங்கனார் எனும் சங்கப்புலவர்,

பூவர் படுவிற் கூவல் தோண்டிய
செங்கண் சின்னீர் பெய்த சீறில்
முன்றில் இருந்த முதுவாய்ச் சாடி
யாம்கஃடு உண்டென வறிது மாசின்று (319: 1-4)

எனும் புறநானூற்றுப் பாடல் வழி உணர்த்துகின்றார். செம்புலத்து நீரைச் சாடிகளில் இட்டு தேற்றாங்கொட்டை போன்ற மனித உடலுக்கு ஊறுவிளைவிக்காத பொருட்களை இட்டு செம்மண் வண்டலைப் பிரிப்பதோடு தூய குடிநீராக மாற்றும் நெறிமுறை அண்மைக் காலம் வரை தமிழகத்துச் செம்புல நிலமுடைய கிராமங்களில் வழக்கமாக இருந்து வந்தது. இம்முறையினையே மேற்கண்ட சங்கப்பாடல் கூறுகின்றது. ஆற்று மணல் போன்றே அறிவியல் ரீதியாக மாசுபட்ட நீரைத் தூய்மையான நீராக மாற்றும் ஆற்றல் தேற்றாங்கொட்டைக்கும் உண்டு.

நற்றிணையில் இளந்தேவனார் பாடிய பாடல் ஒன்றில் பாறைகளுக்கிடையே சிறு கிணறு காணப்பெறுவதைப் "பாஅர் மலி சிறு கூவலின்" என்னும் அடிகள் வாயிலாக அறியமுடிகின்றது. கடினமான பாறைப் பகுதிகளில் கூட கிணறுகள் வெட்டி மழை நீரைச் சேமித்துப் பயன்படுத்திய திறம் வெளிப்படுகின்றது. இன்றும் கூட மலைமீதமைந்த கோயில்களை ஒட்டிச் சுனை அமைக்கப் பட்டுள்ளதைக் காணலாம்.

மாமூலனார் எனும் சங்கப்புலவர், உப்பு வணிகர்களின் கூட்டம் பயணம் செய்யும்போது, உப்பு மூட்டைகளைச் சுமந்து வருந்திய எருதுகள் இளைப்பாறுவதற்காக, வலிய நிலத்தை இடித்துத் தோண்டிய அகன்ற வாயினை உடைய கிணறுகள் எவ்வாறு பின்னர் அவ்வழியில் செல்பவர்களுக்குத் தாகம் தீர்க்க பயன்படுகின்றது என்று வணிகர்கள் வழித் தடங்களில் தோண்டும் கிணறுகள் பற்றியும், அக்கிணறுகள்

மனிதர்கள், விலங்குகளின் தாகம் தீர்ப்பது பற்றியும் கூறியுள்ளார்.

> கடல்நீர் உப்பின் கணம்சால் உமணர்
> உயங்கு பகடு உயிர்ப்ப அசைஇமுரம்பு இடித்து
> அகல் இடம்குழித்த அகல்வாய்க் கூவல்
> ஆறுசெல் வம்பலர் அசைவிட ஊறும் (295: 9-12)

என்னும் அகநானூற்றுப் பாடல் வழி இதனை அறியலாம். தங்களுக் காக மட்டுமின்றி, மற்றவர்களுக்காகவும் கூவல் தோண்டும் அறச் செயல் இதன் மூலம் வெளிப்படுகின்றது.

புறநானூற்றுப் பாடல் ஒன்றில் ஔவையார் களர் நிலத்தில் தோண்டப்பெற்ற கிணற்றுநீரின் துணையால் புலைத்தி ஒருத்தி அழுக்குத் துணிகளைத் துவைத்துத் தூய வெண்மையான ஆடைகளாக மாற்றினாள் என்பதை,

> களர்ப்படு கூவல் தோண்டி நாளும்
> புலைத்தி கழீஇய தூவெள் அறுவை (311)

என்னும் பாடலடிகள் வாயிலாக விளக்கியுள்ளார். உவர் மண்ணோடு துணிகளை ஊறவைத்து வெள்ளாவியிலிட்டுத் துணிகளை வெளுக்கும் முறை அக்காலத்தில் தமிழகத்தில் ஈரங்கொல்லிகள் என்றழைக்கப்பட்ட மக்கள் பின்பற்றிய தொழில் சார்ந்த செயலாகும். இப்பணிக்காக உவர்மண் உள்ள பகுதியில் கூவல் தோண்டி அந்நீர் மூலம் துணிகள் வெளுக்கப்பெற்ற நிகழ்வினை இப்பாடல் உணர்த்துகின்றது. வேளாண்மைக்கும், குடிநீருக்கும் மட்டுமல்லாமல் துணி துவைத்தல் போன்ற சமுதாயப் பயன்பாட்டிற்காகவும், கிணறுகள் வெட்டுவித்ததை இதன் மூலம் அறியமுடிகின்றது.

பெரிய மடிகளையும், ஒலிக்கும் மணிகளையும் உடைய பசுக்கூட்டம் நீர் பருகுவதற்காக வேண்டி, ஆயர்கள் விளைவற்ற நிலத்தில் கற்களை உடைத்துத் தோண்டிய நீர் வெளிப்படும் ஊற்றுக் கண்களையுடைய கிணற்றினுள், கன்றை உடைய இளைய பெண் யானை, தன் ஆண் யானையுடன் நீர் பருகுகின்ற காட்சியினைக் கண்ட கயமனார் என்னும் சங்கப்புலவர்,

ஆண்குரல் விளிக்கும் சேண்பால் வியன்கரைப்
படுமணி இனநிரை உணீஇய கோவலர்
விடுநிலம் உடைத்த கலுழ்கண் கூவல்
கன்றுடை மடப்பிடி களிறொடு தடவரும் (321: 6-9)

என்னும் அகநானூற்றுப் பாடலடிகள் வாயிலாக அரிய செய்தி ஒன்றினைக் கூறுகின்றார். பயன்படாத நிலத்தில் கடுமையான கற்களை உடைத்துப் பசுக்களுக்காகக் கிணறுகள் தோண்டும் ஆயர் செயல் இங்கு சுட்டப்படுவதோடு, அக்கூவல் யானை போன்ற பிற விலங்குகளுக்கும் பயன்பட்ட செய்தியினை அறியமுடிகிறது.

அள்ளூர் நன்முல்லையார் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் மக்கள் வாழும் சிற்றூரில் உள்ள குடிநீர்க் கிணற்றில் ஆண் யானை ஒன்று இறங்கி நீராடுதலால் கலங்கிச் சேறாகின்றது என்னும் காட்சியினை,

களிறு பொரக் கலங்கு கழல்முள் வேலி
அரிது உண்கூவல் அங்குடிச் சீறூர் (303: 1-2)

எனும் அடிகள் வாயிலாக விளக்கியுள்ளார். சிற்றூர்களில் குடிநீருக்காகத் தோண்டப்பெற்ற கிணறுகள் யானைகள் இறங்கி குளிக்கும் அளவிற்குப் பெரிதாக அமைக்கப் பட்டிருந்ததை அறிய முடிகின்றது. இத்தகைய கிணறுகள் அகலமான குளம் அல்லது குட்டைகளின் நடுவில் அமைக்கப்பெற்றிருந்த குடிநீர்க் கிணறுகளாக இருத்தல் வேண்டும். குளத்தின் நீர் கோடைக்காலங்களில் வற்றும் பொழுது, அக்குளத்தின் நடுவில் அமைந்த கூவல் கொண்டு நீர் பெறுகின்ற வழக்கம் இன்றும் வறட்சியான மாவட்டப் பகுதிகளில் காணமுடிகின்ற ஒன்றாகும்.

அகநானூற்றுப் பாடல் ஒன்றில், பாலை பாடிய பெருங்கடுக்கோ,

பயநிரை சேர்ந்த பாண்நாட்டு ஆங்கண்
நெடுவிளிக் கோவலர் கூவல் தோண்டிய (155: 7-8)

எனக் குறிப்பிட்டுள்ளார். இங்குப் பசுக்களின் தாகம் தனிப்பதற் காகத் தனியே கிணறு வெட்டும் மரபு சங்க காலம்

தொட்டு இருந்துள்ளது. பிற்காலப் பாண்டியர் கல் வெட்டுகளில் பசுக்களின் தாகம் தணிப்பதற்காக வெட்டப்படும் கிணறுகளை"ஆமென்னும் கிணறு" என்னும் சொல்லால் குறிப்பிட்டுள்ளனர். மேலும் அவ்வாறு பசுக்களுக்காக வெட்டப்பெற்ற கிணற்றிலிருந்து நீரை இறைக்க ஏற்றச்சால்களைப் பயன்படுத்திய திறமும் "கொடுவாய் பத்தல் வார்ந்து உகு சிறுகுழி" என்னும் அப்பாடல் அடியால் அறிய முடிகின்றது.

"கல்லறுத்து இயற்றிய வல்லுவர்க் கூவல்" என்னும் உறையூர் முதுகூத்தனாரின் கூற்று, கல்லை உடைத்துச் செய்து வன்மையான உவர்நீர்க் கிணறு பற்றிக் குறிப்பிடுகின்றது. "கூவல் அன்ன விடரகம் புகுமின்" என்னும் மலைபடு கடாத்தின் பாடலடி கிணறுகளைப் போன்ற குகை என்று உவமையாகக் கூறப் பெற்றுள்ளது. இது கிணறுகளின் அமைப்பு முறையைக் குறிக்கும் இலக்கியக் குறிப்பாகும்.

இளங்கோவடிகள் "குடம்புகா கூவல் கொடுங்கானம்" என வாழ்த்துக் காதையில் காவற்பெண்டின் சொல் வாயிலாகக் கானகத்திலுள்ள கிணறு பற்றிக் குறிப்பிட்டுள் ளார். நாட்டில் குடிநீருக்கு மட்டுமின்றி கானகத்து விலங்குகளுக்காகவும் கூவல் அமைக்கப்பெற்றிருந்ததை அறியமுடிகின்றது. கம்பம் போன்ற பகுதிகளில் இருபது ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் அப்பகுதி மக்களால் கானகத்தின் பாதை ஓரங்களில் யானைகள் நீர் அருந்த நீர்த்தொட்டிகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்தன. இதனால் யானைகள் வந்து அமைதியாக நீர் அருந்திச் சென்றன. இன்று இத்தகு நீர்த்தொட்டிகள் இல்லாத நிலையினாலேயே அவைகள் ஊருக்குள் புகுந்த செய்தியைச் செய்தித்தாள்களில் காண முடிகின்றது. இத்தகு இடர் பாட்டைத் தவிர்ப்பதற்காகவே நம் முன்னோர்கள் திட்டமிட்டுக் கானகத்திலும் கூவல் அமைத்திருந்தனர்.

கிணறுகள் தோண்டியது மட்டுமின்றி, அக்கிணறுகள் தோண்டுவதற்குப் பயன்படுத்திய கருவிகள் குறித்தும் சங்க

நூல்களில் செய்திகள் காணப்படுகின்றன. ஆயர்கள் பசுக் கூட்டத்திற்காகக் குந்தாலி என்னும் கருவியால் தோண்டி குழிசெய்த கிணற்றினை அடைந்து யானைகள் நீரைக் குடிக்கும் என்னும் செய்தியினை நப்பாலத்தனார் என்னும் சங்கப்புலவர் நற்றிணையில்,

**கணிச்சியில் குழித்த கூவல் நண்ணி**
**ஆன்வழிப் படுநர் தோண்டிய பத்தல்**
**யானை இனநிரை வெளவும் (240)**

என்னும் அடிகள் வாயிலாக விளக்கியுள்ளார். கணிச்சி எனப்பெறும் குந்தாலியால் கிணறுகள் தோண்டப்பெற்ற செய்தி இதனால் அறியமுடிகின்றது.

இதேபோல் காவன் முல்லைப்பூதனாரின், அகநானூற்றுப் பாடலில்,

**வல் வாய்க் கணிச்சி கூழ்ஆர் கோவலர்**
**ஊறாது இட்ட உவலைக் கூவல்**

என்னும் அடிகளை ஆழ்ந்து நோக்கும்பொழுது கிணறு தோண்ட பயன்படுத்தப்பெறும் வலிய வாயை உடைய கணிச்சி என்னும் கருவி பற்றி மேலும் தெளிவுபெற முடிகின்றது.

மேலும் கம்பர், சேக்கிழார் போன்றவர்களின் படைப்பு களிலும் கூவல் பற்றிய குறிப்புகள் சுட்டப்பெறுகின்றன. இலக்கியங் களில் மட்டுமில்லாமல் கூவல் குறித்த தனித்தனி நூல்கள் தமிழகத்தில் தோன்றின. அவைகள் இன்றும் தஞ்சை சரசுவதி மகால் நூலகம், சென்னை கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், திருவனந்தபுரம் கேரள பல்கலைக்கழக நூலகம், மற்றும் பல தனி நபர்களின் சுவடி சேகரிப்புகளில் கூவநூல், கூவசாத்திரம், கூப சாத்திரம் என்னும் பெயர்களால் பல ஏட்டுச்சுவடி நூல்களாக உள்ளன. தஞ்சை சரசுவதி மகால் நூலகம், சென்னை உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் போன்றவை கூவ சாத்திரங்களை ஏட்டுச் சுவடிகளிலிருந்து ஆய்ந்து அச்சு நூல்களாக வெளியிட்டுள்ளன.

கூவநூல்கள் மிகச் சேய்மையான காலந்தொட்டு நிலத்தடிநீர் காணும் பல்வேறு முறைகளை மரபு வழி விளக்குகின்றன. ஒவ்வொரு நிலத்தின் நில அமைப்பிற்கேற்ப நீர் கிடைக்கும் விவரம், அந்நீரின் தன்மை நிலத்தில் வளரும் மரம், செடி, கொடிகள் ஆகியவற்றைக் கொண்டு நீருள்ள இடத்தை ஆராய்தல், நீர் கிடைக்கும் இடங்களில் உள்ள புற்றுக்களின் துணைக்கொண்டு நிலத்தடியில் உள்ள ஊற்றுகளின் இயல்பினைக் காட்டல், நிலத்திலுள்ள நீருக்கும், இராசி, கோள் இவற்றிற்கும் உள்ள தொடர்பு தொடுகுறியால் சொல்லப்படும் செய்திகள் ஆகியன கூவ சாத்திரத்தின் முதன்மைக் கூறுகளாக அமைகின்றன. இவற்றால் உணர்த்தப்படும் குறிப்புகள் சிறப்பு நிலையில் கிணறுகள் பற்றியும், பொதுநிலையில் குளம் போன்ற நீர்நிலைகளையும் கருத்துட் கொண்டே அமைந்துள்ளன. கிணறு வெட்டுவதற் குரிய நற் பொழுதுகளைச் சோதிடச் சாத்திர அடிப்படையில் விவரிக்கின்றனர். குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை என்னும் ஐவகை நிலங்களிலும் நில அமைப்பு கிணறுவெட்டும்பொழுது காணப்படும் பலவகைப் பாறை மற்றும் மண்ணின் அடுக்குமுறை, அளவீடு ஆகியவை பற்றியும் விளக்குகின்றன.

அறிவியல் அடிப்படையில் இந்நூல்களை ஆராயும் பொழுது தாவர இனங்களின் அடிப்படையிலும், புற்றுகளின் வகைப்பாடு அடிப்படையிலும், இவை உள்ள இடங்களில் உள்ள நீரின் ஆழம் பற்றியும், தன்மை பற்றியும் இந்நூல்கள் விரித்துரைப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவை அறிவியல் ஆய்வுகளுக்கும், அனுபவரீதியிலான முடிவுகளுக்கும் ஒத்தவகையில் திகழ்வது பண்டு முதல் இத்துறையில் தமிழர்கள் பெற்ற ஆழ்ந்த ஞானம் எவ்வளவு வலிமை யுடையது என்பது புலனாகின்றது. தொடுகுறி மற்றும் சோதிட அடிப்படையில் கூறப்படும் செய்திகள் அறிவியல்

அடிப்படையில் இதுகாறும் தரவுகளுடன் மெய்ப்பிக்கப் பெறவில்லை எப்படி இருப்பினும் இக்கூவ நூல்கள் நிலத்தடி நீர் காணலில் தனியிடம் பெற்றுத் திகழ்கின்றன.

தஞ்சையில் உள்ள சரசுவதி மகால் நூலகத்தில் இருக்கும் பதார்த்த குணபாடம் எனும் ஏட்டுச்சுவடி நூல், நூலக வெளியீடாக அச்சில் வந்துள்ளது. அந்நூலினுள் நீரின் வகைகளும், அந்தந்த நீரின் வகைக்கேற்ப அதன் குணங்களும் எப்படி இருக்கும் என்று விளக்கப்பெற்றுள்ளது. இதில் கிணற்று நீரின் குணமாக,

ஆசாரக் கூவத்து அறலால் அதிதாகம்
வீசாகச் சூடுபசி மெய்க்காந்தல் – மாசூலை
மெய்வலி இடைதுளைப்பு வீழ் மயக்கஞ் சோபை பித்தம்
பைய வரும் ஈளையரும் பார்

என்று கூறப்படும் செய்யுளில் பொருள் குற்றமற்ற கிணற்று நீரானது அதிதாகம், சூடு, பசி, சரீர காந்தல், கொடியசூலை, உடல் கடுப்பு, குடைச்சல், மயக்கம், வீக்கம், பித்தக்கோபம், நாளுக்கு நாள் அதிகப்படுகின்ற ஈளை நோய் ஆகிய இவைகளைக் குணப்படுத்தும் என்பதாகும்.

இதேபோல் ஆற்றுநீர், ஊற்றுநீர், சுனைநீர், ஏரிநீர், குளத்துநீர், பாறைநீர், ஓடைநீர் போன்றவற்றின் குணங்களும் இந்நூலில் கூறப்பெற்றுள்ளன. எதனையும் பகுத்து ஆராய்ந்து அறிவியல் திறனோடு வாழ்ந்த நம் முன்னோர்களின் எண்ணங் களை நூல்கள் வழி படிப்போம், பயன்பெறுவோம்.

# ஆதீண்டு குற்றி

தொல் பழங்காலத்தில் ஆடுகளும், மாடுகளும்தான் பெருஞ்செல்வமாக திகழ்ந்தது. இவற்றை மக்கள் விரும்பி வளர்த்து வந்தனர். முல்லை நிலத்தில் ஆடும், மாடும் மந்தைகளாக வளர்க்கப்பெற்றன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களால் மாடுகள் வளர்க்கப்பட்டு வந்தாலும், கொங்கு நாட்டில் காங்கேயம் பகுதியில் காணப்படும் மாடுகள் சிறந்த உயர்ந்த இனமாக கருதப்படுகின்றன. இத்தகு காங்கேய இன மாடுகள் சங்க காலத்திலேயே இருந்ததையும், கொங்கர்கள் அவற்றை வளர்த்து வந்ததையும் சங்க நூலான பதிற்றுப்பத்து,

கயிறுகுறு முகவை மூயின மொய்க்கும்
ஆகெழு கொங்கர் நாடு அகப் படுத்த (22:14-15)

சேண்பரல் முரம்பின் ஈர்ம் படைக் கொங்கர்
ஆபரந் தன்ன செலவின்பல் (77:10-11)

என்றும் குறிப்பிட்டுள்ளது.

ஆடுகளைப் புல்லினம் என்றும், எருமைகளைக் கோட்டினம் எனவும், பசுக்களை கோவினம், நல்லினம் என்றும் சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. குடப்பால் கறக்கும் மாடுகளைக் "குடஞ்சுட்டு நல்லினம்" என்கின்றது சங்க நூல்கள். மாடுகள் மேய்வதற்காக புல் நிலங்களை விட்டிருந்தனர். இதனை மணிமேகலை "விடுநில மருங்கிற் படு புல் லார்ந்து" என்கிறது.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது தமிழர்களின் வாழ்வியல் மரபாகப் போற்றப்பெற்றது. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்றார் வள்ளலார். பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்பது வள்ளுவர் வாக்கு. அனைத்து உயிர்களையும் தம்முயிர்போல் போற்றி வாழ்ந்தனர் நம் முன்னோர்கள். அதனாலேயே முல்லைக்கு

தேரீந்த பாரியையும், மயிலுக்கு போர்வை தந்த பேகனையும், கடையெழு வள்ளல்கள் வரிசையில் வைத்துப் போற்றி வருகின்றோம். செடி கொடிகளுக்கும் உயிர் உண்டு என்றும் ஏனைய உயிர்களான பறவைகள், விலங்குகளையும் போற்றி அவற்றின் உணர்வுகளையும் மதித்த பாங்கினை தமிழ் இலக்கியங்களில் காணமுடிகின்றது. அஃறிணை உயிர்களின் உணர்வினை மதித்து அவைகளுக்காக நாட்டப் பட்டுள்ள தூண் போன்ற கல்லிற்கு தமிழ் இலக்கியத்தில் ஆதீண்டு குற்றி என்று பெயர் வழங்கப்பட்டது.

மனிதர்கள் தங்கள் உடலில் அரிப்பு ஏற்படும்பொழுது கையால் சொறிந்து கொள்கின்றார்கள். ஆடு, மாடுகளுக்கு தினவு ஏற்படும் பொழுது அவைகள் நிழல் தரும் மரங்களில் உராய்ந்து தன் தினவைப் போக்கிக்கொள்ள முற்படும். மாடுகள் அடிக்கடி உராய்வதால் நல்ல நிலையில் உள்ள மரங்கள் அழிந்துபோகும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இதனை தவிர்க்கும் விதமாகவும், அவ்வுயிர்களின் உணர்வினை மதிக்கும் விதமாகவும் தொல் பழங்காலந்தொட்டு, ஆடு, மாடுகள் தினவைப்போக்க பலகைக் கற்களையும், குத்துக்கற்களையும், மரக்கட்டைகளையும் நட்டுள்ளனர். இவை பெரும்பாலும் நீர்நிலைகளை ஒட்டியே அமைக்கப் பட்டுள்ளது. மேய்ச்சலுக்காக வெயிலில் சுற்றும் மாடுகள் நீர் நிலைகளை வந்தடைகின்றன. சேற்றினை உடம்பில் பூசிக் கொண்டு கரை ஏறும் மாடுகளுக்கு தினவு ஏற்படுகின்றது. தினவைத்தீர்க்க அவைகள் ஆதீண்டு குற்றியை நோக்கிச் செல்கின்றன. இதற்காக நடப்படும் கற்களை ஆதீண்டு குற்றி, மாதீண்டு குற்றி என்று இலக்கியங்கள் சுட்டுகின்றன.

மாடுகள் அவற்றிற்கு தினவெடுக்கும்பொழுது, உரசிக் கொள்வதற்காக மரக்கட்டை அல்லது கற்களை ஏதுவாக நட்டு வைக்கும் மரபு சங்க காலந்தொட்டு சென்ற நூற்றாண்டு வரையும் தொடர்ந்து வந்துள்ளது. இன்று மாடுரசு கல் என அழைக்கப்படும் ஆதீண்டு குற்றி பற்றி இலக்கியங்கள் கூறுவதைப் பார்ப்போம்.

சேந்தன் திவாகரத்தில் தத்துவம், அலங்காரம், தேவர் போன்ற பல்பொருள் கூட்டத்தொரு பெயர்த்தொகுதி கூறும் பொழுது முப்பத்திரண்டு அறத்தின் பெயர்கள் சுட்டப்படுகின்றன.

அவைகள்,

ஆதுலர்சாலை, ஓதுவார்க்குணவு, அறு
சமயத்தோர்க்குணவு, பசுவுக்குவாயுறை,
சிறைச்சோறு, தின்பண்டம், மகச்சோறு,
மகப்பெறுவித்தல், மகவளர்த்தல், மகப்பால்,
அறவைப் பிணஞ்சுடுதல், அறவைத்தூரியம்,
வண்ணார், நாவிதர், வதுவை, பூணூல், நோய்,
மருந்து, கண்ணாடி, காதோலை, கண்மருந்து,
தலைக்கெண்ணெய், பெண்போகம், சுண்ணம், பிறர்துயர்
காத்தல், தண்ணீர்ப்பந்தர், மடம், தடாகம்,
கா, ஆவுரிஞ்சுநடுதறி, யேறு
விடுத்தல், விலைகொடுத்துக் கொலையுயிர் மீட்டல்,
இச்செயன்முப்பத் திரண்டறமென்ப,

என்கிறது.

அவற்றுள், ஆவுரிஞ்சுநடுதறி அமைப்பது அறச்செயலாகப் போற்றப்படுகின்றது. தமிழ்-தமிழ் அகரமுதலி ஆதீண்டு குற்றிக்குப் பொருள் ஆவுரிஞ்சி, ஆவுரிஞ்சு தறி எனக் கொள்கின்றது. தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள பெருஞ்சொல் அகராதி தொகுதி இரண்டில் பசுக்கள் உராய்ந்து தம் அரிப்பை நீக்குவதற்கேற்ப நடப்படும் உயரமான கல்தூண் ஆதீண்டு குற்றி என்று விளக்கமளித்துள்ளது.

சீவக சிந்தாமணியின்,

பூத்த கோங்கு போற்பொன் சுமந்துளா
ராய்த்தியர் நலக்கா செறூணனான்
கோத்த நித்திலக் கோதை மார்பினான்

எனும் செய்யுளுக்கு உ. வே. சா. அவர்கள் எழுதியுள்ள விசேடக் குறிப்பில், கோங்க மலர்கள் பொன்னிற முடையவை, ஆதீண்டு குற்றி தினவைப்போக்கிக் கொள்ளுதற் பொருட்டுப் பசுக்கள் உரிஞ்சுக் கொள்ளுதற்கு நாட்டப்பட்டுள்ள கட்டை என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆய்த்தியர் நலஞ்சேர்தற்கு ஆதீண்டு குற்றியை ஒப்பானாகிய நந்தகோனுடைய அந்நிரையிலே வாய்த்த நிமித்திகன் "நிரைக்குள்ளே புகுந்து காரி அழித்ததாகலால், இன்று நீர் நிரையைக் காவல் இகழாதொழிமினெனச்" சொன்னான். அதுகேட்டுப் புதுமணவாளப் பிள்ளைகளும் "மொய்ம்புடனே காத்தற்கு ஏகினார்" என்று நச்சினார்க்கினியர் உரை வகுத்துள்ளார்.

பத்துப்பாட்டு நூலுள் ஒன்றான திருமுருகாற்றுப்படையில்,

> சதுக்கமுந் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
> மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்
> மாண் தலைக்கொடியொடு மண்ணி யமைவர (225-227)

இதன் பொருள் கூறுமிடத்து கந்துடை நிலையினும்-ஆதீண்டு குற்றியையுடைய இடத்திலும் என்கின்றது. இதனையே தமிழ் லெக்சிகன் (Tamil Lexicon) கந்து எனும் சொல் ஆதீண்டு குற்றியைக் குறிப்பதாகச் சொல்கின்றது. தொல்காப்பியர் காலத்திலேயே இவ்வகை ஆதீண்டு குற்றிகள் வழக்கில் இருந்ததை உரையாசிரியர்களின் உரைக்குறிப்பால் அறியமுடிகின்றது. ஒன்றொழி பொதுச்சொல் பற்றி கூறும் தொல்காப்பியம் 49ஆம் (சொல்) சூத்திரத்திற்குப் பொருள் கூறும் சேனாவரையர் பல பொருட்குப் பொதுவாகிய சொல்லைப் பற்றிக் கூறும்பொழுது ஆதீண்டு குற்றியினை மேற்கோள் காட்டுகின்றார். ஆதீண்டு குற்றி பசுக்கள் உராய்வதற்கென்றே நடப்பட்டிருந்தாலும், பிற விலங்குகளும் உராய்ந்து கொள்ள பயன்பட்டது என்கிறார்.

கல்லாடனார் தம் தொல்காப்பிய, சொல் விருத்தி உரையில் தலைமை பற்றியும் சிறுபான்மை பற்றியும் வரும் சொல்லுக்கு இதனை மேற்கோள் காட்டுகின்றார்.

சேனாவரையரின் உரைக்கு வலு சேர்ப்பது போல் ஆதீண்டு குற்றியில் பிற விலங்குகளும் உரசிக்கொண்டன என்பதை சங்க இலக்கிய குறிப்புகளால் அறியமுடிகின்றது.

குறவர் முன்றில் மாதீண்டு துறுகல்
கல்லா மந்தி கடுவனோடு உகளும் (ஐங்-நூறு-277:1-2)

விலங்குகள் உராய்வதற்கென்றே நடப்பட்டிருந்த கல் மாதீண்டு துறுகல் என்ற பெயரில் அழைக்கப்பட்டது தெரியவருகின்றது.

ஆவுரிஞ்சு என்னும் சொல்லாட்சி திருக்குற்றாலத் தலபுராணம், திருக்குற்றாலத் தலமகிமைச் சருக்கத்தில்,

ஆதுலர் சாலை சோலை யாவினவா யுறை கண்ணாடி
ஓதுவார்க் குணவு தண்ணீ ருறுபந்தர் மடந்த டாகங்
கோதிலா வுரிஞ்சி சுண்ணங் கொலையுயிர் விடுத்த லேறு
மாதலைக் கெண்ணெய் கண்ணோய் மருந்துநன் மகப்பால் சோறு.(37)

என்கிறது. இதன் பொருளாக அந்நூலின் அரும்பத உரையில் ஆவுரிஞ்சி-பசுக்கள் உரோஞ்சுகிற தறி எனக் குறிப்பிட்டுள்ளது. இதே நூலினுள் மந்தைக்கல் என்ற பொருளிலும் சுட்டப்படுகின்றது.

இலக்கியங்களில் மட்டுமல்ல, கல்வெட்டுக்களிலும் ஆதீண்டு குற்றி அமைக்கப்பட்டிருந்ததற்கான சான்றுகள் காணக் கிடைக் கின்றன. இக்கல்வெட்டுக்களின் காலம் கி. பி. 13 அல்லது 14ஆம் நூற்றாண்டு ஆகும். இதில் தன்மத்தறி என்றே ஆதீண்டு குற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. தர்மத்திற்காக நடப்பட்டுள்ள கல் என்பதாகும். இதனை நிறுவியவர்களின் பெயரும் கல்லில் வெட்டப்பட்டுள்ளது.

ஒட்டப்பிடாரம் வட்டம் காட்டுநாயக்கன்பட்டி எனும் ஊரில் உள்ள கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ புவன
2. உடையான்னா
3. ன ஆவணதியா
4. கி பே (ரை)யன் தன்ம
5. தறி

இதே வட்டம் ஒருமாக்குளம் என்னும் ஊரில்,

1 கண்ணன்
2 தேவனான க
3 ரஞ்சிபுரங்
4 கொண்ட
5 பாண்டிய
6 தேவன் த
7 ன்மத் தறி

என்று வெட்டப்பட்டுள்ளது.

மேலும் கோவில்பட்டி வட்டம், கடம்பூர் அக்கிரகாரம் மற்றும் கடம்பூர் பறம்புக்கோட்டை பகுதிகளில் காணப்படும் கல்வெட்டுக்கள்,

1 க (ண்ண)ன்
2 மாதனா
3 ன வத்
4 தராயன்
5 தன்ம்ம
6 தறி

எனவும்,

1 ஸ்வஸ்திஸ்ரீ நா
2 தன் சங்(க)ன்னா

3 நகளத்திருக்
4 கைப் பல்லவ
5 தரையன் தன்
6 மத் தறி

என்றும் சுட்டுகின்றன.காஞ்சிபுரங்கொண்ட பாண்டியன் என்பது முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியனைக் (கி.பி.1250-84) குறிக்கும் என்று வரலாறு இதழில் எஸ். இராமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

பழனி அருகே மஞ்சநாயக்கன்பட்டி எனும் ஊரில் கி. பி. 1789ஆம் ஆண்டில் நடப்பட்டுள்ள கல்வெட்டு கூறும் செய்தி, மாடுரசுகல் பற்றி குறிப்பிடுகின்றது. இதனை அமைத்தவர்கள் அவ்வூரில் வாழ்ந்த நாச்சிமுத்துக் கவுண்டர், குப்பம்மாள் என்று பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் ஆதீண்டு குற்றி எனக் குறிப்பிட்டு அடைப்புக்குறிக்குள் மாடுரசுகல் என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. மாடு மேய்ப்பவர்கள் ஓரிரு முறை இக்கல்லில் மாட்டின் முதுகை உரசி பழக்கி விட்டால் போதும், அதன் பிறகு மாடுகள் தங்களுக்கு தினவெடுக்கும்பொழுது பழக்கம் காரணமாக தானாகவே இக்கல்லில் உரசிக்கொள்ளும், சென்னை, தருமபுரி, சேலம், தஞ்சாவூர் மாவட்டங்களில் இது போன்ற ஆதீண்டு குற்றிகள் காணப்படுகின்றன. கோவை மாவட்டத்தில் இக்கல்லினை ஆ ஓஞ்சிக்கல்லு, ஆ உருஞ்சிக்கல்லு என்று அழைக்கின்றனர் என்று தொல்லியல் ஆய்வுத்தொகுதியில் அ. இராசேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது மாடுகள், யானைகள் போன்ற விலங்கினங்களுக்கு தாகம் தீர்க்க தண்ணீர் குட்டைகள் ஏற்படுத்தியிருந்தமை போன்று, மாடுகள் தங்கள் உடல் அரிப்பை தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே கல் நட்டுள்ள நம் முன்னோர்களின் மாண்பு போற்றுதலுக்கு உரியதன்றோ.

# தமிழ் மருத்துவத்தில் தஞ்சை

பொன்னியாறு பாய்ந்து வளம் பெற்றதால் செந்நெல் விளைந்த பூமி தஞ்சை. இத்தகு வளம் மிகுந்தமையால் சோழநாடு சோறுடைத்து என வரலாற்றில் புகழ்கொண்டு திகழ்ந்தது இவ்வூர். சோழர்களின் தலைநகரமாக விளங்கிய தஞ்சையில் ஓவியம், சிற்பம், நாட்டியம், இசை, கட்டடக் கலை போன்ற அருங்கலைகள் ஒருங்கே வளர்ந்து புகழ் பரப்பி வருகின்றன. இத்தனை கலைகள் மட்டுமின்றி மருத்துவக் கலையிலும் இத்தஞ்சை மாவட்டமானது பெரும் வளர்ச்சியும், புகழும் பெற்றுத்திகழ்கிறது. நாட்டு மக்கள் நோயின்றி நன்முறையில் வாழ, முன்னவர்கள் பெரிதும் முனைப்பு காட்டிய செய்திகளை இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் துணைகொண்டு அறியமுடிகின்றது.

நோய் அற்ற மக்களைக் கொண்ட நாடே உலகில் சிறந்த நாடாகத் திகழ முடியும். இதனை,

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு (734)

என்கிறார் வள்ளுவர். இதன் பொருளாவது உயிரை வருத்தும் பசியும், ஓயாத நோயும், நாட்டை அழிக்கும் பகையும் இல்லாமல் விளங்குவதே சிறந்த நாடாகும் என்பதாம். மற்றுமொரு குறளில்,

பிணி இன்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து (738)

நோயற்ற வாழ்வு, செல்வச் சிறப்பு, குறையாத விளைவு, வற்றாத இன்பம், தகர்க்க இயலாத பாதுகாப்பு ஆகிய ஐந்தும் நாட்டிற்கு அழகு தருவனவாகும். இக்குறளிலும் நோயற்ற நிலைக்கே முதலிடம் தந்து சிறப்பித்துள்ளார்.

உடல் நலம் மட்டுமல்ல, மனநலமும் நன்கு இருக்க வேண்டும் என்பதை வள்ளுவர் தம் குறட்பாக்களில் கூறியுள்ளார். அம்மனக்கவலை தீர்க்கும் வழிகளையும் குறளில் காண முடிகின்றது. நோயற்ற நிலை வேண்டும் என்று வலியுறுத்துவதோடு நின்றுவிடாமல் நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகள், நோய் வந்தபின் அதனை தீர்க்கும் வழிமுறைகளையும் திருவள்ளுவர் சுட்டியுள்ளார். இன்று பல்வேறு பணிகள் காரணமாக குறித்த நேரங்களில் உணவருந்த முடியாமல் நேரம் தவறி உண்ணக்கூடிய நிலையிலேயே நம்மில் பலர் வாழ்வதைக் காண்கிறோம். இதுவே பல நோய்கள் ஏற்படக் காரணமாக அமைகின்றது. நேரம் தவறுதலால் நாம் உண்ணும் உணவின் அளவும் மாறுபடுகிறது. இதனைத் தவிர்த்து உண்ணும் உணவின் அளவினை அறிந்து உண்போமானால் நோய் வருவதைத் தவிர்க்கலாம் என்பதை,

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு (945)

என்கிறார் வள்ளுவர். உடம்பிற்கு ஒத்துக்கொள்ளும் உணவையும் அளவாகவே உண்ணவேண்டும். அப்பொழுது தான் உயிருக்கு எத்தகைய நோயும் வராது என்கிறார். நம் உடம்பிற்குத் தேவையான ஒத்துக்கொள்ளக்கூடிய உணவினை உட் கொள்ளுதல் நலம் பயக்கும் என்பதனை மற்றொரு குறளில்,

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் (942)

என்கிறார். முன்பு உண்ட உணவு நன்றாகச் செரித்ததை அறிந்து மீண்டும் உண்டால், உடலுக்கு மருந்து எனும் பொருளே வேண்டுவதில்லை. மேலும் அளவோடு உண்ணவேண்டும். அளவிற்கு மீறினால் அமிழ்தமும் நஞ்சாகும் என்பது போல்.

தீயள வின்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும் (947)

பசியறியாமல், காலமறியாமல், உணவின் அளவு அறியாமல் உண்பதால் நோய்கள் வந்து ஒட்டிக்கொள்ளும் என்கிறார்.

மருத்துவர் தாமோதரனார், மருத்துவர் நல்லச்சுதனார் போன்ற பெயர்கொண்ட சங்கப்புலவர்கள் சிலர் மருத்துவம் புரிந்ததை அவர்கள் கொண்டுள்ள அடை மொழிகளால் அறியமுடிகிறது. மேலும் குறிஞ்சிப் பாட்டிலும், புறநானூற்றிலும் மருத்துவர்களை உயர்வாக வைத்துப் பாடிய பாடல்கள் காணப்படுகின்றன. பெருங்கதையில் மருத்துவக்குறிப்புக்கள் காணக்கிடைக்கின்றன.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

நோய்கொண்டார் பேய் கொண்டார்

நோய்க் கிடங்கொடேல்

என்பனவெல்லாம் தமிழர்தம் வாழ்வியல் நெறியாகக் கூறப்படும் கருத்துக்கள். நோயுற்ற பிறகு வருந்துவதைவிட நோய் வராமல் தடுப்பதில் நம்மவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் மிகுதி. எனவே அக்காலத்தில் கோயிலைச் சார்ந்தே பல்வேறு பணிகள் மேற் கொள்ளப்பெற்றன. மருத்துவ மனைகளாகவும், மருத்துவ மூலிகை உற்பத்திக் களமாகவும் கோயில்கள் திகழ்ந்ததை இலக்கியங்களின் வாயிலாகவும், கல்வெட்டுக்கள் அடிப்படையிலும் அறிந்துகொள்ள முடிகிறது.

வரலாற்றில் தனக்கென்று ஓர் தனியிடம் பெற்றுத் திகழும் ஊர் தஞ்சாவூர். இத்தஞ்சை மண் எண்ணற்ற மருத்துவ வல்லுநர் களையும், மேதைகளையும் உருவாக்கிய, உருவாக்கிக் கொண்டிருக்கும் சிறப்புடைய மண். அந்த வகையில் தஞ்சை மாவட்டத்தில் (பழைய தஞ்சை மாவட்டம்) தோன்றிய மருத்துவத் துறை வளர்ச்சியில் பங்குகொண்ட மாபெரும் மக்களில் ஒரு சிலரைப் பார்ப்போம்.

திருஞானசம்பந்தர், கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர்தம் தேவாரப் பதிகத்தில், குடந்தையிலிருந்து மயிலாடுதுறை செல்லும் வழியில் காவிரியின் வடகரையில் அமைந்து தற்போது நண்டாங்கோயில் என வழங்கப்படும் திருந்துதேவன்குடி இறைவனைப் பாடும்,

மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் இவை
புரிந்த கேட்கப்படும் புண்ணியங்கள் இவை
திருந்து தேவன்குடித் தேவர் தேவு எய்திய
அருந்தவத்தோர் தொழும் அடிகள், வேடங்களே. (1)

செரு மருதம் துவர்த் தேர் அமண் ஆதர்கள்
உரு மருவப்படாத் தொழும்பர்தம் உரைகொளேல்
திரு மருவும் பொய்கை சூழ்ந்த தேவன்குடி
அரு மருந்து ஆவன, அடிகள் வேடங்களே (10)

இப்பாட்டில் திருமருவும் பொய்கை சூழ்ந்த தேவன்குடி அருமருந்து ஆவன எனப்பாடுகின்றார். இக்கோயில் வளாகத்தில் நோய் தீர்க்கும் மூலிகைகள் வளர்க்கப் பட்டதையும், இக்கோயிலைச் சுற்றியுள்ள குளத்தில் உள்ள கிணறுகளில் மருந்திற்கான பாஷாணங்கள் இருந்ததையும், இக்கோயிலும், குளமும் நோய் தீர்க்கும் அருமருந்து என்றும் குறிப்பிடுகிறார். இக்கோயிலே தஞ்சையில் மருந்து உற்பத்தி நிலையமாகத் திகழ்ந்ததை அறியமுடிகிறது. இதனைப் பாடிய சம்பந்தர் தஞ்சையம்பதியைச் சார்ந்தவரேயாவார். இறைவனையே மருத்துவனாகப் போற்றும் பண்பு நம் மக்களிடம் உண்டு. அதனால்தான் மருந்தீசர் எனப்படும் வைத்தீசுவரன் கோயில் எழுப்பப்பெற்றுள்ளது.

பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகப் போற்றப்பெறும் திருமந்திரத்தைப் படைத்த திருமூலர் தஞ்சை மாவட்டம் திருவாவடுதுறையின் கண் பிறந்தவர். திருமூலர் மருத்துவம் குறித்த கருத்துக்களை மிகுந்த அளவில் திருமந்திரத்தில் சுட்டிச்செல்கிறார். அவர் கூறும் அடிப்படைக் கருத்துக்கள் இன்றளவும் அறிவியலோடு பொருந்துவன வாகவே உள்ளன. பிறப்பு முதல் உடல்கூறுகள் அனைத் தையும் தம் பாடல்களில் படம்பிடித்துக் காட்டுகிறார்.

ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகில் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகும்
தாண்மிகு மாகில் தரணி முழுதாளும்
ஆண்வச மிக்கிடில் பாய்ந்ததும் இல்லையே (478)

காதலரிருவரும் மருவிப் பொருந்துங்கால் ஆண் ஆகிய வலப்பால் மூச்சு மிகுந்து சென்றால் கருவுற்றுப் பிறக்கும் உயிர் ஆணாகப் பிறக்கும். பெண்ணாகிய இடப்பால் மூச்சு மிகுந்து சென்றால் பிறக்கும் உயிர் பெண்ணாகப் பிறக்கும். இரண்டு மூக்கின் வழியாகவும் வரும் மூச்சு ஒத்திருந்தால் பிறக்கும் உயிர் அலியாக இருக்கும். ஆள்வினை முயற்சியில் கருத்து மிகுதியாக இருந்தால் பிறக்கும் உயிர் சிறப்புடன் தரணி ஆளும்.

மேலும் மற்றொரு பாடலில்,

> குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
> குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்
> குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்
> குழவி அலியாகும் கொண்டகால் ஒக்கிலே (482)

மலக்காற்றாகிய அபானன் எதிர்த்து வருமானால் இரட்டைக் குழந்தைகள் பிறக்கும் என்கிறார். நற்குழந்தைப் பேறு ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் குறித்து கூறுவதோடல்லாமல், குறைபாடுகளுடன் குழந்தைப் பிறப்பு ஏற்படுவது பற்றியும் கூறியுள்ளார்,

> பாய்கின்ற வாயு குறையிற் குறளாகும்
> பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்
> பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனாகும்
> பாய்கின்ற வாயுமா தார்க்கில்லை பார்க்கிலே. (480)

இதன் பொருள் சர ஓட்டஞ் செல்கின்ற உயிர்க்காற்று அளவில் குறைந்தால் பிறக்கும் குழந்தை குறுகிய வடிவமாகப் பிறக்கும். அம்மூச்சு நெடுந்தொலைவு ஓடி இளைத்தவன் மூச்சுப்போல இளைத்துப் போனால் பிறக்கும் குழந்தை முடமாகும். அம்மூச்சு இடைநிலைப் பட்டிருந்தால் குழந்தை கூனாகப் பிறக்கும். இவ்வாராய்ச்சி அனைத்தும் ஆண்களுக்கு மட்டுமே அன்றி பெண்களுக்கு இல்லை.

இக்கருத்தை ஒட்டிய மற்றொரு பாடல்,

மாதா உதரம் மலமிகில் மந்தனாம்
மாதா உதரம் சலமிகில் மூங்கை யாம்
மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே. (481)

இருவரும் மருவும்பொழுது தாயார் வயிற்றில் மலம் துப்புரவாகக் கழியாமல் தங்கி மிக்கியிருந்தால் பிறக்கும் மைந்தன் மந்தனாவான். அதுபோல் நீரல் நீராகிய சிறுநீர் மிகுந்திருந்தால் பிறப்பது ஊமையாகும். இரண்டும் ஒப்ப இருக்குமானால் பிறப்பது குருடாகும். இங்ஙனம் நேர்வது தாய் வயிற்றுத் தோன்றும் சேய்க்கு ஆகும். இப்பாடல்களின் கருத்துக்கள் குறித்து இன்றைய மருத்துவ வல்லுநர்கள் ஆய்ந்தால் நலம் பயக்கும்.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் (948)

எனும் பொய்யாமொழிப் புலவன் வாக்கிற்கேற்ப சோழப் பேரரசி செம்பியன்மாதேவியார், பல ஆதுர சாலைகளுக்கும், மருத்துவர் களுக்கும் கொடைகள் அளித்துள்ளதை சாசனங்களால் அறிய முடிகின்றது. தஞ்சையில் மாமன்னன் இராசராசன் காலத்தில் அவனது சகோதரி குந்தவைப் பிராட்டியாரால் மக்களுக்காக ஓர் இலவச மருத்துவமனை ஏற்படுத்தப்பெற்று செயல்பட்டு வந்துள்ளது. இச்செய்தியை பாபநாசம் வட்டம் இராசகிரிக்கு அண்மையிலுள்ள கோயில் தேவராயன்பேட்டை சிவாலயத்துச் சாசனங்கள் வெளிப் படுத்துகின்றன. இம்மருத்துவமனைக்கு குந்தவை தன் தந்தையின் நினைவாக"சுந்தரசோழ விண்ணகர ஆதுர சாலை" என்று பெயர் சூட்டினார். இம்மருத்துவமனைப் பராமரிப் பிற்காக அளிக்கப்பட்ட கொடைகள் குறித்தும் "சல்லியக் கிரியை" எனும் அறுவைச் சிகிச்சை அளிக்கப்பெற்ற செய்தியையும் இவ்வூர்க் கல்வெட்டால் அறியமுடிகிறது. இம்மருத்துவமனை தஞ்சை நகரில் சீனிவாசபுரம் அருகில் களிமேடு (மேலவெளி) ஊராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட, அழிந்துப்பட்ட சிங்கப்பெருமாள் கோயில் வளாகத்தில்

செயல்பட்டதாக ஆய்வுகளால் தெரியவருகின்றது. இதே போல் செயல்பட்ட வீரசோழ ஆதுரசாலை பற்றிய குறிப்புக்கள் திருமுக்கூடல் கல்வெட்டால் அறியமுடி கின்றது. இங்கு மருத்துவப்பள்ளியும், மருத்துவமனையும் செயல்பட்டு வந்துள்ளது. இம்மருத்துவ மனையில் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற 15படுக்கைகள் இருந்தன. ஒரு மருத்துவர் நோயாளியின் நோய் அறிந்து மருந்து அளித்தார். மற்றொரு மருத்துவர் அறுவை சிகிச்சை புரிந்தார். இரண்டு உதவியாளர்கள் இருந்தனர். இரண்டு பெண்கள் (செவிலியர்) இருந்தனர். ஒரு பொது ஆள் பள்ளி, விடுதி ஆகியவற்றைக் கவனிக்கும் பொறுப்பில் இருந்தார். மேலும் பல்வகைப் பணியாளர்களோடு இம் மருத்துவமனை இயங்கிற்று.

இம்மருத்துவமனையில் இருந்த மருந்துகள் பற்றியும், ஓராண்டிற்குத் தேவையான மருந்துகள் இந்த ஆதுர சாலையில் சேமிக்க வேண்டும் என்பதோடு மட்டுமின்றி அம்மருந்துகளின் பெயரையும், அளவையும் இக்கல்வெட்டு கூறுகின்றது. வீர ராசேந்திர சோழன் காலத்திய மருத்துவ மனையைப் போலவே குந்தவைப் பிராட்டியாரால் நடத்தப்பெற்ற தஞ்சை ஆதுர சாலையும் செயல்பட்டிருக்கும் என ஊகிக்கலாம்.

தஞ்சைப் பெரியகோயில் இராசராசன் (இரண்டாம் கோபுரம்) திருவாயிலில் காணப்படும் கல்வெட்டில் பெருஞ்செண்பகமொட்டு, இலாமிச்சம்வேர், ஏலவரிசி போன்ற பொருட்களைச் சேர்த்து பெரிய கல்தொட்டியினுள் நீரை நிரப்பி அத்தொட்டியினுள் இப் பொருட்களை போட்டு ஊறியதும், அந்த நீரை எடுத்து இறை அபிடேகம் செய்துள்ளனர். அந்த அபிடேகநீர், மக்கள் அன்றாடம் குடிதண்ணீருக்குப் பயன்படுத்தும் சிவகங்கைக் குளத்தினுள் சென்றடையுமாறு செய்துள்ளனர். முதலில் கழுவப்படும் அசுத்தநீர் செல்ல வேறுபாதை அமைத்து அந்த அசுத்தநீர் நந்தவனத்திற்கு சென்றடையுமாறும் செய்துள்ளனர். குடிதண்ணீருக்காகப் பயன்படும் குளங்களில், மூலிகை கலந்த பொருட்களைச் சேர்ப்பதன் மூலம் நோய் வராமல் தவிர்க்கும்

எண்ணம் அவர்களிடம் இருந்துள்ளதை அறியமுடிகின்றது. இதற்குப் பயன்பட்ட பெரிய கல்தொட்டியினை இன்றும் பெரிய கோயிலில் காணலாம். கடந்த 50ஆண்டுகளுக்கு முன்புவரை இச்சிவகங்கை குளத்துநீரே குடிதண்ணீராகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தஞ்சையில் பழைய உணவு விடுதி ஒன்றில் சிவகங்கை நீர் என்று கேட்டு வாங்கி அருந்தியவர்கள் இன்றும் ஒருசிலர் உண்டு.

தஞ்சையை ஆட்சி செய்த நாயக்க மன்னன் இரகுநாதன், மருத்துவர்களை நியமனம் செய்தது. அவர் களுக்கு ஊதியம் வழங்கியது போன்ற செய்திகள் நெடுங் குன்றம் இராமச்சந்திரப் பெருமாள் கோயில் கல்வெட்டாலும், செஞ்சி வட்டம் சித்தாய்மூர் சிங்கபுரிநாத சுவாமி கோயில் கல்வெட்டுகளாலும் அறிய முடிகின்றது.

மன்னார்குடி அருகேயுள்ள மகாதேவப்பட்டினத்தில் ஆட்சி செய்த மராத்திய மன்னன் முதலாம் துளஜா தன்வந்திரி சாரநிதி எனும் ஒருநூல் எழுதியுள்ளார். இந்நூல் ஆயுர்வேதம் பற்றியது. இந்நூலினைத் துளஜா மகாதேவப் பட்டினத்தில் எழுதினேன் என்று குறிப்பிடுகிறார். இந்நூலின் இறுதியில் தன்நாட்டு மக்களில் ஒருவருக்கும் ஒருபோதும் எந்த நோயும் வரக்கூடாது என்று பெருங்கருணையுடன் இந்நூலை யாத்ததாகக் கூறுகிறார். மன்னனாக இருந்தாலும் மக்களுக்கு நோய் ஏற்படக்கூடாது என்ற எண்ணமும், மன்னனே மருத்துவம் அறிந்தவனாக இருப்பதும் சிறப்பிற்குரியதே.

தஞ்சையில் ஆட்சி செய்த இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்தில் வாழ்ந்தவர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர். இவர் வடமொழியிலும், பிற மொழிகளிலும் இருந்த அறிய மருத்துவக் கருத்துக்களை தமிழ்ப்பாடல்களாக எழுதி வெளியிட்டு தஞ்சை மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளார். இரண்டாம் சரபோஜி மன்னர் மருத்துவ ஆய்வகம் ஒன்றை தன்வந்திரி மகால் என்ற பெயரில் நடத்தி வந்தார். பல்வகை நோய் தீர்க்கும் முறைகள் பற்றிய ஆராய்ச்சிக்கும் மருத்துவ நிபுணர்களுக்கும் வீடு, நிலம் முதலியன கொடுத்து ஆதரவளித்தும், மருத்துவ நூல்களை பணம், அணிகலன்கள்

மற்றும் விலையுயர்ந்த பொருட்களை கொடுத்து வாங்கியும் மருத்துவ வளர்ச்சிக்கு துணை நின்றார். இங்கு சித்த, ஆயுர்வேத, யுனானி மருத்துவர்களை ஒன்றிணைத்து புதிய ஆய்வுகளுக்கு ஊக்கமளித்தார். கண்நோய் பற்றிய பதிவுகள் இம்மருத்துமனையில் பாதுகாக்கப்பெற்றன. கனகசுந்தரம், சிந்தாமணி, ரஸபூபதி, பஞ்சாமிர்த பர்படி போன்ற பெயர் கொண்ட மருந்துகள் மாத்திரை வடிவில் தன்வந்திரி மகாலில் தயாரிக்கப் பட்டன. மூலிகைத் தாவரங்கள் பற்றி படங்களுடன் குறிப்புகள் சேர்த்து எழுதப்பெற்ற நூல்களும் இம்மருத்துவமனையில் இருந்தன.

இம்மன்னர் காலத்தில் எழுந்த மருத்துவ நூல்கள், நூலாசிரியர்கள் ஒருசிலர் விவரங்களைக் காண்போம். ரெங்கையா நாயக்கர் எழுதிய வைத்திய அட்டவணை, பஸ்ப வகைகள், நானாவித ரோக சிகிச்சை (கி.பி.1800), வெங்கடாசலம் பிள்ளையின் வைத்திய அட்டவணை (கி.பி.1800) சிவக்கொழுந்து தேசிகர் எழுதிய சயரோக சிகிச்சை, வாதரோக சிகிச்சை, குன்மரோக சிகிச்சை, (கி.பி.1800), வேலாயுத வைத்தியரின் நயன ரோக சிகிச்சை, ஜ்வரரோக சிகிச்சை, விரணக்கரப்பான் சிகிச்சை, சிரரோக சிகிச்சை, விரேசன முறையும் அதிசார சிகிச்சையும், மேகரோக சிகிச்சை, காசரோக சிகிச்சை (கி.பி.1824), முதலியனவும், திருவேங்கடம்பிள்ளை எழுதிய கர்ப்பிணி பாலரோக சிகிச்சையும் (கி.பி.1800), பஞ்சநாதம் எழுதிய மச்சமுனி பெருநூல் (கி.பி.1824), அய்யாக்கண்ணுப் பிள்ளையின் வைத்திய அட்டவணை (கி.பி.1824) போன்றவை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இத்தன்வந்திரி மகாலில் பணியாற்றிய மருத்துவநூல் வல்லுநர்கள் முத்துசாமி தீட்சிதர், சேது பண்டிதர், வேங்கடபதி ஐயர், பரங்கிப்பேட்டை அப்பு வைத்தியர், கோபால பிள்ளை, சிதம்பரம்பிள்ளை, இராமராவ், துமான்ராவ், புருஷோத்தமர், அண்ணாச்சாமி நாயக்கர், அம்பலவாணப்பிள்ளை, பொன்னம்பலம், சேக்கு சாயபு, அக்கீம் நத்தர் சாயபு, மருத்துவச்சி லட்சுமி, சர்ஜன்வெல், சர்ஜன்கியூரி, டாக்டர் மெக்யாவின் போன்றவர்களின் பெயர்களை ஆவணங்களின் வழி அறிய முடிகின்றது.

மேலும் எண்சாண் உடம்பிற்கும் சிரசே பிரதானம் என்னும் பழமொழிக்கு ஏற்ப, நம் உடலில் அமையப்பெற்ற ஒவ்வொரு அங்கத்திற்கும் தனித்தனி முறையில் மருத்துவம் வகுத்துள்ளனர். இம்முறையில் முதலில் இடம்பெறுவது கண், காது, மூக்கு, வாய் அடங்கிய சிரசே ஆகும். தலை சிரசு எனப்படும் இவற்றிற்கு சிகிச்சை செய்யும் முறைக்கு சிரோரோக சிகிச்சை என்று பெயர். இவற்றுள் முக்கியத்துவம் கொண்டது கண். அக்கண்களின் அமைப்பு அவற்றில் உண்டாகும் நோய்களுக்கு மருத்துவம் கூறுவது நயன ரோக சிகிச்சையாகும். ஆயுர்வேத முறைப்படி கண்களில் ஏற்படும் நோய்கள் 94 வகை என அறியப்படுகிறது. அவற்றிற்கான சிகிச்சையும், மருந்துகளும் விவரிக்கப்பட்டுள்ளது. இதேபோல காச, சுவாச சிகிச்சை முக்கியமானதாகும். இவற்றில் வாத காச லட்சணங்கள் பித்த காசத்தின் குறிகள், கப காசத்தின் குறிகள், சுவாசம் வருகின்ற விதம் போன்றவையும், இதற்கான சிகிச்சை முறைகளும் சித்தவைத்திய முறைப்படி விவரிக்கப்பட்டுள்ளது.

எட்டுவித குன்மங்களையும் அவற்றிற்கான மருத்துவத்தையும் கூறுவது குன்மரோக சிகிச்சையாகும். குன்மரோகம் என்பது வயிற்றில் உண்டாகும் நோய்களைப் பற்றிக் கூறுவது. வாயுக்குன்மம், வாதகுன்மம், பித்த குன்மம், கபக்குன்மம், சன்னி குன்மம், எரிக்குன்மம், சக்திக் குன்மம், வலிக்குன்மம் முதலியனவாம்.

நீரிழிவு சிகிச்சை முறையில், நீரிழிவு, பிரமேகம், பிரமியம், மேகம், வெட்டை என்ற பலவகை நோய்களுக்கான முறைகளும், அவற்றிற்கான சிகிச்சையும் கூறப்பட்டுள்ளது. இவை பிரமேகம் என்ற 20 வகை நோய்களையும், மேகநீர், மேகப்புண் முதலிய தோல் நோய் பற்றியும் கூறுகிறது. இதேபோல் வாதரோக சிகிச்சை என்னும் பகுதியில் மன, உடல் நோய்கள் பற்றிக் குறிப்பிடுகிறது. வாத, பித்த, கபம் முதலிய இதன் வகைகள் பற்றியும், இதனால் ஏற்படும் நோய்கள் குறித்தும், அதற்குண்டான சிகிச்சை முறை களும் விளக்கப்பட்டுள்ளது.

மக்கட்செல்வத்தை பெரும் பேறாகக் கருதிய மன்னர் அதற்கென மருத்துவத்தில் ஒரு தனிப்பகுதியை ஏற்படுத்தி யுள்ளார். அது கர்ப்பிணி பாலரோக சிகிச்சை என்பதாகும். இதில் கருப்பம் ஏற்படுவதற்கான ஏதுக்கள், சரியாக கருப்பம் தரிப்பதற்காக கணவன், மனைவி கடைபிடிக்க வேண்டிய விதிகள். கரு மாதம் தோறும் வளர்ச்சி அடையும் விதம், பராமரிக்கப்படும் விதம் முதலியவை கூறப்பட்டுள்ளது. மேலும் கருவுற்ற பெண்ணின் சத்தான உணவு உண்ணும் முறைகள், எப்படி பாதுகாப்பாக இருப்பது, அவர்கள் செய்யக்கூடாத பணிகள், அவ்வாறு மீறினால் ஏற்படும் தீமைகள் போன்றவையும், அவற்றிற்கான மருத்துவ முறைகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அதேபோல் குழந்தை களுக்கென்று தனிப்பட்ட முறையில் கணச்சூட்டுக்கு மருந்துகள், மாந்தை எண்ணெய், பேதி எண்ணெய், உரம் விழுந்த குழந்தை களுக்கு மருந்து, நல்ல உடல் நலத்துடன் வாழ கீரிப்பூச்சி நோய்க்கு மருந்து முதலியவை சித்த மருத்துவ முறையில் விவரிக்கப் பட்டுள்ளது.

நம்மிடையே தொன்றுதொட்டுவரும் வழக்காக மக்களுக்கு மட்டுமின்றி கால்நடைகளான ஆடு, மாடு, குதிரை போன்ற வற்றிற்கும். பறவை இனங்களான கோழிகளுக்கும் மருத்துவம் கூறப்பட்டுள்ளது. மாட்டு வாகடம் என்னும் நூல் பசு, காளை மாடுகளின் மருத்துவம் பற்றிக் கூறுகின்றது. மாடுகளின் உடலமைப்பு, வளர்க்கும் முறைகள், நோய் காணும் விதங்கள், அந்நோய்களுக்குரிய நம்நாட்டு மருத்துவ முறைகள் போன்ற பலவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. குதிரைகளின் பிறப்பு வரலாறு, பயன்பாடுகள், பெருமை, குணங்கள், அவற்றின் பற்களைக் கொண்டு வயதினை அறியும் முறை. உடலமைப்பு, நிறங்களின் பிரிவுகள் போன்றவைகளும், குதிரைகளுக்கு வரும் அண்டசாலை நோய், அரணைக்கடி, கோமாரி நோய், கத்த சூலைநோய், கல்வை நோய், குளம்பு வெடிப்பு முதலிய நோய்களும் அவற்றிற்குண்டான சித்த மருத்துவ சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளது.

கோழிகளுக்கு வரும் நோய்களான அகிலி, அம்மை, அஜீரணம், கழிச்சல், கொக்கு நோய், கருப்பு உருண்டை, தலைநோய், நடுக்கல் நோய், பூச்சி, உடல் பருக்க, வாந்தி போன்ற நோய்க்கான காரணங்களும் அவற்றிற்கான மருந்துகளும் தெளிவுடன் கூறப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டம் பாபநாசம் வட்டம் கம்மந்தங்குடி என்று வழங்கப்பெறும் கமுகஞ்சேர்ந்தங்குடி என்னும் ஊரில் 19-9-1880இல் பிறந்த டி. வி. சாம்பசிவம்பிள்ளை (மன்னையார்) கணிப்பொறி வசதிகள் ஏதுமில்லா காலத்தில் 1931ஆம் ஆண்டு தமிழ்-ஆங்கில சித்த மருத்துவ அகராதியின் முதல் தொகுதியினை வெளியிட்டார். அதன்பின் தொடர்ந்து நான்கு தொகுதிகள் வெளி வந்தன. 6,537 பக்கங்கள் கொண்ட இப்பெரும் மருத்துவப் பேரகராதி இன்றளவும் சித்தமருத்துவம் பயிலும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுவதிலிருந்தே இவரின் பெருமை நன்குணரப் படும். ஐந்து தொகுதிகளிலும் 80ஆயிரத்திற்கும் மேற்பட்ட சொற்களுக்கு பொருள் விளக்கம் கொடுத்துள்ளார். கண் நோய்கள் 96வகை பற்றியும், கண்நோய்களில் வாதத்தினால் 45 வகை நோய்களும், பித்தத்தினால் 31வகை நோய்களும், கபத்தினால் 20வகை நோய்களும் உண்டென்று கூறினார். கண்நோய்கள் என்ற ஒரு சொல்லுக்கு மட்டும் 18 பக்கங்கள் விளக்கம் கொடுத்துள்ளார். ஔடத வகுப்பு எனும் ஒரு சொல்லுக்கு 91பக்கங்கள் விளக்கம் கொடுத்துள்ளார். இப்பெருமகனார் 12-11-1953ஆம் ஆண்டு இம்மண்ணுலகை விட்டு நீங்கினார். இவர் தந்த மருத்துவப் பேரகராதி குறித்து தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதய்யர் “இத்தகைய அகராதி இதற்குமுன் எதுவும் வெளியிடப் படவில்லை. தமிழ் உலகுக்குக் கிடைத்த மிகப்பெரும் சொத்து இவ்வகராதி ” எனக் கூறியுள்ளார். இவரைப்போல் மேலும் பல அறிஞர் பெருமக்கள் இவ்வகராதியைப் போற்றியுள்ளனர். இவைகள் அனைத்தும் தஞ்சை மாவட்டத்திற்குப் பெருமையன்றோ!

# ஜப்பான் பொம்மை கூறும் தமிழ் நீதி

சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக்குடகம்
கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலிங்கலிங்கம் வங்கம்
கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங்குசலம்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்நிலந் தாமிவையே

எனும் பழம்பாடல் தமிழ்நாட்டைச் சூழ்ந்திருந்த பதினேழ் நிலங்களைக் குறிப்பிடுகிறது. உலகின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று தமிழர்கள் குடியேறி வாழ்ந்தமைக்கும் பல சான்றுகள் உள்ளன. அப்படி குடியேறி வாழ்ந்த பகுதிகளில் தென்கிழக்கு ஆசிய நாடுகள் முதல் இடம் பெறுகின்றன. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு எனும் பழமொழிக்கு ஏற்ப தமிழர்கள் கடல் கடந்து சென்று வணிகம் செய்ததையும் அந்தந்த நாடுகளிலேயே தம் வாழ்க்கையை அமைத்துக்கொண்டதையும்,

சிங்களம் புட்பகம் சாவக மாகிய
தீவு பலவினுஞ் சென்றேறி–அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும்–நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு

எனும் பாரதியின் பாடலால் அறியமுடிகின்றது.

சங்க நூலான புறநானூற்றில் கணியன் பூங்குன்றனாரின் பாடல் வரிகளான "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது தமிழர்தம் பரந்த மனப்பான்மையை வெளிப்படுத்துகின்ற பாடலடியாகும். அதனாலேயே ஐக்கிய நாட்டு அவையில் இன்று இச்சொல் பொறிக்கப்பெற்றுள்ளது. இது நமக்கெல்லாம் பெருமை தரக்கூடிய செய்தியாகும். தென்கிழக்கு ஆசியநாடுகள், தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையான சோழமண்டலக் கடற்கரைக்கு நேர் கிழக்காக ஏறக்குறைய ஈராயிரம் கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நாடுகளாகும். அவற்றோடு தமிழர்கள் வணிகத் தொடர்பும், பண்பாட்டுத் தொடர்பும் கொண்டிருந்ததை வரலாறு நமக்கு காட்டுகிறது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டு முதலே

தமிழகத்திற்கும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் இடையே வணிகத் தொடர்பும், பண்பாட்டுத் தொடர்பும் தோன்றி வளர்ந்துள்ளதாகத் தெரிகிறது. அன்று முதல் இன்றுவரை அந்நாடுகளில் பல்வேறு தொடர்புகள் நிலவியமைக்கு அங்கு கிடைத்துள்ள தமிழ்ப் பண்பாட்டின் எச்சங்கள் சான்று பகர்கின்றன.

முன்பு சயாமிய மன்னர்களுடைய முடிசூட்டு விழாவில் தேவாரமும், திருவாசகமும் பாடப்பெற்று வந்துள்ளன. இன்றும் கூட தாய்லாந்தில் திருப்பாவை பெயர் திரிந்து டிரியம்பாவை என்ற பெயரில் பாடப்பெற்று வருகின்றது. இதேபோல் பாலியில் கெச்சா என்னும் ஒருவகை குரங்கு ஆடல் ஆடப்பெற்று வருகிறது. இராமாயணத்தில் இராமர் ஒரு பெரிய குரங்குப்படையைக் கொண்டு இராவண னுடைய பேரரசைத் தாக்குவதை விளக்கிக் காட்டும் குழு ஆடலே அந்த கெச்சா ஆடலாகும். இதனை வானர நாட்டியம் என்றும் கூறுவர். இத்தகு சிறப்புகளும் நெருங்கிய பண்பாட்டுத்தொடர்பும் கொண்ட தென்கிழக்கு ஆகிய நாடுகளின் கிழக்கு எல்லையாகத் திகழும் ஜப்பானிலும் தமிழர்தம் பண்பாட்டுத் தாக்கம் ஏற்படாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை.

பண்டைக்காலத்தில் தமிழகத்திலிருந்து மூன்று வகைத் தமிழ்ப் பண்பாட்டு அலைகள் அந்நாடுகளில் தாக்கம் ஏற்படுத்தி யுள்ளதாகப் பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு எழுதியுள்ளார். அவற்றுள் முதன்மையாக உள்ள சங்க காலத் தமிழ்ப் பண்பாட்டு அலையின் தாக்கத்தைப் பார்ப்போம். இந்த தாக்கத்தால்தானோ என்னவோ தமிழ் நூலான நாலடியின் வரிகளுக்கு வடிவம் கொடுத்துள்ளனர் ஜப்பானி யர்கள். இவர்களிடம் சென்று இந்தியர்கள் எத்தகையவர்கள் என்று கேட்டால், அதற்கு இந்தியா எங்களுக்குச் சமயத்தையும் பண்பாட்டையும் தந்த நாடு அவர்களை என்றுமே மறக்கமாட்டோம், அவர்கள் நல்லவர்கள் என்று கூறுவார்கள் என்பதாகக் கருமுத்து தி. மாணிக்கவாசகம் தன் ஜப்பான் பயணக்கட்டுரையில் எழுதியுள்ளார். எனவே இந்தியப் பண்பாட்டின், குறிப்பாகத் தமிழர்களின் பண்பாட்டுத்தாக்கமும் தமிழ்இலக்கியங்களின் தாக்கமும் ஜப்பானியரிடையே காணப்படுவதில் வியப்பேதும் இல்லை.

பாண்டியனின் இலச்சினையான மீன் சின்னம் இன்றும்கூட ஜப்பானில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் விழாவினில் காண முடிகின்றது. ஆண்டுதோறும் மே மாதம் 5ந்தேதியன்று நாடு முழுவதும் டாங்கோனொஸெக்கு அல்லது கோடோமோனோஹி என்னும் குழந்தைகள் தினவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. இவ்விழாவினை யொட்டி வண்ணத்துணிகளைக் கொண்டோ, வண்ணத்தாள் களைக் கொண்டோ கயல் உருவங் களைச் செய்து அவற்றை உயரமான மரம் அல்லது மூங்கில் கம்பங்களில் கட்டி பறக்கவிடுகிறார்கள். காற்றில் பறக்கும் அந்த மீன் உருவங்கள் உண்மையில் நீரில் மிதக்கும் மீன்களைப் போல் காட்சியளிப்பதாகத் திகழும் என்று இவ்விழா குறித்து ஜப்பானில் நான் கண்டதும் கேட்டதும் நூலாசிரியர் ச. ந. சொக்கலிங்கம் கூறுகிறார்.

தமிழ் இலக்கியத்தில் உள்ள நீதிக் கருத்துக்களை வெளிப்படுத்தும் ஜப்பான் பொம்மை பற்றி ஆய்வோம்

தீயதைப் பார்க்காதே !

தீயதைப் கேட்காதே !

தீயதைப் பேசாதே !



இக்கருத்துக்களை வெளிப்படுத்தும் விதமாக மூன்று குரங்குகள் ஒரே பீடத்தில் அமைக்கப்பட்ட பொம்மையினைப் பல இடங்களில் காணலாம். அதில் ஒன்று தன் கையால் வாயைப் பொத்தியிருக்கும், அடுத்தது காதுகளை தன் கைகள் கொண்டு மூடியிருக்கும், மூன்றாவது கண்களைத் தன் இருகைகளாலும் மறைத்துக்கொண்டிருக்கும். மேலே சொல்லப்பட்டுள்ள வார்த்தை களுக்கு விளக்கம் அளிப்பதாக இப்பொம்மை வடிவமைக்கப் பட்டுள்ளது. இப்பொம்மையினை மகாத்மா காந்தியடிகளுக்கு அவர்தம் நண்பர் பரிசளித்ததாகக கூறப்படுகிறது. அதனாலேயே இப்பொம்மைகளைப் பல இடங்களிலும் காணமுடிகிறது.

இந்த குரங்கு பொம்மைகள் உருவாகி சுமார் 350 ஆண்டுகள் ஆகின்றன. ஜப்பானில் நிக்கோ நகரில் உள்ள ஒரு புத்தர் கோயிலில் இந்தக் குரங்குகளின் படம் வரையப் பட்டிருக்கிறது. இதாரி ஜிஸ்கோ என்ற ஜப்பானிய ஓவியர் இடது கையாலேயே இந்த ஓவியங்களைத் தீட்டினார். ஜப்பான் மொழியில் இதாரி என்றால் இடது கை பழக்கமுள்ளவர் என்று பொருள். இக்கோயிலில் உள்ள படத்தைப் பார்த்துத் தான் இத்தகு பொம்மைகளை செய்து விற்றுவருகிறார்கள்.

இப்பொம்மையின் பெயர் ஜப்பான் மொழியில் சான் ஜாரு என்பதாகும். இதில் ஒவ்வொரு குரங்கிற்கும் தனித்தனியே பெயர் உள்ளது. கண்களை கைகளால் மூடிக்கொண்டிருக்கும் குரங்கின் பெயர் மிஜாரு. காதுகளைக் கைகள் கொண்டு பொத்தியிருக்கும் குரங்கின் பெயர் கிஜாரு. கையினால் வாயினை மூடிக் கொண்டிருக்கும் குரங்கின் பெயர் இஜாரு என்பதாகும். இந்த மூன்றும் இணைந்ததே சான் ஜாரு ஆகும்.

இப்பொம்மை உருவாக்கப்பட்ட காலம் வேண்டுமானால் பிந்தியதாக இருக்கலாம். ஆனால் இப்பொம்மை சொல்லும் கருத்துக்கள் தமிழர்களுக்கு ஒன்றும் புதியதல்ல. பதினெண்

கீழ்க்கணக்கு நூலான நாலடியாரில், இப்பொம்மைகள் கூறும் கருத்தினை அப்படியே வலியுறுத்தும் பாடல்,

பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலா ரிற்கட் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாது
மறங்கூற வேண்டா வற்கு (158)

இதன்பொருள் பிறர் இரகசியங்களைக் கேட்பதில் செவிடனாகவும், அயலார் மனைவியை நோக்கலிற் குருடனாகவும், கொடிய புறங்கூற்றுக்கள் கூறுவதில் ஊமையாகவும் இருக்கும் ஒருவனுக்கு எத்தகைய தரும உபதேசமும் செய்யவேண்டியதில்லை என்பதாகும். இச்செய்யுள் நேரடியாக அப்பொம்மை வெளிப் படுத்தும் கருத்தை ஒட்டியுள்ளது. மற்றொரு கீழ்க்கணக்கு நூலான ஏலாதியில் இதுபோன்ற கருத்தை வலியுறுத்தும் வகையில்,

கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர் பொருன்மேல்
செல்லான் சிறியாரினஞ் சேரான்–சொல்லும்
மறையிற்செவியிலன் தீச் சொற்கண் மூங்கை
இறையிற் பெரியாற் கிவை (19)

எனும் கணிமேதாவியாரின் பாடல் அமைந்துள்ளது. இதன் பொருள் ஒருயிரையும் கொலை செய்யாதவன், பிறர் செய்யும் கொலையை விரும்பாதவன், பொய் சொல்லாதவன், பிறர் பொருளை விரும்பாதவன், கெட்ட எண்ணம் கொண்டவர் களிடம் சேராதவன், பிறர் இரகசியங்களைக் கேட்பதில் காது இல்லாதவன், தீய சொற்கள் கூறுவதில் ஊமையாய் இருப்பவன் ஆகிய ஏழு குணங்களும் பெரிய மனிதருக்கு உரியவை என்பதாகும்.

சங்க இலக்கியப் பாடலிலே ஒரு காட்சி வருணனை உண்டு. அதில் தலைவனும் தலைவியும் காதல் புரிகின்றனர். ஒருநாள் தலைவி தன் தலைவனுடன் வீட்டை விட்டுச் செல்கின்றாள். மகளைக் காணாத தாய்வீடு முழுவதும்

தேடிப்பார்த்துவிட்டு, செவிலித் தாயிடம் தலைவி காணாத செய்தியினைக் கூறி தலைவியை தேடும்படி சொல்லுகிறாள். செவிலித்தாய் தலைவியைத் தேடிக் கொண்டு ஊரின் எல்லை வரை வருகின்றாள். அப்பொழுது ஒரு இளைஞனும், இளம்பெண்ணும் எதிரே வருகின்றனர். அவர்களைப் பார்த்து செவிலித்தாயானவள் நீங்கள் வரும் வழியில் உங்களைப் போன்ற ஒரு இளைஞனும் இளம்பெண்ணும் செல்வதைப் பார்த்தீர்களா ? என்று கேட்டாள். அதற்கு அந்த இளைஞன், எதிரே ஓர் இளைஞன் செல்வதைப் பார்த்தேன். ஆனால் பெண் செல்வதை நான் பார்க்க வில்லை என்கிறான். அவனுடன் வந்த இளம்பெண் எதிரே ஓர் இளம்பெண் செல்வதைப் பார்த்தேன், ஆனால் இளைஞன் செல்வதைப் பார்க்கவில்லை என்றாள். இதிலிருந்து எதிரே வரும் ஆணை ஆண் நோக்கியதையும், பெண்ணை பெண் நோக்கியதையும் அறிய முடிகின்றது. பிற ஆடவ்ரை நோக்காத பெண்ணையும், பிற பெண்களை நோக்காத ஆண் மகனையும் சங்கப் பாடலின் வழி அறியமுடிகிறது.

தீயதைப் பேசாதே எனும் நீதிக்கருத்தினை வள்ளுவர் தம் குறளில்,

> தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
> நாவினாற் சுட்ட வடு. (129)

என்கிறார், நெருப்பால் உண்டான புண் காலத்தால் ஆறிவிடும் தழும்பாய் இருந்தாலும் வலிக்காது. நாவால் தீச்சொல் சொல்வது தழும்பு இல்லாமலேயே வலிக்கும் எனும் பொருளில் தீயதைப் பேசாதே என்கிறார். மேலும்,

> புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
> அறங்கூறும் ஆக்கம் தரும் (183)

எனும் குறளில், கண்டு ஒன்றும் காணாது ஒன்றுமாய்ப் புறம், பேசி உயிர் வாழ்வதைவிட, உயிரை விட்டுவிடுவது நல்லது என்கிறார், ஊமையாய் இருப்பதை விடவும் உயிரை

விடுவதே மேலானது என்று ஒருபடி மேலே செல்கிறார். மற்றும் ஒரு குறளில்,

> பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
> அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு (148)

அடையும் நோக்கத்துடன் பிறர் மனைவியைப் பார்க்காதவனே பேராண்மை நிறைந்தவன். சான்றோன். ஒழுக்கம் உள்ளவன் என்கிறார். இவை போன்ற எண்ணற்ற நீதிக்கருத்துக்களைத் தமிழ் இலக்கியங்களில் நிரம்பவே காணமுடிகின்றது. பல நூறு ஆண்டுகளாக தமிழர்தம் வாழ்வியல் நெறியாகக் கூறப்பட்டுள்ள இக்கருத்துக்கள். ஜப்பான் பொம்மை சான் ஜாரு வாயிலாகச் சொல்லப்படுகிறது. மேலும் இது ஜப்பானியர், தமிழர் பண்பாட்டுத் தொடர்பை வெளிப்படுத்துகின்றது.

# தமிழர்களின் நீரியல் திறன்

கையில் இருப்பதை வைத்துக்கொண்டு நினைத்த காரியத்தைச் சிறப்புடன் செய்வது எப்படி? என்பது தான் மேலாண்மை எனும் பொருளில் தற்காலத்தில் வழங்கப் படுகிறது. அதுபோல் கிடைக்கும் நீரினை எப்படிச் சேமிப்பது, அந்நீரினைப் பாதுகாக்கும் முறைகள், பயன்படுத்தும் முறைகள் ஆகியவற்றில் பழந்தமிழரின் ஆற்றலைக் காண்போம்.

ஓடை, ஆறு மட்டுமே இயற்கையாக அமையப் பெற்றவை. தடுப்பணை, மணற்போக்கி, ஏரி, குளம், கலிங்கு, மதகு, தூம்பு போன்றவை மற்றும் கொப்பு, கிளை, வாய்க்கால் போன்ற அனைத்தும் மக்களால் ஏற்படுத்தப்பட்டவை யாகும். பருவ மழைக் காலங்களில் பெய்யும் மழைநீர் ஆறுகள், ஓடைகள் வழியே ஓடிவரும். இதனை ஆங்காங்கே தடுப்பணைகள் அமைத்து நீரைத் தேக்கி, அங்கிருந்து கால்வாய்கள் வெட்டி, அக்கால்வாயினுள் நீரினைத் திருப்பி ஏரிகள், குளங்களில் சேமித்து வைத்துக் கொள்ளும் வழக்கம் பன்னெடுங்காலத்திற்கு முன்பே தமிழர்களிடம் இருந் துள்ளதற்கு ஏராளமான இலக்கியம், கல்வெட்டு, செப்பேட்டுச் சான்றுகள் காணப்படுகின்றன. ஏரிகளில் உள்ள நீரை மதகுகள் வழியே கொண்டு சென்று நிலங்களுக்கு நீர்பாய்ச்சி உழவுத்தொழில் மேற்கொண்டனர். மழைக்காலங் களில் மிகுதியாக வரும் உபரிநீரை வெளியேற்ற ஏரிகளில் கலிங்கு அல்லது கோடி என்ற அமைப்பினை ஏற்படுத்தியிருந்தனர். இவ்வாறு நீரின் அவசியத்தையும், அந்நீரினைச் சேமிக்கும் பாங்கினையும் பழந்தமிழர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். மனித வாழ்விற்கு ஏற்ற வகையில் நீரும். நிலமும் அமைந்திருக்க வேண்டும் என்பதை வள்ளுவர்தம் குறளில்,

> இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
> வல்அரணும் நாட்டிற்கு உறுப்பு (737)

என்கிறார். இதன்பொருள் நிலத்தடிநீர், ஆற்றுநீர், மழைநீர் ஆகிய மூவகை நீர்வளமும், உயர்ந்த மலை வளமும்,

பாதுகாப்பு அரணும் ஒருநாட்டின் உறுப்புகளாகும் என்பதாகும். இக்குறள் நீர் நிலைகளின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

திருவள்ளுவரின் கருத்தை ஒட்டிய சிறுபஞ்சமூலம் செய்யுள்

நீண்டநீர் காடு களர்நிவந்து விண்தோயும்
மாண்ட மலைமக்கள் உள்ளிட்டு – மாண்டவர் (48)

மிக்க நீரும் (நீரரண்) காடும் ஆகிய அரண் வலிமைகளையும் உடையவன் ஒருநாட்டிற்கு அரசனாக அமைதல் நன்மை என்கிறது.

நீர்ப்பிழை புரிதல் ஊர்ப் பிழைத்தற்றால்
நெடுமுடி மன்னவன் கடுஞ்சினம் கொள்ளும்

என்பது பாண்டியர் காலக் கல்வெட்டு ஒன்றில் குறிப்பிடப்படும் பழம்பாடல் வரியென்றும், பொதுக் குளங்கள் நீர்நிலைகள் ஆகிய வற்றைச் சிதைப்பது ஊரையே சிதைப்பதற்குச் சமம் என்பதால் அவ்வாறு சிதைப்பவர்களை அரசன் கடுஞ்சினம் கொண்டு தண்டிப்பான் என்பது இதன் பொருள் என்று நாமக்கல் கவிஞர் “தாயார் தந்த தனம்” என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். நீரின் இன்றியமையாமையை உணர்ந்த நம் முன்னோர் வறட்சி தாக்காமல் இருப்பதற்காக ஏரி குளங்களை வெட்டுவித்ததோடு சந்திரன், சூரியன் உள்ளளவும் அவற்றைப் பராமரிப்பதற்கு மானியங்கள் வழங்கி, அத்தகைய அறக்கொடைகளைக் கல்லிலும், செம்பிலும் பொறித்து வைத்தனர். ஒருநாட்டின் வளமைக்கும், வலிமைக்கும் அடிப்படையாய்த் திகழ்வது நீர் ஆதாரமே ஆகும். நீர்வளம் பெற்ற நாடே கலை, பண்பாடு, நாகரீகம் ஆகியவற்றில் சிறந்து திகழும்.

பெருக்கெடுத்து மிகுவேகத்தில் ஓடிவரும் நீரை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்துத் தடுப்பதற்கு மிகுந்த தொழில் நுட்ப அறிவு தேவைப்படும். ஆற்றுப்படுகையில் பாறைப்பாங்கான இடமாகத் தேர்ந்தெடுத்து, ஆற்றில் நீர்வரத்து இல்லாத கோடைக் காலத்தில் பணியினைத் தொடங்கி, நீர் வரும் காலத்திற்குள்ளாக அணை அமைத்திட

வேண்டும். கட்டுமானத்தில் கசிவு ஏற்படா வண்ணம் சாந்துகொண்டு அடைக்கவேண்டும். நீர்ப்பெருக்கின் போது அணைக்கட்டின் மீது வழியும் நீருக்கேற்ப ஆற்றின் கரை உயர்த்தப்பட வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள பண்டைய ஆறுகளில் இத்தகைய கட்டுமானங்களைக் காணலாம். தஞ்சை மாவட்டத்தில் திருக்காட்டுப்பள்ளி செல்லும் சாலையில் கச்சமங்கலம் (பழைய பெயர் திருப்பியூர்-நீரினைத் தடுத்துக் கால்வாய் மூலம் திருப்பி விடுதலால் ஏற்பட்ட காரணப்பெயராக இருக்கலாம்) எனும் ஊரில் வெண்ணாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கப்பட்டு இன்றளவும் பயன்பாட்டில் உள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட
கச்சமங்கலம் கற்சிறையின் அமைப்பு



இவைபோன்ற கட்டு மானங்கள் பழந்தமிழகத்தில் இருந்ததற்கு இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. வருகின்ற நீரைக் கற்கள் கொண்டு தடுப்பதால் இத்தகு தடுப்பணை கற்சிறை எனும் அழகுத் தமிழ்ச் சொல்லால் வழங்கப் பட்டுள்ளது. தொல்காப்பியப் பொருளதி காரத்தில்,

வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை யானும் (1009)

பெருகி வரும் படையை ஒருவீரன் தடுத்து நிறுத்திப் போராடுவது போல் ஆற்று வெள்ளத்தைக் கற்சிறை தடுத்து நிறுத்துகிறது என்பார் தொல்காப்பியர்.

தனிச்வேகமானது,

வருவிசைப் புனலை
கற்சிறை போல ஒருவன் தாங்கிய பெருமை யானும்
(வீரசோழியம் -பொருள்-16-உரை)

எனவும், நீரினை அணைகொண்டு தடுத்தலை கற்சிறை என்று அழைத்தது தெரியவருகின்றது. இதேபோல், மதுரைக் காஞ்சியில் வீரர்களின் புகழ் பற்றி மாங்குடி மருதனார் என்னும் புலவர்

வருபுனல் கற்சிறை கடுப்ப இடை அறுத்து
ஒன்னார் ஒட்டிய செருப்புகல் மறவர் (725-726)

என்று கூறுகிறார். போர்க்களத்திலே பெருகிவரும் பகைவர்களைத் தடுத்து நிறுத்திய பாங்கினை மிகுந்து வரும் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தும் கற்சிறையுடன் ஒப்பிடுகிறார். இந்த அணைகளைப் பழந்தமிழர்கள் ஆற்றின் குறுக்கே நேராகக் கட்டாமல் வளை வாகவே அமைத்துள்ளனர் வாத்து அலகுபோல வளைவாக அமைவது சிறந்தது என்று இன்றைய நீரியல் நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அப்பொழுதுதான் அணையின் செயல்திறன் சிறப்பாக இருக்கும் என்று கூறுகின்றனர். இதனை ஆங்கிலத்தில் DUCK-BILL WEIR என்று அழைக்கின்றனர். இவர்கள் இன்று

கண்டுள்ள தொழில் நுட்பத்தைப் பழந்தமிழர்கள் அன்றே செயல்படுத்தியுள்ளதைக் காணும்போது வியப்பு மேலிடு கிறது. மழைநீரைச் சேமிப்பதிலும், சேமித்த நீரைத் திறம்படப் பயன்படுத்துவதிலுமே தமிழகத்தின் வேளாண்மை நடை பெற்றது. இன்றும் பல்லாயிரக்கணக்கான ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், அணைக்கட்டுகள், வாய்க்கால்கள் போன்ற நீர்நிலைகள் சங்க காலம் முதல் இன்று வரையிலும் இருப்பது காணக்கூடிய ஒன்றாகும். இந்த ஏரிகள் அமைக்கப்பட்டுள்ள தொழில் நுட்பங்கள், தண்ணீரைப் பகிர்வதிலும் சிக்கனமாகப் பயன்படுத்துவதிலும் தமிழர்கள் கடைப்பிடித்த நீர் மேலாண்மைக் கோட்பாடுகள் இன்றைக்கும் பொருந்துவ தாகவே உள்ளன.

சிறுபஞ்ச மூலம் நூலில் காரியாசன், ஏரிகள் அமைக்கப்பட வேண்டிய வரைபடத்தைத் தருகிறார்.

குளந்தொட்டுக் கோடுபதித்து வழிசீத்து உளந்தொட்டு
உழுவயலாக்கி வளந்தொட்டுப் பாடுபடும் கிணற்
றோடென்றிவ்வைம் பாற்படுத்தான் ஏகுஞ்சுவர்க்கத் தினிது (65)

ஒரு ஏரியைக் கீழ்க்கண்ட ஐந்து அங்கங்களுடன் அமைப்பவன் சொர்க்கத்திற்கு போவான் என்பது இப்பாடலின் பொருள்.

1. குளம் (குளம் தொட்டு)

2. கலிங்கு (கோடு பதித்து)

3. வரத்துக்கால், மதகுகள், மிகைநீர் போகும் கால்கள் ஆகிய வழிகளை அமைத்தல் (வழிசீத்து)

4. பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மூலம் ஆயக்கட்டுப் பகுதிகளை உருவாக்குதல். (உழு வயலாக்கி)

5. பொதுக்கிணறு அமைத்தல் (கிணறு)

முதல் நான்கு அங்கங்களும் கொண்டவை நாம் சாதாரணமாகப் பார்க்கும் ஏரிகள். ஆனால் ஏரிகளில் நீர் குறைவாக இருக்கும்போது ஏரி மதகுகள் மூலம் தண்ணீர்ப்

பாய்ச்சுவது அதிக நீர் விரயமாக்கும் வழி. அந்த நேரங்களில் மதகுகள் மூலம் நீர்ப்பாய்ச்சுவதை விட நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது சிறந்த நீர் மேலாண்மை வழி. எல்லோரும் கிணறு தோண்ட முடியாது. ஆகவே பொதுக்கிணறு அமைத்து அனைவரும் நீர்ப்பாய்ச்சிக் கொள்வது சிறந்த வழியாகும். தற்போது மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் ஆகியவற்றை இணைத்துப் பயன்படுத்த வேண்டும் என்ற கோட்பாடு உலகெங்கும் பரவி வருகிறது. இத்தகு சிறந்த மேலாண்மைக் கோட்பாடு சங்கம் மருவிய காலத்தில் இருந்தது என்பதும், அது இன்று மீண்டும் பயனுக்கு வருகிறது என்பதும், தமிழர்களுக்குப் பெருமை சேர்க்கும் செய்தியாகும்.

மேலும் ஊர்தோறும் பறை அறிவித்து மக்களைத் திரட்டி மண் அணை (மண் குரம்பு) அமைத்துத் தண்ணீரை வயல்களுக்குத் திருப்பும் செயல்முறை சீவகசிந்தாமணி பூமகள் இலம்பகத்தில் விளக்கப்பட்டுள்ளது.

நக்கண்ணையர் பாடிய அகப்பாடல்,

துய் அவிழ் பனிமலர் உதிர வீசித்
தொழில் மழை பொழிந்த பானாட் கங்குல்
எறிதிரைத் திவலை தூஉம் சிறுகோட்டுப்
பெருங்குளக் காவலன் போல
அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே. (10-14)

பனியிலும், மழையிலும், அடர்ந்த இருள்சூழ்ந்த நள்ளிரவிலும் ஏரியைக் காக்கும் காவலன் போல குழந்தைகளைப் பாதுகாக்க அன்னை தன் தூக்கத்தை மறந்தாள் என்பது இப்பாடலின் பொருளாகும். சிறுகுழந்தையைக் காப்பது போல் நீர் நிலைகளைக் காப்பதும் அன்று அவ்வளவு முக்கியமானதாக இருந்துள்ளது.

இனியவை நாற்பது பாடல்

காவோடு அறக்குளம் தொட்டல் மிக இனிதே (22)

என்கிறது. சோலை வளர்த்தலோடு தருமத்திற்குக் குளத்தை வெட்டுதல் மிக இனிது என்பதே இதன்பொருள் இதே கருத்தை ஒட்டிய திரிகடுகம் பாடலில்

காவோடு அறக்குளம் தொட்டானும் நாவினால்

.... .... .... .... .... .... (70)

சோலையை உண்டாக்குதலோடு , அறத்திற்குரிய குளத்தை தோண்டுவித்தவனும் என்பது இதன் பொருள். அதாவது குளம் வெட்டி நீரைச் சேமித்துப் பாதுகாப்பது மிகப்பெரிய அறப்பணி என்று உணர்த்தப்படுகிறது.

திரிகடுகத்தின் 16ஆம் பாடல்,

பெண்ணினுள் கற்புடையாளைப் பெற்றானும் உண்ணுநீர்
கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்
... ... ... ... ... ...

கற்புடைய பெண்ணைப் பெற்றவனும், உண்ணப்படுகின்ற நீர் குறைவுபடாதபடி கிணறுகளைத் தோண்டி வைத்தவனும், எக் காலத்தும் இறவாத புகழ் உடம்பு பெற்றவராவர் என்பதே இதன் பொருள், மேலும்,

காவளர்த்தும் குளந்தொட்டும் கடப்பாடு வழுவாமல்
(திருநாவுக்கரசு-36)

என்கிறது பெரியபுராணம்

சங்க காலச் சோழப்பெருவேந்தன் கரிகாலன் காவிரிக்குக் கரைகண்டு நீர்ப்பாசனத்தை நெறிப்படுத்தினான் என்பதை இலக்கியங்களும், செப்பேடுகளும் எடுத்தியம்புகின்றன. சேர, சோழ, பாண்டிய நாட்டுப் பகுதிகள் மன்னர்களின் நேரடிக் கவனத்தைப் பெற்று நீர்வளம் நிரம்பப் பெற்றிருந்தன. அதுபோல் பல்லவர்கள் காலத்திலும் பெரும் ஏரிகளைக் குடிநீருக்காகவும், பாசனத்திற்காகவும் ஏற்படுத்தினார்கள் என்பதைக் கல்வெட்டுக்கள் வாயிலாக அறியமுடிகிறது. மகேந்திர தடாகம், பரமேச்சுர தடாகம், வயிர மேகத் தடாகம் போன்றவை பல்லவர்களால் அமைக்கப்பட்ட பெரும் ஏரிகளாகும். பல்லவர்களைப் போன்றே, பாண்டி நாட்டில் ஆட்சி புரிந்த முற்காலப் பாண்டியர்களும் ஏரிகள் அமைத்து, நீர்ப் பாசனத்தைச் சீர்ப்படுத்துவதில் பெரும் ஈடுபாடு காட்டியிருந்தனர் என்பதற்குத் தன் பெயராலேயே

வைகையில் ஒரு மதகு அமைத்ததை மாறவர்மன் அரிகேசரியின் வைகைக்கரைக் கல்வெட்டால் அறிய முடிகிறது. புதிதாக ஏரிகள், குளங்கள் வெட்டப் பெற்று அவற்றில் மடைகள் கட்டுவித்து, அம்மடைகளின் வாயிலாக நீர் கழனியைச் சென்றடைந்தது. வயல்களுக்கிடையே கிணறுகள் தோண்டப்பெற்று அவற்றிலிருந்தும் பாசனத்திற்கு நீர் எடுத்துக் கொள்ளப்பட்டது. பாண்டியன் பராந்தக வீரநாராயணனின் தளவாய்புரம் செப்பேட்டில் பன்னிருவர் அந்தணர்க்குத் தானமாக வழங்கப்பட்ட பிரமதேயத்தின் எல்லைகளைக் கூறுகின்றபொழுது பல்வேறு வகையான நீர்நிலைகளின் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. பராந்தக வீரநாராயணன் எண்ணற்ற ஏரிகளையும், குளங்களையும் வெட்டுவித்த செய்தி

எண்ணிறந்த தடாகங்களும் இருநிலத்தில்
இயற்றுவித்தும்

எனும் செப்பேட்டு வரிகளால் அறியமுடிகிறது.

வைகை ஆறு மதுரைப்பகுதியில் பாய்ந்து வளம் பெருக்குவது அறிந்த ஒன்றாகும். ஆனால் தேன் வைகை என்ற பெயரில் தென்பாண்டி நாட்டில் ஆறு ஒன்று இருந்ததாகத் தளவாய்புரச் செப்பேடு கூறுகிறது. கிணறுகள் நீர்ப் பாசனத்துக்காக வெட்டப்பட்டதோடு அல்லாமல் அக் கிணறுகளில் கல்வெட்டாகப் பொறிக்கப்படும் தமிழ்ப் பாடல்கள் பல கருத்துக்களை மக்களுக்கு உணர்த்துகின்றன. பல்லவர்களால் வெட்டப்பட்ட திருவெள்ளறை ஸ்வஸ்திக் கிணற்றில் காணப்படும் அழகிய பாடல் ஒன்று வாழ்க்கையின் நிலையாமையை உணர்த்துகிறது.

மன்னர்கள் மட்டுமின்றி வணிகக் குழுக்களும் நீர்நிலைகள் பராமரிப்பில் பங்காற்றிய செய்தியினை மூன்றாம் குலோத்துங்கன் காலத்திய உடையார்பாளையம் வட்டத்தில் உள்ள விக்கிரமங்கலம் சோழீசுவரர் கோயில்

கல்வெட்டால் அறியமுடிகின்றது. கல்வெட்டுச் செய்தி விக்கிரம சோழபுரத்து நகரத்தார்கள் செய்த விவஸ்தை (தீர்மானம்) பற்றிக் கூறுகிறது. இவ்வூர் கிடாரங்கொண்ட சோழப் பெருந்தெருவில் முன்னாளில் வெட்டப்பட்ட இரண்டு குளங்களை ஊர்ப் பயன்பாட்டிற்குப் பொதுவாக ஆக்கியதுடன் குளங்களுக்கு வருகின்ற தண்ணீரைத் தடுத்துப் பாய்ச்சுதல் நெல் நடுவதற்குப் பயன்படுத்தக் கூடாது எனவும், நகர அவை தீர்மானம் செய்தது. இதிலிருந்து இக்குளங்களின் நீர் ஊர்மக்களின் குடிநீர் உள்ளிட்ட தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தவேண்டும். விவசாயப் பணிகளுக்குப் பயன்படுத்தக் கூடாது என்றும் நகர அவை முடிவு செய்தது. இதன்மூலம் நீர்நிலைகள் பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் அனைத்துத் தரப்பினரும் ஈடுபட்டது தெரிகிறது. ஊர்ப் பெயர்களிலே கூட தமிழர்கள் நீர்நிலைகளின் பெயர்களை வைத்துச் சிறப்பித்துள்ளனர். உதாரணமாக புனல்வாசல், அரங்க சமுத்திரம், வாலசமுத்திரம், திருவையாறு, கயத்தாறு, வேம்பாறு, அய்யனேரி, அழகனேரி, வெள்ளபனையேரி, கரடிக்குளம், சர்க்கரைக்குளம், குருவிக்குளம், விளாத்திக் குளம், குளத்தூர், மருதன் கிணறு, கொல்லன் கிணறு, நரியூத்து, ஊத்துப்பட்டி, ஊரணிபுரம், இலுப்பையூரணி என நீரின்றி அமையாது உலகு எனும் வள்ளுவன் வாக்கினுக்கு இணங்கப் பழந்தமிழர்கள் வாழ்ந்து வந்தனர்.

# சோழ மண்டலத்தில் நீர்ப்பாசனம்

ஒருநாட்டின் வளமைக்கும், வலிமைக்கும் அடிப்படை ஆதாரமாகத் திகழ்வது நீராதாரமே ஆகும். ஒருநாடு வளம்பெற்ற நாடாகவும், கலை, பண்பாடு, நாகரீகம் ஆகியவற்றில் சிறந்தும் திகழவேண்டுமாயின் நிலையான நீர் வளத்தினைப் பெற்றிருக்க வேண்டும். இதனை உணர்ந்தே ஔவையார்,

வரப்புயர நீர்உயரும்
நீர் உயரநெல் உயரும்
நெல் உயரக்குடி உயரும்
குடி உயரக்கோன் உயரும்

என்று பாடினார்.

வள்ளுவரும் தம் குறளில்,

நீரின்றியமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
வான்இன்றி அமையாது ஒழுக்கு

என்று நீர்வளத்தின் அவசியத்தை உணர்த்துகின்றார்.

தொடக்கக் காலத்தில் ஆற்றங்கரைகளில் தான் மனித நாகரீகம் தோன்றி வளர்ந்தன. மனித இனம் பல்கிப் பெருகிப் பல்வேறு பகுதிகளுக்குச் செல்ல நேர்ந்தபொழுது, தான் வாழும் இடங்களில் ஆண்டு முழுவதும் நீர்வளம் குறையாது திகழ வேண்டும் என்பதற்காகக் குளங்களும், ஏரிகளும், ஆற்றின் குறுக்கே அணைக்கட்டுகளும் அமைக்கத் தொடங்கினர். இந்நிலை படிப்படியாக உயர்ந்து சோழர்கள் காலத்தில் உச்சநிலையை எய்தியது.

சோழ மண்டலம் வளமும், வலிமையும் பெற்ற நாடாகத் திகழ்ந்தமைக்குக் காரணம் சோழ மன்னர்களின் நீர்வள மேலாண்மைத் திறனேயாகும். இலக்கியங்களும், கல்வெட்டுக் களும் சோழ மண்டலத்தில் வெட்டப்பெற்ற ஆறுகள், ஏரிகள்,

கட்டப் பெற்ற அணைக்கட்டுகள் பற்றி ஏராளமாகக் குறிப்பிடுகின்றன. வான் பொய்ப்பினும் தான் பொய்யாத காவிரியாறும், அதன் கிளையாறுகளும் சோழ நாட்டை என்றும் வளம் குன்றா நாடாக்கி, சோழநாடு சோறுடைத்து என்று புகழ்ந்து பேசப்பெற்றதை அறிய முடிகிறது. இந்நாட்டை காவிரிநாடு, பொன்னிநாடு என்றும் புலவர்கள் போற்றினர்.

இளங்கோவடிகள்,

வாழியவன்றன் வளநாடு மகவாய் வளர்க்குந்தாயாகி
ஊழியுய்க்கும் பேருதவி யொழியாய் வாழி காவேரி

எனப் போற்றுகிறார்.

பொருநராற்றுப்படையில் முடத்தாமக் கண்ணியார் எனும் புலவர் கரிகாற் பெருவளத்தானைப் பாடும்பொழுது,

சாலிநெல்லின் சிறைகொள் வேலி
யாயிரம் விளையுட் டாகக்
காவிரிபுரக்கும் நாடு கிழவோனே (245)

என்று காவிரியின் வளம் பெற்று விளங்கும் சோழ நாட்டையும், அத்தகைய வளம் பொருந்திய நாட்டை கரிகாலன் ஆட்சி புரிவதையும் சிறப்பிக்கின்றார். இப் பெருமன்னனே சோழ மண்டலத்தில் "காடு கொன்று நாடாக்கிக் -குளந்தொட்டு வளம் பெருக்கினான்" என்று பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடுகின்றார். மேலும் இம்மன்னன் காவிரியின் இருபுறமும் கரை அமைத்தான் எனும் செய்தி கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரின் விக்கிரம சோழனுலாவில் பொன்னிக்கரை கண்ட பூபதி எனும் பாடல் வரியாலும், எவ்வாண்டில் இச்சீரிய செயலைச் செய்தான் என்பதை,

தொக்ககலியின் மூவாயிரத்துத் தொண்ணூற்றில்
மிக்ககரிகால வேந்தனுந்தான் – பக்கம்
அலைக்கும் புகழ்ப் பொன்னியாறுகரை கண்டான்
மலைக்கும் புயத்தானும் வந்து

எனும் பழைய வெண்பாவினாலும் அறியமுடிகிறது. புண்ணிய குமாரனின் கி. பி. ஏழாம் நூற்றாண்டு மேல்பாடி செப்பேடுகளிலும், பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியில் வெளிவந்த கங்கை கொண்ட சோழனுடைய திருவாலங்காட்டுச் செப்பேடுகளிலும், வீர இராசேந்திர சோழனுடைய கன்னியாகுமரி கல்வெட்டிலும் கரிகாலன் காவிரிக்கு கரை அமைத்த செய்தி கூறப்பட்டுள்ளது. சோழர்கள் காலத்தில் காவிரிக் கரையினைப் பராமரிப்ப தற்காக "காவிரிக்கரை வினியோகம்" எனும் வரி வசூல் செய்யப்பெற்றதை திருப்பழனம் மற்றும் திருச்செந்துறை கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

தொல்காப்பியம் எழுத்ததிகாரத்திற்கு உரை எழுதும் நச்சினார்க்கினியர் "வெண்ணுக்கரை எள்ளுப்பாறு" என்று உரை எழுதுகின்றார். வெண்ணாற்றில் படகுகளில் எள் பொதி ஏற்றிச் சென்றதாகக் குறிப்பிடுகிறார். இத்தகு சிறப்பு வாய்ந்த வெண் ணாற்றில் திருக்காட்டுப்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள கச்சமங்கலம் எனும் ஊரில் ஆற்றின் குறுக்கே தடுப்பணை ஒன்று அமைக்கப்பெற்றுள்ளது. இந்த அணை 2000 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பெற்றிருக்கலாம். இந்த அணையிலிருந்து வெண்ணாறு செல்லும் வழியில் 3 கி.மீ. தூரத்திற்குக் குன்றுகள் நிறைந்துள்ளன. இக்குன்றுகளை வெட்டி அகற்றி இயற்கையான முறையில் ஒரு தடுப்பணை அமைத்துள்ளனர். இவ்வணையின் இரண்டு பக்கமும், மதகுகள் அமைத்து மேடான பகுதிகளுக்கு நீரைக்கொண்டு சென்று பாசனம் செய்துள்ளனர். இடதுபக்கம் பிள்ளை வாய்க்கால் எனும் கால்வாய் அமைத்து வீரசிகாமணிப் பேரேரியில் நீரைத் தேக்கி அப்பகுதி வளம்பெறச் செய்துள்ளனர். வலது பக்கம் ஆனந்த காவேரி எனும் கால்வாய் வெட்டுவித்து அதன்மூலம் முன்பு ராஜசுந்தரி சதுர்வேதி மங்கலம் என்று வழங்கப்பெற்ற கள்ளப்பெரம்பூர் ஏரியில் நீரைச் சேமித்து பயன்பெறச் செய்துள்ளனர்.

கோவிலடிக்கு அருகில் வீர இராசேந்திர சோழனால் அமைக்கப்பெற்ற பேரணையின் வலிமையினை உணர்ந்து

வியந்த ஆங்கிலேயர் அந்த அணையின் மேலேயே பாலம் கட்டியமை சோழர்களின் கட்டுமானத் திறனுக்குச் சான்றாகும்.

பேராறுகளின் கிளையாகப் புதிய ஆறுகள் வெட்டு வதற்கு இயலாத நிலப்பரப்புகளில் ஆங்காங்கே பெரும் ஏரிகள் அமைத்து சோழநாட்டை வளப்படுத்தியுள்ளனர். செந்தலைக் கல்வெட்டால் அறியப்படும், முதற்பராந்தகன் வெட்டுவித்த மிகப்பெரும் ஏரியான வீரசிகாமணிப் பேரேரியை (அள்ளூர்-அழிசிக்குடி) பராமரிக்க அமண் குடியில் இருந்த சமணர்களுக்கு இம்மன்னன் நிவந்தங்கள் (கொடை) அளித்த செய்தியினை அறியமுடிகின்றது. மேலும் இக்கல்வெட்டு இந்த ஏரியைப் பராமரிக்கும் பொறுப்பை ஆரம்ப வீரன் என்பான் மேற்கொண்டான் எனவும், இதற்குப் பொருளுதவி அளித்தவர் புத்தாமூர் எனும் ஊரில் சமணப்பள்ளி ஒன்றை நிருவகித்த கனகசேன பிடாரர் ஆவார் என்றும் குறிப்பிடுகிறது.

முதல் இராசேந்திர சோழனின் படைத் தளபதியான இலங்கையை வெற்றிகொண்ட ஜெயமூரி நாடாள்வான் என்பவன் இவ்வேரியினைப் பராமரிப்பு செய்ததையும் செந்தலைக் கல்வெட்டு கூறுகின்றது.

பிற்காலச் சோழ மன்னர்கள் பல்வேறு ஆறுகளையும், ஏரிகளையும் அமைத்ததற்கானச் சான்றுகளைக் கல்வெட்டுக்கள் சுட்டுகின்றன. தஞ்சைக்கு வடபுறத்தில் ஓடும் வடவாறு "வீரசோழ வடவாறு" என்றும், கொள்ளிடம் பேரணையில் இருந்து பிரிந்து வடக்கே ஓடி வீரநாராயணன் ஏரியில் (வீராணம் ஏரி) கலக்கும் வடவாறு மதுராந்தக வடவாறு என்றும், கல்வெட்டுச் சாசனங்கள் மூலம் அறியமுடிகிறது. இவ்விரண்டு ஆறுகளும் வீரசோழன், மதுராந்தக சோழன் எனும் சிறப்புப் பெயர்பெற்ற முதல் பராந்தக சோழனால் வெட்டப் பட்டிருத்தல் வேண்டும். இதேபோல் மண்ணியாற்றுக்கும் குஞ்சரமல்லன் பேராறு என்ற பெயர் வழங்கியிருத்தலால், குஞ்சரமல்லன் என்ற சிறப்புப்பெயர் பெற்ற முதல் பராந்தகனே இவ்வாற்றையும் திருத்தியமைத்து நாட்டிற்குப்

பயன்படச் செய்திருக்கவேண்டும். குளித்தலையிலிருந்து பிரிந்து வெண்டையம்பட்டி ஏரியில் வந்து கலக்கும் உய்யக்கொண்டான் ஆறும், கோனேரிராசபுரத்திற்கு அண்மையில் ஓடும் கீர்த்திமான் ஆறும் முதல் இராசராச சோழனால் வெட்டப்பெற்றவையாகும். முடிகொண்ட சோழன் என்ற சிறப்புப் பெயர் பெற்ற கங்கைகொண்ட சோழனால் முடிகொண்டான் ஆறும், வீரசோழன் எனும் ஆறு வீர இராசேந்திர சோழனாலும், விக்கிரமனாறு விக்கிரம சோழனாலும் சோழநாட்டை வளம் செய்யும் பொருட்டு வெட்டப்பெற்றனவாகும்.

தஞ்சைச் செம்புலநாடு என்று அழைக்கப்பட்ட சோழ மண்டலத்தின் ஒருபகுதி ஏரியூர் நாடு என்றே வழங்கப்பட்டதை முதல் இராசராசனின் கல்வெட்டால் அறியமுடிகிறது. வடஆற்காடு மாவட்டம் சோழசிங்கபுரத்திற்கு அருகில் சோழ வாரிதி என்ற ஏரியும், சிதம்பரத்திற்கு மேற்கே உடையார் குடியில் முதல் பராந்தகனால் வெட்டப்பெற்று இன்றும் மிகப்பெரும் நிலப் பரப்பினை தன்னுள் அடக்கியிருக்கும் வீராணம் ஏரியும் அவ்வப் பகுதிகளை வளம் பொழியச் செய்துள்ளன. தென்னார்க்காடு மாவட்டம் உலகபுரத்திலுள்ள கண்டராதித்தப் பேரேரி, கண்டராதித்தச் சோழனாலும், திருச்சி மாவட்டம் திருமழபாடி அருகே, கண்டராதித்த சோழரின் மனைவி செம்பியன் மாதேவிப் பேரேரியும், உத்தம சோழனால் வெட்டப் பெற்ற மதுராந்தகப் பேரேரியும் குறிப்பிடத்தக்கவையாகும்.

சுந்தரசோழன் மற்றும் அவரது புதல்வி குந்தவையாராலும் வடஆற்காடு மாவட்டம் பிரம்மதேசம் என்ற ஊரில் முறையே சுந்தரசோழப் பேரேரி, குந்தவைப் பேரேரி எனும் இருபெரும் ஏரிகள் வெட்டப்பெற்றுள்ளன.

முதல் இராசேந்திர சோழன், தான் புதிதாக அமைத்த தலைநகரமான கங்கைகொண்ட சோழபுரத்தின் மேற்கே "சோழகங்கம்" என்ற பெயரில் மிகப்பெரிய ஏரியை வெட்டுவித்தான். பொன்னேரி என்று போற்றப்பெற்ற

இவ்வேரியில் கங்கையிலிருந்து, தான் கொணர்ந்த கங்கை நீரை இட்டு (ஜலஸ்தம்பம்-நீர்மயமான தூண் நிறுவி) பின் மழை நீரை நிரப்பியதாக திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன.

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் தாலுக்காவில் உள்ள முனியூரில் குலோத்துங்க சோழனால் குலோத்துங்க சோழப் பேரேரி வெட்டப்பெற்ற செய்தியை அவ்வூர்க் கல்வெட்டால் அறியமுடிகின்றது.

சோழ மண்டலம் முழுவதும் வெட்டப்பெற்ற ஏரிகளைப் பராமரிக்க ஏரி வாரியம் எனும் அமைப்பை ஏற்படுத்தி திறம்பட பராமரித்தனர். இவ்வாறு ஏரிகளைப் பராமரிக்க இறையிலி நிலங்களும், பொருட்களும் வழங்கப்பெற்றன. ஏரி ஆயம் எனும் வரியும் வசூலிக்கப் பெற்றது. இவ்வாரியத்தின் நிருவாகப் பொறுப்பு களை மேற்கொள்ளும் வாரிய உறுப்பினர்கள் ஊதியம் பெறாமல் கௌரவப் பதவியாகவே கருதி பணி புரிந்தனர். ஆனால், அவர்களுக்கு உதவி புரியவும், ஆவணங்களை முறையாக வைத்திருக்கவும், ஊதியம்பெற்ற அலுவலர்கள் நியமிக்கப் பெற்றனர். இவர்கள் மத்தியஸ்தர்கள் என்று அழைக்கப் பட்டனர். இவர்களுக்கு ஒரு நாளைக்கு 4 நாழி நெல்லும், ஓர் ஆண்டிற்கு 7கழஞ்சு செம்பொன்னும், இரண்டு வேட்டியும் கொடுக்கப் பெற்ற செய்திகளை அறியமுடிகிறது.

ஊர்ச்சபையினர் ஒவ்வொரு ஆண்டிலும் மழைக்காலம் துவங்கு முன்னர் தங்கள் ஆளுகைக்குட்பட்ட ஏரிகளில் தூர் எடுத்து அவற்றை ஆழப்படுத்தினர். கிராம சபைகள் தங்களின் முக்கிய கடமையாக இதைக் கருதின. ஒவ்வொரு ஏரிக்கும் தனிக் கட்டளைகள் அமைக்கப்பட்டிருந்தன.

ஏரியின் உள்ளே இரண்டு கற்களை உயரமாக நட்டு, இரண்டு கற்களுக்கிடையில் குறுக்குவாட்டில் ஒன்றோ அல்லது இரண்டோ நடுவில் துளையிடப்பெற்ற கற்பலகைகள் அமைத்து, துளையின் இடையே கழியைச் செருகி கழியின் அடியில் உருண்டைக்கல்லை

இணைத்திருந்தனர். கழியை உயர்த்தினால் அடிப்பகுதியில் அமைக்கப்பெற்ற குழாய் வழியே நீரை வெளியேற்றும் அமைப்பையும் செய்திருந்தனர். இத்தகைய அமைப்பிற்கு குமிழி என்று பெயர். குமிழிக் கற்களில் கொடையாளர்களின் பெயர்கள் கல்வெட்டாகப் பொறிக்கப் பெற்றிருக்கும்.

சோழர்கள் ஆட்சியில் ஆறுகளில் பொங்குநீர் உள்ள காலங்களில் பாசனத்திற்கு எவ்விதத் தடையுமின்றி நீர் பாய்ச்சிக் கொண்டனர். நீர்த்தட்டுப்பாடு உள்ள காலங்களில் அவரவர் நிலங்களின் விழுக்காட்டிற்கேற்ப வரிசையிட்டு பங்கு விகிதப்படி நீர்ப்பாய்ச்ச வேண்டுமென்று வரைமுறைகள் வகுத்திருந்ததை திருப்பதியில் உள்ள தமிழ்க் கல்வெட்டு எடுத்துரைக்கின்றது.

நிலங்கள் விற்கப்படும்பொழுதும், தானம் கொடுக்கும் பொழுதும் அந்நிலங்கள் எந்த ஆறு, ஏரி, குளம் இவற்றின் பாசனம் பெற்றது என்று ஆவணங்களில் குறிப்பிடும் வழக்கமும் இருந்தது. இவ்வாறு சோழ மன்னர்களும், மக்களும் நீர்வளம் குன்றாது காத்து சோழநாட்டை வளம்பெறச் செய்தனர்.

# சங்க இலக்கியம்-நிமித்தமும் சிவப்புக்கல் மூக்குத்தி-சகுனமும்

கண்ணதாசன் இலக்கிய இதழின் மாத வெளியீடாக வந்த சிவப்புக்கல் மூக்குத்தி கதை, பின் நூலாக வெளிவந்தது. அதோடல்லாமல் இக்கதை திரைப்படமாகவும் எடுக்கப் பெற்று திரையில் வெளியிடப்பெற்ற பெருமையும் கொண்டது. சிவப்புக்கல் மூக்குத்தி நவீனத்தை எழுத கவியரசர் எடுத்துக்கொண்ட காலம் ஆறுமணி நேரம் என்பதே அவரின் ஆற்றலை வெளிப்படுத்தக் கூடிய சான்றாகும். இவ்வளவு வேகமாகச் சொல்லும்போது கூட கருத்துச் சிதைவோ, மொழித்தடங்கலோ இன்றி நவீனம் வெகு நேர்த்தியாக அமைந்துள்ளது மற்றொரு சிறப்பாகும்.

கண்ணதாசனின் பாடல்களில் சங்க இலக்கியத்தின் தாக்கம் இருப்பதாக ஒரு கருத்து உண்டு. அதே போல் இக்கதையினையும் அமைத்துள்ளார். இக்கதையில் வரும் சகுனங்களோடு, சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணப்படும் சகுனங்களில் ஒரு சிலவற்றுடன் ஒப்புமைப் படுத்திப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஒரு நிகழ்வு நடப்பதற்குமுன் ஏற்படக்கூடிய நல்ல சகுனங்கள், தீய சகுனங்கள் என்பது நம்மிடையே பெரும் பாலோரால் சங்ககாலம் தொட்டு நம்பப்பட்டு வரும் ஒரு உண்மையாகும். இது போன்ற கருத்துக்கள் மூட நம்பிக்கை என்று நம்மவர்களால் ஒதுக்கித்தள்ளப்படுவதும் உண்டு. சங்க நூல்களில் காணப்படும் சகுனங்கள் பற்றி கண்ணதாசன் அறிந்ததால் தான் இக்கதையிலும் சகுனங்கள் பல நிகழ்வுகளுக்கு முன்னோடியாகச் சுட்டப்படுகின்றன.

சகுனங்களின் வகைகளாகச் சங்க நூல்கள் சிந்தனை நிலைச் சகுனம். செயல்நிலைச் சகுனம், வாய்மொழிச் சகுனம், சப்த சகுனம், மங்கல மங்கையர் சகுனம், வளையல் சகுனம் எனப் பிரித்து நம் மக்கள் வாழ்ந்ததாகக் கூறுகின்றன. நல்ல

பலன்கள், தீய பலன்கள் குறித்துச் சொல்பவர்கள் நிமித்தகர்கள் என்றழைக்கப்பட்டனர். பிறர் சொல்லும் நற்சொற்களைக் கேட்பதை நற்சொல் கேட்டல், விரிச்சி கேட்டல் என்று சங்க நூல்கள் கூறுகின்றன. இவ்வாறு கூறுவோரை தொல்காப்பியர் பாக்கத்து விரிச்சி என்பார். இவர்களை முல்லைப்பாட்டு முதுசெம்பெண்டிர் என்கிறது.

முல்லைப் பாட்டில் தலைவன் வருகையை எதிர்நோக்கி ஏங்கி நிற்கும் தலைவியைப் பார்த்து, தோழி பசுக்கன்றுகள் கட்டப் பட்டுள்ள இடத்திற்கு சென்று வரும்படி கூறுகிறாள். அங்கு மேய்ச்சலுக்குச் சென்று வீடு திரும்பும் தாய்ப்பசுவை எதிர்நோக்கும் கன்றுகளுக்கு, அதன் உரிமையுடைய பெண் கன்றுகளிடம் உங்கள் தாய் இதோ வந்துவிடுவாள் வந்ததும் பால் கொடுப்பாள் கவலைப்படாதீர்கள் என்று கூறுவதாகவும் இந்த நற்சொல் கேட்ட தலைவி தன் தலைவன் விரைவில் வந்துவிடுவான் என்று நம்புவதாகவும் பாடல் புனையப்பட்டுள்ளது.

மேலும் புள்நிமித்தம் எனப்படும் பறவைச் சகுனம் பார்ப்பதும் சங்கநூல் வழி அறியமுடிகின்றது. வல்வில் ஓரியிடம் பரிசில் நாடிச்சென்ற கழைதின் யானையார் எனும் புலவர் பரிசில் கிடைக்காமல் திரும்பும்பொழுது அதற்காக மன்னனைக் குறை கூறாமல், தாம் வரும்போது எதிர்ப்பட்ட பறவையின் தீய சகுனத்தையும், நேரத்தையும் எண்ணி பாடும் பாடல்,

> புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை
> உள்ளிச் சென்றோர் பழியலர் அதனால்
> புலவேன் வாழியர் ஓரி விசும்பின் (204, 10-12)

என்பதாகும். பல்லி சகுனம் பற்றி அகநானூறு, நற்றிணை போன்ற இலக்கியங்களிலும் விண்மீன் சகுனம் பற்றி புற நானூற்றிலும் செய்திகள் காணப்படுகின்றன. சங்ககால மக்கள் நல்ல சகுனங்கள் பற்றி அறிந்ததோடல்லாமல், தீய சகுனங்களையும் அறிந்திருந்தனர் என்பதைக் கீழ்வரும் பாடல்கள் உணர்த்துகின்றன.

என்னை மார்பிற் புண்ணும் செய்ய
நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்
நெடுநகர் வரைப்பின் விளக்கும் நில்லா
துஞ்சாக் கண்ணே துயிலும் வேட்கும்
அஞ்சுவரு குராஅல் குரலும் தூற்றும் (புறம்.250,1-5)

எனும் மாறோக்கத்து நப்பசலையார் பாடலும்,

திசையிரு நான்கும் உற்கம் உற்கவும்
பெருமரத்து இலையில் நெடுங்கோடு வற்றல் பற்றவும்
வெங்கதிர்க் கனலி துற்றவும் பிறவும்
அஞ்சுவரத் தகுந புள்ளுக்குரல் இயம்பவும்
எயிறு நிலத்து வீழவும் எண்ணையாடவும்
களிறுமேல் கொள்ளவும் காழகம் நீப்பவும்
வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவும்
கனவின் அரியன காணா நனவின் (புறம்-41,4-11)

எனும் கோவூர் கிழாரின் பாடலும், தீய சகுனங்களைக் கனவிலும், நனவிலும் காணக்கூடாது என்பதையும், கண்டால் வாழ்வில் தீமைகளே நிகழும் என்று மக்கள் நம்பினர் என்பதனையும் எடுத்துக்காட்டுகிறது.

சிலப்பதிகாரத்தில் காலத்தைக் கணித்துச் சொல்பவர்கள் கணியர்கள் என்றழைக்கப்பட்டதாக குறிப்புள்ளது. பெண்களுக்கு இடது கண்களும், இடது தோளும், ஆண்களுக்கு வலது கண்ணும், வலது தோளும் துடித்தல் நற்சகுணத்தின் அறிகுறி என்பதை,

கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்
உண்ணிறை கரந்தகத் தொளித்து நீர் உகுத்தன
எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன
விண்ணவர் கோமான் விழவுநாள் அகத்தென் (237-40)

சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதையில் காண முடிகிறது. மேலும், கோவலன், கண்ணகி மதுரை நோக்கிச் செல்லும் பாதையின் ஓரங்களில் உள்ள செடி கொடிகள் காற்றில் அசைவது இவர்களை மதுரைக்கு வரவேண்டாம்

என்று தடுப்பது போல் உள்ளதாகவும். நடைபெறப் போகும் துன்பத்தை முன்கூட்டியே உணர்த்துவதுபோல் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

அவ்வகையில் சிவப்புக்கல் மூக்குத்தியில் வரும் சில சம்பவங்களைக் காணலாம். கதையின் நாயகி ஜானகி திருமணமாகி இரயிலில் செல்ல நேர்கையில், தன் மாங்கல்யத்தில் இருந்த சிவப்புக்கல் காணாமல் போனது குறித்து மிகவும் கவலையுற்று ஏதோ அசம்பாவிதம் நிகழ இருப்பதாக எண்ணுகிறாள். அதே நேரத்தில் இரயிலிலிருந்து தவறி விழுந்து ஒரு குழந்தை இறந்து விடுகிறது. இச்சம்பவங்கள் தீய சகுனத்தின் அறிகுறியாகக் கருதி ஜானகி அஞ்சுகிறாள்.

இரயிலிலிருந்து இறங்கியதும் தங்களை வரவேற்ற நடுத்தர வயதுடைய பெண் (கணவரின் அத்தை) குழந்தைப்பேறு இல்லாதவர்கள் என்று அறிந்த ஜானகி இதனை ஒரு தீய சகுனமாகக் கருதுகிறாள். பின் கணவன் வீட்டிற்கு வந்ததும் தங்கள் இருவரையும் வரவேற்றவர் இரண்டு மனைவிகள் (கணவரின் சித்தப்பா) கொண்டவர். இவர் தன் இரு மனைவிகளோடு வரவேற்றதும் நல்ல சகுனம் அல்ல என்று ஜானகி எண்ணுகிறாள்.

இச்சம்பவங்களுக்கு ஏற்பவே ஜானகியின் வாழ்விலும் சில காலம் குழந்தைப்பேறு இல்லாமல் போனதும், தன் கணவனுக்கு தானே முன்னின்று , தன் தங்கை வைதேகியை இரண்டாம் திருமணம் செய்வித்ததும் ஆகிய கதைப்போக்கினை முன்னரே உணர்த்தும் உத்தியாக சகுனங்களை வைத்துப் படைத்துள்ளார் கண்ணதாசன்.

ஜானகியின் தாயார் சொல்லியதாக ஒரு நிகழ்வு சுட்டப்படுகிறது. இதில் ஜானகியின் தாய் தன் திருமணம் முடிந்து வரும்போது அம்மன் கோயில் திருவிழாவில் அம்மன் ஊர்வலம் எதிரே வந்ததாகவும், அதனால்தான் நாங்கள் நால்வரும் பெண் குழந்தைகளாகப் பிறந்தோம் என்றும் ஜானகி கூறுகிறாள். பெண் குழந்தை பிறப்பிற்கு அம்மன் ஊர்வலம் எதிரே வந்தது காரணமாக நம்பப்படுகிறது.

தன் தங்கை வைதேகியை இரண்டாவதாகத் திருமணம் செய்வித்தபின் அவர்கள் இரயிலில் செல்ல எண்ணும் பொழுது, இரயிலில் சென்ற தனக்கு நேர்ந்த சம்பவங்கள் தன் தங்கைக்கு நடந்துவிடக்கூடாது என நினைப்பதால் அவர்கள் இரயிலில் பயணம் செல்ல மறுக்கிறாள். அப்படியே இருந்தாலும் திருமணத் தன்று இரவு புறப்படக்கூடாது. இரண்டாவது மணமக்கள் இருவரும் தனிப்பெட்டியில் பயணம் செய்யக்கூடாது. மூன்றாவது சென்னை இரயில் நிலையத்தில் என்னை வரவேற்றார்களே பிள்ளைப்பேறு வாய்க்காத அம்மையார் அவர்கள் முதலில் வரவேற்கக் கூடாது. நான்காவது இரண்டு மனைவிகள் கொண்ட சின்ன மாமனார் தான் வரவேற்கலாமே தவிர, வேறு மூன்று மனைவிகள் கொண்டவர் யாரும் வரவேற்கக்கூடாது என வெளிப்படையாகப் பேசி தனக்கு ஏற்பட்ட சகுனங்கள், தன் தங்கைக்கு ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறாள்.

நற்சகுனமாக எண்ணி ஏழு ஆண் குழந்தைகள் பெற்ற சிவகாமி அம்மையாரிடம் முதலிரவு அறைக்கு பெண்ணை அழைத்துச் செல்லும் பொறுப்பைக் கொடுக்கிறாள். தன் வீட்டில் தான் உருவாகக் காரணமாக இருந்த அந்த அறையிலேயே தங்கையின் முதலிரவு நடக்கும்படியும் செய்கிறாள். அறைக்கு செல்லும் முன் தன்னிடம் ஆசிபெற விரும்பும் தங்கைக்கு, தான் குழந்தைப்பேறு இல்லாதவள் என்பதால் ஆசி வழங்குவதையும் தவிர்த்துவிடுகிறாள். அடுத்த நாள் காலையில் பக்கத்தில் குழந்தை ஒன்று அழும் குரல் கேட்டு நல்ல சகுனம் அமைந்ததாக எண்ணி மகிழ்கிறாள்.

பின் தங்கள் புகுந்த வீட்டிற்கு இரயிலில் வரும்பொழுது நடுத்தர வயதுடைய அம்மையார் ஒருவர் சிவப்புக்கல் மூக்குத்தி ஒன்று கொடுத்து ஜானகியை அணிந்துகொள்ளச் சொல்கிறாள். அந்த மூக்குத்தியை அணிந்ததும் அது நாள்வரை குழந்தைப்பேறு இல்லாமல் இருந்த ஜானகி, கருவுற்று அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள்.

வைதேகி நிறைமாத கர்ப்பிணியாக இருந்தபோது கிராமத்தில் இருந்து தந்தி வந்தது. தாயார் உடல்நிலை மிகவும் மோசம். உடனே புறப்பட்டு வரவும். தகப்பனார் கையெழுத்திட்டு அது கொடுக்கப் பட்டிருந்தது. சுவாமி விவேகானந்தர் சொன்னது போல் எவள் இல்லையென்றால் நாங்கள் இந்த பூமியில் பிறந்திருக்க முடியாதோ எவளை இழந்துவிட்டால் நாங்கள் மீண்டும் பெறமுடியாதோ அவளது மரணத்தை தரிசிக்க போய்க் கொண்டிருக்கிறோம். நாங்கள் வீடு போய்ச் சேர்ந்ததும் எங்களைப் பார்த்துப் பேசிய சிறிது நேரத்திற்கெல்லாம் அம்மாவின் ஆவி பிரிந்தது. அம்மா இறந்த துக்கம் தாளாத எங்கள் தந்தையின் உயிரும் சிறிது நேரத்திலேயே பிரிந்தது. சாவிலும் இணைபிரியாத தம்பதிகள். இத்தகு சூழ்நிலையில் உடனே ஊர் திரும்ப இயலாத நிலையில் அங்கேயே இருவரும் சிலகாலம் தங்கநேர்கிறது. அப்பொழுது வைதேகிக்கு பிரசவ வலி ஏற்படுகிறது. வேறு வழி இல்லாததால் முன்பு வைதேகிக்கு பிரசவம் பார்த்த அதே அறையில் இப்பொழுதும் பிரசவம் பார்க்க நேரிடுகிறது. குழந்தை இறந்தே பிறக்கின்றது. வைதேகிக்கு முதல் குழந்தை கண் இல்லாமல் பிறந்து சில நாட்களிலேயே இறந்துவிடுகிறது. பின் இரண்டாவது குழந்தையும் இறந்தே பிறப்பது இந்த அறையே ஒரு தீய சகுனமாக ஆகிவிட்டதாகக் கருதுகிறாள்.

இக்கதையின் தலைவி, ஜானகியின் சிந்தனை நிலைச் சகுனம், செயல்நிலைச் சகுனம், வாய்மொழிச் சகுனம், சப்த சகுனம், மங்கல மங்கையர் சகுனம் போன்றவைகளை சங்க நூல்கள் வழி நின்று கண்ணதாசன் இந்நவீனத்தைப் படைத்துள்ளார் என்றே கருதமுடிகிறது.

# புனலாடுதல்

ஊர்தோறும், நாடுகள் தோறும், உலக அளவிலும் விளையாட்டுக்கள் விளையாடப்படுவது மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும், உறவுகள் தொடர்ந்து மேம்படவும் பயன்படுகின்றது. ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் தோன்றியதே இந்த வகையில்தான் எனில் மிகையன்று. விளையாடுவதால் உடல் புத்துணர்வுபெறும், மனதில் மகிழ்ச்சி ஏற்படும் என்பதனை தொல்காப்பியர்,

செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று
அல்லல் நீத்த உவகை நான்கே (1205)

என்கிறார். சங்க காலத்தில் ஆண்களும், பெண்களும் விளையாட்டுக்களில் மிகுதியாக ஈடுபட்டிருந்தனர் என்பதை சங்க இலக்கியங்களும் எடுத்துக்காட்டுகின்றன.

பைய விளையாடுவாரும் மென் பாவையார் (பரி.10:104)
ஒருங்கு விளையாட (கலி. 111:6)

விளையாட்டு ஆயமொடு
வெண்மணல் உதிர்த்த (அகம்:230:6)

இப்பாடல் வரிகளால் சங்க காலத்தில் விளையாட்டு முக்கியப் பங்காற்றியதை அறியமுடிகிறது.

தமிழர்தம் வாழ்வியல் கூறுகளைக் கூறும் சங்க நூல்களில் காணப்படும் விளையாட்டுக்கள் முப்பத்தேழு வகைப்படும் என்றும், அவற்றுள் ஆண்கள் விளையாடும் விளையாட்டுக்கள் பத்து வகைப்படும் எனவும், பெண்கள் மட்டுமே விளையாடும் விளை யாட்டுக்கள் பதினைந்து வகைப்படும் எனவும், ஆண், பெண் ஆகிய இருபாலர்க்கும் உரிய விளையாட்டுக்கள் பனிரெண்டு வகைப்படும் என்றும் முனைவர் சு. சிவகாமசுந்தரி தன் சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம் எனும் நூலில் தொகுத்துக் கூறியுள்ளார்.

உலக உயிர்களின் உயிரைக்காத்து நிற்கும் அற்புதப் பொருள் நீராகும். இந்நீரினை தமிழர்கள் மழைநீர், ஆற்றுநீர், ஊற்றுநீர், கடல்நீர் என நீர்நிலைகளின் பெயர்களை ஐம்பது வகைகளாகப் பகுத்து வழங்கிவருகின்றனர். பண்டைய தமிழகத்தில் மக்களின் வாழ்வில் ஆற்றுநீர் பெரும்பங் காற்றியிருக்கிறது. ஆற்றங்கரைகளில் தான் உலகின் மிகச்சிறந்த நாகரிகங்கள் தோன்றி வளர்ந்தன. சோழநாட்டில் காவிரியும், பாண்டி நாட்டில் வைகையும் பழந்தமிழர்களின் பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம் ஆகியவற்றை வெளிப் படுத்தும் சின்னங்களாகத் திகழ்ந்ததை இலக்கியங்களில் காணமுடிகின்றது. அந்த வகையில் ஆற்றிலே புதுவெள்ளம் வரும்பொழுது மன்னனும், மக்களும் அவற்றை வரவேற்கும் விதமாக நடத்திய புனல் விளையாட்டுக்கள் பற்றி இலக்கியங்கள் சுட்டுவதைக் காண்போம்.

புனலாட்டு எனப்பெறும் இந்நீர் விளையாட்டு காப்பியங் களிலும், சிற்றிலக்கியங்களிலும் மிகச்சிறப்பாக இடம்பெற்றுள்ளது. இது சல விளையாட்டு, மஞ்சனம் ஆடல், ஆய விளையாட்டு என்ற பெயர்களில் அழைக்கப்பெற்று சிறப்பிக்கப்பெறுகின்றது. நீர் எறிந்து விளையாட சுண்ண வட்டு, சுழிநீர்க்கோடு, முட்டிணைவட்டு, விசிறி, பந்து போன்ற கருவிகள் பயன்படுத்தப்பட்டதை பெருங்கதை குறிப்பிடுகிறது. நீர் விளையாட்டு ஒரு விழாவாகவே நடை பெற்றுள்ளது. இதனை முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரம் நீரணி விழவு எனச்சுட்டுகிறது.

வந்து தலை மயங்கிய வான்பெரு மன்றத்துப்
பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழல்
நீரணி விழவினு நெடுந்தேர் விழவினும்
(நாடுகாண் காதை:20-22)

பெண்கள் நீர் விளையாட்டை நீர்ப்போராக மாற்றி விளையாடி யமையைச் சீவக சிந்தாமணியின் பாடல் குறிப்பிடுகிறது.

சோர்புயன் முகிற்றலை விளங்கித் தூநில
மார்புகொண் டார்ந்தது நரல வண்சுளை
யார்வுறு பலாப்பழ மழித்த நீள்களம்
போர்வினான் மலிந்துடன் பொலிந்த நீரவே. (58)

சிவிறியின் மாறு தூயுங் குங்கும மெறிந்துந் தேங்கொ
ளுவறுநீ ருழக்கி யோட்டி யுடைபுறங் கண்டு நக்குத்
தவறெனத் தாமம் பூட்டித் தருதிறை கொண்டு மின்பத்
திவறினார் காம வெள்ளத் தேத்தருந் தன்மை யாரே.
(966)

பெருங்கதையில் உயரமான மாடத்தின் மீதேறி அங்கிருந்து பெண்கள் நீரில் பாய்ந்து விளையாடியதையும், நீரில் இசைக் கருவிகளை இசைத்த செய்திகள் போன்றவையும் விரிவாகக் குறிக்கப்பட்டுள்ளன.

நீர்நிலைகள் வேளாண் தொழிலுக்கு மட்டுமின்றி புனலாடு வதற்கும் பயன்பட்டன. இதனை தொல்காப்பியர் தலைவனும், தலைவியும் ஆற்றிலும், குளத்திலும், பொழிலிலும் தம் நாட்டு எல்லை கடந்தும் விளையாடு வதற்குரியர் என்பதை,

யாறும் குளனும் காவும் ஆடிப்
பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப (1137)

என்கிறார். நீராடலைப் பற்றி பத்துப்பாடல்கள் ஐங்குறு நூற்றில் புனலாட்டுப் பத்து எனும் பெயரில் காணப்படுகின்றது. அகத்திணைச் சூழலில் சங்க இலக்கியங்கள் புனலாட்டத்தை எடுத்தியம்புகின்றன. இப்புனலாட்டம் அனைத்துத் திணைக்கும் பொதுவானதாகும். மலைவாழ் மக்கள் அருவியிலும், சுனையிலும் விளையாடியதை,

நின்மலைப் பிறந்து நின்கடல் மண்டும்
மலிபுனல் நிகழ்தரும் தீநீர் விழவின்
பொழில் வதி வேனில் பேரெழில் வாழ்க்கை
(பதிற்றுப்பத்து: 48: 13-15)

என்கிறது இப்பாடலில் தீ நீர் விழவு எனும் சொல் புதுப்புனல் விழாவினைச் சுட்டுகின்றது. மேலும்,

ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
பாசவல் முக்கித் தண்புனல் பாயும் (புறம்:63:12-13)

குறுநுரை சுமந்து நறுமலர் உந்தி
பொங்கிவரு புதுநீர் நெஞ்சு உண ஆடுகம் (68:4-5)

என்பது நற்றிணைப்பாடல். இதே போல்,

புணை கைவிட்டு புனலோடு ஒழுகின்
ஆண்டும் வருகுவள் போலும் மாண்ட
(குறுந். 222:3-4)

குவளை உண்கண் ஏஎர் மெல்லியல்
மலரார் மலிர்நிறை வந்தெனப்
புனலாடு புணர்துணை ஆயினள் எமக்கே. (ஐங்:72:3-5)

கண்ணறுங் குவளை நாறித்
தண்ணென்றிசினே பெருந்துறைப் புனலே(ஐங்:73:3-4)

புனலாடு மகளிர் இட்ட ஒள்ளிழை
மணலாடு சிமையத்தெருமை கிளைக்கும் (ஐங்:100:1-2)

ஆர்குரல் எழிலி அழிதுளி சிதறிக்
கார் தொடங்கின்றால் காமர் புறவே
வீழ்தரு புதுப்புனல் ஆடுகம்
தாழிருங் கூந்தல் வம்மதி விரைந்தே (ஐங்:411:1-4)

கொண்டல் இடுமணல் குரவை முனையின்
வெண்தலைப் புணரி ஆயமொடு ஆடி (அகம்:20:7-8)

இவைகள் எல்லாம் புனலாட்டைச் சுட்டும் பாடல் வரிகள்.

நெய்தல் திணை மக்கள் கடலில் புனலாடியதைப் பற்றி

நெடுநீர்ப் பரப்பின் வாளையொடு உகளுந்து
தொடலை அல்குல் தொடித்தோள் மகளிர்
கடல் ஆடிக் கயம் பாய்ந்து (புறம்:339:5-7)

என்கிறது.

மற்றொரு புறப்பாடல்,

நெல் அரியும் இருந்தொழுவர்
செஞ்ஞாமிற்று வெயில் முனையின்
தென்கடல் திரை மிசைப் பாய்ந்து
திண்திமில் வன் பரதவர் (24:1-4)

மருதநில மக்கள் ஆற்றில் புனலாடியதை

வால்இழை மடமங்கையர்
வரிமணற் புனை பாவைக்குக்
குலவுச் சினைப் பூக்கொய்து
தண்பொருநைப் புனல்பாயும் (புறம்:11:2-5)

என்கிறது. பழந்தமிழ் மக்கள் ஆற்றில் நீராடுவதை நல்வினையாகக் கருதினர். இளம்பெண்கள் தை நீராடுதலை தவச் செயலாகவும், இன்ப விளையாட்டாகவும் எண்ணினர். இச்செய்தியைக் கூறும் பரிபாடல்,

தாய் அருகாநின்று தவத் தைந் நீராடுதல்
நீ உரைத்தி வையை நதி (11:91-92) என்கிறது. மேலும்,

வை எயிற்றவர் நாப்பண் வகை அணிப் பொலிந்து நீ
தையில் நீர் ஆடிய தவம் தலைப்படுவாயோ (59:12-13)

என்கிறது கலித்தொகை. பட்டினப்பாலை தீது நீங்க மக்கள் கடலாடியதாகக் கூறுகின்றது.

தொடித்தலை விழுத்தண்டினர் எனும் புலவர் தாம் தம் தோழர்களோடு இளம்வயதில் மருதமரத்தில் ஏறி குளத்தினுள் குதித்து மூழ்கி அடிமணல் எடுத்து வந்த செயலை நினைத்து அந்த இளமைக்காலம் நிலைக்காது போயிற்றே என்று கழிவிரக்கம் கொள்வதாகப் பாடப்பட்டுள்ள புறநானூற்றுப் பாடல்

உயர்சினை மருதத்து உறையுறத் தாழ்ந்த
நீர்நணிப் படுகோடு ஏறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்டகல்லா இளமை (243:6-10)

இதேபோல் பெண்கள் மருதமரத்தின் மீது ஏறித் தண்ணீரில் குதித்து விளையாடியதை ஐங்குறு நூற்றுப் பாடல் சுட்டுகின்றது.

விசும்பிழி தோகைச் சீர்போன் றிசினே
பசும்பொன் அவிர் இழை பைய நிழற்றக்
கரைசேர் மருதம் ஏறிப்
பண்ணை பாய்வோள்தண் ணறுங்கதுப்பே (74)

கரிகாற்சோழனின் மருமகன் அத்தி புனல் விளையாட்டில் சிறந்து நின்றதால், அவனை ஆட்டனத்தி என்றே அழைத்தனர். ஒருநாள் கரிகாலன் தம் சுற்றம் சூழ புனலாட்டத்தைக் காணச் சென்றான். காவிரியாற்றில் தம் ஆடல் திறத்தால், ஆட்டனத்தி அனைவரையும் கவர்ந்து நின்றான். அப்பொழுது காவிரியில் மிகு வெள்ளம் வரவே வெள்ளப்பெருக்கால் அவன் அடித்துச் செல்லப்பட்டான். அவன் மனைவி ஆதிமந்தி தன் கணவனை காவிரி அடித்துச்சென்றது குறித்துப் பெரிதும் கலங்கி நின்றாள். பின் தன் தோழி மருதியின் உதவியால் கணவன் மீட்கப்பட்ட செய்தியறிந்து மிகவும் மனம் மகிழ்ந்தாள். இந்நிகழ்ச்சியானது அக்காலத்திய புனலாட்டு பற்றி விரித்துரைக்கின்றது. இதனை பரணர் அகநானூற்றுப் பாக்களில்,

சூரியல் அம் பொருநனைக் காண்டிரோ? என
ஆதிமந்தி பேதுற்று இனைய
சிறை பறைந்து உரைஇச் செங்குணக்கு ஒழுகும் (76:9-11)

மேலும்,

தோட்டுஇருஞ் சுரியல் மணந்த பித்தை
ஆட்டன் அத்தியைக் காணீரோ? என (236:15-16)

கழாஅர்ப் பெருந்துறை விழாவின் ஆடும்
ஈட்டு எழில் பொலிந்த ஏந்துகுவவு மொய்ம்பின்
ஆட்டன் அத்தி நலன்நயந்து உரைஇத்
தாழ்இருங் கதுப்பின் காவிரி வவ்வலின்
மாதிரம் துழைஇ மதிமருண்டு அலந்த
ஆதிமந்தி காதலற் காட்டி (396:11-13)

எனப்பாடுகின்றார்.

இனியான் விடுக்கிவென் அல்லன் பந்த்
பணிவர் கன்னல் பலபுலந்து உறைய
அடுந்திறல் அத்தி ஆடுஅணி நசைஇ

தலைவி, தலைவனோடு ஊடல் கொண்டமைக்குக் காரணம் கூறும் புலவர்கள், தலைவன் பரத்தையோடு வையையிலும், காவிரியிலும் நீராடியதைப் பெரும் காரணமாக வைத்துப் பல பாடல்கள் புனைந்துள்ளனர்.

தைஇய மகளிர் தம் ஆயமொடு அமர்ந்து ஆடும்
வையை வார் உயர் எக்கர் நுகர்ச்சியும் உள்ளார் கொல்
(கலி:27:19-20)

பொருகரை வாய் சூழ்ந்த பூ மலி வையை
வருபுனல் ஆடத் தவிர்த்தேன் பெரிது என்னைச்
செய்யா மொழிவது எவன் (கலி:98:10-12)

கழை நிலை பெறாஅக் காவிரி நீத்தம்
குழை மாண் ஒள் இழைநீ வெய்யோளொடு
வேழவெண் புணைதழீஇப் பூழியர்
கயம் நாடு யானையின் முகன் அமர்ந்தா அங்கு
ஏந்து எழில் ஆகத்துப் பூந்தார் குழைய
நெருதல் ஆடினை புனலே இன்று வந்து (அகம்:6:6-11)

வதுவை ஈர்அணிப் பொலிந்த நம்மொடு
புதுவது வந்த காவிரிக்
கோடுதோய் மலிர்நிறை ஆடி யோரே. (அகம்:166:13-15)

தலைவனும், தலைவியும் காதல் கொள்ளவும் இப்புனலாட்டு வழி செய்வதாகக் கலித்தொகை கூறுகிறது.

காமர் கடும் புனல் கலந்து எம்மொடு ஆடுவாள்
தாமரைக்கண் புதைத்து அஞ்சித் தளர்ந்து அதனோடு
நீள்நாக நறுந்தண் தார் தயங்கப் பாய்ந்து அருளினால்
பூண்ஆகம் உறத் தழீஇப் போத்தந் தான்அகன் அகலம்
வருமுலை புணர்ந்தன என்பதனால் என்தோழி (39:1-5)

அகத்திணைப் பற்றிய சங்கப்பாடல்கள் பல புனலாட்டயர்வினைப் பாடியுள்ளன.

துயில் இன்றி யாம்நீந்தத் தொழுவை அம் புனல்ஆடி
மயில் இயலார் மருஉண்டு மறந்து அமைகுவான் மன்னோ
(கலி:30:5-6)

கூடியார் புனல் ஆடப் புணை ஆய மார்பினில்
(கலி:72:15)

கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சிப்
பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி
யாம் அஃது அயர்கம் சேறும் தான் அஃது (குறு:80:1-3)

சிறையழி புதுப்புனல் பாய்ந்தெனக் கலங்கிக்
கழனித் தாமரை மலரும் (ஐங்.53:2-3)

த்லைப்பெயல் செம்புனலாடித்
தவநனி சிவந்தன மகிழ்ந நின் கண்ணே (ஐங்.80:3-4)

புன்கு அவிழ் அகன்துறைப் பொலிய ஒள்நுதல்
நறு மலர்க்கு அணவரும் குறும்பல் கூந்தல்
மாழை நோக்கின் காழ் இயன் வன முலை
எஃகுடை எழில் நலத்து ஒருத்தியொடு நெருநை
வைகுபுனல் அயர்ந்தனை என்ப அதுவே (அக.116:6-10)

இவை போன்று புனலாடல் குறித்தும் அந்த ஆட்டத்தினால் ஏற்பட்ட விழாக்கள் குறித்தும், மக்களின் சமுதாய நிலைகளைப் பற்றியும் தமிழ் இலக்கியங்களில் பெரு வாரியான செய்திகள் மிகுந்து காணப்படுகின்றன.

# இறையுடைமையில் பொதுவுடைமை கண்ட இராசராசன்

தஞ்சைப் பெரியகோயிலுக்கு மன்னன் இராசராசன் கொடுத்த திருவிளக்குகள் பற்றி நான்கு பெரும் கல்வெட்டுக்கள் விரிவாகக் கூறுகின்றன. இவை தஞ்சைப் பெரியகோயில் திருச்சுற்றின் வடபுற வெளிச்சுவரில் காணப்பெறுகின்றன. தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் இரண்டாம் தொகுதியில் எண்கள் 63, 64, 94, 95ஆம் கல்வெட்டுக்களாக அவை பதிப்பிக்கப் பெற்று வெளி வந்துள்ளன. இக்கொடைக்காக மாமன்னனாலும், அவனைச் சார்ந்தவர்களாலும் வைக்கப்பெற்ற நிரந்தர முதலீடு பற்றி இக்கல்வெட்டுக்களில் கூறப்பெற்றுள்ளன. இங்குக் காணப்பெறும் முதலீடு வைப்புத்தொகையாக வைக்கப் பெற்ற பொற்காசுகளோ, நிலங்களோ அல்ல. மாறாக உயிரினங்களே வைப்பு முதலாகத் திகழ்வது விந்தைக்குரிய தாகும். இவ்வகை முதலீட்டினால் தஞ்சைப் பெரியகோயிலில் நெய் விளக்குகள் சுடர்விட்டு ஒளிர்ந்ததோடு, சோழப் பெருநாட்டில் மூலை முடுக்கெல்லாம் கால்நடைச் செல்வங்கள் பல்கிப் பெருகி மக்களுக்கு நலம் பயந்தன. அது போன்று கிராமப்புறங்களில் இருந்த ஏழை எளிய மக்கள் தஞ்சைப் பெரியகோயிலின் உடைமைகளையே முதலீடாகக் கொண்டு பெரும்பயன் பெற்றனர். இவை பற்றி விரிவாக இக்கட்டுரையில் காண்போம்.

மாமன்னனும், மற்றவர்களும் தஞ்சை ஈசனை வணங்கி அவன் வீற்றிருக்கும் திருக்கோயிலில் நாளும் விளக்குகள் ஏற்றப்படுவதற்காகத் திருவிளக்குகள் வைத்ததோடு அவை தொடர்ந்து எரிய முதலீடுகளையும் வழங்கினர். இது பற்றிக் கூறும் கல்வெட்டு பின்வருமாறு உள்ளது.

"கோ ராஜகேசரி வர்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது வரை (கி.பி.1014) உடையார்

ஸ்ரீ ராஜ ராஜீச்சரம் உடையார்க்குத் திருவிளக்கு. உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டிலுங் (கால்நடைச் செல்வங்கள்) குடுத்தார் குடுத்த கால்மாட்டிலும் காசு குடுத்து முதலான கால்மாட்டிலும் திருவிளக்குக்கு நெய் அளக்க கடவார்களாக இடையர் வழி திருவிளக்கு ஒன்றினுக்கு ஆடு தொன்னூற்றாறாகவும், பசு நாற்பத்தெட்டாகவும், எருமை பதினாறாகவும் இவற்றுக்குப் பசுவின் கன்றும், எருதும், பசு சார்த்திக் குடுத்தன பசுவாகவும் ஆட்டுக் குட்டியும், கிடாயும், ஆடு சார்த்திக் குடுத்தன. ஆடாகவும், எருமைக் கன்றும், கிடாவும் எருமை சார்த்திக் குடுத்தன எருமையாகவும் மாடடுத்து மாடு கொண்ட இடையரும் இவர்கள் உறவு முறையாய் அடைகுடிகளானாரும் இவர்கள் அடை குடிகளும் திருவிளக்கு ஒன்றினுக்கு ஆடவல்லாநால் நிசதம் நெய் உழக்காகத் தாங்களும் தங்கள் வர்க்கத்தாரும் சந்திராதித்யவத் உடையார் பண்டாரத்தே நெய் அளக்கக் கடவர்களாக கல்லில் வெட்டினபடி” என்றுள்ளது.

இதனையடுத்து மாமன்னன் வைத்த திருவிளக்குகளுக்கு நல்கிய கொடையும், அதனைப்பெற்றவர்களின் பட்டியலும், மற்ற விதி முறைகளும் குறிக்கப்பெற்றுள்ளன. இக் கல்வெட்டின் முற்பகுதியைக் கூர்ந்து நோக்குவோமாயின் ஒரு திருவிளக்கு எரிய ஒருநாளைக்கு ஓர் உழக்கு நெய் தேவைப்பட்டது என்பதை அறிகிறோம். இவ்வாறு ஆண்டு முழுவதும் அத்திருவிளக்கு எரிவதற்கு வைப்பு முதலாக அளிக்கப்பெற்றவை ஆடுகளும், பசுக்களும், எருமைகளும் ஆகும். காசாக முதலீடு செய்தால் கூட அதனைக் கால்நடைச் செல்வங்களாக மாற்றியே இவ்வறக்கொடை செயல்பட்டது என்பதைக் “காசு குடுத்து முதலான கால்மாட்டிலும்” என்ற வரிகளால் அறியமுடிகிறது.

ஒரு விளக்கு எரிப்பதற்காகப் பலன்தரக்கூடிய 96 ஆடுகளும், பசுக்களாக இருந்தால் 48ம், எருமைகளாக இருந்தால் 16ம் கணக்கில் கொண்டனர். இவற்றோடு 96 ஆடுகளுக்குரிய குட்டிகள் 192ம் (ஏறத்தாழ ஓர் ஆட்டிற்கு

இருகுட்டிகள் வீதம்) அவ்வாடுகளுக்குத் தேவைப்படும் கிடா ஆடுகளும் (24 ஆடுகளுக்கு ஒரு கிடா ஆடு வீதம் 96 ஆடுகள் கொண்ட பண்ணைக்கு 4கிடா ஆடுகள்) சேர்த்தே கொடுக்கப்பட வேண்டும். பசுக்களுக்கும், எருமைகளுக்கும் இதுபோன்றே கன்றுகளும், காளைகளும், கிடாக்களும் கணக்கிட்டுக் கொடுத்தனர்.

இந்தக் கணக்கீட்டின்படி ஆடுகளாகவோ, பசுக்களாகவோ, எருமைகளாகவோ ஒரு திருவிளக்குக்காக அளிக்கப்படும் கால்நடைகளைச் சோழமண்டலத்தில் உள்ள ஏதோ ஒரு கிராமத்தில் வசிக்கும் இடையர்களிடம் ஒப்புவித்து ஒப்பந்தம் ஒன்றினைத் திருக்கோயில் அலுவலர்கள் செய்துகொண்டனர். அந்த ஒப்பந்தத்தின்படி ஒரு கால்நடைப் பண்ணையைப் பேணுகின்ற இடையர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் அப்பண்ணையைப் பராமரித்து அதன் முழுப்பயனையும் அனுபவிக்கலாம். ஆனால் அவர்கள் அதற்குக் கைமாறாகச் செய்யக்கூடியது ஒவ்வொரு நாளும் ஒரு உழக்கு நெய்யினைக் கோயிலுக்குக் கொடுத்துவிட வேண்டும். இவ்வாறு பெறப்படும் நெய் அவரவர்கள் அளித்த விளக்குகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பெற்றது. இங்குத் தஞ்சைப் பெரியகோயிலில் விளக்கு எரியும்பொழுது சோழ மண்டலத்து ஊர் ஒன்றில் கால்நடைப் பண்ணை செயல்பட்டது. விளக்குகளுக்காக அளிக்கப்பெற்ற கொடை பற்றிக் கூறும் சோழர் சாசனங்கள் மூன்று செய்திகளை வலியுறுத்துகின்றன.

முதலாவதாகக் கோயிலில் குறிப்பிட்ட ஒரு விளக்கு ஏற்றப் படுவது என்பதற்கு இவ்வளவு காலம் வரைதான் என்ற வரையறை நிர்ணயம் கிடையாது. ஆனால் அக்குறிப்பிட்ட விளக்கு சந்திரன், சூரியன் உள்ளளவும் ஏற்றப்படவேண்டும் என்ற குறிப்பை வலியுறுத்துகிறது.

இரண்டாவதாகக் குறிப்பிட்ட ஒரு விளக்கு எரிவதற்காகக் கால்நடைப் பண்ணையைப் பெற்றவர் தன் வாழ்நாள் மட்டுமின்றித் தனக்குப் பின்பு அதனைப்

பராமரிக்கக்கூடிய அருகதை உடைய அவருடைய வம்சத்தார் இப்பணியைத் தொடரலாம் என்றும் கூறுகிறது.

மூன்றாவதாக ஆடுகளைக் குறிப்பிடும் போது சாவா மூவாப் பேராடு என்றும், பசுக்களைக் குறிப்பிடும்போது சாவா மூவாப் பெரும் பசு என்றும், சாசனங்கள் கூறுகின்றன. இதன் பொருள் என்னவெனில், கால்நடைப் பண்ணையாக முதலீடு செய்தபிறகு எத்தனை ஆண்டுகள் கழித்து அங்குச் சென்று பார்க்கும்போதும் பலன் தரக்கூடிய பசுக்களாகவும் (இளமையான கறவைப் பசுக்கள்) குட்டி ஈன்று பலன் தரக்கூடிய நடுத்தர வயதுடைய ஆடுகளாகவே தான் இருக்கவேண்டும். பண்ணையில் உள்ள முதிர்ச்சி அடையும் கால்நடைகளை நீக்கிவிட்டு உடனடியாக அந்த இடத்தில் உரிய கால்நடைகளைச் சேர்க்கவேண்டும் என்பதும், கால்நடைச் செல்வங்கள் இறந்து பட்டால் இறப்பு எண்ணிக்கை எவ்வளவோ அதே அளவு புதிய கால்நடைகளை அங்குச் சேர்த்தல் வேண்டும் என்பதும் முக்கிய விதியாக இருந்துள்ளது. இதனால் அப் பண்ணைகள் என்றுமே இளமை மாறாமல், எண்ணிக்கை குறையாமல் பலன் தரும் பண்ணைகளாகவே செயல்பட்டு வந்துள்ளன.

இம்மூன்று கருத்துக்களையும் ஒருங்கிணைத்து நோக்கும் போது ஒரு நாள் செய்த கொடையின் பயன் உலகம் உள்ளளவும் தொடர்ந்து நிகழ்வதோடு பல்வகை மாந்தரும் பயன் பெற்றனர் என்பதறிகிறோம்.

மேற்குறித்த நான்கு கல்வெட்டுக்களையும் கணக்கீடு செய்யும்பொழுது மாமன்னன் இராசராசனாலும், மற்றவர்களாலும் அளிக்கப்பெற்ற விளக்குகள் 160 ஆகும். இதனால் சோழ மண்டலத்தில் 86 பசுப்பண்ணைகளும், 73 ஆட்டுப் பண்ணை களும், 1 எருமைப்பண்ணையும் திகழ்ந்திருக்கின்றன. 86 பசுப் பண்ணைகளிலும் 4,128 பசுக்களும், 4128 கன்றுகளும், ஏறத்தாழ 344 காளைகளும் ஆக 8600 பசுக்களும், காளை களும் இருந்துள்ளன. 73 ஆட்டுப் பண்ணைகளில் 6828 ஆடுகளும், ஏறத்தாழ 13,656

ஆட்டுக்குட்டிகளும், 292 கிடாய்களும் ஆக மொத்தம் 20,776 ஆடுகளும் இருந்துள்ளன. ஓர் எருமைப் பண்ணையில் 30 எருமைகளும், 30 எருமைக் கன்றுகளும், 4 எருமைக் கிடாய்களும் ஆக மொத்தம் 64 எருமைகள் இருந்துள்ளன. மேலே கண்ட 160 கால்நடைப் பண்ணைகளும் தஞ்சைப் பெரியகோயில் நிருவாகிகளால் சோழ மண்டலத்தின் பல்வேறு ஊர்களைச் சார்ந்த 730 இடையர்களிடம் ஒப்புவிக்கப்பெற்றதை அவர்களது ஊர் மற்றும் பெயர் முதலிய விவரங்களோடு கல்வெட்டில் குறிக்கப்பெற்றுக் காணப் பெறுகின்றன.

மேலும் இதே கல்வெட்டு அன்றைய காசு மதிப்பீட்டில் கால்நடைகளின் விலையையும் குறிக்கின்றது. ஒரு காசுக்கு 3 அல்லது 4 ஆடுகளும், 2 காசுக்கு ஒரு எருமையும், 1 1/2 காசுக்கு ஒரு பசுவின் விலையும் இருந்துள்ளது என்பதனை அறிகிறோம்.

இங்கு நாம் கண்ட கால்நடைப் பண்ணைகள் முறையே :

1) அருமொழி தேவ வளநாட்டிலிருந்த நென்மேலி நாடு, அளநாடு, புறங்கரம்பை நாடு, மங்கல நாடு ஆகிய பகுதிகளிலும்,

2) இராஜராஜ வளநாட்டிலிருந்த வரகூர் நாடு, கீழ்வேங்கை நாடு, பன்றியூர் நாடு, வெட்டியார் படை வீடு, புலிவலக் கூற்றம், சென்னி மங்கலக் கூற்றம், பொய்யிற் கூற்றம், மிறைக் கூற்றம், புன்றிற் கூற்றம், குன்றிற் கூற்றம், எமப்பேர் கூற்றம் ஆகிய பகுதிகளிலும்,

3) உத்துங்கதுங்க வளநாட்டிலிருந்த வடகரைக் குன்றக்கூற்றம் ஆகிய பகுதிகளிலும்,

4) உய்யக்கொண்டார் வளநாட்டிலிருந்த பாம்பூர் நாட்டிலும்,

*5)* நித்த வினோத வளநாட்டிலிருந்த நல்லூர், கரம்பை நாடு, முடிச்சோழநாடு, காந்தாரநாடு, வெண்ணிக்கூற்றம், ஆவூர்க் கூற்றம், பொய்யிற் கூற்றம், பாம்புணிக் கூற்றம் ஆகிய பகுதிகளிலும்.

*6)* கேரளாந்தக வளநாட்டிலிருந்த உறையூர்க் கூற்றத்திலும்,

*7)* இராஜேந்திர சிங்க வளநாட்டிலிருந்த மிறைநாடு, பொய்கைநாடு, மண்ணிநாடு, மிறைக் கூற்றம் ஆகிய பகுதிகளிலும்,

*8)* க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டிலிருந்த திருநறையூர் நாட்டிலும்,

*9)* பாண்டிய குலாசனி வளநாட்டிலிருந்த மீசெங்கிளி நாடு, கீழ் செங்கிளி நாடு, கீழ் சூதி நாடு, பனங்காடு, ஏரியூர் சுண்டை மூலை நாடு, எயினாடு, பனங்கிய நாடு, மீய் பொழி நாடு, வட சிறுவாய் நாடு, கிளியூர் நாடு, ஆர்க்காட்டுக் கூற்றம், புன்றிற் கூற்றம், ஆவூர்க்கூற்றம் ஆகிய பகுதிகளின் கீழ் அமைந்திருந்த *112* ஊர்களிலும் கால்நடைப் பண்ணைகள் நிறுவப்பெற்றுச் செயல்பெற்று வந்தன.

இதுகாறும் கண்ட அனைத்துச் செய்திகளையும் தொகுத்து நோக்கும்போது தஞ்சைப் பெரியகோயிலில் மாமன்னன் இராசராசனும், மற்றவர்களும் அளித்த கொடையால் *160* நெய் விளக்குகள் நாள்தோறும் எரிந்து பயன் தந்து வந்துள்ளன. தஞ்சைப் பெரியகோயில் ஒரு வழிபாட்டுத் தலமாக மட்டுமல்லாமல், அருங்கலைகள் வளர்ந்த கேந்திரமாகவும், சமுதாய நலனை மையமாகக் கொண்டு பல்வேறு நலத்திட்டங்கள் செயல்பட்டு வந்த இடமாகவும், பொதுமக்களுக்கும், வணிகர்களுக்கும், ஊர்ச் சபைகளுக்கும் ஆண்டொன்றுக்கு *121/2* விழுக்காடு வட்டி என்ற விகிதத்தில் கடன் நல்கிய வங்கிகள் செயல்பட்ட இடமாகவும் திகழ்ந்தது என்பதை அறிகிறோம். அங்கு இருந்த அந்த விளக்குகள் நாட்டின் நலத்திற்காகவே ஒளிர்ந்தன.

மாமன்னன் இராசராசன் ஒவ்வொரு விளக்கு வைக்கும் பொழுதும் தன்நலமோ, தன் குடும்பத்தார் நலமோ சிறக்க இறைவனை வேண்டி வைக்கவில்லை. மாறாகத் தன்னுடைய போர் வீரர்களும், படைத்தலைவர்களும் போர்மேற் சென்று திரும்பும் போது உடல் உறுப்புகள் ஊனமின்றித் திரும்ப வேண்டும் என வேண்டி (கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் கடவ திரு விளக்குக்குத் தந்த பசு) திருவிளக்குகள் வைத்துள்ளதை நோக்கும் போது மாமன்னன் இராசராசனின் பரந்த உள்ளத்தையும், பண்பு நலனையும் உணரமுடிகின்றது.

160 கால்நடைப் பண்ணைகளைப் பெற்ற 730 இடையர் களுக்கு அவை உடைமைகளாயின. எந்த வித முதலீடும் இல்லாமல் உழைக்கும் வர்க்கத்தைச் சார்ந்தவர்களுக்கு அவை கிடைத் துள்ளன. மேலும் அப்பண்ணைகளின்பால் உள்ள உரிமை அவர்களுடைய வம்சத்தாருக்கும் உரியது என்பதையும் கல்வெட்டு தெளிவாக உணர்த்துகின்றது.

இந்த 730 பண்ணை மேற்பார்வையாளர்களின் கீழ் பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள பணி புரிந்து அவற்றைக் காத்தனர். அவர்களுக்கும் வேலை வாய்ப்பை இத்திருவிளக்குக் கொடை ஏற்படுத்தித் தந்தது.

இப்பண்ணைகளின் மூலமாக உற்பத்தியான பால், தயிர், வெண்ணெய், உரம் போன்ற பொருள்கள் மக்களுக்கே பயன்பட்டன. இத்திருவிளக்குக் கொடை இறையுடைமை யாகவும், பயன்பாட்டு நிலையில் பெரிதும் மக்களுடைமை யாகவும் திகழ்ந்தது என்பது மாமன்னன் இராசராசனின் மகத்தான பொதுவுடைமைச் சிந்தனையாகும்.

# கலை வடிவங்களில் நீரினைப் போற்றிய மாண்பு

ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றான நீர் எவ்வாறெல்லாம் திருக்கோயில் சிற்பங்கள், ஓவியங்களிலோடு தொடர்பு படுத்திக் காட்டப்பட்டுள்ளன என்பதனைக் காண்போம். இதிலிருந்து நம் முன்னோர்கள் தண்ணீருக்கு அளித்த சிறப்பினைக் காண முடிகின்றது.

பல்லவர்களின் சிற்பத்திறத்திற்குக் கட்டியம் கூறி நிற்கும் மகாபலிபுரத்தில் ஊரின் நடுவே உயர்ந்து திகழும் ஒரு குன்றில் திரும்பும் இடங்களிலெல்லாம் குடைவரைகளையும், சிற்பங் களையும் படைக்கச் செய்தவன் தமிழகக் கலை மரபிற்கு அருந்தொண்டாற்றிய இராஜசிம்ம பல்லவனாவான். இப் பெருவேந்தனின் சிற்பிகள் அங்கு படைத்த சிற்பங்களில் உலக கலை வல்லோரால் உச்சிமிசை வைத்துப் போற்றப்பெறுவது பகீரத தவ சிற்பக் காட்சியாகும்.

இக்குன்றின் மீது பெய்யும் மழைநீர் அனைத்தும் திரண்டு அங்கு சரிவில் திகழும் ஒரு கால்வாய் வழி ஓடி மலையின் கீழ் முகத்தில் இரண்டு பிதுக்கம் பெற்ற பாறைகளுக்கு இடையேயுள்ள சரிவின் வழி வீழ்ந்து பின்னர் தரையில் ஓடும். இயற்கையாக பெய்யும் மழைநீரால் நீர் வழிந்தோடும் காட்சி அற்புதமானது. ஒரு சிறிய நீர் வீழ்ச்சி போன்ற அந்த இடத்தை பல்லவனின் சிற்பி தன் கற்பனைக்கு ஏற்ற தளமாகக் கொண்டான். அதுதான் பகீரதனின் தவத்திற்காக விண்ணகத்திலிருந்து மண்ணகம் இறங்கிய விண்ணகக் கங்கையின் காட்சி, பாறையின் மேல் முகடுகளில் விண்ணில் பறந்து திரியும் விண்ணவர், கந்தர்வர் போன்றோர் கூட்டம் அணிசெய்ய பாறையின் மறுபுறம் கானகத்துக் காட்சி காணப்பெறுகின்றது. விலங்குகள், பறவைகள், வேட்டுவர்கள் அங்கு திகழ மானுடர் வாழும் ஊர்க்காட்சியும் அங்கு விளங்குகின்றது. நதிக்கரையில் கோயில் அங்கு நிகழும்

நிகழ்வுகள் அனைத்தும் திகழ இவைகளுக்கிடையே ஆறாகப் பெருகிவரும் கங்கை நதியின் காட்சியை அங்கு காட்டியுள்ளான்.

வலிமை மிகுந்த நீர்ச்சுழலாம் பெரும்புயலை ஒரு மானுடன் தன் தவ ஆற்றலால், விண்ணகத்திலிருந்து மண்ணகத்திற்கு கொணர்ந்து அதன் பெருவலிமையைப் பயன்படச் செய்தான் என்பதே பகீரதனோடு தொடர்புடைய புராணக் கதையாகும். புராணக்கதை அமைப்பினையும் கலையியலில் காட்டப்பெற்றுள்ள விண்ணகத்து நீராற் றலையும், மண்ணிற்குப் பயன்படச் செய்தல் என்ற நீரியியல் மேலாண்மைத் திறனை இக்கதைகளிலும், கலையியல் படைப்புகளிலும் உட்பொருளாக வைத்துக் கூறப்பட்டிருக் கின்றன என்பது தெரியவரும். உன்னதத் தத்துவங்களையும், கோட்பாடுகளையும் கற்பனை வளத்தோடு தம் படைப்புகளில் காட்டியுள்ள தமிழகத்துச் சிற்பிகளின் திறன் பெருமை கொள்ளத்தக்கதாகும்.

அதேபோல் திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவானைக்கா திருக்கோயில் சிவபெருமானை ஐந்து பெரும் பூதங்களாகப் பாவித்து வழிபாடு செய்யப்பெறும் மரபில் நீரின் வடிவமாகவே அங்குள்ள இலிங்கப் பெருமான் பண்டு முதல் போற்றப்பெறுகின்றது. உமாதேவி தன் ஆற்றலால் நீரையே இலிங்க உருவமாக மாற்றி அத்திருத்தலத்தில் பூசை செய்து வழிபட்டதாக புராண நூல்கள் கூறுகின்றன.

> திரையாறும் புனல் பொன்னித் தீர்த்தம் மல்கு
> திருஆனைக்காவில் உறைதேனே.........

என்றும்,

> முற்றாத வெண்திங்கள் கண்ணியானை
> முந்நீர் நஞ்சு உண்டு இமையோர்க்கு அமுதம் நல்கும்
> உற்றானைப் பல் உயிர்க்கும் துணை ஆனானை
> ஓங்காரத்து உள்பொருளை உலகம் எல்லாம்

பெற்றானைப் பின் இறக்கம் செய்வான் தன்னைப்
பிரான் என்று போற்றாதார் புரங்கள் மூன்றும்
செற்றானைத் திருஆனைக்கா உளானைச்
செழுநீர் திரளைச் சென்று ஆடினேனே

என்றும், திருநாவுக்கரசுப் பெருமானார் இத்தலத்து தேவாரப் பதிகத்தில் குறிப்பிட்டு இறைவனை நீரின் வடிவமாகக் காட்டுகின்றார்.

அப்புத்தலம் (நீர்த்தலம்) என்ற அடிப்படையில் இத்திருக் கோயில் போற்றப்பெறுவதால் பண்டு இத்தலத்தில் வெண்நாவல் மரத்தின் கீழ் அமைந்திருந்த நீர் ஊற்றாகத் திகழ்ந்த சுனையின் அடியில் இலிங்கத் திருமேனியை அமைத்து, நீர் வடிவமாகவே அவ்விறைவனை ஆராதித்தனர். காலப்போக்கில் நீர்ச்சுனையை உள்ளே வைத்து ஸ்ரீ விமானத்தை எழுப்பினர். அதுவே நாம் தற்பொழுது காணும் திருக்கோயில் அமைப்பாக விளங்குகின்றது.

இந்நீர்ச்சுனைத் தவிர இக்கோயில் வளாகத்தின் உள்ளேயே எட்டுத் தீர்த்தக்குளங்கள் உள்ளன. இந்த ஒன்பது நீர் நிலைகளும் சிவ வடிவமாகவே கருதப்பெற்றது. இதனை உணர்த்தும் வண்ணம் திருவானைக்கா கோயிலின் மூலவரான ஆனைக்கா அண்ணல் வீற்றிருக்கின்ற நீர்ச்சுனை உள்ள கருவறைக்கு நேர்வாயில் அமைக்காமல் ஒன்பது துளைகள் உள்ள ஒரு கற்பலகணியை அமைத்துள்ளனர். அந்த நீர்ச்சுனைப் பகுதிக்குச் செல்ல பக்க வாட்டில் இருபுறமும் குறுகிய வாயில்கள் உள்ளன. பலகணி வழியே நீரினுள் திகழும் இலிங்கத் திருமேனியைக் கண்டு வழிபடுதல்தான் அத்திருக்கோயிலின் வழிபாட்டு நெறியாகும். பலகணியில் உள்ள ஒன்பது துளைகளும் வட்டவடிவத் துளைகளாக இல்லாமல் கூட்டல் குறி வடிவில் அமைந்த துளைகளாகவே காணப்படுகின்றன. தமிழகத்துப் பண்டைய சிற்ப ஓவிய மரபில் திருக்குளங்களைக் காட்டுவதற்கு இத்தகைய வடிவமைப்பே பயன்படுத்தியுள்ளனர். எனவே, இப்பலகணியில் திகழும் ஒன்பது துளைகளும் அக்கோயிலில் ஈசனின் வடிவமாகத் திகழும் ஒன்பது திருக்குளங்களைக் குறிப்பதாகும்.

ஒருவர் திருவானைக்கா கருவறைக்கு முன்பு திகழும் இப் பலகணியின் அருகே நின்றுகொண்டு அந்த ஒன்பது துளைகள் வழியே உள்ளே சுனை நீரினுள் திகழும் இலிங்க உருவத்தைக் கண்டு தரிசிக்கலாம். அவ்வாறு காண்பதால் இத்திருக்கோயில் வளாகத்தினுள் திகழும் ஒன்பது குளங்களும் மூலவராகிய ஈசனின் வடிவங்களே என்பதை இது உணர்த்துவதாகும். அண்மைக் காலங்களில் இம்மரபும் நீரினைத் தெய்வமாகப் போற்றும் மாண்பும் அறிந்திராத காரணத்தால் கடந்த நூறு ஆண்டுகளுக்குள் திகழ்ந்த திருப்பணிகளின் போது நீரினுள் திகழ்ந்த இலிங்கத்தை மேலே கொண்டு வந்து பிரதிஷ்டை செய்து வழிபட்டு வருகின்றனர்.

திருஆனைக்கா திருத்தலத்தின் மூலவர் நீரின் வடிவமானவர் என்பது மட்டுமல்லாமல், அத்திருக் கோயிலினுள் திகழும் ஒன்பது நீர் நிலைகளுமே அவர் வடிவம் எனப் போற்றிய மரபில் நீரினை மக்கள் எவ்வளவு உயர்ந்ததாகப் போற்ற வேண்டும். காத்தல் வேண்டும் என்பதனை சமய அடிப்படையில் கலையியல் துணை கொண்டு கற்பித்துள்ள பாங்கை நம்மால் உணர இயலுகின்றது.

நீரே தெய்வம், நீரே சிவம் என்ற கோட்பாட்டை திருவானைக்கா கோயில் மட்டுமல்லாமல் தமிழகம் முதுவதும் உள்ள பல திருக்கோயில்களின் வாயிலாக மக்களுக்கு நம் முன்னோர்கள் கற்பித்து வந்தனர். அதனால்தான் பல திருக்கோயில்களில் உள்ள மூலவர் இலிங்கத்தை ஆனைக்கா உடையார் என்ற பெயரில் அழைத்துப் போற்றினர். சோழர், பாண்டியர் கல்வெட்டுக்களில் ஆனைக்கா உடையார் கோயில்கள் பல உள்ளதைக் காணமுடிகின்றது.

காவிரிக்கரை திருவானைக்கா திருத்தலத்தில் எவ்வாறு வெண்நாவல் மரத்தின் கீழுள்ள நீர்ச்சுனையினுள் இலிங்கத் திருமேனி வைத்துப் போற்றப்பெற்றதோ. அதே போன்ற மரபினை புதுக்கோட்டை மாவட்டம் சித்தன்னவாசல் மலையின் மீது காணமுடிகின்றது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பெற்ற சமண

முனிவர்களின் உறைவிடங்கள், முற்காலப் பாண்டியர்கள் தோற்றுவித்த சமண குடபோகம் ஆகியவற்றை தன்னகத்தே கொண்டு எழிலார்ந்த தோற்றத்துடன் திகழும் சித்தன்னவாசல் மலை மீது நாவற்சுனை எனும் பகுதி விளங்குகின்றது. உயரமான மலை முகட்டின் ஒரு பகுதியில் வெண்நாவல் மரம் ஒன்று திகழ அதனையொட்டி ஒரு நீண்ட இயற்கையான சுனை ஒன்றுள்ளது. ஏறத்தாழ 15 அடி ஆழமுள்ள இந்த சுனையினை நாவற்சுனை எனப் பெயரிட்டு அழைக்கின்றனர்.

இயற்கையாகப் பெய்யும் மழைநீரால் நிரம்பித் திகழும் இச்சுனையின் அடிப்பகுதியில் ஒரு குடைவரையை உருவாக்கி இருக்கிறார்கள். அக்குடைவரையின் மையப் பகுதியில் ஒரு சிவலிங்க உருவம் இருக்குமாறு அவ்வறையை அகழ்ந்து எடுத்துள்ளனர். கி. பி. 13ஆம் நூற்றாண்டில் நீரினுள் அமைந்த இக்குடைவரை எடுக்கப்பெற்றிருத்தல் வேண்டும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எப்போதாவது ஒருமுறை அந்நீர் முழுவதும் இறைக்கப்பெற்று, அக்குடைவரையில் உள்ள இலிங்கத்திற்குச் சிறப்பு வழிபாடு செய்வர். மற்றபடி ஆண்டு முழுவதும் இக்குடைவரையும், அதனுள் திகழும் இலிங்கமும் சுனை நீரின் உள்ளே தான் காணப்பெறும். இக்குடைவரையை ஜம்புநாதர் குடைவரை என்று அழைக்கின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலை எனும் ஊரின் மேற்கு திசையில் அமைந்துள்ள ஒரு நீண்ட மலை மேலமலை என்றழைக்கப்படுகிறது. அம்மலையின் மீது விஜயாலய சோழீச்சரம் என்னும் எழில் மிகுந்த முற்காலச் சோழர்களின் கற்றளி விளங்குகின்றது. அக்கற்றளிக்கு அருகே அம்மலை மீது ஒரு இயற்கையான சுனை அமைந்துள்ளது. இச்சுனையினை தலை அருவி சிங்கம் சுனை என அழைப்பர். இச்சுனையும் ஏறத்தாழ 15அடிக்கும் மேற்பட்ட ஆழமுடையதாகும். இதனுள் பக்கவாட்டில் மலையினைக் குடைந்து ஒரு குடைவரையையும் அதன் நடுவே இலிங்கத் திருவுருவம் இருக்குமாறும் குடைவரைக் கோயிலை அமைத்துள்ளனர். இக்குடைவரையும், இலிங்கமும் ஆண்டு முழுவதும் இயற்கையான சுனை நீரினுள் மூழ்கியே

இருப்பதால் இதன் சுனை நீர் இலிங்கத் திருவுருவமாகவே கருதப்பெறுகின்றது. இச்சுனைக்கு அருகே பாறையில் கி. பி. 1857ஆம் ஆண்டு பொறிக்கப்பெற்ற தமிழ்க் கல்வெட்டு ஒன்றுள்ளது. அதில் இராமச்சந்திர தொண்டைமான் எனும் புதுக்கோட்டை மன்னர் தன் துணைவியாருடனும் அவருடைய குரு சிவராம சுவாமி என்பவருடனும் வருகை புரிந்து நீர் முழுவதையும் இறைத்துவிட்டு குடைவரையி லுள்ள இலிங்கத் திருமேனியை வழிபாடு செய்ததாகக் குறிப்பிடுகின்றது. அக்கல்வெட்டு வாசகமாவது.

ஸ்வஸ்தி ஶ்ரீ சாலிவாகன சகாப்தம் 1789. கலி 4968, பிரபவ நாம சம்வத்சரம் உத்தர வேசாத மாசம் 4ஆம் தேதி 1857 மே மீ 14... விஜயராய ரகுநாத தொண்டைமானார் பவித்திரன் ராமச்சந்திர ராஜா தொண்டைமான் அவர்கள் மேற்படியார் திவ்ய பாரியையாகிய ஜானகி வேசாயி சாபு அவர்களும் சதகுரு ஶ்ரீ சிவராம சுவாமி அவர்களுடைய கிருபா கடாட்சத்தினால் இந்த தலவர சிங்கமென்குற தீர்த்தத்தை முழுவதும் யறைத்து நிர்மால்யம் செய்வித்து இந்த தீர்த்தத்தில் குகாவாசியிருக்கிற சுரஹரேஸ்வரர் என்கிற மூல லிங்கத்திற்கு அபிஷேகம் பூஜா நைவேத்யம் முதலானதும் நடம்பி வைத்து ஶ்ரீசிவ ராமசுவாமி அவர்கள் முன்னுக்கு தரிசனம் செய்தார்கள்.

இக்குடைவரையில் உள்ள இறைவனை பின்னாளில் சுரஹேஸ்வரர் (நோயைப் போக்குபவர்) என்ற பெயரால் மக்கள் அழைத்து, அச்சுனையின் தூய நீரினை நோய் நீக்கும் மருந்தாக அருந்தினர். நீரினைத் தெய்வப்படுத்தும் சான்றா தாரங்களை நோக்கும்பொழுது மழைநீர் சேகரிப்பு அவற்றை தூய்மையாகப் பாதுகாத்து ஆண்டு முழுவதும் குடிநீராகப் பயன்படுத்துதல் போன்ற நெறிமுறைகளை மேற்கொள்ள இத்தகு சமய மரபுகளை நம் முன்னோர்கள் கடைப்பிடித்தனர் என்பதனை அறியமுடிகின்றது.

பதினோராம் திருமுறையில் ஐந்தாவது பிரபந்தமாகத் தொகுக்கப்பெற்ற ஷேத்திரத் திருவெண்பாவை அருளிச் செய்தவர் ஐயடிகள் காடவர்கோன் என்பவராவார். திருத்தொண்டத் தொகை அருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவரை ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்

எனப்போற்றியுள்ளார். சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் கன்னி மதில்சூழ் காஞ்சிக் காடவர் ஐயடிகளார் எனக் கூறி அவர்தம் வரலாற்றை விரித்துரைத்துள்ளார்.

அத்யந்தகாமன் எனப்பட்டம் புனைந்து கொண்ட இராஜசிம்ம பல்லவனின் தந்தை முதல் பரமேசுவரவர்மனே (கி.பி.671-700) காடவர்கோன் என ஆராய்ச்சியாளர் கொள்வர். தன் மகனிடம் ஆட்சிப்பொறுப்பை அளித்துவிட்டு தில்லைச் சிற்றம்பலம் முதலாகவுள்ள சிவாலயங்கள் பலவற்றையும் நேரில் கண்டு வணங்கி, ஒவ்வொரு திருத்தலத்தினையும் ஒவ்வொரு வெண்பாவினாற் போற்றினார் என்பது வரலாறு. இவ்வாறு ஐயடிகள் காடவர்கோன் நாயனார் சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் திருத்தலங்களைப் போற்றிப் பரவிய இனிய தமிழ் வெண்பாக்களின் தொகுதியே க்ஷேத்திரத் திருவெண்பா என்ற பிரபந்தமாகும். அவர் பாடிய பாடல்களில் கிடைத்துள்ள 24 வெண்பாக்களில் 23 தலங்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. தில்லையில் தொடங்கி குடந்தைக் கீழ்க்கோட்டம், ஐயாறு, ஆடூர், திருத்துருத்தி, திருக்கோடிக்கா, பாண்டவாய்த்தென் இடைவாய், திருநெடுங்களம், குழித்தண்டலை, திருஆனைக்கா, மயிலாப்பூர், உஞ்சேனை மாகாளம், வளைகுளம், சாய்க்காடு, திருப்பாச் சிலாச்சிராமம், திருச்சிராமலை, திருமழபாடி, திருஆப்பாடி, காஞ்சிபுரம், திருப்பனந்தாள், ஒற்றியூர், திருக்கடவூர், திருக்கடவூர் மாயானம் என்ற தலங்களை அவர் வழிபட்டு தலத்திற்கொரு பாடல் பாடியுள்ளார். இவ்வரிசையில் பன்னிரெண்டாம் தலமாகப் போற்றப்பெறும் உஞ்சேனை மாகாளம் பற்றி ஐயடிகள்,

காளையர்கள் ஈளையர்கள் ஆகிக் கருமமயிரும்
பூளையெனப் பொங்கிப் பொலிவழிந்து – சூளையர்கள்
ஒகாளஞ் செய்யாமுன் நெஞ்சமே உஞ்சேனை
மாகாளங் கைதொழுது வாழ்த்து.

என்ற வெண்பாவைப் பாடி போற்றியுள்ளார். இங்குக் குறிப்பிடப் பெறும் உஞ்சேனை மாகாளம் எனும் தலம் எது என்பது பற்றி ஆராய்ந்த டாக்டர் மா. இராசமாணிக்கனார்,

காளிதாசரால் சிறப்பிக்கப் பெற்றதும், வடநாட்டில் உள்ளதுமான உச்சைனி நகரத்தில் உள்ள மாகாளம் எனும் சிவனார் கோயிலே உஞ்சேனை மாகாளம் என்ற முடிவினைக் கூறியுள்ளார்.

பேராசிரியரான பா. சூரிய நாராயணன் என்பார் இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடனைத் தாலுக்காவில் காரைக்குடிக்கு தென்கிழக்கே ஆறுகல் தொலைவிலுள்ள உஞ்சனை எனும் சிற்றூரில் உள்ள சிவாலயமே உஞ்சேனை மாகாளமாக இருக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார்.

திருஞானசம்பந்தர் திருஷேத்திரக் கோவையில், நளிர் சோலை உஞ்சேனை மாகாளம் என்றும், திருநாவுக்கரசர் திருத்தாண்டகத்தில் உஞ்சேனை மாகாளம், ஊறல், ஒத்தூர் என்றும் கூறி இத்தலத்தின் சிறப்பினைப் போற்றியுள்ளார். இத்தலம் பற்றித் தேவாரம் ஆய்வுத்துணை எனும் நூலில் குறிப்பிடும் தி. வை. கோபாலய்யர் இது உச்சையினி எனும் பெரும்புகழ் படைத்த வடநாட்டுத் தலம், தேவார வைப்புத் தலங்களுள் ஒன்று, காளிதேவி பூசித்த பதியாதலின் மாகாளம் எனப்பட்டது. இது விக்கிரமாதித்தனது தலைநகரம் என்ற கதை பிரசித்தமானது. இது இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் உள்ளது. பெருங்கதை முதலிய தமிழ்க் காப்பியங்களில் இடம்பெற்றது. இந்நகரின் அண்மையில் இருந்த மாகாள வனத்தில் பண்டு ஒரு காளிகோயில் இருந்தது. உச்சையினி மாகாளம் எனும் சிவாலயம் இன்றும் இருக்கிறது என்றும் கூறியுள்ளார்.

தேவாரப் பதிகங்கள் வாயிலாக அம்பர் மாகாளம், இரும்பை மாகாளம், உஞ்சேனை மாகாளம் என்னும் மூன்று மாகாளத் தலங்கள் பற்றி அறிய இயலும், சோழநாட்டு கல்வெட்டுக்களை ஆராயும்பொழுது திருக்காட்டுப்பள்ளிக்கு அருகிலுள்ள நியமம் எனும் ஊரில் ஒரு மாகாளம் இருந்ததற்கான சான்றுகள் காணப்பெறுகின்றன.

நியமத்தினை அடுத்து அதனுடன் இணைந்த ஊர்களாகத் திகழ்பவை இளங்காடு (இராஜகேசரி), உஞ்சினி எனும் ஊர்களாகும். நியமத்தில் ஓர் ஆயிரத்தளி இருந்து பின்னாளில் அழிந்துவிட்டது. இதுபற்றிய விரிவான ஆய்வினை மேற்கொண்டு நந்திபுரம் என்னும் நூலினுள்

முனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன் குறிப்பிட்டுள்ளார். ஆயிரம் இலிங்கங்களில் இரண்டு பெரிய இலிங்கங்கள் மட்டுமே ஆயிரத்தளி இருந்த இடத்தில் இன்றும் உள்ளன. இங்குத் திகழும் உஞ்சினி எனும் இன்றைய ஊரே திருநாவுக்கரசராலும், சம்பந்தராலும், ஐயடிகள் காடவர் கோன் அடியாராலும் கூறப்பெறும் உஞ்சேனை மாகாளம் எனும் திருக்கோயில் இருந்த இடமாகத் திகழ்ந்திருத்தல் வேண்டும்.

ஐயடிகள் காடவர்கோன் தில்லையில் தொடங்கிக் கூறும் தலங்கள் வரிசையில் அவர் பிறந்த தொண்டை நாட்டுத் தலங்களான மயிலை, காஞ்சி, ஒற்றியூர் ஆகிய மூன்று தலங்களைத் தவிர்த்து மற்ற தலங்கள் அனைத்தும் சோழ நாட்டுத் தலங்களாக இருக்கும்போது உஞ்சேனை மாகாளம் எனும் ஒரு தலம் மட்டும் எவ்வாறு வடநாட்டுத் தலமாக இருத்தல் கூடும். எனவே உஞ்சேனை மாகாளம் என்பது சோழநாட்டுத் தலமே என்பது உறுதி.

இவ்வூர் நியமத்தின் ஒரு பகுதியாக உஞ்சினி என்ற பெயரில் தற்போது வழங்குகின்றது. இங்குள்ள குளத்தின் நடுவே உஞ்சேனை மாகாளேஸ்வரர் எனும் சிவலிங்கம் நீரில் மூழ்கிய நிலையில் உள்ளது. இவ்வூரிலும் அக்குளம் சிவவடிவமாகவே போற்றப் பெற்றதால் இவ்வூர் மக்கள் முன்னாளில் இக்குளத்தின் நீரை மிகப் புனிதமாகக் கருதித் தூய்மையாகப் பேணிக்காத்தனர். பாதுகாப்பு உடைய தூய குடிநீர் பேணும் மேலாண்மை நெறியில் இது சமய நெறி சார்ந்த ஒரு அணுகுமுறையாகும்.

திருவிடைமருதூர், கங்கை கொண்டசோழபுரம், திருவிரிஞ்சி புரம் ஆகிய ஊர்களிலுள்ள சிவாலயங்களின் திருச்சுற்றில் அத்திருக்கோயில் இறைவனுக்கு திருமஞ்சனம் (நீராட்டுவதற்கு) செய்வதற்குரிய திருமஞ்சன நீர் எடுப்பதற் காகவும், கோயில் பணிகளுக்காகவும், மக்களுக்கும் பயன்படும் வகையில் சிம்மக் கிணறுகளை அமைத்துள்ளனர். பொதுவாகக் கிணறுகளிலிருந்து நீரை எடுப்பதற்கு பூட்டைகளின் உதவியால் வாளியும், கயிறும் கொண்டு முகர்வர். இவ்வாறு கருவிகளின் துணையின்றி படிக்கட்டு களின் வழி கீழிறங்கி கிணற்று நீரை எடுப்பதற்காக அமைக்கப்பெற்றுள்ள ஒரு அறிவியல் ரீதியிலான கட்டு

மானமே இச்சிம்மக் கிணறுகளாகும். இவ்வகை சிம்மக் கிணறுகளில் சூரிய ஒளி படும்படி கிணறுகள் தனியாக இருக்கும். அக்கிணறுகளில் இருந்து சற்றுத் தள்ளி கிணற்றின் நீர்மட்ட ஆழ அளவிற்கு தனியே ஒரு படிக்கட்டினை அமைத்துள்ளனர். படிக்கட்டின் கீழ்ப்பகுதிக்கும், கிணற்றின் நீர்ப்பகுதிக்கும் ஒரு குகை போன்ற அமைப்பை ஏற்படுத்தி கிணற்று நீரை படிக்கட்டுப் பகுதிக்குக் கொண்டு சேர்த்துள்ளனர். படிக்கட்டுகள் அமைந்துள்ள புறவாய்ப் பகுதியில் படுத்த நிலையில் இருக்கும் பெரிய சிங்கத்தின் உருவத்தை எழுப்பி அதன் மார்புப் பகுதியில் திறப்பினை வைத்து அவ்வழியே சிம்ம உடலுக்குள் புகுந்து உள்ளே உள்ள படிக்கட்டுகள் வழி இறங்கி கிணற்றுநீரை நாம் முகர்ந்து வரமுடியும். ஒரு கிணற்றை கலை அழகுடைய பதுமையாக்கி நீரை நுகரும் அற்புத அமைப்பை இம்மூன்று கோயில்களிலும் நாம் காண இயலுகின்றது.

## திருவிடைமருதூர் சிம்மக்கிணறு



**திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி கோயிலின் தல மரம் (மருத மரம்)**

இம்மூன்று கிணறுகளிலும் தலையாய சிறப்புடையது திருவிடைமருதூர் சிம்மக்கிணறே ஆகும். இதன் கலை அமைப்பும், வாயிற் பகுதியிலுள்ள சிற்பங்களின் அமைதியும் சோழர்கால கட்டுமானம் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. சிம்மத்தின் முதுகில் சிவபெருமானும், உமாதேவியும் வீற்றிருக்கின்ற எழிற்காட்சி சுண்ணச் சுதை உருவில் அமைக்கப் பெற்றுள்ளது. சிம்மத்தின் மார்புப் பகுதியில் காணப்படும் படிக்கட்டுகளுக்குச் செல்லும் வாயிலின் இருமருங்கும் சாமரம் ஏந்திய பெண்கள் காணப் படுகின்றனர். இக்கற்சிற்பங்கள் இரண்டும் கங்கை, யமுனை எனும் நதி தெய்வங்களின் திரு உருவங்களாகும். கிணற்று நீரை சிவனார்க்கு சாமரம் வீசுகின்ற நதி தெய்வங்களின் அம்சமான விண்ணகக் கங்கையாகப் போற்றுவதே இச்சிம்மக் கிணறு அமைப்பாகும். நீரினைத் தெய்வமாகப் போற்றும் மரபுக்கு இவ்வமைப்பு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கங்கைகொண்ட சோழீச்சரத்தில் காணப்பெறும் சிம்மக் கிணறு உடையார்பாளையம் ஜமீன்தார் தோழப்ப உடையாரால் புதுப்பிக்கப்பெற்றதாகும். இதனை அதன் பக்கவாட்டில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டு எடுத்துரைக்கின்றது. இங்குள்ள கிணறு மிகப்பெரியதாகும்.

வேலூர் அருகே திகழும் விரிஞ்சிபுரம் வழித்துணைநாதர் திருக்கோயில் திருச்சுற்றில் காணப்பெறும் சிம்மக்கிணறு பாயும் சிம்மவடிவில் உள்ளது. இதனை சிம்மக்குளம் என்றே இவ்வூர் மக்கள் அழைப்பர். இதனுள் செல்லும் படிக்கட்டுகளில் இறங்கி நீராட மக்களை அனுமதிக்கின்றனர். இப்புனித தீர்த்தத்தில் நீராடும் மக்கள் பிள்ளைச் செல்வம், பொருட்செல்வம், அருட்செல்வம் அனைத்தும் பெறுவதாக நம்புகின்றனர். கார்த்திகை மாதத்து கடைசி ஞாயிறன்று சிம்மக் குளநீராட்டு உற்சவம் நிகழ்கின்றது. அன்றைய நாளில் மகளிர் மட்டுமே நீராட அனுமதிக்கப் படுகின்றனர். இதனால் குழந்தைப்பேறு பாக்கியம் கிட்டுவதாக நம்புகின்றனர். இதற்கு கிணற்று நீரின் மருத்துவ குணம் காரணமாக அமையலாம்.



கங்கைகொண்ட சோழபுரம் சிங்கக் கிணறு

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை என்னும் ஊர் திருநலக்குன்றம் என்று பாண்டியர், சோழர் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பெற்றுள்ளது. இக்குன்றத்தில் உள்ள குடைவரைக் கோயிலும், அதில் பொறிக்கப்பெற்றுள்ள இசைக்கல்வெட்டும் உலகப் புகழ் பெற்றவையாகும். முற்காலப் பாண்டியரின் குடைவரைக் கோயிலுக்கு முன்பாக பிற்காலச் சோழர் காலத்தில் சிவாலயம் ஒன்று கட்டப்பெற்றது. இதனை பாண்டியர்களும், புதுக்கோட்டைப் பகுதி ஆட்சியாளர்களாக விளங்கிய காங்கேயர் களும், பல்லவராயர்களும் புதுப்பித்துக் காத்து வந்தனர் என்பதை சாசனங்கள் வழி அறியமுடிகிறது.

கி. பி. 15ஆம் நூற்றாண்டு கால கட்டத்தில் பல்லவராயர் களால் இக்கோயிலில் பல திருப்பணிகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளன. சுந்தர பாண்டியன் எடுப்பித்த கிழக்கு ராஜ கோபுரத்திற்கு நேர் எதிரே சற்றுத் தொலைவில் அழகிய நந்தி மண்டபம் (இடபக்கொட்டில்) ஒன்றினையும், எழில் மிகுந்த இடபதேவர் சிற்பம் ஒன்றினையும் அமைத்துள்ளனர். இந்த இடப தேவர் மண்டபத்திற்கு நேர் கிழக்கே இக்கோயிலுக்கு உரிய தீர்த்தக்குளத்தினை அமைத்துள்ளனர். இத்திருக்குளம் பாற்குளம் என்ற பெயரால் அழைக்கப்பெறுவதாகும்.

நாற்புறமும் கருங்கற் படிக்கட்டுகளுடன் திகழும் இக்குளத்தின் கீழ்க்கரையில் குளத்திற்கு வாய்க்காலாக வரும் சிறிய நீர்த்தூம்பு கல்லால் அமைக்கப்பெற்றுள்ளது. அத்தூம்பின் மேல் சிறிய கற்பலகை ஒன்று நாட்டப் பெற்றுள்ளது. அதில் கம்பீரமாக நிற்கும் பசு ஒன்றின் உருவம் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பெற்றுள்ளது.

இப்பசு பற்றி தமிழ் இலக்கியம் கூறும் சில செய்திகளைக் காண்போம். சமுதாய வளர்ச்சிக் கோட்பாட்டில் தமிழ் இனம் நெடுங்காலந்தொட்டே பண்பாட்டினைப் பேணிக்காத்துச் சிறப்பெய்தியுள்ளது. இலக்கியங்களின் வழி அறியலாகும் பல்வேறு பண்பியற் சிறப்புக்களில் பசுக்களைத் தமிழ் மக்கள் பேணிய திறம் குறித்து எண்ணலாம்.



பசுவின் மடியிலிருந்து நீர் வரும் வகையில் அமைக்கப்பெற்ற பாய்கால் அமைப்பு

தொல்காப்பியத்தின் புறத்திணையுள், வெட்சித் திணையில் ஆநிரை கவர்தல் பற்றிய குறிப்பு உள்ளது.

**வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்**
**ஆதந்து ஓம்பல் மேவற் றாகும். (2)**

படை எடுத்துச் செல்லும் வெட்சி வீரர்கள் பகைவருடைய பசுக்களைப் பாதுகாத்து கவர்ந்து வருவர் என்பதோடு அவற்றைத் தம் நாட்டிற்கு ஓட்டி வரும்பொழுது பசுக்களுக்குத் துன்பம் வராத வகையில் அழைத்து வருவர் என்று தொல்காப்பியர் கூறுவர்.

> படையியங் கரவம் பாக்கத்து விரிச்சி
> ............ .......... ..........
> ............ .......... ..........
> நோயின்று உய்த்தல் நுவலுழித் தோற்றம்
> ......... ......... .......... (3)

இக்குறிப்புக்கள் தவிர, சங்க இலக்கியமும் ஆக்களைப் பற்றிப் பல்வேறு செய்திகளைக் கூறுகின்றது. புறநானூற்றில் ஒரு செய்தி. போரெடுக்கும் ஆற்றல் மிக்க வீரன் ஓர் அறிவிப்பைச் செய்கிறான். பசுக்களும், பார்ப்பன மக்களும், பிணியுடையோரும். பெண்களும் பாதுகாப்பான இடத்திற்குச் சென்று விடுங்கள் நான் போர் செய்யப்போகிறேன் என்று கூறுகின்றான்.

> ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
> பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
> தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
> பொன் போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
> எம்மம்பு கடிவிடுது நும் அரண் சேர்மின். (9:1-5)

பசுவைப் பாதுகாப்பது தமிழர் நெறிபோல் கூறுகின்றது. பட்டினப்பாலை,

> நல் ஆனொடு பகடு ஓம்பியும் (201)

இவையும் இவை போன்ற பல குறிப்புக்களும் தமிழ் மக்கள் பசுவைப் பாதுகாத்து வளர்த்த சிறப்பையும், பண்பையும் கூறுவதோடு, பசுவிற்கு அளித்த முக்கியத்துவத்தையும் உணர்த்துகின்றது. இத்தகு சிறப்பு வாய்ந்த இப்பசுவின் புடைப்புச் சிற்பத்தினைக் கூர்ந்து கவனிப்போமாயின் பசுவின் மடியோடு ஒரு பெரும் துளை காணப்பெறும். துளையின் மத்தியில் பசுவின் காம்புகள் தொங்கும்படி சிற்பி அதனைப் படைத்துள்ளான். மறுபுறம் இருந்து குளத்தை நோக்கி வரும் வாய்க்கால் நீர் அத்துளை வழிப் பாய்ந்து தூம்பாகத் திகழும் கருங்கல் வாய்க்கால் அமைப்பின் வழியே குளத்திற்குள் விழுமாறு அச்சிற்பப் படைப்பு அமைந்துள்ளது.

மழைநீர் பெருகி அத்துளை வழி குளத்திற்குள் பாயும்போது நாம் அச்சிற்பப் படைப்பைக் காண் போமாயின், அங்கு நிற்கும் பசுவின் மடியிலிருந்து அந்த நீர் குளத்திற்கு வருவது போன்றே காட்சியளிக்கும். எனவேதான் நீர் நிரம்பிய அக்குளத்தைப் பாற்குளமாகத் தன் கலைப் படைப்பால் மாற்றியுள்ளான். அம்மகோன்னதப் படைப் பாளி. பசு சிற்பம் இடம்பெற்றுள்ள இக்கற் பலகையின் பின்புறம் சென்று துளை வழி நோக்குமாயின், அங்கு திகழும் பசுக்காம்புகளுக்கு இடையே ஒரே நேர்க் கோட்டில் கோயிலுக்கு வெளியே திகழும் பெரிய நந்தி, கோபுரவாயில், உள்ளே திகழும் மூலவர் இலிங்கம், மலையடிவாரத்தில் உள்ள பழைய குடைவரையின் மூலவர் இலிங்கம் ஆகியவை அமைத்துள்ளதைக் காணலாம்.

கல்லணைக்குக் கிழக்காக வெண்ணாற்றில் திகழும் கச்சமங்கலத்து தடுப்பணையின் வடகரை மதகில் நீர் பாயும் மதகினை தெய்வப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இங்கு தெய்வச் சிற்பங்களை இடம்பெறச் செய்துள்ளனர். இச்சிற்பங்கள் அனைத்தும் நீரினுள் மூழ்கிய நிலையில்தான் காணப் பெறுகின்றன. கணபதி, பைரவர், வெண்ணை உருண்டை ஏந்திய கண்ணன், இலக்குமி ஆகிய திருவுருவங்கள் மதகின் சுவரில் பொதிந்து காணப் பெறுகின்றது. முதன்முதலாக ஆண்டுதோறும் வறட்சி காலங்கள் நீங்கி காவிரி நீர்ப் பெருக்கெடுத்து ஓடும்பொழுது இம்மதகு திறக்கப்பட்டு கால்வாய் மூலம் ஆற்காட்டுக் கூற்றம் முழுவதும் பாசனவதி பெறும் அத்தெய்வ உருவங்களுக்குப் பூசை செய்து மதகினைத் திறப்பது பழைய மரபாகும்.

தடைகளும் தீமைகளும் நீங்கி ஆண்டு முழுவதும் நீர் கிடைக்கவேண்டும் என்பதற்காக கணபதிப் பெருமானையும், அளவிற்கு மீறிய வெள்ளம் வந்து மதகும், கரையும் உடையாமல் இருக்க காப்புக் கடவுளான பைரவரையும், இந்நீர் வளத்தால் அப்பகுதி கால்நடைச் செல்வங்கள் நலம்பெற வேண்டும் என்பதற்காக வெண்ணை ஏந்திய கோபாலனையும், இம்மதகு நீரால் கழனிகள் நிரம்பி

நெல்வளம் மிகுந்து செல்வம் மிக வேண்டும் என்பதற்காக திரு என்னும் இலக்குமி தேவியையும் அங்கு நிறுத்திப் போற்றி வணங்கியுள்ளனர். மேலும் காப்புத் தெய்வமான பைரவமூர்த்தியின் திருவுருவம் நீரினுள் இருக்குமாறு அமைத்திருப்பதோடு, வெண்ணாற்றின் வடகரையின் மேல் மற்றொரு பைரவமூர்த்தியின் திருஉருவத்தையும் அமைத் துள்ளனர். தென்கரையில் மதகிற்கு மேலாகக் கிராமத்தின் காப்புத் தெய்வமான முனீஸ்வரர் கோயில் ஒன்றினையும் அமைத் துள்ளனர்.

ஸ்வஸ்திகக் குறியீடு இந்துக்களின் புனிதச் சின்னங் களுள் ஒன்றாகும். இக்குறியீடு இடப்பட்டுள்ள 15 முத்திரைகள் சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. பெர்சியா, சுமேரியா முதலிய பழைய நகரங்கள் நிலவிய இடங்களிலும், இந்தியாவில் பஞ்மார்க் காசுகளிலும், சாதவாகனர் காசுகளிலும், தென்னிந்தியாவில் குன்னத்தூர், கோவை முதலிய இடங்களில் காணப்பட்ட பெருங்கற் சின்னங்களிலும், பானை ஓடுகளிலும், புகாரில் கிடைத்த தமிழ்நாட்டு காசுகளிலும் இக்குறியீடுகள் காணப்படுகின்றன. ஹிட்லரின் சின்னமாகக் கூட இது விளங்கிற்று.

திருச்சி மாவட்டம் திருவெள்ளறை எனும் ஊர் திருமங்கை ஆழ்வாரால் மங்களா சாசனம் பெற்ற விண்ணகரம் ஒன்றினைப் பெற்ற ஊராகும். இவ்வூரில் பல்லவர் கால ஸ்வஸ்திகக் கிணறு எனும் சிறுகுளம் ஒன்றுள்ளது. முழுவதும் கருங்கற்சுவர்களால் அமைக்கப்பெற்றுள்ள இப்பெருங் கிணறு மேலிருந்து நோக்கும் போது ஸ்வஸ்திக வடிவிலேயேத் திகழும் ஸ்வஸ்திகத்தின் நான்கு கால் பகுதிகளிலும் படிக்கட்டுகள் அமைந்துள்ளன. ஒரு படிக்கட்டில் இருந்தபடி குளிப்பவர்களை மற்ற மூன்று பகுதி படிக்கட்டுகளில் குளிப்பவர்கள் பார்க்கமுடியாது. இப்படிக்கட்டுகளுக்கு எதிரே உட்புறச் சுவரில் வரிசையாகத் தெய்வத் திருவுருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படுகின்றன. அக்கிணற்று நீரை புனிதமுடையதாகக் கருதவும், அந்நீரைப் பயன்படுத்துபவர்கள் தங்கள் முன்பு தெய்வ உருவம்

இருக்கும்பொழுது, அந்நீருக்கு எவ்விதக்கேடும் செய்ய மாட்டார்கள் என்ற பெருநோக்கோடு கலையியல் படைப்புகளை அங்கு இடம்பெறச் செய்துள்ளனர். கலையியல் ரசனை என்பது தமிழ் மக்களின் வாழ்வியல் நெறியோடு ஒன்றி நிற்பது என்பதைக் காட்டுவதே இங்குள்ள கலைப் படைப்புக்களாகும். அதனால்தான் உன்னதக் கோட்பாடுடைய ஒரு அற்புதக் கவிதை இந்த மார்ப்பிடுகு பெருங்கிணற்றில் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளது.



ஸ்ரீகண்டார் காணா வுலகத்தே காதல் செய்து நில்லாதேய்
பண்டேய் பரமன் படைத்தநண் பார்த்துநின்று நைய்யதேய்
தண்டார் மூப்பு வந்துன்னைத் தளரச்செய்து நில்லாமுன்
உண்டேல் உண்டு மிக்கது உலகறிய வைம்மினேய்

இப்பாடலைப் படிக்கும்போது நாலடியார் பாடல் ஒன்றினைப் படிப்பது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. பல்லவர் காலத்து எழுத்தமைதியைக் கொண்ட இப்பாடல் மாற்பிடுகுப் பெருங்கிணறு தோற்றுவித்த காலத்திலேயே பொறிக்கப் பட்டிருக்க வேண்டும். கம்பன் அரையன் தான் மட்டும் கேணி தொட்டு அறஞ்செய்ததோடு நில்லாதேய் பிறரையும் அறஞ்செய்யத் தூண்டி இப்பாடலை இக்கிணற்றின் சுவரில் வெட்டச்செய்திருக்க வேண்டும்.

மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் தாம் இயற்றிய மணிமேகலையில்,

> செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்குங்
> கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
> அமர முனிவன் அகத்தியன் தனாது
> கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை (9-12)

என்று பாடியுள்ளார். இப்பாடலடிகளின் வழி காவிரி ஆற்றிற்கும், அகத்தியருக்கும் உள்ள தொடர்பை அறிய முடிகின்றது.

இதனை வலியுறுத்துவது போல் அகத்தியனார் தென் திசைக்கு வந்த வரலாற்றைத் தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுவதாவது, சோழ வளநாடு சோறுடைத்து என்று பாராட்டப்பெறும் பகுதியாக விளங்கியது. சோழநாடு வான்பொய்ப்பினும் தான் பொய்யாத காவிரியால் வளம்பெற்றுச் சிறப்பு பெற்ற நாடாகும். இதனாலேயே காவிரிநாடு, பொன்னிநாடு என்றெல்லாம் அறிஞர்களால் புகழப்பெற்றது. இத்தகு பெருமை வாய்ந்த காவிரியாறு, அகத்தியர் தென்னாட்டிற்கு வந்து, மேற்குத் தொடர்ச்சி மலையாகிய மலையமலையில் தங்கியிருந்த காலத்தில் காந்தன் என்ற ஒரு சோழ மன்னன் வேண்டிக்கொண்டதால் இம்முனிவரது அரும்பெரும் முயற்சியினால் தான் வெட்டப்பெற்றது என்ப தாகவும், அகத்தியர் கங்கையாறுழைச் சென்று காவிரியாறு வாங்கிக்கொண்டு வந்தார் என்றும் நச்சினார்க்கினியர் கூறியிருப்பது இவ்வரலாற்றையே குறிப்பாக உணர்த்து வதோடு தென்னாட்டில் ஓடும் காவிரியாறு வடநாட்டிலுள்ள கங்கையைப் போல் பெருமையும் சிறப்பும் வாய்ந்தது என்பதை உறுதிப் படுத்துவது ஆகும். இவ்வரலாற்றினையே, மணிமேகலைச் செய்யுளில் சீத்தலைச் சாத்தனார் சிறிது வேறுபடக் கூறியிருப்பது நோக்கத்தக்கது. நச்சினார்க்கினியர் உரை, மணிமேகலைப் பாடலடிகள் இவற்றின் விளக்கமாகத் திருவலஞ்சுழி கோயில் மேல் விதானத்தில் காணப்பெறும் ஓவியத் தொகுப்பு அமைந்துள்ளது.

திருவலஞ்சுழி திருக்கோயில் வரலாற்றுச் சிறப்புடைய சோழர் காலக் கற்றளியாகும். இவ்வாலயத்து அம்மன் கோயில் திருச்சுற்று மண்டபத்து வடபுறவிதானத்தில் ஒரு நீண்ட நாயக்கர் கால ஓவியக்காட்சி காணப்பெறுகின்றது. குடகு மலையில் உற்பத்தி யாகும் காவிரி சோழநாட்டில் பாய்ந்து கடலில் கலக்கும் காட்சியே இங்கு ஓவியமாகத் தீட்டப்பெற்றுள்ளது.

அகத்தியரின் கமண்டலத்தில் அடங்கியிருந்த காவிரி, காக்கை வடிவில் வந்த விநாயகரால் கவிழ்க்கப் பெற்று பாய்ந்து ஓடுவதே காவிரி ஆறு என்பதை புராணங்கள் கூறுகின்றன. இதனைப் புலப்படுத்தும் முகமாக இக்காட்சியின் தொடக்கப்பகுதி அமைந்துள்ளது. பின்பு காவிரியானது நீண்டு ஓடி திருவரங் கத்திற்கு மேற்கே காவிரி, கொள்ளிடம் என்று இரு கிளைகளாகப் பிரிவது, திருவரங்கத்திற்குக் கிழக்கே மீண்டும் இணைவது, திருவரங்கத்தீவில் உள்ள கோயிலில் அரங்கன் கிடந்த கோலத்தில் காணப்பெறுவது, பிறகு சோழநாட்டில் காவிரியின் கரை தோறும் சிவாலயங்கள் விளங்க நெளிந்து பாய்ந்து பூம்புகாரில் கடலோடு சங்கமித்தல் ஆகிய காட்சிகள் தொடர்ந்து காணப்படுகின்றன. ஒரு ஆற்றின் போக்கை நாட்டுப்புற ஓவிய பாணியில் இப்படைப்பு காட்டி நிற்கின்றது.

# அகில இந்திய வானொலி நிலையம், திருச்சி. ஒலிபரப்பிய சிற்றுரைகள்

## உறுதி

மனதில் உறுதி வேண்டும் என்று பாடினார் மகாகவி பாரதி. எந்த ஒரு செயலையும் வெற்றிபெற்றதாகச் செய்வதற்கு முதலில் நமக்கு மன உறுதி வேண்டும். வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கும், சாதனைகள் பலவற்றை செய்வதற்கும், பிரச்னைகள் வந்தால் அவற்றை எதிர்த்துப் போராடுவதற்கும் உறுதி வேண்டும்.

பாலில் வெண்ணெய் உள்ளது. அதைப்பெற பாலைத் தயிராக்கி, பின் மோராக்கிக் கடையவேண்டும். விதைக்குள் தான் மிகப் பெரும் ஆலமரம் உள்ளது. அதுபோல். உறுதிகொண்டவர் களால்தான் இந்த உலகத்திற்கு பல புதிய வரவுகள் வந்து கொண்டேயிருக்கின்றன. எண்ணத்தில் தெளிவும், திடமும் இருந்தால் எதையும் சாதிக்கலாம்.

பெரியபுராணத்திலே வரும் 63 நாயன்மார்களில் ஒருவர் தண்டியடிகள் ஆவார். இவர் இரண்டு கண்ணும் பார்வை அற்றவர். இருந்தும் திருவாரூர் கமலாலயக் குளத்தினை தூர்வாரும் பணியில் பங்குபெற்றார். பார்வையற்ற இவர் குளத்தின் கரையில் ஒரு முளைக்குச்சியை நட்டு அதிலே நீண்ட கயிற்றின் ஒரு முனையை கட்டிவிட்டு, அடுத்த முனையினைத் தன் கையில் பிடித்துக்கொண்டு, குளத்திற்குள் இறங்கி மண்ணை வெட்டி கூடையில் நிரப்பி கயிற்றைப் பிடித்துக்கொண்டு கரையின் மேலேறி கொட்டி வந்தார். இதனைக் கண்ட சமணர்கள் நகைத்ததாகக் கதை கூறுகிறது. இக்காட்சித் தொகுப்பு சிற்பமாக தாராசுரம் கோயிலில் உள்ளது. இக்கதை புராணம் கற்பனை என்று வைத்துக்கொள்வோம். இருப்பினும், அச்செயலானது அந்த பார்வையற்ற மனிதரின் மன உறுதியினையே வெளிப்படுத்து கின்றது.

பார்வையையும், கேட்கும் சக்தியினையும் இயற்கை அவரிடமிருந்து பறித்திருந்தாலும் நெஞ்சில் உறுதி இருந்தால் உடல் ஊனங்கள் தூள் தூளாகும் என்று வாழ்ந்து காட்டியவர் ஹெலன் கெல்லர். அவர் படித்தார். பட்டம் பெற்றார். பல நாடுகளுக்கும் சென்று ஊனமுற்றோரின் நலன் காக்க அயராமல் உழைத்தார். இவர் ஓர் விளக்கு என்றால் அந்த விளக்கிற்கே ஒளியூட்டியவர், ஹெலன் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற வெறியோடு, தன் வாழ்வையே தியாகம் செய்தவர் அவரது ஆசிரியை ஆன் சல்லிவன் என்ற பெண்மணி ஆவார்.

அமெரிக்காவின் ஒரு கிராமத்தில் மிகவும் ஏழ்மை நிறைந்த குடும்பத்தில் பிறந்தவர்தான் ஆன் சல்லிவன். ஏழ்மை ஒரு பக்கம் ஐந்து வயதிலேயே பார்வைக்கோளாறு வேறு ஏற்பட்டது. அதே நேரத்தில் தாயும் இறந்துபோனாள். உடன் பிறந்த தம்பியும் காச நோயாளி சிறிது காலத்திலேயே அவனும் இறந்துபோனான். யாருமற்ற பெண்ணாய் நின்றாள் ஆன். உறவுகள் உதறித் தள்ள அரசு ஆதரவற்றோர் இல்லத்தில் சேர்ந்தாள். அங்கேயும் மிகவும் கொடுமையாக நடத்தப் பட்டாள். அரை வயிற்று சாப்பாடு, அடி, உதை என்று அங்குள்ள குழந்தைகளின் வாழ்க்கை தொடர்ந்தது. ஆனின் பார்வை சிறிது சிறிதாகக் குறைந்து முழுவதும் பார்வை பறிபோனது. தான் படித்து பெரிய ஆளாய் வரவேண்டும் என்று நினைத்தவருக்கு பார்க்கவே முடியாதபடி பார்வை பறிபோனது. அந்த நிலையில் அந்த இல்லத்திலிருந்த ஒரு பெண் ஆனிடம் பார்வை இழந்தவர் களுக்காகப் பள்ளி ஒன்றுள்ளது என்றாள். அதிலிருந்து நான் படிப்பேன். பள்ளிக்கூடம் போவேன் என்று ஆன் மந்திரம் போல் தினமும் தனக்குள்ளே சொல்லிக் கொள்வாள். அவளின் உள்ள உறுதியே அவளுக்கு அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. அந்த இல்லத்தைப் பார்வையிட வந்த ஒரு பெரியவர் ஆனின் ஆர்வத்தைக் கண்டு பார்வையற்றோர் பள்ளியில் சேர்த்துவிட்டார். தன் 14ஆவது வயதில் முதல் வகுப்பில் சேர்ந்தாள் ஆன். அங்கும் அவளுக்கு நிறைய

அவமானங்களே ஏற்பட்டன. அத்தனை தடைகளையும் உடைத்து மன உறுதியுடன் போராடி தேர்வின் முடிவில் பள்ளியின் முதல் மாணவியாகத் தேர்ச்சிபெற்றார்.

தேர்வில் வென்று என்ன பயன்? மன ஊனம் கொண்ட உலகம், உடல் ஊனம் உள்ளவர்களை எளிதில் ஏற்பதில்லை என்ற உண்மையினைப் படித்து முடித்து வேலை தேடும்பொழுது அவள் உணர்ந்தாள். இருந்தாலும் மன உறுதியும், நம்பிக்கையும் உள்ளவர்களுக்கு உலகில் வேறு ஒரு வழி நிச்சயம் கிடைக்கும். அதேபோல் ஆனுக்கும் ஹெலன் கெல்லர் வடிவில் வேலை தேடி வந்தது.

ஹெலன் ஒரு பணக்கார வீட்டுக்குழந்தை. ஆனால் அவளால் பார்க்கவும் கேட்கவும் முடியாது. இதனாலேயே அவள் ஒரு மன நோயாளிபோல் செயல்பட்டாள். விரக்தியின் விளிம்பில் அந்த ஆறு வயதுப் பெண் பிடிவாத குணமும், அடங்காத குணமும் கொண்டு திகழ்ந்தாள். அவளைக் கவனிக்க வந்த தாதிகள் யாருமே 10 நாட்கள் தாக்குப் பிடித்து நின்றதில்லை. அந்த நிலையில் ஆன், ஹெலனின் தாதி யாகவும், ஆசிரியையாகவும் நியமிக்கப்பட்டாள். இருபது நாட்களிலேயே ஓடி விடுவாள் என்று ஹெலனின் பெற்றோர்கள் எண்ணினர். ஆனால் அங்கும் ஆன் சல்லிவனின் மன உறுதி வென்றது.

தன் அன்பால் ஹெலன் கெல்லரை மாற்ற முடியும் என்று உறுதியாக நம்பினாள். அவள் உறுதி வென்றது. ஹெலனை உலகம் போற்றியது.

# காய்ப்பாரத்தைக் கொடி தாங்காதா?

காய்ப்பாரத்தைக் கொடி தாங்காதா ? கொடி மெலிதாக இருக்கும். அதில் உள்ள காயோ, பழமோ எடை கூடுதல் அதனைக் கொடியால் தாங்க இயலுமா ? இயலாது போலத் தோன்றினாலும், உண்மை என்னவெனில் காய்ப்பாரத்தை கொடி தாங்கும். பழைய தமிழ்த் திரைப்படத்திலே,

**மண்ணுக்கு மரம் பாரமா ?**
**மரத்துக்குக் கொடி பாரமா ?**
**கொடிக்குக் காய் பாரமா ?**
**பெற்றெடுத்த குழந்தை தாய்க்குப் பாரமா ?**

என்பதாக ஒரு பாடல் உண்டு. தாய் தன் குழந்தையை ஒருபோதும் பாரமாக நினைப்பதில்லை. பிள்ளைகள்தான் இன்று பெற்றவர் களைப் பாரமாக எண்ணத் தொடங்கி விட்டனர். முதியோர் இல்லங்கள் வளர்ந்து வருவது இதைத் தான் காட்டுகின்றது.

மாணவர் ஒருவரிடம், உன்னை பெரிதும் பாதிக்கும் ஒரு சம்பவம் எது என்று கேட்டபொழுது, நான் தவறு செய்தால் அம்மா என்னை அடிப்பார்கள், எனக்கும் அது வலிக்கும். ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் அம்மா எனக்கு அன்போடு உணவு அளித்து, ஆசையுடன் அணைத்துக் கொள்வார். அப்போது அவர் அடித்த போது ஏற்பட்ட வலி, அந்த அன்பினால் மறந்து போய்விடும். அதே நேரம் என் ஆசிரியர் என்னை அடித்தால் ஏற்படும் வலியின் பின்னே, அந்த அன்பினை உணரமுடியாது என்றார்.

ஒரு ஆசிரியார் தன்னுடைய மாணவன் நல்ல மதிப் பெண்கள் பெற்று சிறந்த மாணவனாக வரவேண்டும் என்று விரும்பினால், முதலில் அவர்தான், மாணவர்கள் விரும்பும் ஆசிரியராக மாறவேண்டும். அப்போதுதான் தன் தாயின் அன்பைப் போன்றதே நம் ஆசிரியரின் அன்பும் என்ற எண்ணம் மாணவர்கள் மத்தியில் ஏற்படும். தன் மீது அன்புகொண்ட ஆசிரியர் நடத்தும் பாடங்களின் மீது மாணவன் சிறப்பான கவனம் செலுத்துகிறான்.

ஒரு சில ஆசிரியர்கள், தங்கள் சொல் பேச்சு கேட்காத மாணவர்களை பிரம்பால் அடிப்பது அல்லது வெளியே நிற்க வைப்பது போன்ற தண்டனைகளைக் கொடுக்கின்றனர். தன்னுடைய முன்னேற்றத்தில் ஆசிரியருக்கு இருக்கும் அக்கறையே, இந்தத் தண்டனைக்குப் பின்னால் இருக்கிறது என்பதை மாணவர்களுக்குப் புரிய வைப்பதில் சிக்கல் ஏற்படுகிறது. இத்தவறே பல்வேறு தீய விளைவுகளை உண்டாக்கி விடுகின்றது.

தங்கிப் படிக்கும் விடுதி வசதி கொண்ட, உறைவிடப் பள்ளி ஒன்றில் மாணவர்களை நன்கு அறிந்த, ஒரு சிறந்த மனிதர் முதல்வராகப் பணியாற்றி வந்தார். ஒருநாள் காலை எப்பொழுதும் பரபரப்பாக இருக்கும் பள்ளியின் விளையாட்டுத்திடல், மாணவர்களின் நடமாட்டம் இன்றி அமைதியாக இருந்தது. காலை வேளையில் விளையாடிக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு இன்று என்னவாயிற்று யாரையும் காணவில்லையே ? என்று முதல்வர் அதிர்ச்சியுற்றார். விடுதியில் நடந்த சிறு தவறுக்காக மாணவர்களை அவரவர் அறையிலேயே இருக்கும்படி விடுதிக்காப்பாளர் ஆணை யிட்டிருந்தார். அதன் காரணமாகவே மாணவர்கள் யாரும் இன்று வெளியில் வரவில்லை என்பதையும், அழகிற்காக வைக்கப் பட்டிருந்த மலர்த்தொட்டியில் யாரோ ஒரு மாணவன் சிறுநீர் கழித்து அசுத்தப்படுத்திவிட்டதையும் அறிந்துகொண்ட முதல்வர், விடுதிக் காப்பாளரிடம் சென்று எந்தவொரு மாணவனும் தவறு செய்திருக்க மாட்டான், எனவே அவர்களை காலையில் நடைப்பயிற்சி செய்ய அனுமதியுங்கள், நான் பார்த்துக்கொள்கிறேன் என்றார்.

இதுபோன்ற சூழலில் மாணவர்களை தண்டிப்பதோ வெளியேற்றுவதோ தான் வழக்கமான நடைமுறையாக முன்னர் இருந்து வந்தது. ஆனால் முதல்வரின் முடிவு மாறுபட்டிருந்தது. மலர்த்தொட்டியினை அசுத்தப்படுத்திய மாணவனையும், அதன் காரணத்தையும் அறியும் வரை தான் உணவு உண்ணாமல் இருக்க முடிவு செய்தார். தங்கள் முதல்வரின் வழக்கமான செயல்களைக் கண்டு வந்த மாணவர்களுக்கு, இன்று அவரது செயல்பாடுகளில் ஒருவித மாற்றம் தோன்றவே அவரைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினர். அப்போது தான் அவர் உணவு உண்ணவோ, தேநீர் அருந்தவோ உணவு விடுதிக்கு வராததைக் கண்டனர்.

முதல்வரின் உண்ணாநிலை குறித்த செய்தி மாணவர்கள் மத்தியில் பரவியது. தங்களுள் ஒருவன் செய்த தவறுக்காக அவர் தன்னையே வருத்திக்கொள்வது மாணவர்களிடையே கவலையை ஏற்படுத்தியது. அதைக்கண்ட ஒரு மாணவன் யாரும் இல்லாத நேரம் பார்த்து, முதல்வரின் அறைக்குள் சென்று, அழுதபடியே ஐயா நான்தான் மலர்த்தொட்டியை அசுத்தப்படுத்தினேன், நேற்றிரவு அவசரமாக கழிவறை செல்ல எழுந்தேன், என் அறையின் மேல் தாழ்ப்பாளை திறக்க முயன்றேன். எனக்கு எட்டாததால் உடனே திறக்க முடியவில்லை. மேலும் அவசரமாக இருந்ததால் இவ்வாறு நடந்தது என்று கூறி, தன்னை மன்னிக்கும்படி ஓவென்று கதறி அழுதான். எல்லோர் முன்பும் இதனைக் கூற வெட்கமாக இருந்தபடியால் இங்கு வந்தேன். ஐயா, நீங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்கிறேன். நான் செய்த தவறுக்காக, தாங்கள் உண்ணாமல் இருப்பதைப் பார்த்துப் பொறுக்க முடிடயவில்லை, என்னை மன்னித்து விடுங்கள் என்று கூறி கதறினான்.

அம்மாணவன் கூறியதைக் கேட்ட முதல்வர் நெகிழ்ந்து போனார். உடனே மாணவர்கள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். நேற்று நடந்த நிகழ்விற்கு நிருவாகத் தவறுதான் காரணம் எந்த மாணவனும் பொறுப்பல்ல, என்று கூறினார். அதோடு நில்லாமல் கழிப்பறைகளின் மேல்தாழ்ப்பாள்களை உடனடியாக மாற்றி எல்லா மாணவர்களுக்கும் எட்டும் உயரத்தில் அமைத்திட ஆணையிட்டார். அப்பிரச்சினைக்கு தீர்வு கண்டதோடு அல்லாமல் அதற்கான பொறுப்பைத் தானே ஏற்றுக்கொண்டார். அந்த மாணவனையும் தண்டிக்கவில்லை. அவர் அந்தக் குற்றமற்ற மாணவனுக்கும் அவமானம் நேர்ந்திடாமல் பார்த்துக்கொண்டார். சில ஆண்டு களுக்குமுன் இதே போன்ற ஒரு உண்மை நிகழ்வு கேரள மாநிலத்தின் பள்ளியொன்றில் நடந்தது. தவறு செய்த மாணவியின் பொருட்டு தன்னையே தண்டித்துக் கொண்ட ஆசிரியரைப் பற்றிய செய்தி நாளேடுகளில் வெளிவந்ததை நாம் பார்த்திருக்கலாம்.

பிள்ளைகள் அறியாமல் செய்யும் தவறுகளை பெற்றோரும், ஆசிரியரும் காய்ப்பாரத்தை கொடி தாங்குவது போல் தாங்கு கின்றனர் என்பதே உண்மை.

# மீதூண் விரும்பேல்

மீதூண் விரும்பேல் என்பது ஔவையார் வாக்காகும். எல்லாவற்றிற்கும் ஓர் அளவு உண்டு. அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகுமென்பது பழமொழி. நாம் உண்ணக் கூடிய உணவானது சமச்சீர் சத்துக்கள் நிறைந்ததாக இருக்கவேண்டும். அத்தகு உணவினையும் அளவுக்கு அதிகமாக சாப்பிடக்கூடாது. அப்படி உண்போமானால் நாமே, நமக்கு நோயினை வலிய ஏற்படுத்திக் கொண்டவர் களாகி விடுவோம்.

உணவாலானது நம் உடம்பு, நாம் எத்தகைய உணவை உட்கொள்கிறோமோ, அத்தகைய உடலும், உள்ளமும் நமக்கு அமைகின்றன. அதனால்தான், முற்காலத்தில் உணவிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். அப்பொழுதெல்லாம் பெரியோர்கள் கண்ட இடங்களில் சாப்பிடமாட்டார்கள். அதனால் அவர்கள் மற்றவர்களை தாழ்ந்தவர்கள் என நினைத்தார்கள் என்று அர்த்தம் அல்ல, சுத்தமான உணவை உட்கொண்டு உடலையும், உள்ளத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டியே உணவு உண்ணும் முறையில் மிக்க கண்டிப்பு காட்டினர்.

அளவோடு சோறும், காய்கறியும் அரை வயிற்றுக்கும், நீர், பால், மோர் போன்றவைகள் கால் வயிற்றுக்கும், கால் வயிறு வெற்றிடமாகும் இருக்கும்படி உண்போமானால் நோய் எப்போதும் நம்மை அணுகாது. உண்பதற்காக வாழாமல், வாழ்வதற்காக உண்டால் உடலுக்கு மருந்து என்பதே தேவை இல்லை. இதனையே திருமூலர்,

**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.**

என்று உடலைக் காத்தலின் தேவையினை உணர்த்தியுள்ளார். அதேபோல திருக்குறளில் மருந்து எனும் அதிகாரத்தில் உணவே மருந்து என்று வள்ளுவர் தெளிவாகக் கூறியுள்ளார்.

மேலும் உண்ட உணவு செரித்த பின்னர் உண்ணுபவருக்கு மருந்து உண்ணும் தேவை ஏற்படாது. உணவு செரித்த பின்னரே மீண்டும் உண்ணவேண்டும். மற்றுமோர் குறளில், பசி அறிந்து உணவு உண்ணாமல், நல்ல சுவையால் அதிகமாக உண்பவர்களுக்குப் பல்வேறு நோய்கள் உண்டாகும் என்று கூறுகின்றார். நாவின் சுவைகருதி உண்ணாமல், உடல் நலன் கருதியே உண்ணுதல் வேண்டும். எளிதில் செரிக்கக் கூடிய உணவுகளான காய், பழங்கள், பருப்பு வகைகள் போன்ற வற்றினையே உண்ணுதல் நலம் பயக்கும். உணவை வேக வேகமாகச் சாப்பிடுதல் கூடாது. நன்றாக மென்று விழுங்க வேண்டும். அப்பொழுதுதான் வாயில் உள்ள உமிழ்நீர் நன்றாகச் சுரந்து உணவுடன் கலக்கும், உமிழ்நீர் கலக்காத உணவு வயிற்றின் உள்ளே சென்றாலும் அது செரிக்காது. குடலும் தன் ஆற்றலை இழந்துவிடும் அபாயம் உள்ளது. இதனாலேயே நொறுங்கத் தின்றால் நூறு வயது என்ற பழமொழி ஏற்பட்டது போலும்,

உணவு உண்ணும்பொழுது இடையிடையே தண்ணீர் குடித்தல் கூடாது. நாளொன்றிற்கு குறைந்தது மூன்று லிட்டர் அளவு தண்ணீராவது நாம் குடிக்கவேண்டும். உண்ட உணவு குருதியுடன் கலப்பதற்கும், குருதி தூய்மை அடைவதற்கும், உடலிலுள்ள கழிவுப்பொருள்களை வெளியேற்றுவதற்கும் தண்ணீர் அருந்துவது அவசியமாகின்றது. நம்முடைய உணவுப் பழக்க வழக்கங்களே நம் உடல் நலத்தை தீர்மானிக்கின்றது.

உணவு உயிரைக் காக்க வல்லது மட்டுமல்ல, நாகரிகம், பண்பாடு, சமூகம் போன்றவற்றிலும் மாறுதலை உண்டாக்க வல்லது. இதனை உணர்த்தும் பழைய கதை ஒன்று, பொன், பொருள் போன்றவற்றில் பற்றில்லாத துறவு மனப்பான்மையுள்ள ஒருவர் ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு வழிப்பயணம் செல்கின்றார். அப்பொழுது அவருக்கு தாகம் ஏற்படவே, செல்லும் வழியில் இருந்த குடிநீர் கிணற்றைக் கண்டார். தாகம் தீர்க்க அக்கிணற்றை அடைந்தார். அங்கு நீர் இறைக்க ஒரு வாளியும், கயிறும் வைத்திருந்தனர். அப்பெரியவர் நீரை இறைத்து தன் தாகத்தினை தீர்த்துக்கொண்டார். தாகம் தீர்ந்ததும் அந்த

வாளியையும், கயிற்றையும் தாம் கையோடு எடுத்துச் சென்றால் செல்லும்வழியில் பயன்படுமே என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

ஆனால் மறுகணமே திடீரென்று இத்தகு தவறான எண்ணம் தம் மனதில் எப்படி ஏற்பட்டது என நினைத்து திகைத்தார். பொருள் மீது பற்றற்ற, நான் பிறர் பொருளை அபகரிக்க நினைத்தேனே ? இப்படி ஒரு எண்ணம் தனக்கு ஏற்பட என்ன காரணம் என்று ஆச்சரியப்பட்டார். அதன் காரணத்தை அறிய விரும்பிய அவர் உடனே, அவ்வூர் மன்னனிடம் சென்றார். அப்பெரியாரைக் கண்ட மன்னன் மகிழ்வுற்று மிகுந்த மரியாதையுடன் வணங்கி வரவேற்றார். துறவி நடந்த நிகழ்வினைக் கூறி அக்கிணறு அமைத்து அங்கே நீர் இறைப்பதற்கான கயிறு, வாளியை வைத்தவர் யார்? என்று கேட்டார். மன்னரும் தன்னுடைய அமைச்சரை அழைத்து அதன் விபரம் அறிந்து வரும்படி கூறினார். கிணறு அமைக்கப்பட்ட விதம் குறித்த உண்மையினைக் கண்ட அமைச்சர், இவ்வூரில் உள்ள பெரிய தனவந்தரின் சொத்துக்கள் அரசால் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றிய அந்த நிதியிலிருந்து தான் இக்கிணறு அமைக்கப்பட்டது. அந்த தனவந்தர் தவறான வழியில் சொத்துக்கள் சேர்த்தவர் என்றார்.

அப்படிச்சொல்லுங்கள் அதனால்தான், துறவு வாழ்க்கையை மேற்கொண்டவனான என் மனதில் அந்த கிணற்று நீரைக் குடித்ததும் வாளியையும், கயிற்றையும் எடுத்துச்சென்றால் என்ன என்ற எண்ணம் தோன்றியதோ? என்றார். இக்கதை வலியுறுத்துவது நல்ல குணங்கள் மட்டுமல்ல, தீய குணங்களையும் உண்டாக்கும் வல்லமை நாம் உண்ணும் உணவிற்கு உண்டு என்பதேயாகும். நம் முன்னோர்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வியல் முறைகளை மீறியதால்தான் இன்று உணவே மருந்து எனும் நிலை மாறி மருந்தே உணவு என்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

நல்ல உணவினை அளவோடும், குறித்த நேரத்திலும் உண்பவர்களுக்கு என்றுமே நலம்.

# மலையின் உயரம் மலைக்குத் தெரியுமா ?

மலையின் உயரம் மலைக்குத் தெரியுமா ? என்பது தமிழ்ப் பழமொழி. மக்களுடைய அனுபவத்தின் வெளிப்பாடே பழமொழியாகும். ஓங்கி உயர்ந்து நிற்கும் மலையின் உயரத்தைப் பார்த்து நாம் பிரமித்துப் போய் நிற்போம். ஆனால் அந்த மலை இவர்கள் நம்மைப் பார்த்து வியந்து நிற்கிறார்களே என்று ஆச்சரியம் கொள்வதில்லை. பலவிதமான சிறப்புகளையும் தன்னகத்தே கொண்டு அமைதியாகத் திகழ்கின்றது. அதுபோலவே அறிஞர் பெருமக்கள் தங்கள் வாழ்வினை அமைத்துக்கொண்டு நமக்கெல்லால் எடுத்துக்காட்டாக வாழ்ந்தனர்.

திராட்சைக் குலையில் நிறைய பழங்கள் உள்ள கொத்து, தாழ்வாகக் குனிந்து இருக்கும், பழங்கள் குறைவாக உள்ள கொத்து நிமிர்ந்து நிற்கும். அதைப்போலவே ஒருவன் எந்த அளவு நன்னடத்தை, குணம் ஆகியவற்றால் உயர்ந்தவனோ, அத்தனைக்கு அத்தனை அடக்கமாக இருப்பான் என்பது ஒரு யூதப் பழமொழி, இதனையே வள்ளுவர்,

**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்.**

என்றார்.

ஒரு கிராமத்தின் வழியே அடுத்த ஊர் நோக்கி மகான் ஒருவர் சென்று கொண்டிருந்தார். அப்போது முரட்டுத்தனம் கொண்ட நான்கைந்து பேர் அவரை சூழ்ந்துகொண்டு அடித்தார்கள். அவரும் அவர்களிடம் அடியினை வாங்கிக்கொண்டு, ஏதும் சொல்லாமல் அவர் வழியே சென்றார். இதனை தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் அவரிடம் வந்து, ஐயா நீங்கள் ஏன் உங்களை அடித்தவர்களை, எதிர்க்காமல் அடி வாங்கிக்கொண்டு வருகிறீர்களே? என்று கேட்டார். அதற்கு

அந்த மகான் இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று நான் அவர்களிடம் அடி வாங்கியதால் அவர்களின் கோபம் தணிந்திருக்கும். இரண்டு என்னை அடிக்காமல் இருந்திருந்தால், அவர்கள் வேறு யாரையாவது அடித்திருப்பார்கள் என்றார். இப்படிக் கூறியவர் வேறு யாருமல்ல, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த, இன்று எல்லோராலும் போற்றப்படும் மகாவீரர்தான் அவர்.

மகாத்மா காந்தி அவர்கள் சிறைக் கட்டுப்பாட்டு விதிகளுக்கு எத்தனை மதிப்பு அளித்தார் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு, எப்பொழுது நாம் இன்னொருவருக்குக் கட்டுப்பட்டுச் சிறையில் இருக்கின்றோமோ, அப்பொழுது நம் மனத்திற்கு பிடிக்கா விட்டாலும் சரி, நாம் அந்த விதிகளின்படிதான் நடக்கவேண்டும் என்று மிக கண்டிப்பாக இருந்தார். ஆறு ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டு எரவாடா சிறையில் இருக்கையில் காந்திஜிக்கு குடல் வால் அழற்சி நோய் ஏற்பட்டது. அரசு அவரை பூனாவிலுள்ள ஸாஸீன் மருத்துவமனையில், அறுவை சிகிச்சைக்காகக் கொண்டு போய் சேர்த்தது.

ஒருநாள் காகா கலேல்கர் காந்திஜியைக் காண மருத்துவ மனைக்கு வந்தார். இவர் வந்த நேரம் காந்திஜி படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். அவர் மருத்துவமனை வழங்கிய உடையில், அதுவும் அந்நிய நாட்டு துணி உடுத்தியிருந்ததைக் கண்டு கலேல்கர் ஆச்சரியப்பட்டார். ஆனால் மருத்துவமனையில் அங்கு வழங்கப்படும் ஆடையினைத் தான் அணியவேண்டும் என்பது உத்தரவு, அதனாலேயே அவர்கள், கொடுத்த அந்நியநாட்டுத் துணிகளை காந்திஜி உடுத்தியிருந்தார் என்று பின்னர் காககலேல்கர் தெரிந்துகொண்டார். சிகிச்சைக்குப்பின் அவர் உடல்நிலை மிகவும் பலவீனமாக இருந்தது. அது குறித்து அனைவரும் கவலைப்பட்டனர்.

இந்நிலையில் கர்னல் மோடர் காந்திஜியைப் பார்க்க வந்தார். அரசாங்கம் தங்களுக்கு விடுதலை அளித்துவிட்டது,

இனி நீங்கள் உங்கள் விருப்பம் போல் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம், ஆனால் என்னைக் கேட்டால் தங்கள் உடல் மிகவும் பலவீனமாக இருப்பதால் இன்னும் சில நாட்கள் இங்கு இருப்பதுதான் நல்லது என்றார். கர்னல் இதைச் சொல்லி முடித்ததுதான் தாமதம், உடனே காந்தி தன் பக்கத்தில் இருந்தவர்களைப் பார்த்து, தயவு செய்து என் கதர் ஆடைகளைக் கொண்டு வந்து கொடுங்கள். இனியும், இந்த விதேசி ஆடைகளை என்னால் அணிந்து கொண்டிருக்க முடியாது என்றார்.

தமிழகம் பெற்ற தவப்புதல்வர் பெருந்தலைவர் காமராசர், இவரும் எளிய இனிய பண்பாளராகவேத் திகழ்ந்தார். இவர் முதலமைச்சராக இருந்தபொழுது நடந்த ஒரு நிகழ்வு, ஒரு நாள் வெளியூர் பயணத்தின் பொழுது அரசு விருந்தினர் விடுதியில் தங்க நேர்ந்தது. இரவு உறங்கும் நேரம் வந்ததும் விடுதி அறைக்கு வெளியே காற்றோட்டமான இடத்தில் ஒரு கட்டில் போடச் சொல்லி அதில் படுத்து உறங்கச்சென்றார். அப்போது முதல்வரின் பாதுகாப்பு கருதி அவருக்கு அருகிலேயே காவலர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அதைக்கண்ட பெருந்தலைவர் ஏம்ப்பா நீயும் போய் தூங்கவேண்டியதுதானே, என்னை என்ன காக்கா, நரி வந்தா தூக்கிக்கொண்டுபோய் விடப்போகிறது, போய் நிம்மதியா படுத்துத் தூங்கு எனச் சொல்லி அக்காவலரை அனுப்பி வைத்தார். தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தும் சிறிதும் கர்வமின்றி ஒரு மலையைப்போல் தன் செயலால் உயர்ந்து நின்றார்.

ஓர் சாதாரண குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து வாழ்வில் எத்தனையோ தோல்விகள் ஏற்பட்டும் சிறிதும் மனம் தளராமல் போராடி வெற்றிபெற்று அமெரிக்க நாட்டின் அதிபராக உயர்ந்தவர் ஆபிரகாம்லிங்கன். அதிபர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடும் பொழுது, தம் கட்சியினரிடையே நான் வெற்றிபெற்றால், நம்முடைய எதிரிகளையெல்லாம் ஒழித்துவிடுவேன் என்று முழங்கினார். தேர்தலில் வெற்றிபெற்று அதிபராகவும் ஆனார். இவருடைய

கட்சியினர், இனி எதிர்க்கட்சியினரை உண்டு இல்லை எனச் செய்துவிடுவார் என எண்ணியபோது, லிங்கன் அதற்கு மாறாக தன்னை எதிர்த்தவர்களின் வீடு தேடிச்சென்று அவர்களைச் சந்தித்து நட்பு பாராட்டி, அன்போடு பேசி அரவணைத்தார். அவர்களும் உள்ளம் நெகிழ்ந்து ஆகா, இத்தனை சிறந்த மனிதரையா நாம் இவ்வளவு காலம் வசைபாடினோம் என்று வருந்தினார்கள். இதனைக் கண்ட இவருடைய கட்சியினர், எதிர்க்கட்சியினரை ஒழித்துவிடுவேன் என்ற நீங்கள் இப்பொழுது அவர்களின் வீட்டிற்கே சென்று வருகின்றீர்களே, இது என்ன புதிராக உள்ளதே என்றனர். ஆம் எதிரிகளே இல்லாமல் செய்து விடுவேன் என்று கூறினேன் அல்லவா? அது உண்மைதான். இனிமேல் அவர்கள் நமக்கு நண்பர்களாக மாறிவிட்டனர் பார்த்தீர்களா? என்று சொல்லிச் சிரித்தார். உலக வரலாற்றில் மலைக்கு நிகராகக் கருதப்படும் ஒரு மாமனிதர் அகந்தை யின்றி வாழ்ந்தார். அவர் அகந்தை கொண்டிருந்தால் எதிரிகள், நண்பர்களாகும் சாத்தியம் உண்டா ?

மலையின் உயரத்தை மலை அறியாததுபோல, பெரியோர் களின் உயர்வை மற்றவர்கள்தான் அறிய இயலுமே தவிர அவர்கள் அறியமாட்டார்கள்.

# சோதனைகளை எதிர்கொள்ளல்

மானிடவியல் அறிஞர்கள் உலகில் உள்ள மக்களை பல்வேறு இனங்களாக வரையறை செய்துள்ளனர். இந்த இனங்களுள் துன்பங்களை எதிர்கொண்டு, அத்தகு கடுந்துன்பங்களையெல்லாம் தாங்கி நின்று உலகின் போக்கினையே மாற்றியமைத்தது மட்டுமல்லாமல், வரலாற்றில் தங்களுக்கென்று ஒரு தனித்துவத்தை ஏற்படுத்திக்கொண்டு வாழ்பவர்கள், இன்று இஸ்ரேல் நாட்டை தங்கள் தாயகமாகக் கொண்டு வாழ்ந்துவரும் யூதர்களேயாவர்.

ஈராயிரம் ஆண்டுகால வரலாற்றில் இந்த இனத்தில் பிறந்தவர்களால் உலகம் புரட்டி போடப்பட்டுள்ளது. தனக்கு ஏற்பட்ட அத்துனை துன்பங்களையும் தாங்கிக்கொண்டு மக்களுக்காகவே வாழ்ந்தவர் ஏசுபிரான். கொடுமையான துன்பத்திற்கு ஆளாக்கப் பட்டு, சிலுவையிலே அறையப் பட்டார். அப்பொழுதும் மனங் கலங்கவில்லை அவர். அன்றைய காலகட்டத்தில் குற்றம் புரிந்தவர்களை த்தான் சிலுவையில் அறைந்தார்கள். சிலுவை என்னும் குறியீடே குற்றத்தின் சின்னமாகக் கருதப்பட்ட காலம் அது. மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட ஒரு சின்னமாகத் திகழ்ந்த சிலுவையினை புனிதர் ஏசுபிரான் தன் தோளில் சுமந்து, அதிலே அறையப்பட்டதனால், சிலுவைச் சின்னம் புனிதச் சின்னமாக மாறியது. இன்று உலகெங்கும் பரந்து வாழும் கிறித்துவப் பெருமக்களால் புனிதமாகப் போற்றப்பட்டு, சிலுவையானது அம்மக்களின் நெஞ்சங்களிலே சுமக்கப்படு கின்றது. உலக மக்களில் மிக அதிகமானவர்களால் பின்பற்றப் படும் கிறித்துவ மதம் உருவாகக் காரணமாய்த் திகழ்ந்த ஏசுபிரான் யூத இனத்திலிருந்து வந்தவர்.

அவர்தம் கருத்துக்களிலிருந்து மாறுபட்டு, புதிய சிந்தனை களுடன் உலகின் பெரும்பாலான நாடுகள் தன்னுடைய புரட்சிக் கருத்துக்களால் பொதுவுடமை நாடுகளாக மாறுவதற்குக் காரணமாய் இருந்தவர், பொதுவுடமைச் சித்தாந்தத்தின் தந்தையாகப் போற்றப்படும்

காரல் மார்க்ஸ் ஆவார். இனம், மதம், மொழி கடந்து உலகத்தொழிலாளர்களே ஒன்று கூடுங்கள் என்று அறைகூவல் விடுத்தார். உட்டோப்பியா எனப்படும் கற்பனாவாத கம்யூனிசத்திற்கு மாற்றாக விஞ்ஞானப்பூர்வமான கம்யூனிச சித்தாந்தத்தை உருவாக்கியவர் இவர். தன் வாழ்வில் மிகப்பெரும் சோதனைகளை எதிர்கொண்டவர் காரல் மார்க்ஸ், இவரைப் போன்ற ஒரு இலட்சியவாதி, தீர்க்கதரிசி, வரலாற்றின் போக்கையே மாற்றிவிட்ட மகான் எதிர்கொண்ட சோதனைகளை சொல்லால் வடிக்க இயலாது.

தன் குடும்பச் செலவிற்காக தன்னுடைய மேல் சட்டையினை அடகுவைத்தார். சட்டையில்லாத காரணத் தால் இவரால் வெளியில் செல்ல இயலவில்லை. போதிய உணவின்றி குழந்தைகள் பசியால் வாடும். ஒரு சந்தர்ப்பத்தில் இவர் மனைவி மற்றும் குழந்தையின் உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது. நான் மருத்துவரை அழைத்து வரவில்லை. அழைத்துக்கொண்டு வரவும் என்னால் முடியாது. ஏனென்றால் என்னிடத்தில் மருந்து வாங்கு வதற்கும் பணம் கிடையாது. சென்ற எட்டு நாட்களாக வெறும் உருளைக் கிழங்கையும், ரொட்டியையும் கொண்டுதான் என் குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறேன். இன்றைய தினம் இவைகள் கூடக் கிடைக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது என்று தன்னுடைய நண்பர் ஏங்கெல்ஸ்க்கு எழுதிய கடிதத்தில் மார்க்ஸ் மனம் வருந்திக் கூறுகிறார். இத்தனை சோதனைகளையும் எதிர்கொண்டு உருவாக்கிய இவரின் பொதுவுடைமைச் சித்தாந்தத்தினால் உந்தப்பட்டே லெனின் தலைமையில் சோவியத் ஒன்றியம் மலர்ந்தது. அதனைத் தொடர்ந்து உலகில் முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் பொதுவுடமை அரசுகள் தோன்று வதற்கு காரணமாகத் திகழ்ந்த காரல் மார்க்ஸ் ஒரு யூதர்.

அறிவியல் துறையில் பல்வேறு வகையில் நல்ல பல திட்டங்களுக்கு ஆக்க சக்தியாகப் பயன்படுவதோடு அல்லாமல், மிகப் பெரும்பாலான மக்களை அச்சுறுத்தும் அழிவு சக்தியாகவும் விளங்குகின்றது அணுசக்தி. இந்த அணுசக்தி உருவாகக் காரணமான சார்புக் கொள்கையினைக்

கண்டவர் ஐன்ஸ்டைன், ஆக்க சக்திக்கு மட்டுமே பயன்படவேண்டும் என்று விரும்பியவர் அதனாலேயே மனிதாபிமானத்தை மறக்காதீர்கள் என்று அறிக்கை விடுத்தார். அமைதி விரும்பியான இவர் நாகஷாகி, கிரோஷிமா அழிவுகளைக் கண்டு மிகவும் மனம் வேதனைப்பட்டார். இவருடைய அறிவுத்திறனிலும், அரிய குணங்களிலும் மயங்கிய ஜவகர்லால் நேரு, ஐன்ஸ்டைன் உண்மையிலேயே உண்மையைக் காண முயன்றார் அவர். தீமை, பொய் இவற்றுக்கு இணங்காதவர். நிழல்கள் கவிந்து இருள் படரும் உலகிற்கு வழிகாட்டும் ஓர் ஒளிவிளக்காக அவர் விளங்கினார் என்று புகழ்மாலை சூட்டியுள்ளார். இத்தகு பெருமைக்குரிய ஐன்ஸ்டீன் ஒரு யூதர் ஆவார். யூதர் என்ற ஒரே காரணத்தாலேயே இவர் ஜெர்மானிய அரசால் பல்வேறு சோதனைகளுக்கு ஆளானார். தான் பிறந்த நாட்டில் குடியிருக்க முடியாமல் பல நாடுகளுக்கும் குடியேறி இறுதியில் அமெரிக்காவில் வாழ்ந்து மறைந்தார். மதம், அரசியல், அறிவியல் போன்ற துறைகளிலும் உலகின் போக்கினையே மாற்றியமைத்த இவர்கள் எதிர்கொண்ட சோதனைகள் ஏராளம்.

சர்வாதிகாரி இட்லரால் மிகுந்த கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு, இலட்சக்கணக்கில் கொல்லப்பட்டவர்கள் இந்த யூத இன மக்களே. இம்மக்கள் எதிர்கொண்ட சோதனைகள் நாம் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு கொடுமைகள் நிறைந்தவை. இருந்தும் கூட அத்தகு சோதனைகளையெல்லாம் எதிர்கொண்டு வலிவும், பொலிவும் பெற்ற ஒரு தேசத்தை தங்களுக்கென்று உருவாக்கிக் கொண்டு, இன்று உலகெங்கும் தங்கள் பொருளாதார ஆதிக்கத்தைப் பறைசாற்றி வருகின்றனர். நீர்வளம் குறைந்த இத்தேசத்தில் மிகக்குறைந்த அளவு நீரினையேப் பயன்படுத்தி பழங்கள் உற்பத்தியில் உலகளவில் முதலிடம் பெற்றுத் திகழ்கின்றனர். உலக வரலாற்றில் யூத இன மக்கள் பட்ட சோதனைகளுக்கு அளவேயில்லை என்று சொல்லலாம். சோதனைகளை எதிர்கொண்டு போராடி வென்றதனால்தான் இன்று அவர்கள் தலைநிமிர்ந்து நிற்கின்றார்கள்.

# எளிமை என்றால் ஏழ்மையா

"உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால் உலகத்தில் போராடலாம். உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் தலை வணங்காமல் நீ வாழலாம்" என்று மிகப் பிரபலமான தமிழ்த் திரைப்படப்பாடல் ஒன்று உண்டு. எந்த நிலையிலும் எளிய வாழ்வினை மேற் கொண்டவர்கள் மக்கள் மனங்களிலே நிறைந்து நின்று காலந்தோறும் வரலாற்றின் பக்கங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஏன் வரலாற்றில் தீயவர்களும், கொடுங் கோலர்களும் இடம்பெறவில்லையா என்று நீங்கள் கேட்கலாம். அவர்களும் வரலாற்றின் சுவடுகளில் இடம்பெற்றிருந்தாலும், "உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால் உலகம் உன்னை வணங்கும், நிலை உயரும் போது பணிவு கொண்டால் உயிர்கள் உன்னை மதிக்கும்" எனும் திரையிசைப் பாடலிலே வருவது போல, எளிய வாழ்வு வாழ்ந்தவர்களே மக்கள் நெஞ்சங்களில் நீங்கா இடம்பெற்றுத் திகழ்கின்றனர்.

மோசி கீரனார் எனும் பழந்தமிழ்ப் புலவர், அரசனைப் பாடி பரிசில் பெறக்கருதி வெகு தொலைவிலிருந்து வருகின்றார். உடனே அரசனைக் காண இயலவில்லை. நடந்து வந்த அசதியால் அரசன் படுத்து உறங்கும் கட்டில் என்று தெரியாமல், அக்கட்டிலிலே படுத்து அயர்ந்து உறங்கி விடுகின்றார். வெளியில் சென்றிருந்த மன்னன் திரும்பி வந்து பார்க்கிறான், தான் உறங்கும் முரசு கட்டிலில் ஒரு புலவர் அயர்ந்து உறங்குவதைக் கண்டதும், கோபம் கொள்ளாமல் அப்புலவருக்கு சாமரசம் வீசும் காட்சி அம்மன்னவனின் எளிய வாழ்விற்கு எடுத்துக்காட்டு அல்லவா ?

செக்கிழுத்த செம்மல் வ. உ. சிதம்பரனார், வசதி மிக்க குடும்பத்தில் பிறந்தவர். திறம்பட தமிழ் பயின்ற தன் பிள்ளைக்கு ஆங்கில மொழியினையும் கற்பிக்க விரும்பினார். வ. உ. சியின் தந்தை, செல்வச் சிறப்புடைய உலகநாதப்பிள்ளை.

அப்போது ஒட்டப்பிடாரத்தில் ஆங்கிலம் கற்பிப்பதற்கான பள்ளி இல்லை. அதனால் தன் சொந்த செலவிலேயே புதிய பள்ளி ஒன்றினை கட்டுவித்தார். வ. உ. சி. ஒருவருக்காக கட்டப்பட்ட அப்பள்ளி பின்னர் பலரும் ஆங்கிலம் பயில பயன்பட்டது.

சிதம்பரனார் ஒடுக்கப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த ராமையா தேசிகர் என்பவரைத் தம் இல்லத்தில் வைத்துக் காப்பாற்றி வந்தார். அவர் கண்கள் இரண்டும் பார்வை இழந்தவர். இதனைக் கண்ட உறவினர்கள் இழிகுலத்தவரை தம்மோடு வைத்துள்ளாரே என்று பழிச்சொல் கூறினர். ஆனால் வ.உ.சி அவர்கள் மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பிப்பதை அடியோடு வெறுத்தார். படைப்பிலே அனைவரும் சமம் என்ற உயரிய கருத்தினைக் கொண்டிருந்தார். அப்படியான ஒரு எளிய வாழ்வு வாழ்ந்த சிதம்பரனார் சிறையில் பட்ட துன்பங்கள் அளவிட முடியாதது. செல்வச் சிறப்புடன் வாழ்ந்த கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி தன் வாழ்வின் கடைசிக்காலத்தில் ஏழ்மை நிலையினை அடைந்தார். எந்த நிலையிலும் எளிய வாழ்வு வாழ்ந்தவர் அவர். ஆங்கிலேயருக்கு எதிரான நிலைப்பாடு எடுத்திருந்தாலும் தனக்கு உதவி செய்த ஆங்கிலேயரான வாலீஷ் என்பவரின் நினைவாக தன் குழந்தைக்கு வாலேஸ்வரன் என்று பெயரிட்டழைத்தார்.

தம்முடைய பகுதியில் பள்ளிக்கூடம் அமைய வேண்டும் என்று போராடியவர் பொதுவுடைமை இயக்கத்தலைவர் ஜீவா அவர்கள். அதனைக் கண்ட அன்றைய முதல்வர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள், அப்பகுதியில் பள்ளிக்கூடம் அமைத்தார். அப்பள்ளியினைத் திறந்து வைக்க வரும்படி அப்பகுதி மக்கள் பெருந்தலைவரை வேண்டி னார்கள் திறப்பு விழாவிற்கு வருகை தந்த காமராசர், மாற்றுக் கருத்துக்கள் கொண்ட அரசியல் இயக்கத்தில் இருந்தாலும், ஜீவாதானே இப்பள்ளிக்கூடம் அமைவதற்குப் போராடினார். அதனால் இப்பள்ளியினை அவரே திறந்து வைப்பது பொருத்தமானதாக இருக்கும் என்று கூறி ஜீவாவினை அழைத்து பள்ளிக்கூடத் திறப்பு விழாவினை நடத்தினார். அத்தகு சிறப்பிற்கும், பெருமைக்கும் உரியவர் தோழர் ஜீவா

அவர்கள். அவர் ஒருமுறை ஓர் ஊரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு சென்று பேசிவிட்டு, இரவிலே வந்து புதுமைப்பித்தன் வீட்டுக்கதவைத் தட்டுகிறார். அவரைக் கண்ட புதுமைப்பித்தன் அன்புடன் வரவேற்றார். இரவு நேரமாகி விட்டபடியால் இங்கு உங்களோடு தங்கி இருந்துவிட்டு நாளை காலையில் ஊருக்குச் செல்கிறேன், இப்பொழுது நான் மிகவும் பசியோடு இருக்கிறேன். என்னிடம் காசு எதுவும் இல்லை அதனால் எனக்கு ஏதாவது உணவு வாங்கிக்கொடுங்கள் என்கிறார் ஜீவா. புதுமைப்பித்தனும் உணவு வாங்கிக்கொடுக்கிறார். உண்டதும் இருவரும் உறங்கிவிட்டனர்.

ஜீவாவிற்கு எப்பொழுதும் முழுக்கைச் சட்டையினை பாதிவரை மடித்துச் சுருட்டி அணியும் பழக்கம் உண்டு. அடுத்த நாள் காலையில் எழுந்ததும், புறப்படத் தயாரானார் ஜீவா, சட்டையினை உதறிவிட்டு அணியும்போது, அவருடைய சட்டையின் கை மடிப்பிலிருந்து சில ரூபாய் நோட்டுக்களும், சில்லரைக் காசுகளும் கீழே விழுந்தன. காசுகள் விழுவதைப் பார்த்த புதுமைப்பித்தனுக்கு கோபம் வந்தது. நேற்று இரவு என்னிடம் காசே இல்லை உணவு வாங்கிக்கொடு என்று கூறினீர்களே, இப்பொழுது காசுகள் வைத்திருக்கிறீர்களே, ஏன் என்னிடம் பொய் கூறினீர்கள் என்றார். அப்போது ஜீவா, என்னிடம் காசு இல்லை என்று கூறியது உண்மைதான். இந்தக் காசுகள் நேற்றைய பொதுக்கூட்டத்தில் கட்சிக்காக வசூல் செய்யப்பட்டவை. அதனால் இக்காசுகள் கட்சிக்குத்தான் போய்ச் சேரவேண்மே தவிர, அப்பணத்தை நான் செலவு செய்யக்கூடாது அது பொதுமக்கள் கொடுத்த பணம், அதனால் அப்பணம் பொதுமக்களுக்குத்தான் செலவிடப்பட வேண்டுமே யொழிய அதனை வேறு வகையில் செலவு செய்யக்கூடாது என்றார். இதனைக் கேட்ட புதுமைப் பித்தன் மிகவும் நெகிழ்ந்துபோனார். இப்படிப்பட்ட ஒரு வாழ்வை வாழ்ந்த ஜீவா அவர்களின் எளிமையான வாழ்வு ஏழ்மை நிறைந்ததா கூறுங்கள். தன்னிடம் பொருள் இல்லாத நிலையிலும், பிறர் பொருளை அபகரிக்க எண்ணாத அந்த எண்ணம் இருக்கிறதே, அதைவிட சிறந்த எண்ணம் உலகில் வேறு ஏதேனும் உண்டா ?

# வினையும் விளைவும்

திருவள்ளுவர் பெருந்தகை எதையும் தெளிவாகக் கூறுபவர். கடவுள் பற்றி அதிகாரம் ஒன்றும், கல்வி பற்றி அதிகாரம் இரண்டும், நட்பு பற்றி அதிகாரம் ஆறும் பாடியவர்: செயல் திறனுக்கு அதிகாரம் பன்னிரெண்டாக விவரித்துள்ளார். செய்யும் செயல்களை விரைவாகவும் செய்யவேண்டும். சரியாகவும் செய்யவேண்டும். மனிதர்கள் செயல்களில் இறங்கும்போது , வினை வலியும், தன் வலியும், எதிரியின் வலியும், அவன் துணை வலியும், தன் துணை வலியும் எண்ணிச் செய்யவேண்டும்.

நாம் செயல்களில் ஈடுபடும்பொழுது பல இடையூறுகள் வரும். மனிதர்களின் இயல்பான தோழன் சோம்பல் அவன் வந்து படுத்திருப்பவனை எழவிடமாட்டான். பின்னர் பிறகு செய்து கொள்ளலாம் என்ற எண்ணம் தோன்றும், அதையும் விட்டால் தூக்கம் வரும். உரிய நேரத்தில் தூங்கிப்போவான். இதனை யெல்லாம் தாண்டிப் புறப்பட்டால் மறதி என்பது எல்லாவற்றையும் மங்கவைத்துவிடும். இந்த நான்கும்தான் யாவரிடமும் நிலைத்து இருக்கிறது. சோம்பல், தாமதம், தூக்கம், மறதி இந்த நான்கும் நம்மைவிட வேண்டுமானால், குளத்து நீரில் இருக்கும் தாமரை மலர் நீர் உயர உயர உயர்வது போல், உள்ளம் உயர உயர செயல்கள் உயரும். கருமமே கண்ணாக இருக்கும்பொழுது பசி வருமா, பகை வருமா, தூக்கம் வருமா, வீண் பேச்சு வருமா வராது. இதனையே வினைத்திட்பம் எனும் அதிகாரத்தில்,

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்.**

ஒரு செயலைச் செய்து முடிக்க எண்ணுபவர் என்றும் அதைப் பற்றிய சிந்தனையும் செயலுமாகவே இருக்கும் மன உறுதியைப் பெற்றால், கருதிய செயலை கருதியவாறே அடைவார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்கின்றார்.

வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான் என்ற பழமொழி நம் வழக்கிலே உள்ளது. நல்லவை விதைத்தால் நல்லன விளையும். வினையின் விளைவினை அதாவது வெற்றியைப் பெற விரும்புவர்கள் யாரும் வேலை செய்வதாக நினைத்துக் கொள்வதில்லை. அவர்கள் இலக்கினை நோக்கிப் பயணிப்பதாகவே கருதுவர்.

எஃகு உலகின் தந்தை என்று போற்றப்பட்டவர் ஆண்ட்ரூ கார்னிஜ், இவர் மிகவும் சாதாரண நிலையில் இருந்து, பின்னர் மிகப்பெரும் தொழில் அதிபராகவும், கோடீசுவரராகவும் உயர்ந்தவர். ஆரம்ப காலத்தில் அவர் ஒரு நிறுவனத்தில் வேலை செய்து வந்தபோது, தன்னுடைய பணியிலேயே முழுக்கவனமும் செலுத்துவார். அதனால் அவருக்கு அலுவலக நேரம் முடிந்து மணி ஒலிப்பது கூடக் காதில் விழாமல் வேலை செய்து கொண்டே இருப்பார். உடன் பணி செய்யும் நண்பர்கள் சிலர் அலுவலக நேரம் முடிந்துவிட்டது, நீ மட்டும் இங்கே என்ன செய்துகொண்டு இருக்கிறாய், அவர்கள் கொடுக்கும் ஊதியத்திற்கான வேலையைச் செய்துவிட்டோம் வா கிளம்பலாம் என்று கூப்பிடுவார்கள். அப்போது கார்னிஜ், அவர்கள் கொடுக்கக்கூடிய சம்பளத்திற்கோ, அல்லது இவ்வளவு நேரம்தான் வேலை செய்யவேண்டும் என்றோ நான் பணி செய்வது கிடையாது. ஒரு வேலையைச் செய்ய எடுத்துக் கொண்டால் அது முழுமை பெறும் வரைக்கும் என் மனதிற்குச் சரியாகச் செய்துவிட்டோம் என்ற திருப்தி ஏற்படும் வரையில் செய்வேன் இதுதான் என் வழக்கம். நீங்கள் செல்லுங்கள் நான் என் பணியினை முடித்துவிட்டு வருகிறேன் என்பாராம். ஏதோ கொடுக்கின்ற கூலிக்கு வேலை செய்தால் மட்டும் போதும் என்ற சிந்தனை இல்லாமல், நேரம் ஆனாலும் திறம்பட செய்யவேண்டும் என்ற எண்ணமே அவரை மிகப்பெரும் தொழிலதிபராகவும், எஃகு உலகின் தந்தை எனும் நிலைக்கும் உயர்த்தியது.

சுவாமி கமலாத்மானந்தர் கூறிய கதை ஒன்று. ஒரு காட்டில் வேடன் ஒருவன் கிளிகளைப் பிடிப்பதற்காக, தானியங்களைத் தூவி வலையினை விரித்திருந்தான். அவன் விரும்பியபடியே கிளிகள் வந்து வலையில் சிக்கிக்கொண்டன. மறைவிலிருந்து வெளிப்பட்ட வேடன் கிளிகளைப் பிடிக்கச் சென்றான். அப்போது அங்கு வந்த முனிவர் ஒருவர் கிளிகளின் மேல் இரக்கங்கொண்டு, வேடனே கிளிகளை விட்டுவிடு என்றார். நான் கிளிகளை விடுவித்தால் நீங்கள் எனக்கு என்ன தருவீர்கள் என்றான். அம்முனிவர் அவ்வேடனுக்கு தன்னிடம் இருந்த உணவினை அளித்துவிட்டு கிளிகளை விடுவிக்கச் செய்தார். வேடன் கிளிகளை விடுவிக்கும் போது முனிவர், கிளிகளே இவன் வேடன், வேடன் வந்து வலை விரிப்பான், தானியங்களைத் தூவுவான், நீங்கள் பறந்து வந்து அவனுடைய வலையில் சிக்காதீர்கள் என்றார்.

ஒரு வாரம் கடந்தது, மீண்டும் வேடன் கிளிகளைப் பிடிக்க எண்ணி, வலையுடன் அதே காட்டிற்கு வந்தான். வேடனைப் பார்த்ததும் கிளிகள், இவன் வேடன். வேடன் வந்து வலை விரிப்பான், தானியங்களைத் தூவுவான், நீங்கள் பறந்து வந்து அவனுடைய வலையில் சிக்காதீர்கள் என்றன. கிளிகள் கூறியதைக் கேட்ட வேடன் இவைகள் முன்பு நடந்ததை இன்னும் மறக்க வில்லை. இங்கு நான் வலை விரித்தாலும் அவைகள் சிக்காது, எனவே இங்கு வலை விரிப்பதால் பயனில்லை என்று கூறியவாறே வேறு இடம் நோக்கிச் சென்றான். ஒரு மாதம் கடந்தது, மீண்டும் கிளிகள் இருந்த அதே இடத்திற்கு வேடன் வந்தான். இப்பொழுது கிளிகள் வேடனைக் கண்டதும் முன்னர் கூறிய அதே வார்த்தையைக் கூறின. என்ன இது இக்கிளிகள் இன்னும் இதனை மறக்கவில்லையே என ஆச்சரியப்பட்டு வேடன் வேறு இடம் தேடிச் சென்றான்.

சுமார் ஆறு மாதங்கள் கடந்தன. மீண்டும் அவ்விடத்திற்கு வந்து வேடன் வலையினை விரித்தான்.

இப்போதும் அக்கிளிகள் அவனைப் பார்த்ததும் ஒன்று சேர்ந்து கிளிகளே இவன் வேடன், என்று முன்பு கூறிய அதே வாசகத்தைக் கூறின. இன்னுமா இக்கிளிகள் முனிவர் கூறியதை நினைவில் வைத்துள்ளன என்று எண்ணிய வேடன் சரி வேறு ஒன்றும் எனக்கு இன்று கிடைக்கவில்லை. இவ்விடத்திலேயே வலையினை விரிப்போம் வேறு ஏதாவது பறவைகள் கிடைக்கக் கூடும் என நினைத்து, வலையினை விரித்து தானியங்களைத் தூவினான்

வேடன் தானியங்களைத் தூவியதுதான் தாமதம் உடனே, கிளிகள் முன்பு கூறிய அதே வார்த்தையினைக் கூறிக்கொண்டே பறந்து வந்து வலையில் சிக்கி கொண்டன. அப்போதுதான் வேடனுக்கு இவை சொன்னதைச் சொல்லும் கிளிகள், இவைகளுக்கு முனிவர் கூறியதன் அர்த்தம் புரியவில்லை என்பது புரிந்தது. இது போன்றுதான் நம்மில் பலரும் நல்ல செய்திகளைக் கேட்கவும், படிக்கவும் செய்கிறோம். ஆனால் அவற்றைத் தங்கள் வாழ்க்கையில் பின்பற்றிப் பயனடைவதில்லை. வினையின் பயன் அறிந்தவர்கள் விளையும் வெற்றியினைப் பறிக்கிறார்கள்.

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**மற்றும் இயக்குநர்**
சரசுவதி மகால் நூலகம்.



0541